
# சைவாலயக் கிரியைகள்



JPL
C11911

'கோப்பாய் சிவம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவாலயக் கிரியைகள்

(விரிவாக்கிய மீள்பதிப்பு)

KOHA JPL

23 SEP 2016

ஆக்கம்:

கலாபூஷணம், சிவாகம விசாரத, சாதகதிலகம்

பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.(HONS)

(கோப்பாய் சிவம்)

251942

வெளியீடு

ௐ

சர்வானந்தமய பீடம்

யாழ்ப்பாணம், இலங்கை



251942 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2/294.5

Title : *Saivalaya kriyaikal*

Subject : Description About Hindu Temple Rituals

Language : Tamil

Author : P. Sivanandasarma B.A. (Hons)

(Kopay Sivam)

Address : 'SRINAGRAM', ALAVODAI VEETHY,

Inuvil West, Chunnakam,

Sri Lanka. T.P. 021 224 1504

e-mail kopaysivam@gmail.com

Rights : To The Author

Type Setting &

Designing : Sri Vidya Computer Press, Inuvil

Printers : Gajananth Printers,

Manipay Road, Inuvil.

Publishers : Sarvananthamaya Peetam

Date ot Publication : 18 - 09- 2016.

ISBN : 978-955-4078-03-1

Price : Rs. 300 /=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சைவாலயக் கிரியைகள்' நூலின்
ஆரம்ப முயற்சிகளின்போது,
என் தந்தையால் அறிமுகப்படுத்தப்பட்டு,

தமது இறுதி மூச்சுவரை என்னோடு தொடர்புகளைப் பேணி,
இலக்கியம், சமயம் ஆகிய இரு துறைகளிலும்
எனது வளர்ச்சிகளுக்கான
ஆலோசனைகளை மட்டுமல்லாமல்
ஆதரவுகளையும் வழங்கி
என் செவிலித் தாயாய் இருந்து
இன்று எம்முடன் இல்லாத.............

காரைநகர், அமரர், பண்டிதர்
பிரம்மஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
அவர்களின் நினைவிற்கு.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை
மறுமலர்ச்சிப் பண்டிதர்
ச. பஞ்சாட்சரசர்மாவின்
நூற்றாண்டு ஜயந்தியில்.....
(1916 - 2016)

---

தனயன்,
எழுத்தாளர் கோப்பாய் சிவத்தின்
இலக்கிய உலகில்
ஐம்பதாவது ஆண்டை நோக்கி........
(1967 - 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பக நாயகன் பொற்பதம் போற்றி!

இறைபணியில் தம்மை என்றும் இணைத்து
இனிய வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும்
பிரபலமான ஓர் ஆலய நிர்வாகஸ்தரும்

அவ்வாலயத்தின் பிரதமகுருவும்
வழங்கிய நிதியுதவியில்
இந்நூல் வெளிவருகிறது.

அவர்களது ஆதரவுக்கு நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

# சைவாலயக் கிரியைகள் நூலின்

## முதல் பதிப்பு வெளியீட்டு விழா

**நல்லை ஆதீனம்** 08 . 06 . 1986



நூலாசிரியரிடமிருந்து முதற் பிரதியை நீர்வை அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு (அமரர்) சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்புக்கு வழங்கியது

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி. கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசியுரை

திருக்கோயில்கள் வழிபாட்டிற்குரிய இடம். இந்துக்களின் வழிபாட்டுமுறை தொன்றுதொட்டு நிலவி வருவது. வேதங்களில் இவ்வழிபாட்டு முறையின் தொடக்கத்தை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் காணலாம். இந்துக்கள் சந்ததி சந்ததியாகப் பேணி வந்த வழிபாட்டு முறைகளை ஆன்றோர் காட்டிய வழிநின்று கடைப்பிடிப்பதிலே கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள். அவற்றின் விளக்கங்களைப்பற்றியோ வழிபாடு நிகழ்த்த வேண்டுவதற்கும் வழிபாட்டு முறை குறிப்பிட்ட வகையில் அமைவதற்கும் காரணம் கேட்பது பற்றியோ கவலைப்பட்டதில்லை. பகுத்தறிவு பெரிதும் வளர்ச்சியுற்று வருவதாகக் கூறப்படும் இன்றைய சூழ்நிலை இவர்களை இப்பொழுது இதிலும் ஈடுபடுத்த முனைகின்றது.

கோயில்களில் வழிபடச் செல்பவர் அங்கு நிகழும் கிரியைகள்பற்றி தெரிந்துகொண்டால் வழிபாடு பெரும் பயனுள்ளதாக அமையும். இவ்வுண்மையைக் கருத்திற்கொண்டே வழிபடுபவர் களுக்குக் கிரியைபற்றிச் சிறிதளவாவது தெரியவைக்க வேண்டும் என்னும் நோக்குடன் இந்நூலாசிரியர் இதனை உருவாக்கியுள்ளார்.

சமயப் பாரம்பரியத்தினின்றும் சிறிதும் விலகாதவாறு அதன் எல்லைக்குள் நின்று கோயிற்கிரியை பற்றிய விபரங்களையும், விளக்கங்களையும் தேவைக்கேற்பத் தொகுத்து நூல் வடிவிற் கொணர்ந்த நூலாசிரியர் கோப்பாய் சிவம் அவர்களின் முயற்சி பெரிதும் பாராட்டிற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பக்கங்களாலான பெருநூலாக அமையின் அதன் விலை அதிகமாகிவிடும் என்பதையும், பெரும் நூலாய் விரியுமிடத்து அதை வாசிப்பவர்க்குப் பொறுமையும் ஈடுபாடும் குறைந்து காணப்படலாம் என்பதையும் கருத்திற் கொண்டும் போலும், நூலாசிரியர் பெரிதும் முயன்று சிறு வடிவந் தந்து இந்நூலை உருவாக்கியுள்ளார். நூல் சிறு வடிவம் பெறினும் பல விடயங்களை உள்ளடக்கியது. உயர்தர மட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கும் ஓரளவுக்குப் பயன் தரவல்லது.

கோயிலுக்குச் சென்று வழிபடுவோர் முன்னரே இந்நூலை வாசித்து விஷயங்களைத் தெரிந்து கொள்வதனால் பெரும் பயன் பெறுவர். இந்நூல் இவ்வாறு வழிபடுவோர் ஒவ்வொருவரது கையிலும் விளங்க வேண்டிய கையேடு.

இத்தகைய பயன்தரும் நூல்களை சைவ உலகிற்கு வழங்கும் ஆற்றலும் வாய்ப்பும் இந்நூலாசிரியருக்கு மென்மேலும் பெருகுவதாக என ஆசிகூறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்புக்கு வழங்கியது

## நீர்வேலி, கந்தசுவாமி தேவஸ்தானப் பிரதமகுரு சிவஸ்ரீ சு.இராஜேந்திரக் குருக்கள் அவர்கள் வழங்கிய ஆசியுரை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆரியமுந் தமிழும் ஆனவன் சிவன். இவ்விரு மொழியிலும் சிவஞான போதம் தரும் நூல்கள் பலவுள. அவற்றை துறைபோகக் கற்றுணரந்த அறிஞர்கள், நீர்வைச் சங்கர பண்டிதர், வடகோவைச் சபாபதி நாவலர், தென்கோவைக் கந்தையாபிள்ளை, இருபாவைச் சேனாதிராயர் முதலியோர் இவர்கள் மரபுவழியில் ஐயந்திரிபறக் கற்றோரான மாணவர்களும் பற்பலராவர்.

இத்தகைய சீரியோரின் சிந்தனைச் செல்வங்களாலே செழுமை வளமை பெற்ற பதி கோப்பாய். அங்கே சித்திர வேலாயுத சுவாமியைப் பூசிப்பவராய்ச் சிவாசாரியருக்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர் சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள். அவருடைய தௌஹித்திரர்களாக விளங்குவோர் சித்தாந்தபாநு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக்குருக்களும், பலமொழி வல்ல பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மாவும் ஆவர். இவர்களிடையே ஒரு தவக்கொழுந்தாஞ் சிவக்கொழுந்தாய் வளர்பவர் பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா. அவர் வாடாமல் மணங்கமழும் பொன்மலர் போன்றவர். இன்றைய சைவ சமய நிலையைக் கண்டு இரங்கி இந்நூலை ஆக்கித் தந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய நிர்வாகிகளும் சிவாசாரியர்களும் சைவமக்களும் ஆகியோரிற் பலர், சைவக்கிரியைகள் பற்றித் தெளிவான விளக்க மில்லாதிருப்பதால் விளையும் விரக்திநிலை நீக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து சைவாலயக் கிரியை என்னும் இந்நூல் உருவாக்கி உதவினார். இந்நூல் சைவமக்கள் எல்லோரும் கற்கவேண்டியது. இதன் மூலம் மக்கள் சைவக் கிரியைகள் பற்றிய உண்மைத் தத்துவங்களை எளிதில் உணர்ந்து சைவசமயப்பற்றோடு சைவாசார சீலராய் வாழ வழி பிறக்கும்.

சிவானந்தமாகிய சைவக்கொழுந்தின் தலையரும்பு இது. இன்னும் பல அரும்பு மலர் காய் நறுங்கனிகளைத் தந்து சைவப் பூம்பொழிலைப் பொலிவு செய்வதாய் வளர்க வையகமும் வான் பயன் பெறுக. எல்லாம் வல்ல எம்பெருமான் திருமுருகன் எண்ணத்தை நிறைவாக்க வேண்டுகிறேன்.

சுபம் அஸ்து நித்தியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்புக்கு வழங்கியது

## ஏழாலை, பண்டிதர் மு.கந்தையா, B.A. அவர்கள் வழங்கிய மதிப்புரை

'நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்' நன்னிலத்து விளைவு நன்மையளிப்பதாகவே இருக்கும். இவை சாஸ்வதமான உண்மைகள். இந்நூல் விளைந்த நிலம் நம்நாட்டு சிவாசாரிய குலங்களிற் சான்றாண்மை மிக்க ஒருகுலம். திரு. ப. சிவானந்த சர்மா (கோப்பாய் - சிவம்) அக்குலத்தின் இளைய கான்முளை.

சேர். பொன். இராமநாதனின் அபிமான குருவாய் விளங்கி, வேதாகம ஞானத்திலும் மந்திர தந்திர கிரியா சாமர்த்தியங்களிலும் ஒப்புயர்வற்றிருந்தவர் நல்லூர் சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள். அவர்களின் வேதாகம அறிவியற் புலமைக்கும் கிரியை ஆற்றலுக்கும் கண் கண்ட சாட்சிகளாய் இன்றும் விளங்குவோர் இருவர். ஒருவர் குருக்களின் சிரேஷ்ட மாணவர் என்ற பெருமைக்குரிய சித்தாந்தபாநு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள். மற்றவர் கார்த்திகேயக் குருக்களின் சிரேஷ்ட புத்திரரும் இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிக பீடாதிபதியுமாக விளங்கும் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்.

சைவாலயக் கிரியை பற்றிய விஷயங்களில் உதாரத்துவம் பெற்ற இன்றைய உதாரண புருஷர்களாகிய இவ்விருவரின் நெறிப்படுத்தல் வாயிலாக வெளிவருகின்றது இந்நூல். நூலாசிரியர் சிவானந்தசர்மா, சுப்பிரமணியக் குருக்களைத் தம் அருமைப் பெரியப் பாவாகக் கொண்ட அதிர்ஷ்டப் பேறுமுள்ளவர். இத்தனைக்கும் அநுகுணமாக நூல் நன்முறையில் அமைந்துள்ளது. சிவாலய நித்திய, நைமித்தியக் கிரியைகள் பற்றிச் சாமானிய அறிவுத்தர முள்ளாரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளற்கேற்ற இலகு நடையில் நூல் உருவாகியிருப்பது மஹா விசேஷமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவாலய பூஜை விபரங்கள் இரகசியங்களை வழிபடுவோரும் தெரிந்திருக்க வேண்டுமா? என்பதொரு கேள்வி. தெரிந்து கொள்ளாதவரை அவர்கள் உரியமுறையில் உபயம் செய்வித்தவர்களாகவோ, நன்முறையில் வழிபட்டவர்களாகவோ ஆகமாட்டார் என்பது அதற்கு திட்டவட்டமான பதில். சிவாலய பூஜை பாரார்த்த பூஜை எனப்படுவதேன் என்பதை உணர்ந்து சிந்திப்போர் இப்பதிலை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

ஆன்மார்த்தம் தனக்காக, பரார்த்தம் பிறர்க்காக எனச் சாதாரணமாக இருந்துவரும் விளக்கம் ஏதோ பற்றாக்குறையானது. அயலார் தொடர்பின்றித் தான் தன்பாட்டில் நிகழ்த்துவது ஆன்மார்த்தம். அயலாரையும் தொடர்புபடுத்தி வைத்துக்கொண்டு நிகழ்த்துவது பரார்த்தம் என்பதே இதன் பூரண விளக்கமாகும். சிவாலயக் கிரியைகளின்போது சிவாசாரியர், எஜமான் என்ற பேரிலோ உபயகாரர் என்ற ஹோதாவிலோ மற்றொருவருக்கும் (சிலவேளை பலர்க்குமே) பவித்திரம் தரிப்பித்துத் தருப்பைக்கட்டு மூலம் தமக்கும் அவர்க்கும் இயைபு ஏற்படுத்திக்கொண்டு சங்கற்பித்துப் பூஜை செய்துவருதல் கண்கூடு.

இவ்வகையிற் பார்த்தால் பரார்த்த பூஜையின் பயன்பாட்டில் சிவாசாரியர், உபயகாரர் என்ற இருவருக்கும் ஒருகூட்டுப் பொறுப்பு நிலவுதல் கண்கூடு. கிரியை பற்றிய செயற் பொறுப்பு முழுவதையும் சிவாசாரியர் மேற்கொண்டிருப்பினும் அதன் தார்மீகப் பொறுப்பில் இருவருக்குஞ் சமபங்கு இருத்தலும் வெளிப்படை. இனி, யஜமானன் அல்லது உபயகாரன் நிலையை வகிப்பவரும் ஒரு குறைந்த பட்சநோக்கில் ஒரு குடும்பம் முழுவதையும் அல்லது ஒரு இனம் முழுவதையும் பிரதிநிதிப்பவராக, இன்னும் பரந்த நோக்கில் ஜீவராசிகள் அனைத்தையும் பிரதிநிதிப்பவராக இருத்தல் குறிப்பிடத் தக்கதாகும். ஆகவே, பரார்த்தபூஜை யதார்த்தமானதன் பலன் தோற்றுதற்கு ஏதுவாக உபயகாரர் மட்டுமன்று வழிபாட்டாளர் சகலருமே அதனியல்புகளை அறிந்திருத்தல் அவசியம் என்றாகிறது. இது சார்பாக சில குறிப்புக்கள் இந்நூல் முன்னுரையிலும் காணவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் பரார்த்த பூஜை சம்பந்தமாக அவசியம் உணர்த்தப்படவேண்டிய அம்சங்கள் பல இந்நூல்களில் இடம் பெற்றுள்ளன. சந்தியாவாஹனம் முதலியவற்றிற் பண்ணிசைத்தல், சண்டேஸ்வர உற்சவத்தைக் கௌரவ கண்ணியமாக நடத்துதல் என்ற இரண்டும் அவற்றுள் முக்கியமான உணர்த்துதல்களாகும். பூஜையில் வேதபாராயணத்தைத் தொடர்ந்து திருமுறை இடம்பெற வேண்டும் எனக் குறிப்பிட்டிருத்தலும் சிலாக்கியமானது.

நித்தியம், நைமித்திகம் இரண்டிலும் நால்வேதம் ஸ்வர சுத்தமாகவும் தமிழ்வேதம் பண்ணிசை சகிதமாகவும் வித்தியாசம் பண்ணப்படும் விஷயம் ஆலயங்களில் நிரம்பாக் குறையாகவே இருந்துவரும் இழப்பைச் சற்றே உற்றுணர வேண்டும். முறையான பண்ணிசையொன்றே சிவாலயங்களிற் சைவக்களை ததும்ப வைத்தற்குச் சிறந்த சாதனம் என்பதை அதிலும் காட்டமாக உற்றுணர வேண்டும். வருடாவருடம் உற்சவப் பேரில் பல்லாயிரம் விரயமாகிக் கொண்டிருக்கும் சிவாலயங்களில் இவற்றுக்கான ஏற்பாடுகளைக் கோலிக்கொள்ளுதல் சிரமமென்பதற்கில்லை.

இவ்வகையில் நமது சிவாலயங்களில் நல்லன நிகழ்தற்கு இந்நூல் வழிகாட்டும் என உறுதியாக நம்புகிறோம். இதனைச் சைவ உலகு பயன்பெறத் தரும் சர்மா அவர்களின் இந்நன்முயற்சிக்கு நமது நல்வாழ்த்துக்கள்.

251942



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்புக்கு வழங்கியது

## முன்னுரை

சைவக்கிரியைகள் பற்றிய விளக்கங்களைச் சாதாரண மக்களுக்கு விளக்கும் வகையில் எடுத்துக்கூற வேண்டும் என்று பல அன்பர்கள் அடியேனை அடிக்கடி வற்புறுத்தி வந்தனர். கிளிநொச்சி திருநெறிக்கழகத்தின் செயலாளராய் நான் இருப்பதும், அந்தணர் குலத்தவனாக இருப்பதும் இதற்குக் காரணமாயமைந்தன.

ஆனால் இவ்விரு தகுதிகளையும் கொண்டு சைவக் கிரியைகளை ஆராயப்புகுதல் எறும்பு மலையைச் சுமக்க முற்பட்டது போலாகும் என்பதை நான் நன்குணர்வேன். இருந்தும் அறிவு, அனுபவம், ஆற்றல், வயது ஆகியவற்றில் சிறியவனாகிய யான் எனது சொந்த அறிவை வளர்க்கவும், ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவுமென்ற எண்ணத்தினாலும் இத்துறையில் ஈடுபடத் தொடங்கினேன்.

சைவாலயங்கள் பலவற்றுக்கும் சென்று கிரியைகளை அவதானித்தும், அறிவு சார்ந்த சிவாசாரியர்களுடன் அளவளாவி ஐயங்களைத் தீர்த்தும், இத்துறையில் ஏற்கனவே வெளிவந்த பல நூல்களைத் தேடி வாசித்தும் அறிவை மெல்ல வளர்க்கத் தலைப்பட்டேன்.

இடையில், ஆலய உற்சவங்களில் உரையாற்ற நேர்ந்த வேளைகளில் எனது சிற்றறிவுக்கு எட்டிய வரையில் சில விஷயங்களை – சைவக்கிரியைகளின் தத்துவ உட்பொருள்கள், விஞ்ஞான ரீதியில் அவற்றின் விளக்கங்கள் - இவற்றை எடுத்துரைத்தபோது பலரும் அதனை விரும்பிக் கேட்டதுடன் மேலும் ஈடுபடும்படி ஊக்குவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்துறையில் எனக்குள்ள ஈடுபாட்டுக்குச் சமமாக சமயத் துறையிலும் நான் ஈடுபட்டுழைக்க வேண்டுமென்று எனது நண்பர் திரு. பா. பாலசண்முகநாதன் அவர்களும் ('சுகபதி' புங்குடுதீவு – 3) ப. கணேசபிள்ளை அவர்களும் (தலைவர், கிளிநொச்சி திருநெறிக்கழகம்) அடிக்கடி ஆலோசனை கூறுவதுண்டு. இன்னொரு இனிய நண்பர் திரு க. சி. சீவரத்தினம் அவர்கள் ('பழனி', புன்னாலைக்கட்டுவன்) சைவக்கிரியைகள் பற்றிய விளக்கக் கட்டுரை களை எழுதி வெளியிடுமாறு தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.

இவை, நான் இத்துறையில் ஈடுபட்டு ஆராயவும் சிந்திக்கவும் மூலகாரணங்களாக அமைந்தன. வழமைபோலவே எனது எல்லா முயற்சிகளுக்கும் வழிகாட்டி நிற்கும் எனது தந்தையார் பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சரசர்மா அவர்கள் இத்துறை சார்ந்த நூல்களைத் தேடி எடுத்துக் கொடுத்ததுடன் கட்டுரைகள் அமைய வேண்டிய பாங்கினையும் எடுத்துரைத்தார்.

சைவக்கிரியைகளுக்கு விளக்கம் கொடுக்கும் வகையில் ஏற்கனவே வெளிவந்த சில நூல்களை நான் இந்நூலுக்கு முதல் நூல்களாக எடுத்துக்கொண்டேன். அவை இருக்கும்போது இன்று இன்னொரு நூல் வெளிவருவது அவசியமா? என்றொரு கேள்வி எழுவது இயல்பே! இன்று அந்நூல்களின் பிரதிகள் கிடைப்பதில்லை என்பதுடன் அவற்றின் மொழி நடையும் விஷயங்களும் சற்று உயர்ந்த தரத்தில் - சாதாரண மக்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத வகையில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் அவற்றுட் சில நூல்கள் மட்டுமே பரார்த்தக் கிரியைகள் என்னும் கோயிற் கிரியைகள் பற்றிக் கூறுபவை.

எனவே, அந்நூல்களில் சொல்லப்பட்டவற்றைத் திரட்டித் தொகுத்தும், மேலும் சில விஷயங்களைச் சேர்த்தும் பரந்துபட்ட முறையில் சாதாரண மக்கள் யாவரும் சைவக்கிரியைகள் பற்றி மேலோட்டமாக அறியும் வகையில் இந்நூலை உருவாக்கியுள்ளேன.

அவ்வப்போது எனக்கேற்பட்ட சந்தேகங்களைத் தீர்க்குமுகமாக நான் அணுகிய வேளைகளில் அவ்வையங்களை அகற்றியும் பல புதிய விஷயங்களைத் தெளிவு படுத்தியும் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்படுத்திய பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக் குருக்கள், வடகோவை, சித்தாந்தபாநு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், நீர்வேலி சிவஸ்ரீ சு. இராஜேந்திரக்குருக்கள், வடகோவை பிரதிஷ்டா கிரியா கலாபமணி சிவஸ்ரீ மு. பரமசாமிக்குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள் காரைநகர், பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோருக்கு என் வந்தனங்கள்.

சாதாரண மக்களிடையே ஆன்மீக எழுச்சியும், சமயக் கிரியைகளை – நுணுகி ஆராயும் ஆர்வமும், அறிவு வளர்ச்சியும் அதிகரித்துவரும் இக்காலத்தில் அவர்களுக்கு இவற்றைப் போதித்து வளர்ப்பதற்குச் சமய அறிஞர்களான குருமாரின் தொகை போதாமலிருப்பது நமது துரதிர்ஷடமே.

இதற்குக் குருமார்களது பொருளாதாரக் கஷ்டநிலை ஒரு முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. பிராமணக் குடும்பங்கள் போதிய பொருள்வரவு இல்லாமலும் போதுமான வாழ்க்கை வசதிகள் இல்லாமலும் இருப்பதை அவதானிக்க முடிகிறது. இதனால் இவர்களது பிள்ளைகள் பொருள்தேடும் முயற்சியில் ஈடுபட்டு வேறு தொழில்களை – உத்தியோகங்களை – நாடிச் செல்வதும் வெளிநாடுகளுக்குச் செல்வதும் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

அதற்கேற்ற சூழ்நிலை இல்லாதவர்கள் மிகக்குறைந்த அளவு படிப்புடனே அர்ச்சகராக நேருகிறது. விரைவிலேயே ஆசார்யாபிஷேகம் செய்து குருக்களாக வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. இவர்களிடம் சமயப் பொது அறிவு, மொழி அறிவு, சித்தாந்த ஞானம், கிரியா விளக்கம் என்பவற்றைச் சமயாபிமானிகள் எதிர்பார்க்க முடியாது.

அர்ச்சகராயிருக்கும்போது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாதநிலை இருப்பதால் ஒருவரே மூன்று நான்கு கோவில்களில் பூஜை செய்வதும், பல இடங்கள் சென்று புரோகிதங்கள் செல்வதும் அவசியமாகிறது. இதனால் அவர் தமது சொந்த முயற்சியால் கிரியாபத்ததிகளைத் தேடிப் படிப்படிதற்கோ அவை பற்றிச் சிந்திப்பதற்கோ நேரம் கிடைப்பதரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சூழ்நிலை மாறி ஆலய சேவையி லீடுபட்டுள்ளவர்கள் வசதியுடன் வாழவும், அவர்களது பிள்ளைகள் வேதம், ஆகமம் முதலியவற்றைப் படிக்கவும் சிவாச்சாரிய பயிற்சி பெறுவதற்கும் ஏற்ற சூழ்நிலை உருவாகுவது அவசியமாகும். வசதிமிக்க தேவஸ்தானங்களும் நிலைத்த சமய ஸ்தாபனங்களும் இதற்கு முன்வரவேண்டும். தகுதி வாய்ந்த குருமாரை நன்கு மதிப்பதும் அவர்களது தகுதியை ஓரளவாவது தரமறியத் தக்கவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்வதும் ஆலய நிர்வாகிகளின் கடமையாகும்.

ஒவ்வொரு அர்ச்சகரும் (குறைந்த பட்சம் ஒவ்வொரு சிவாசாரியருமாவது) கிரியைகளின் விளக்கங்களையும் அனுஷ்டான விதிமுறைகளையும் அறிந்திருக்க வேண்டும். அத்தகைய அறிவு வளர்ச்சிக்கு ஓர் ஆரம்பப் படிக்கல்லாக இந்நூல் அமையலாம். இதனைப் படிப்பதன் மூலம் மேற்கொண்டு இவ்விஷயங்களை ஆராய்ந்தும், அறிஞர்களைத் தேடி அடைந்தும் தமது அறிவை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற்படுமானால், எனது இம்முயற்சி பயனுடையதாகும். சிவாசாரிய மாணவர்கள் மட்டுமன்றிச் சைவசமய உண்மைகளை அறியும் ஆவலுள்ள சைவாபிமானிகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கூட இந்நூல் பயன்படலாம்.

இன்று கிரியைகள் தொடர்பான வடமொழிச் சொற்களின் சரியான உச்சரிப்பை அறியாது பலர் தடுமாறுகிறார்கள். இதனால் இச்சொற்களின் சரியான வடமொழி வடிவங்கள் இந்நூலில் கையாளப்படுகிறது. (நாவலரவர்களும் இம்முறையையே கையாண்டவரென்பது குறிப்பிடத்தக்கது.)

அறிவிற் சிறியோனாகிய யான் அளப்பரும் காரியமான இந்நூலாக்கத்தில் இறங்கிவிட்டேன். இதில் ஏற்பட்டுள்ள தவறுகளுக்காக என்னை மன்னித்துக் குறைநிறைகளை எடுத்தியம்பி வழிகாட்டுமாறு சைவப்பெரியார்களிடம் கோரி மெய்யன்பர்களின் திருக்கரங்களில் இதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

**ப. சிவானந்த சர்மா**

**(கோப்பாய் சிவம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

1. ஆலய வழிபாடு 19

2. சைவ சித்தாந்தமும் கிரியைகளும் 23

3. கிரியைகள் - ஒரு சுருக்க வரலாறு 29

4. ஆலய அமைப்பும் திருவுருவங்களும் 33

5. கிரியைகள் - ஓர் ஆரம்ப விளக்கம் 50

6. பூர்வாங்கக் கிரியைகள் 52

7. சில பொதுவான கிரியைகள் 60

8. கும்ப பூஜை, அக்னி கார்யம் என்பவற்றின் விளக்கம் 71

9. நித்திய நைமித்திகக் கிரியைகள் 79

10. மஹோற்சவம் 84

11. மஹா கும்பாபிஷேகம் 116

12. யாகசாலை, யாகபூஜை என்பவற்றின் சிறப்பான விளக்கம் 135

13. பஞ்சகுண்ட யாகசாலை - ஒரு தத்துவப் பார்வை 150

14. யாகசாலை தொடர்பான விளக்கப்படங்கள் 154

15. அக்னிகார்யம் - பலவகைப்பட்ட கிரியாமுறைகள் 184



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

எங்கும் வியாபித்திருக்கும் ஆண்டவனை மன ஒருமைப் பாட்டுடன் வழிபாடியற்றி அவனருள் பெற உகந்த இடம் ஆலயம். ஆலய வழிபாட்டிற்கென சில விதிமுறைகள் உள்ளன. ஆகமங்களி லிருந்து இவற்றைத் தொகுத்து ஆறு முகநாவலரவர்கள் சைவ வினாவிடை, பாலபாடம் போன்ற நூல்களில் எழுதியுள்ளார். அவற்றை அடியொற்றி எழுந்த பல நூற்றுக்கணக்கான நூல்களிலும் ஆலய வழிபாடு பற்றி எழுதப்பட்டுள்ளன. இருந்தும், சைவ அன்பர்களின் நன்மை கருதி மிகச்சுருக்கமாக இப்பகுதி இங்கு சேர்க்கப்படுகிறது.

ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து விபூதி தரித்துக்கொண்டு (தீக்ஷை பெற்றவர்கள் நித்திய கர்மா நுஷ்டானங்கள் செய்துகொண்டு) சிவ சிந்தனையுடன் ஆலயம் செல்லவேண்டும். வீதியில் கைகால்களைக் கழுவிச் சுத்தம் செய்தபின் கோபுரத்தை நமஸ்காரம் செய்தவாறு உள்ளே நுழைந்து பலிபீடத்திற்கு இப்பால் வடக்கே தலை வைத்து வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

வடக்கு நோக்கிய சந்நிதியாயின் கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் செய்தல் முறை. எவ்வாறாயினும் வடக்கிலும், கிழக்கிலும் கால்நீட்டி வணங்குதல் தகாது. பரிவார தெய்வங்களின் சந்நிதிகள் உள்ள திசைகளில் கால்நீட்டுதலும் தவிர்க்கப்பட வேண்டும். சந்நிதானங்கள் நிறைய உள்ள கோயில்களில் வீழ்ந்து வணங்கு வதைத் தவிர்க்கலாம். சிதம்பரத்திலே உட்பிராகாரத்தில் யாரும் வீழ்ந்து வணங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் தலை, கையிரண்டு, செவியிரண்டு, வாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்தில் படியும்படியாக அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தப் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

மார்பு பூமியில் படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப்பின்னும் நேரே நீட்டி பின் அம்முறையே மடக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தக் கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும், இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து வணங்குதலே அஷ்டாங்க நமஸ்காரம் ஆகும்.

இதன்பின் வீதியை வலம்வரும்போது சிரசிலாவது, மார்பிலாவது இருகரங்களையும் குவித்து சிவநாமங்களையும் உச்சரித்தவாறு மெல்ல அடியெடுத்து வைத்து நடக்க வேண்டும். விநாயகரை ஒரு தரமும், சூரியனை இருதரமும், அம்பிகையையும், விஷ்ணுவையும் நான்கு தரமும் வலம்வருதல் முறை.

விநாயகரை வணங்கும்போது முஷ்டியாகப் பிடித்த கைகளினால் நெற்றியில் மும்முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் மாறிப் பிடித்து மும்முறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம்) வணங்கவேண்டும்.

அபிஷேகம், நைவேத்தியம் என்பன நிகழும்போது சுவாமிதரிசனம் செய்வதும், வீழ்ந்து வணங்குவதும், வீதி வலம் வருதலும் தகாது. தீபாராதனை நிகழும்போது வீழ்ந்து வணங்குவதும் முறையன்று. வீதிவலம் வரும் ஒவ்வொரு தரமும் சண்டேஸ்வரரை வழிபடாது (கைகொட்டுதல் மூலம் அவரது தவத்துக்கு இடையூறு செய்யாமல்) இறுதியாக வலம்வரும்போது மாத்திரம் அவரை வணங்கி வழிபாட்டின் பலனைத் தரும்படி கேட்டு மும்முறை மெல்லக் கைகொட்டி வணங்க வேண்டும்.

சண்டேஸ்வரரை வலம்வந்து வணங்குவது கூடாது. ஏனெனில் மூலஸ்தானத்துக்கும் சண்டேஸ்வரருக்குமிடையே குறுக்கே போகக்கூடாது என்பது விதி. இதே போல, நந்திக்கும் மூலஸ்தானத்துக்குமிடையே குறுக்கே போவதும் தகாது.

இதன்பின் நந்தியை வணங்கி அநுமதிபெற்று, நமது பாவங்கள் யாவற்றையும் பலிபீடத்திலே பலியிட்டதாகப் பாவனை செய்து உள்ளே சென்று அர்ச்சனை செய்வித்து வணங்க வேண்டும். வழிபாடு முடிந்ததும் சிறிதுநேரம் ஆலயத்தில் ஓர் இடத்தில் அமைதியாக இருந்து தியானம் செய்வது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரமில்லாது ஆலயத்துக்குப்போதல், அங்கு உயர்ந்த ஆசனங்களில் இருத்தல், கால்நீட்டுதல், உணவு வெற்றிலை முதலியன உண்ணல், பொடி போடுதல், தோளிலே உத்தரியமிடுதல், சட்டை அணிதல், விக்கிரகங்களைத் தொடுதல், பலிபீடம், விக்கிரகம், தூபி என்பவற்றின் நிழல்களை மிதித்தல், வீண் வார்த்தை பேசுதல் என்பன ஆலயத்தில் செய்யத்தகாத குற்றங்களாகும்.

தூபியின் நிழல் நிலத்தில் விழும்போது அதனை மிதியாமற் செல்ல இடமில்லாவிடில் அதனை ஐந்து பங்காக வகுத்து மூன்று பங்கை நீக்கி எஞ்சிய இரண்டு பங்கில் மிதித்துச் செல்லலாம். சுவாமி வீதி வலம்வரும்போது நிழலை மிதித்தல் பாவமாகாது.

தினமும் காலையில் வீதிவலம் வந்து வணங்குபவர்கள் தீராநோய் தீரப்பெறுவர். உச்சிக்காலத்தில் வலம்வருபவர்கள் இஷ்டசித்திகளைப் பெறுவர். மாலையில் வலம்வருபவர்கள் பாபநீக்கம் பெறுவர். அர்த்தஜாமத்தில் வீதிவலம் செய்யவர்கள் முத்தியின்பம் பெறுவர்.

ஆலயத்துக்குச் செல்லும்போது வெற்றிலை, பாக்கு, கனிந்த பழங்கள், தேங்காய், பூக்கள் முதலியவற்றை இறைவனுக்குக் காணிக்கையாக எடுத்துச் செல்வது நன்று. இவற்றை ஒரு தட்டிலே வைத்து மார்பளவில் தூக்கி ஏந்தியவாறு செல்லல் வேண்டும். (பலர் தமது வசதி கருதி இப்பொருட்களைப் பைகளில் கொண்டு செல்கிறார்கள். இது ஆசாரக்குறைவானது என்பதுடன் அர்ச்சகர்களுக்குப் பல சிரமங்களைக் கொடுப்பதாயும் உள்ளது. இவ்வாறே அபிஷேகத்துக்குரிய பாலைப் போத்தலில் கொண்டு போவதையும் தவிர்த்தல் வேண்டும்.

ஆலய மருங்கிலே நந்தவனம் அமைத்தல், மண்டபங்கள், வீதிகளைக் கூட்டிக் கழுவித்துப்பரவு செய்தல், தீபங்கள் கலசங்கள் முதலிய உபகரணங்களைத் துலக்குதல், பூக்கொய்தல், தீபமேற்றுதல் முதலிய சரியைத் தொண்டுகளைத் தாமே முன்வந்து செய்தல் அடியார்க்கு அழகாகும்.

அடியார்கள் பலரும் ஆலயத்தின் வாசற்படிகளிலே கற்பூரம் எரித்து வழிபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. இதனால் பலருக்கும் பலவித இடைஞ்சல்கள் ஏற்படுவதுடன் ஆலயத்தின் அழகும் தூய்மையும் கெடுகிறது. கற்பூரம் எரிப்பதற்கென அமைந்த இடங்களில் மட்டும் எரிப்பது நன்று.

இதேபோல, படையல்களின்போது வெட்டிளநீர் நிவேதனம் செய்வதற்கு அதற்குமேல் கற்பூரம் எரிப்பதையும் சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர் இதுவும் தவறானதே. உற்சவகாலங்களில் ஒலிபெருக்கிகள் பயன்படுத் தும்போது அளவுக்கு மீறிய பேரொலியுடன் பாடல்கள் ஒலிப்பது ஆலயத்தின் அமைதியையும் பத்தியமான சூழலையும் கெடுப்பதுடன் வழிபடுவோரின் மனஒருமையையும் சிதைத்து விடுகிறது.

ஆலய வழிபாடு எம்மை மேல்நிலைக்கு இட்டுச் செல்வதற்காக அமைந்தது. ஆனால் நமது அறியாமையாலும், அக்கறையின்மையாலும் குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதுபோல மேலும் மேலும் பாவங்களைத் தேடுபவர்களாக நாம் நடந்து கொள்வது வருந்தத்தக்கது.

அரசசபை (நாடாளுமன்றம்), நீதிமன்றம் முதலிய இடங்களில் நாம் எவ்வளவு தூரம் விதிமுறைகளையும், அமைதியையும் கடைப்பிடிக்கிறோம். வெற்றிலை மெல்லுதல், புகைத்தல், வீண்வார்த்தை பேசுதல், கால்மேல் கால் போட்டுக் கொண்டிருத்தல் முதலியன நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்களாகக் கருதப்பட்டுத் தண்டனை விதிக்கப்படுகிறது.

இவற்றையெல்லாம் விட மேலான ஓரிடம் ஆலயம் என்பதை யாரும் மறக்கமாட்டார். எனவே ஆலயங்களில் நாம் விதிமுறைகளை அநுசரித்தல் அவசியமானதன்றோ?

நமது சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கு அமைய ஆலயங்களைப் பரிபாலிப்பதும், அங்கு வழிபாடுகள் ஆராதனைகளை முறைப்படி நடத்துவதும் நமது கடமை என உணர்ந்து நமது அறிவையும் பண்பையும் வளர்த்து அதன்மூலம் ஆன்மீக மேம்பாடடைந்து நல்வாழ்வு வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251942



# சைவசித்தாந்தமும் கிரியைகளும்

எமது சமயத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுள் சைவம், சாக்தம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்ற ஆறையும் பிரதான சயமங்களாகக் கொள்வர். இவை ஷண்மதங்கள் - அறுசமயநெறி எனப் பெயர்பெறும். இவை முறையே சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, முருகன், சூரியன் ஆகிய தெய்வங்களை முழுமுதல் கடவுளாக் கொள்பவை. வேதத்தை அடிப்படையாக கொண்ட இவை யாவும் வைதிக சமயங்கள்.

இவற்றுள் முதல் மூன்றுமே பெரிதும் பரந்திருப்பவை. தென்னிந்தியாவிலே சைவம், வைஷ்ணவம் இரண்டும் சில காலம் ஒன்றையொன்று பகைத்து மோதிக்கொண்டதும் உண்டு. ஆனால் இன்றைய நிலையில் வைதிக சமயங்களாகிய இம்மூன்றும் ஒன்றையொன்று இணைந்த நிலையில் நாஸ்திகத்தை எதிர்த்து நிற்கின்றன. இதைப்பற்றிச் சுவையான வாக்கியம் ஒன்றும் வழங்குகின்றது.

"அந்த: சாக்தோ பஹி: சைவோ வ்யவஹாரேது வைஷ்ணவா:" என்பதே அது. ஆத்மார்த்தமாக சக்தியை உபாசித்தும் வெளியிலே, சைவர்களாகக் காட்டிக்கொண்டும், அனுஷ்டானங்களில் வைஷ்ணவ முறைகளைக் கைக்கொண்டும் நடந்து கொள்வதை இது சுட்டுகிறது.

நமது ஈழநாட்டைப் பொறுத்த வரையில் சைவசமயமே வழக்கிலுள்ளது. சக்தி ஆலயம், விஷ்ணு ஆலயங்களிற்கூட சிவபரமாகவே கிரியைகள் நடக்கின்றன. (மிகச்சில புறநடைகள் இருக்கலாம்)

சைவம் சிவ சம்பந்தமானது. சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்டது. சிவதத்துவமே தத்துவங்களின் எல்லை எனக் கொள்வது. சைவசித்தாந்தத்தை அநுசரிப்பதாலும் வேதத்தைப் பெரிதும் பின்பற்றுவதனாலும் நமது சமய நெறியை வைதிக சைவசித்தாந்தம் என்றார் பண்டிதமணியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சைவசித்தாந்தம் தென்னிந்தியாவுக்கே சிறப்பாக உரிய தமிழ்ச் சமயம். தென்னிந்தியாவிலேயே வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பழம்பெரும் சமயம் சைவம்' என்று டாக்டர் ஜி.யு.போப்பையர் கூறுகிறார்.

சைவசித்தாந்தம் தமிழர் சமயம் எனறு கூறப்பட்ட போதிலும் நமது சமய நூல்களும் அநுஷ்டானங்களும் சமஸ்கிருதத்திலேயே காணப்படுகின்றன என அங்கலாய்ப்பவர்கள் பலர். அது அந்நிய மொழி. புரியாத மொழி என்று அதனைப் புறந்தள்ளித் தமிழிலேயே பூஜை, அர்ச்சனைகளைச் செய்யவேண்டும் என முழங்குவோர் சிலர்.

வேதம் வைதிக மதங்கள் யாவற்றுக்குமே பொதுப் பிரமாணமாகவும் மூலவித்தாகவும் உள்ளது. சிவாகமங்கள் நமது சைவ சித்தாந் தத்துக்கே உரிய தனிச் சிறப்பு வாய்ந்தவை. தென்னிந்திய வாழ்க்கை முறைக்கேற்ப அமைந்தவை. (ஈழமும் பெரும்பாலும் தென்னிந்திய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவதே)

இருப்பினும், இவ்வாகமங்கள் வடமொழியில் அமைந்ததேன் என்பது கேள்வி. சமஸ்கிருதம் வைதிக மொழி. இந்து மதத்தின் சிறப்பு மொழி. இவற்றுக்கு மேலாக உலகப் பொது மொழி. இன்று ஆங்கிலம் எப்படி உலகப் பொது மொழியாக இருக்கிறதோ அதேபோல அன்று சமஸ்கிருதம் இருந்தது. அதனாலேயே சமய நூல்கள் மாத்திரமின்றி கலை, இலக்கிய அறிவியல் நூல்கள் பலவும் வைத்திய சோதிட நூல்களும் சமஸ்கிருத்தில் இயற்றப்பட்டிருந்தன.

மிகச் சில காலங்களுக்கு முன்புகூட நமது நாட்டிலும் தமிழகத்திலும் ராஜாங்க வேலைகள் அலுவலகக் கடமைகள், அறிஞர்களுக்கிடையிலான கடிதத் தொடர்புகள், சம்பாஷைணைகள் ஆங்கிலத்திலே அமைந்திருந்ததை யாவரும் அறிவர். தமிழ்மொழி ஆராய்ச்சி நூல்கள்கூட ஆங்கிலத்தில் எழுதப்பட்டால்தான் அவை மதிக்கப்பட்டன. அவ்வளவு தூரம் ஆங்கிலம் அகில உலகத்தையே ஆட்சிசெய்தது. இன்றும் ஆங்கிலேயரை அப்புறப்படுத்திவிட்ட போதிலும் பொதுத் தொடர்புகளுக்கு வாய்ப்பான சிறந்த மொழியாக நாம் அதனைக் கைக்கொள்ளுகிறோம். அதேநிலை சமஸ்கிருத்திற்கு இருந்தது. அதனால், சிவாகமங்களும் சம்ஸ்கிருதத்திலேயே எழுந்தன. அநுஷ்டானங்களும் சமஸ்கிருதத்திலேயே எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251942



"தமிழ் மக்கள் படைப்புக் காலந் தொடக்கம் சிவநெறியாளரே என்பது ஆராய்ச்சியாளர் கண்ட துணிபாகும். ஆனால், அவர்களது சிவநெறியொழுக்க முறைகளை விரித்துக் கூறும் தமிழ்நூல்களைக் காண்டலரிதாகும். அங்ஙனமாகவும் அவைகளை விரித்துக் கூறும் வடமொழி நூல்களையும் வெறுத்து விடலாமா? வெறுத்துவிடின், நம் தமிழ் மக்களின் சிவநெறியொழுக்கம் சிதைவடையாது எங்ஙனம் முறைப்படி நிகழ முடியும்? "

இது ஸ்ரீ சி. சுப்பிரமணிய தேசிகர் தமது "சைவக் கிரியைகள்" நூலிற் கேட்கும் கேள்வி.

வடமொழியை நமக்குப் புரியாத வேற்று மொழியாகக் கருதும் மனநிலை மாறவேண்டும். உலகெங்கிலுமுள்ள இஸ்லாமிய சகோதரர்கள் தமது சமயப் பொது மொழியாக அரபு மொழியினை ஏற்று ஆர்வத்துடன் படித்து அதே மொழியில் தமது அனுஷ்டானங்களை மேற்கொள்வதைக் காணலாம்.

ஆங்கிலத்தை மட்டுமல்லாமல் வேற்று மொழிகள் பலவற்றையும்கூட தொழில்முறைத் தேவைகட்காகக் கற்றறியும் நம்மவர் நமது ஆத்மீகத் தேவை கருதி வடமொழியைச் சிறிது பயிலுதல் இயலாதோ?

மேலும், இன்று பல ஆலயங்களில் கிரியை முறைகள் சரியாக நடக்கவில்லையெனக் குறை கூறுபவர்களும், கிரியை விளக்கங்கள் மந்திரங்கள் எதுவும் புரியவில்லை என்று அங்கலாய்ப்பவர்களும் தமது குறைகூறும் மனப்பான்மையையும், சலிப்பையும் விலக்கி வடமொழியைக் கற்றுணர்வார்களானால் கிரியைகளின் விளக்கத்தைத் தாமுணர்வது மட்டுமன்றித் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் உணர்த்தி நமது ஆலயங்களில் நிகழும் மந்திரலோப கிரியாலோபங்களைக் (குறைபாடுகளை) களைந்து சீர்திருத்தலாம்.

இனி, கிரியைகளில் பயன்படுத்தப்படும் மந்திரங்கள் பற்றிச் சில கருத்துக்கள் கூறலாம். தேவர்களாலும் முனிவர்களாலும் உலகுக் களிக்கப்பட்ட மந்திரங்கள் பெரும் சக்திவாய்ந்தவை. அவற்றுக்குப் பூரணமாக மொழிபெயர்ப்புக் காண இயலாது. பிரணவ மந்திரமாகிய 'ஓம்' என்பதும், பீஜாக்ஷரங்கள் என்று சொல்லப்படும் மந்திர எழுத்துக்களும் 'நம' முதல் 'பட்' என்பது வரையிலான எழுவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகளையுடைய (ஏழு கோடி மந்திரங்கள் எனப் புகழப்படும்) மந்திரங்களும், அவற்றின் எழுத்துக்கள், உச்சரிப்புக்கள், ஒலிகள் முதலியவற்றினாலேயே தமது அருட் சக்தியை வெளிப்படுத்துவன வன்றிப் பொருளமைதியால் மாத்திரமன்று.

ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வோர் அதிர்வெண் இருப்பதும், அவற்றின் ஒலியமைப்புக்களில் தனித்தனியான சிறப்பம்சங்கள் இருப்பதும், இலக்கங்களுக்கும் தனித்துவமான சில சக்திகள் இருப்பதும் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மைகள். நமது கிரியைகளில் பயன்படும் மந்திரங்களும் தத்தமக்குரிய விசேஷ ஒலியமைப்புக் களையும் அதியுன்னத அருட்சக்திகளையும் உள்ளடக்கிய மகிமை வாய்ந்தவை. இவற்றை அறிவினால் ஆராய்வதை விடுத்து அநுபவத்தினால் அறிந்து உணர்வதே தகும். அறிவின் சக்தி ஓர் எல்லையுடன் நின்றுவிடும். அதற்குமேல், நம்பிக்கையுடன் கூடிய ஆத்ம சாதனையே விளக்கம் தரும்.

'செயல்கள் சமனாயிருந்தாலும் இவ்வுலகில் அவற்றின் பலன் வெவ்வேறாக இருப்பதேன்?' என்ற நாரத முனிவரின் கேள்விக்கு ஸ்ரீமந் நாராயணன் கூறும் பதில் ஸ்ரீமத் தேவி பாகவதத்தில் வருகிறது.

*"செயல்புரிபவரின் சிரத்தைக்குத் தக்கபடியே பலன்களும் வேறுபடுகின்றன"*

கிரியைகள், சம்பிரதாயங்கள், சடங்குகள், இவற்றில் பல சிறப்பம்சங்கள் உள்ளன. அவற்றைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தால் வெறுத்தொதுக்காது நம்பிக்கையோடு அவற்றை அணுகி எமது அறிவுக்கு எட்டியவரை ஆராய்ந்து அவற்றிலுள்ள தத்துவ உட்பொருளை விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

கிரியைகள், சிறப்புறுவதும் பயனளிப்பதும் நான்கு முக்கிய அம்சங்களில் தங்கியிருக்கின்றன. சரியான மந்திரங்களைச் சரியான உச்சரிப்புடன், பயன்படுத்துவது முதலாவது அம்சம். ஒலிச் சிறப்புப்பற்றி ஏற்கெனவே கூறப்பட்டது.

இரண்டாவது அம்சம் மனோசக்தி. செய்யப்படும் எந்தக் காரியமும் வெற்றியடைவதும், தோல்வியடைவதும் செய்பவர்களின் மனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தைப் பொறுத்ததே. கிரியைகளைச் செய்பவரும் செய்விப்பவரும் சலனமில்லாத நம்பிக்கையும் பரிபூரணமான இறைபக்தியும் உடையவர்களாகச் சிரத்தையுடனும், லயிப்புடனும் அவற்றில் ஈடுபடவேண்டும். கயிற்றின் மேல் நடப்பவன் தன் கவனத்தை வேறெங்கும் சிதறவிடாமல் கயிற்றிலேயே தனது மனத்தை ஒருமுகப்படுத்தி வெற்றி பெறுகிறான். சங்கீத சாதகன் பாடிக் கொண்டிருக்கும்போது தனது கவனத்தை வேறிடத்தில் செல்லவிட்டால் லயம் தப்பி விடுகிறது. லயிப்பு இல்லாவிட்டால் லயம் தப்பி விடும்.

இதேபோல, கிரியைகளில் ஈடுபடும்போது ஆத்மார்த்தமான ஈடுபாடும், தன்னம்பிக்கையும், இறைநம்பிக்கையும் மன ஒருமைப்பாடும் இருந்தால்தான் பூரண பலனைக் காணமுடியும்.

மனோசக்தியின் பயன்பாடுகள் பற்றியும், சாதனைகள் பற்றியும், மனோதத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ செய்திகளை ஆதார பூர்வமாகக் கூறுகிறது. வைத்திய போதனைகளில் மனோவசிய முறை நன்கு பயன்படுத்தப்டுகிறது. ஒரு வைத்தியரின் போதனைகளால் அவரிடம் நோயாளி வைக்கின்ற நம்பிக்கையால் அரைப்பங்கு நோய் குணமாகிவிடுகிறது. மேலும், சுயவசிய முறைப்படி தனது உடலுறுப்புக்களைத் தானே வசப்படுத்திச் சில நோய்களை மாற்றிவிடக்கூடிய சக்தி மனவலிமைக்கு உண்டு. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தால் நமது கிரியைகளில் மனோசக்தி எவ்வளவு தூரம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பது விளங்கும்.

கிரியைகளில் வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது அம்சம் தலச்சிறப்பு. கிரியை நிகழும் ஸ்தானம், அதன் சூழல் என்பன கிரியைகள் நிகழ்வதற்குகந்த முறையில் சாஸ்திர விதிப்படி அமைந்திருப்பது அவசியம். வீட்டிலே நிகழும் கிரியைகளுக்காக அதற்கேற்ற வகையில் இடத்தை ஒழுங்கு செய்வதைக் காண்கின்றோம். ஆலயங்களில் நிகழும் கிரியைகளுக்கும் யாக மண்டபங்கள், வேதிகைகள், கும்பங்கள் முதலியன விதிப்படி அமைய வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஆலயமே ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தால்தான் அங்கு நிகழும் கிரியைகள் நாம் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது அம்சம் நமது சைவசமயிகளுக்கும், தமிழருக்கும் மிகச் சிறப்பாகக் கருதப்படும் சதாசாரமும், தூய்மையுமாகும். ஆசாரம் என்றால் ஒழுக்கம். ஒழுக்கம் என்பது வாழ்க்கையை முறைப்படி நடத்த வேண்டிய நல்வழி.

கிரியைகளை நடத்தும் சிவாச்சாரியர்கள் எப்படி இருக்க வேண்டும், அவர்கள் எப்படி ஒழுகவேண்டும், அவர்கள் எத்தகைய அநுஷ்டானங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று சிவாகமங்களில் ஆசார்ய லக்ஷணம் என்ற பகுதியில் விதந்துரைக்கப்பட்டிக்கின்றன. அவற்றை அநுசரிக்க வேண்டிய கடமை சிவாச்சாரியார்களுக்குண்டு. அதேபோல் அவர்களைக் கொண்டு கிரியைகளைச் செய்விக்கும் எஜமானர்களும் தத்தமக்கு விதிக்கப்பட்ட ஆசார ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாவார்.

ஒழுக்கம் மட்டுமின்றித் தூய்மை என்னும் சுத்தமும் கிரியைகளுக்கு மிக முக்கியமான அடிப்படையாகும். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் (நினைவு, சொல், செயல்) இந்தத் தூய்மை பேணப்பட வேண்டும்.

விஞ்ஞானப் பரிசோதனைகளை ஆய்வுகூடங்களில் நடத்தும்போது குறித்த விதிமுறைகளில் சிறு தவறு நேரிடினும் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகள் ஏற்படுவதை மாணவர்கள் அவதானித்திருப்பர். நமது சைவக்கிரியைகளிலும் இந்த நான்கு அம்சங்களும் சீரான முறையில் அநுசரிக்கப்படும்போது மாத்திரமே அபரிதமான அருட்சக்தி பிரவகித்து ஆனந்த வாழ்வை அளிக்கும். இவற்றில் ஏற்படும் தவறுகள், குறைபாடுகள் நாம் எதிர்பார்த்த அளவு பலனைக் கொடுக்காது என்பதுடன் சில எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

தவறு ஏற்பட்டுவிட்டால் பெரும் தீமையை அனுபவிக்க நேருமே என்று பயங்கொள்வதற்காக இங்கு இவ்விஷயம் சுட்டிக்காட்டப் படவில்லை. எதிர்மறையாக, முறைப்படி நடைபெற்றால் முழுப் பலனையும் பெறலாம் என்பதே உணரப்படவேண்டியது. ஆழ்ந்த பக்தியும், உண்மையான நமபிக்கையும் இருக்குமானால் கிரியைகளில் தற்செயலாக ஏற்படும் தவறுகள் பலனைக் குறைக்குமல்லாமல் தீமையை நல்காது என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியைகள் - ஒரு சுருக்க வரலாறு

கிரியைகள் பற்றிக் கூறும்போது அவற்றைப்பற்றிக் கூறிய ஆதி நூல்களாகவும் எமது சைவ சமயத்தின் பிரமாண நூல்களாகவும் அமையும் வேதங்கள் ஆகமங்கள் இரண்டையும் பற்றி மேலோட்டமான சில கருத்துக்கள் தெரிந்திருப்பது நன்று.

வேதங்கள், ஆகமங்கள், வேதாங்கங்கள், சூத்திரங்கள், இதிஹாசசங்கள், புராணங்கள், தந்திர சாஸ்திரங்கள், சிற்ப சாஸ்திரங்கள் என்ற படிமுறை வளர்ச்சியில் எமது மதத்தின் கிரியைகளை ஆராய்வது அறிஞர் மரபு.

தேங்கள் நான்கு பகுதிகளாக இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் என்ற பெயர்களுடன் வகுக்கப்பட்டுள்ளன. இருக்கு வேதமானது பிரார்த்தனைப் பாடல்களாக அமைந்தது. இந்திரன், அக்கினி, வருணன், ருத்திரன், விஷ்ணு முதலிய தெய்வங்களுக்கு வழிபாடு செய்து பால், நெய், தேன் முதலியவற்றைச் சமர்ப்பித்து நோயற்ற வாழ்வு, புத்திர் முதலிய செல்வங்களைத் தரும்படி வேண்டுவதே இருக்கு வேதம் விதிக்கின்ற வழிபாட்டம்சமாகும். இது சரியை மார்க்கத்தின் பாற்பட்டது.

யஜுர் வேதமானது விரதங்கள், யாகங்கள் முதலியவற்றின் விளக்கங்களையும் அவை செய்யப்படவேண்டிய முறைகளையும் அவற்றிற்குரிய மந்திரங்களையும் எடுத்துரைக்கின்றது. இது கிரியா மார்க்கத்தின்பாற்பட்டது.

ஓம் என்னும் பிரணவ மந்திரமும், ஸ்வாஹா முதலிய மந்திரங் களும், ஹ்ரீம் முதலிய பீஜாக்ஷரங்களும் பஞ்சாக்ஷர மந்திரமும் யஜுர் வேதத்தின் நன்கொடையே. இறைவனைப் பல பெயர் சொல்லிப் போற்றும் வழிபாட்டு முறை இதில் காணப்டுகின்றது. யஜுர் வேதத்திலிடம்பெறும் ஸ்ரீருத்ரம் எனும் இப்பகுதி சதருத்திரியம் என அழைக்கப்படுகின்றது. பல பெயர்களைச் சொல்லி நம: என்று அர்ச்சனை செய்யும் முறைக்கு இது முதற்படி என அறிஞர் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமவேதம் யாகங்களில் இசையோடு ஓதுவதற்குப் பயன்படுவது. இது பிரார்த்தனைப் பாடல்களின் தொகுதியாகும்.

அதர்வண வேதம் கிரியைகளைப் பற்றியே பெரிதும் சொல்லி யிருப்பினும் இவை சாதாரண லௌகீகமான செயற்பாடுகள், வைத்திய மாந்திரீக விஷயங்கள் முதலியவற்றையே கூறுகின்றன.

வேதங்கள் நான்கும் மந்திரங்கள், பிராம்மணங்கள், ஆரணியகங்கள், உபநிஷதங்கள் என நான்காக வகுக்கப்பட்டுள்ளன. பிராம்மணங்களே வேள்விகள், கிரியைகள் இவற்றின் விளக்கங்கங்களையும் செயற் பாட்டு முறைகளைளுயும் கூறுகின்றன.

ஆரணியகங்கள் மானசீக வழிபாடு (அந்தர்யாகம்) பற்றி எடுத்துரைக்கும் யோக மார்க்கத்திற்குரியன. வேதாந்தங்களான (மறைமுடி) உபநிஷதங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்த தத்துவ தர்சனங்களாக விளங்குகின்றன. ஞான மார்க்கத்தின் தோற்றுவாய் இந்த உபநிஷதங்களே.

வேதகால வழிபாடுகளில் வேள்வியிலேயே அக்கினி வடிவாகவும் அக்கினியை ஊடகமாகக் கொண்டும் இறைவன் வணங்கப்பட்டான். அக்கினி குளிர்ந்து இறுகிக் கருநிறம் பெறும்போது லிங்கவடிவம் தோன்றுகிறது. பிரம்ம விஷ்ணுக்களுக்குக் காட்சி கொடுத்த ஜோதிப் பிழம்பின் குளிர்ந்த குறுகிய ஒரு தோற்றமாக லிங்கத்தைக் கருதலாம். இது இறைவனுக்குரிய அருவுருவத் திருமேனியாகும்.

படிப்படியாக ஆகமங்களையும் இதிஹாச புராணங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆலய அமைப்பு முறைகளும், உருவத் திருமேனிகளின் லக்ஷணங்களும் உருவாகின. சிற்பசாஸ்திரம் முதலான நூல்கள் இவைபற்றி உரைப்பனவாக எழுந்தன.

இவ்விஷயங்கள் பற்றி ஆராயும் நோக்கம் இந்நூலுக்கு இல்லை. அத்தகைய தகுதியும் இங்கில்லை. இன்று நடைமுறையிலுள்ள கிரியைகள் பற்றிய சில விளக்கங்களே இங்கு தரப்படும்.

பரம்பரையான மரபுவழிச் செயல்முறைகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவ நாற்பாதங்களும் அமையும் வகையில் சிவாகமங்கள் கூறுகின்றன. சிவபிரானால் அருளப்பட்டவை என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கப்படும் சிவாகமங்கள் இருபத்தெட்டினுள் காலத்தால் அழிந்தவைபோக எஞ்சியிருப்பவை மிகச்சிலவே. அவற்றுள்ளும் காமிகம், காரணம் ஆகியவையே பெருவழக்கிலுள்ளவை.

இவையும், மொழியறிந்தார்கூட இலகுவில் புரிந்து கொள்ளும் வகையிலன்றி மிகவும் ஆழ்ந்த கருத்துக்களையும் சங்கேத பாஷைகளையும் கொண்டிருப்பதனால் இவற்றை இலகு படுதத்தியும் ஒழுங்குபடுத்தியும், கிரியா பத்ததிகள் எழுந்தன. பத்ததி என்பது வழிகாட்டும் நூல் எனப் பொருள்படும்.

பத்ததிகள் பதினெட்டு என அறியப்படுகிறது. இவற்றுள் மிகச்சில இடங்களில் சோமசம்பு சிவாச்சாரியார் செய்த பத்ததி வழக்கி லுள்ளது. ஏனைய தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் அகோர சிவாச்சாரியார் பத்ததியே பெரு வழக்கிலுள்ளது. இந்தப் பத்ததியை ஆதாரமாகக் கொண்டு இன்று நமது சைவாலயங்களில் நடைபெறும் கிரியைகள் அமைகின்றன.

இந்தப் பத்ததிகளை விட முருகன் ஆலயங்களில் குமார தந்திரமும் பயன்படுத்துவதுண்டு.

சிவாகமங்களையும் சிவாகம சாரமான பத்ததிகளையும் பரிசோதித்து நூல் வடிவில் அச்சிடும் பணியில் சென்னை ஸ்ரீமத் கொ. ஷண்முகசுந்தர முதலியார், திருமயிலை அழகப்ப முதலியார் ஆகியோர் ஈடுபட்டனர்.

இத்துறையில் இலங்கையில் சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் முதலிடம் வகிக்கிறார். தென்னிந்தியப் பத்ததிகளைவிட இவரது பத்ததிகளையே சிவாசாரியார்கள் விரும்பிப் பயன்படுத்துகின்றனர். இவரைப் போலவே திரிகோணமலை இ. கு. பூரணானந்தேஸ்வரக் குருக்கள், நல்லூர் பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் நாயன்மார்கட்டு சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள் ஆகியோரும் இத்துறையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிவாச்சாரிய தகைமை பெற்ற குருமார் செய்ய வேண்டிய நால்வகைத் தீட்சைகளும் சிவபூஜாவிதி ஆசாரிய அபிஷேகம் என்பனவும் பல சாஸ்திரப் பிரமாணங்களோடு வடமொழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்ட நிர்மலமணி வியாக்கியானம், பௌஷ்கர சம்ஹிதா பாஷ்யம் முதலிய சில நூல்களைை அம்பலவாண நாவலரவர்கள் பதிப்பித்திருக்கிறார்.

ஆலயக் கிரியைகளில் நேரடியாகப் பயன்படுத்தக்கூடிய இந்தப் பத்ததிகளில் ஒவ்வொரு கிரியையும் செய்ய வேண்டிய முறைகள் அவற்றுக்கு வேண்டிய பொருள்கள், அவை நிகழ வேண்டிய மண்டபம், வேதிகை, குண்டம் இவைபற்றிய விளக்கங்களும் அந்தந்த இடங்களில் பிரார்த்திக்க வேண்டிய, ஜபிக்க வேண்டிய சுலோகங்கள், தியானங்கள், மந்திரங்கள் என்பனவும் படிமுறையாக அமைந்திருக்கும்.

சாதாரண கிரியைகளுக்கான மந்திரங்களையும் முறைகளையும் சிவாசாரியார்கள் மனனம் செய்திருப்பார்கள். எனவே அவை நிகழும்போது பத்ததி அவசியமில்லை. ஆனால் விசேஷ கிரியைகள் நிகழும்போது ஒருவர் பத்ததியை வைத்து வாசித்துக் கொண்டிருக்க, அதை அநுசரித்து **சிவாசாரியார்** கிரியைகளைச் செய்வார். நடக்க வேண்டிய கிரியைகளை பத்ததி மூலம் உணர்த்தும் இவரைச் **சாதகாசாரியர்** என அழைப்பர். கிரியைகளைத் தமக்காக நடத்துவிப்பவர் **யஜமானன்** என்றும், சரியான முறையில் நடப்பவற்றைக் கண்காணித்து வழிப்படுத்துபவர் **போதகாசாரியர்** என்றும் கூறப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் அமைப்பும் திருவுருவங்களும்

'அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு' என்று தத்துவ நூல்களும் சமய ஞானிகளும் உரைப்பது வழக்கம். அண்டமென்பது இந்தப் பிரபஞ்சம். பிண்டம் என்பது நமதுடல். அண்டங்கள் யாவற்றிலும் பரந்து விரிந்து வியாபித்திருக்கும் அருட்சக்தி நிறைந்த இறைவன் எமது உடலிலும் அவ்வாறே உறைந்திருக்கிறான்.

"நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"
"விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காவாய் விளங்கொளியாய்"
"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"

என வரும் சிவபுராண அடிகள் சிவபெருமானின் பெருமை நுண்மைகளைப் புலப்படுத்தவன. இத்தகைய இறைவனை - அண்டத்தில் வியாபிதிருக்கும் ஆண்டவனை - பிண்டமாகிய நமது உடலிலேயே கண்டுணர்ந்து அநுபவித்து வழிபட்டு ஆனந்திப்பது ஞானிகள் செயல். இது யோக ஞான மார்க்கங்களின் பாற்பட்டது.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்றும்,

"காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி லிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே" என்றும்

வரும் திருமுறை மலர்கள் இதனை விளக்கும்.

'பிரம்மபுரே தஹரம் புண்டரீகம்' என்றும் (உடலே திருக்கோவில் உள்ளுறையும் உயிரே இறைவன்), 'தேஹோ தேவாலய ப்ரோக்தோ ஜீவோ தேவ' (இவ்வுடலே ஆலயம், உயிரே இறைவன்) என்றும் உபநிடதங்கள் கூறுவதையும் கருதலாம்.

சிற்றறிவினராகிய எம் போன்றவர்களுளுக்கு இந்த யோக, ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கங்கள் கைவருதல் கடினமென்பதால் சரியை, கிரியை என்னும் முதற்படிகளை அமைத்தனர் சான்றோர். சரியைத் தொண்டுகளையும் கிரியை வழிபாடுகளையும் நிகழ்த்தி இறைவனை அடையும் இந்த மார்க்கங்களுக்குச் சில சாதனங்களும் அவசியமாகின்றன.

இன்னவழியால் இன்ன இடத்திற்குப் போகலாம் என்று பாதையைச் சுட்டி நிற்றல் மட்டுமன்றி இன்ன வாகனத்தில் ஏறி இப்படிப் போகவேண்டும் என்று வழி முறைகளையும் சொல்லித் தருகிறது சைவசமயம்.

முன்பொருபோதும் கண்டறியாத பொருள்களைப் படங்கள் வரைந்து அதன்மூலம் விளங்கச் செய்வது போலவும், செயல்முறைப் பரிசோதனைகள் மூலம் சில முடிவுகளைக் கண்டறிவது போலவும், நாம் ஞானக்கண்ணால் கண்டறிய வேண்டிய இறைவனுக்குச் சில உருவப்பிரதிமைகளை நமது ஊனக்கண்களுக்குத் தெரியும்படி அமைத்து அத்திருவுருவங்களை வைத்துச் சில கிரியைகளைச் செய்கிறோம்.

எல்லா இடங்களிலும் எல்லாச் செயல்களையும் செய்வது இயலாத காரியம். அவ்வாறு செய்யின் உரியவாறு சித்திகள் கிடைப்பதும் அபூர்வம். விஞ்ஞானப் பரிசோதனைகள் அதற்கென அமைந்த ஆய்வுகூடங்களிலேயே நிகழ்த்தப்பட முடியும். இதுபோலவே, வழிபாடுகள் கிரியைகளை முறைப்படி நிகழ்த்த ஆலயங்கள் அவசியமாகின்றன.

பசுவின் உடலிலுள்ள பாலை அதன் மடியிலிருந்து மட்டுமே பெறுதல் முடியும். உலகெங்கணும் வியாபித்திருக்கும் ஆண்டவனை வழிபட்டு அவனருள் பெற ஆலயமும் இவ்வாறே அவசியமாகிறது. அதுமாத்திரமல்ல! பசுவின் மடியில் கைவைத்த மாத்திரத்தில் பால் சுரப்பதில்லை. அதன் கன்றைச் சிறிது நேரம் ஊட்டும்படி விட்டுப்பின்னர் நாம் முயற்சியுடன் கறந்தெடுத்தல் போல உரிய காலங்களில் உரிய முறைப்படி கிரியைகளை நிகழ்த்தி முயற்சியுடன் வேண்டி நின்றால் இறைவன் திருவருள் தானே சுரக்கும்.

பாலிலே மறைந்து தோன்றும் நெய்யைப் பிரித்தெடுப்பதற்கும், விறகிலே மறைந்து தோன்றும் தீயினை வெளிப்படுத்தவும் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. இதேயளவு முயற்சியை இறையருள் நாட்டத்திலும் வைத்தால் நாம் வெற்றி பெறலாம்.

**"விறகிற் றீயினன் பாலில் படுநெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்**
**உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்**
**முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"**

என்று இதையே விளக்குகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவுருவங்களினதும், ஆலயங்களினதும் அவசியம் பற்றிச் சிறிது நோக்கினோம். இவை எப்படி எப்படி அமைய வேண்டும். எந்தெந்த அளவுகளில் அமைக்கப்பட வேண்டும் என்று பல நியதிகளை – விதிமுறைகளைச் சமய நுல்கள் எடுத்துரைக்கின்றன. ஆலயங்களின் அமைப்பு மட்டுமல்லாமல் ஒவ்வொரு விதமான கிரியைகளும் நடைபெற வேண்டிய மண்டபங்கள், அவற்றின் அமைப்பு முறைகள், அளவுகள், அங்கு இருக்க வேண்டிய பொருள்கள் இவையெல்லாம் ஆகமங்களிலும் அவற்றை முதல் நூல்களாகக் கொண்டெழுந்த சிற்பசாஸ்திரம் முதலிய நூல்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப் படுவது கவனிக்கத்தக்கது. ஆலயம், அதன் கோபுரம், தேர் என்பவை மனித சரீரத்தையும், இப்பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் நீட்டிநிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயமும் அமைகிறது. மூலஸ்தானம் அல்லது கருவறை சிரசினைக் குறிக்கும். அர்த்த மண்டபம் கழுத்தினையும் மஹாமண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

அந்த மனிதன் அப்படியே இருந்தபடியே முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தால் முள்ளந்தண்டு அமையும் வகையைக் கொடித்தம்பம் காட்டுகிறது. இக்கொடித்தம்பத்தின் அடியில் இருக்கும் சிறிய விநாயகர் எமது மூலதாரத்தில் அரூப சொரூபியாயிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரைக் குறிக்கிறது. மூலாதார கணபதி என இவர் அழைக்கப்படுகிறார்.

யோகமார்க்கத்திலே ஆறுதார ஸ்தானங்கள் என மூலதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஜ்ஞை என்பன குறிப்பிடப்படுகின்றன. முள்ளந்தண்டெலும்பின் அடிப்பாகம் குண்டலினி சக்தியின் (மனிதனில் மறைந்திருக்கும் அளப்பரும் தெய்வீக சக்தி) இருப்பிடம். இதற்குச் சற்று மேலாகக் கணபதியின் இருப்பிடமான மூலதாரம் உள்ளது. இது நாலிதழ்க்கமல வடிவுடையது.

இதற்குமேல் லிங்கத்தின் அடிப்பாகத்திற்கு நேரே ஸ்வாதிஷ்டானம் என்னும் ஆறிதழ்க் கமலம் உள்ளது. இது பிரம்மாவின் ஸ்தானம். நாபிக்கு நேரே உள்ள பத்திதழ்க்கமலம் மணிபூரகமாகும். இது விஷ்ணுவின் இருப்பிடமாகும். இதயத்திற்கு நேரே உள்ள பன்னிரண்டிதழ்க் கமலம் அநாகதம். இது ருத்திரனுக்குரியது. தொண்டைக் குழிக்குநேரே பதினாறிதழ்க் கமலமாக அமைந்தது விசுத்தி. இது மகேஸ்வரனின் இருப்பிடம். புருவ மத்திக்கு நேரே உள்ள இரண்டிதழ்க் கமலமானது ஆஜ்ஞை எனப்படும் சதாசிவனது இருப்பிடமாகும்.

இந்த ஆறு ஆதாரங்களுக்குமேல் சிரசின் உச்சியிலே அமைந்த ஆயிரமிதழ்க் கமலமான சஹஸ்ராரம் என்பது சுத்த சிவத்தின் இருப்பிடமான துவாதசாந்தஸ்தான அடித்தளமாகும்.

இவை ஆலயத்தின் அமைப்பில் முறையே. கொடித்தம்பத்தடி, பலிபீடம், தரிசனமண்டபம், மஹாமண்டபம், அர்த்தமண்டபம், கருப்பக்கிருகம் என்பனவாக அமைகின்றன. சஹஸ்ராரத்தை நினைவூட்டவே கர்ப்பக்கிருகத்தில் கமலவிளக்கு அமைகின்றனர்.

ஆலயத்தின் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. அடுக்கடுக்காய் அமைந்த தளங்கள் பல்வேறுபட்ட உலகங்களையும், உலக வாழ்க்கையின் பலவித அநுபவங்களையும் குறிப்பன. இறைவனின் பலவிதமான திருவிளையாடல்கள் மற்றும் சாதாரண உலகியல் நடைமுறைகள் என்பன கோபுரத்தில் அமையும் சிற்பங்களால் குறிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே அகன்றிருக்கும் கோபுரம் மேலே ஒடுங்கிச் சென்று கலசத்திலே நிறைவுறும். மனஒருமைப்பாடும், பரம்பொருள் ஒன்றையே பற்றிநிற்கும் மனத்திண்மையும் மேலான எண்ணங்களில் ஆழ்ந்து நிற்றலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதைக் கோபுரம் விளக்குகிறது.

தூலலிங்கம் என்று கூறப்படும் இக்கோபுரமானது சூக்கும லிங்கம் என அழைக்கப்படும் மூலமூர்த்தியின் வெளிப்படையான குறியீடாகவும், (தூலம் - வெளிப்படையானது, சூக்குமம் - மறைபொருள்) வெகு தூரத்திலுள்ளவர்களுக்குக்கூட ஆலயத்தின் இருப்பிடத்துக்கு வழிகாட்டுவதாகவும், காணுந்தோறும் இறையுணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது.

ஆலயங்களிலுள்ள கண்டாமணி எனப்படும் அசையாமணியும் இவ்வாறே தொலைவிலுள்ளவர்களுக்கும், பல்வேறு கடமைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உரிய வேளைகளில் இறைநினைவை யூட்டிக் கோயிலின் இருப்பிடத்தைக் காட்டி நிற்பதோடு மங்கல ஓசையை வெளிப்படுத்துவதாகவும் இருக்கிறது.

மேலும், இறைவன் நாததத்துவமாகவும் இருக்கிறான் என்பதனால் ஆலயங்களில் பல்வேறு விதமான நாதங்களை வழிபாட்டின்போது உருவாக்குகிறோம். மங்கல வாத்தியங்களை ஒலிப்பதன் மூலம் இவை உருவாக்கப்படுகின்றன.

"ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்று திருமுறை கூறுகிறது. ஒலிகளிலெல்லாம் நிறைந்து விளங்குபவனாகவும், ஒலிகளையெல்லாம் உருவாக்குபவனாகவும் விளங்குபவன் பரமேஸ் வரனல்லவா? நடராஜ தாண்டவத்தின்போது அவரது உடுக்கிலிருந்து பிறந்த ஒலியிலிருந்தே இசையும் மொழியும் பிறந்தன.

மணியோசைக்குத் தேவர்களை அழைக்கும் சக்தியும், தீயசக்திகளை அகற்றும் சக்தியும் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனாற்றான் எந்தக் கிரியையை ஆரம்பிக்கும்போதும் பூஜையில் பயன்படுத்தப்படும் மணிக்குப் பூஜை செய்து மந்திர சகிதமாக அதனை ஒலிக்கச் செய்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் அமைப்பு வெளியே அகன்று பெரிய மண்டபங்கள் அமைந்து உள்ளே போகப்போகச் சிறுத்து ஒடுங்கி மூலஸ்தானத்திற் குவிகிறது. மனம் குவிந்து ஒருமைப்பாட்டுடன் வழிபாடியற்றிப் பரம்பொருளையடையலாம் என்பதையே இது விளக்குகிறது.

மூலஸ்தானம் எனப்படும் கருவறையானது வாயிற்புறம் தவிர்ந்த ஏனைய மூன்று புறமும் மூடப்பெற்றதாகவும், இருள் சூழ்ந்ததாகவும் இருக்கும். வாயிலில் திரை இடப்பட்டிருக்கும். சிவாசாரியர் திரையை நீக்கித் தீபத்தை ஏற்றிக்காட்டும் போதுதான் இறைவன் திருவுருவம் தெற்றெனத் தெரிகிறது.

ஆன்மகோடிகளின் அறிவை மறைத்து உணர்வை மழுங்கடித்து அவர்களை மூடிநிற்கும் ஆணவ இருளை நீக்கி நல்லறிவுச் சுடர் கொளுத்தி ஞானதீக்ஷை வழங்கி நல்லாசான் வந்து வழிகாட்டும்போது திருவருட்சக்தியின் துணையால் சிவதரிசனம் கிட்டும் என்ற சைவசித்தாந்தக் கருத்தினது தத்துவ விளக்கமாக இவை அமைவது கவனிக்கத்தக்கது.

ஸ்தம்பமண்டபத்திலே கொடித்தம்பத்திற்கருகிலே பத்ரலிங்கம் என்று கூறப்படும் பலிபீடமும் அதையடுத்து நந்தியும் அமைந்திருக்கக் காணலாம். இவையும் பதி, பசு, பாசம் என்கிற (இறைவன், ஆன்மா, ஆணவாதி மலங்கள்) முப்பொருளுண்மை கூறி நிற்பவையே.

நந்தியானது பலிபீடத்தைப் பாராது சிவனை நோக்கியவாறு (மூலஸ்தானத்தைப் பார்த்தபடி) அமைகிறது. பலிபீடம் மல நீக்கத்திற்கு அறிகுறி. நந்தி ஆன்மா. ஆன்மா, தனது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பலியிட்டு அவற்றி னின்றும் நீங்கிப் பதியாகிய பரம்பொருளை நாடவேண்டும் என்பதையே இது குறிக்கிறது.

கொடிமரமானது பஞ்சகிருத்தியங்களை விளக்கும் மஹோற்சவ காரியத்திற்குப் பயன்படும். இதன் விளக்கம் மஹோற்சவம் என்ற அத்தியாயத்தில் தரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஸ்தானத்திலே பிரதான தெய்வம் வீற்றிருக்க தெற்கு வாசல் நோக்கி சக்தி அல்லது எழுந்தருளி மூர்த்தம் முதலிய வற்றிற்கும் சுற்றுப்பிராகாரத்திலே உரிய இடங்களிலே ஏனைய பரிவார தெய்வங்களுக்குமாக சந்நிதானங்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஆலயங்கள் பொதுவாகக் கிழக்கு நோக்கி அமைவதே முறை. ஆனால் இடம் பொருள் ஏவல்களுக்கேற்றபடி மிகச்சில இடங்களில் வடக்கு, மேற்கு நோக்கியும் கோயில்கள் அமைவதுண்டு. ஆனால் தெற்கு நோக்கி எந்தவொரு ஆலயமும் அமைவதற்கு விதி இல்லை. எனினும் சில இடங்களில் தனியான நடேசர் கோயில்கள் தெற்கு நோக்கி உள்ளன.

பொதுவாகச் சிவாலயங்களில் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கிப் பிள்ளையாரும், வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கி சுப்பிரமணியரும், ஈசானத்தில் தெற்கு நோக்கி வசந்த மண்டபமும், மேற்கு நோக்கி யாகசாலையும், அருகில் மேற்கு நோக்கி பைரவரும், அதையடுத்து மணிக்கோபுரமும் அமைவது மரபு. மஹாமண்டபத்தில் தெற்கு முகமாக அம்பிகை வீற்றிருப்பார். தரிசன மண்டபத்தில் நடராஜர் மற்றும் எழுந்தருளிகள் வைக்கும் வழக்கம் சில இடங்களில் உண்டு. நந்தி, பலிபீடம் இவற்றிற்கு நேர்வடக்கே நவக்கிரகங்கள் அமையும்.

நவக்கிரக மண்டபத்திலே மத்தியில் கிழக்கு நோக்கிச் சூரியனும், தென்கிழக்கில் மேற்கு நோக்கிச் சந்திரனும், தெற்கிலே தெற்கு நோக்கிச் செவ்வாயும், வடகிழக்கில் கிழக்கு நோக்கிப் புதனும், வடக்கிலே வடக்கு நோக்கிக் குருவும், கிழக்கிலே கிழக்கு நோக்கிச் சுக்கிரனும், மேற்கிலே மேற்கு நோக்கிச் சனீஸ்வரனும், தென்மேற்கில் தெற்கு நோக்கி ராகுவும், வடமேற்கில் தெற்கு நோக்கிக் கேதுவும் காட்சியளிப்பார்.

இவ்வாறு அமைக்கப்படுவது வைதிகமுறை என்று சொல்வர். அநேகமான கோயில்களிலே இந்த முறையே கைக்கொள்ளப் படுகிறது. ஆகம முறைப்படி அமைந்த கோயில்களில் இது வைதிக முறைப்படி அமைவது ஏன் என்பது அறிஞர்களின் ஆராய்ச்சிக் குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் நடுவிலிருக்க, சுபக்கிரகங்கள் நான்கும் நான்கு திக்குகளிலும், ஏனைய நான்கு கிரகங்களும் நான்கு விதிக்குகளிலும் (மூலைகள்) அமைப்பது ஆகமமுறை என்பர்.

சனீஸ்வரனைத் தனிச்சந்நிதானத்திலே அமைக்கும்போது ஈசானத்தையடுத்து பைரவருக்கருகில் மேற்கு முகமாக அல்லது வடமேற்கு மூலையில் தெற்கு முகமாக அமைத்தல் மரபு. கோபுர வாசலையடுத்து இரு புறத்திலும் மேற்கு முகமாகச் சூரிய சந்திரர்களுக்கும் தனிக்கோயில்கள் அமைவதுண்டு.

ஆலய அமைப்பு, சுற்றுமதில்கள், வீதிகள், பரிவார தெய்வங்கள் இவை யாவற்றையும் நோக்கும்போது நமக்கு ஒரு ராஜசபை நினைவுக்கு வருவது இயல்பு. வீதி உலாவருதல், குடை, தீவட்டி, உபசாரங்கள் ஆகிய இவையெல்லாம் ராஜமரியாதைக்குச் சமமானவையே!

முற்காலத்தில் அரசனைக் கடவுளாக மதித்தமையாலும், அரசனே கண்கண்ட தெய்வமாக இருந்தமையாலும் இத்தகைய ராஜோபசாரங்கள் அரசனுக்கும், கடவுளுக்கும் சமமாக இருந்தன.

பிரபஞ்ச இயக்கம் பரம்பொருளின் பஞ்சகிருத்தியங்களின் அடிப்படையில் நடப்பது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற இந்த ஐந்தொழில்களையும் பரம்பொருளாகிய சிவபெருமான் தாமே புரிவாரெனினும், தமது சக்தியின் துணைகொண்டு பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியவர்களை அதிட்டித்து நின்று இத்தொழில்களைப் புரிவதாகக் கருதுதல் சித்தாந்த மரபு. ஒரு இராச்சியத்தை நிர்வாகிக்கும் அரசன் பல மந்திரிகள், சேவகர்கள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டிருத்தல் போலப் பரமசிவனும் தமது பரிவார தெய்வங்கள் மூலமாகப் பிரபஞ்சத்தை இயக்குதல் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றே.

ஆயின் சற்று நிதானமாகச் சிந்திப்பின், இவ்விடயங்களுக்கெல்லாம் மூலகாரணமாயிருக்கின்ற அந்த ஒருவரே வேறு வேறு பெயர்களையும் தோற்றங்களையும் கொள்கிறார் என்பது விளங்கும். விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் ஆகிய நால்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் திருக்குமாரர்கள் என்று கூறப்படும் அதே நேரத்தில் இவர்கள் பரமசிவனிடமிருந்து வேறல்லாதவர்கள் என்பதும் பல புராணங்களிலிருந்து புலப்படுகின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தேவையை முன்னிட்டு ஒவ்வொரு திருவுருவத்தினைப் பரமேஸ்வரன் மேற்கொண்டிருக்கிறார். அத்தகைய வடிவங்களும் ஆலயங்களிலே பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுவதுண்டு.

ஆலயத்தின் கருவறைச் சுவர்களிலும். அர்த்த மண்டபச் சுவர்களிலும் வெளிப்புறங்களில் மாடங்கள் செய்யப்பெற்று (இவை கோஷ்ட பஞ்சரங்கள் எனப்படும்) அவற்றிலும் திருவுருவங்கள் சில பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இவற்றில் தெற்கே உள்ள மாடங்களில் தக்ஷிணாமூர்த்தி, நிருத்த கணபதி ஆகியோரும், மேற்கே உள்ளதில் லிங்கோற்பவரும், வடக்கே உள்ள மாடங்களில் பிரம்மா, துர்க்கை ஆகியோரும் அமைவது வழக்கம்.

கோயிலில் அதன் வசதிக்கேற்பவும், சூழலுக்கேற்பவும் ஒரு வீதியுடைதாக அல்லது பல வீதிகளை உடையதாகவும் பல்வேறு மண்டபங்களை உடையதாகவும் அமையும். சாதாரணமாக கர்ப்பக்கிருகம் (மூலஸ்தானம்), அர்த்தமண்டபம், மஹாமண்டபம், தரசனமண்டபம் (நிருத்த மண்டபம்), வசந்த மண்டபம் (தேவசபை), யாகசாலை, பாகசாலை (மடைப்பள்ளி), களஞ்சியம், வாகனசாலை என்பனவும் பரிவார தேவர்களின் சந்நிதிகளும் பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் இருக்கின்றன. வசதியுள்ள பெரிய கோயில்களில் வாத்திய மண்டபம், புராணமண்டபம், தீக்ஷா மண்டபம், புஷ்ப மண்டபம் எனப்பல மண்டபங்கள் அமைவதுண்டு.

மூலஸ்தானத்தின்மேல் பண்டிகை அல்லது ஸ்தூபி எனப்படும் பகுதி உண்டு. ஸ்தூபி இல்லாத கோயில்களை மடாலயங்கள் என்று கூறுவர். ஸ்தூபி, ராஜகோபுரம், தூண்கள், விதானங்கள் முதலியவற்றிலும், விக்கிரகங்கள் எனப்படும் இறைவன் திருவுருவங்களிலும் இந்துநாகரிகத்தின் சிறப்பைக் காணலாம். இவற்றில் சிற்பக்கலை நுணுக்கமும் ஓவியக்கலை மாட்சியும் ஒளிர்கின்றன. இவை இந்துமதத்தின் பக்திநெறியை மட்டுமன்றிக் கலை கலாச்சாரங்களின் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்குள்ள சிறப்பினையும் எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரங்கள் எனப்பெயர் பெறும் வீதிகள் இறைவனின் திருவுருவங்கள் அலங்கரிக்கபட்டு உலா வருவதற்கும், பக்தர்கள் வீதிவலம் வந்து வழிபாடியற்றுதற்கும் உதவுகின்றன. வீதிவலம் வருதல், அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் எனக்கூறப்படும் முறைகளில் வீழ்ந்து வணங்குதல் சிரசில் குட்டி வணங்குதல், தோப்புக்கரணம் போடுதல், அங்கப்பிரதட்சணம் செய்தல் ஆகியன நமது வழிபாட்டு முறைகளிற் சிலவாகும்.

இவற்றை ஒழுங்கான முறையிற் கடைப்பிடித்து வழிபடும்போது இவை மனத்தை ஒருநிலைப்படுத்தி இறைவனை நாடிச்செல்ல உதவுவதோடு நல்ல உடற்பயிற்சிகளாகவும் அமைந்து உடல்நலத்திற்கும் உதவுகின்றன. உடலும் மனமும் ஒத்துழைத்து இறையருளைப் பெறத் துணை புரிகின்றன.

இவைமட்டுமல்லாமல், இங்கு நடைபெறுகின்ற கிரியைகளுங் கூட நமது மன வளர்ச்சியில் படிப்படியான முதிர்ச்சியை ஏற்படுத்தி ஆன்மவிடுதலைக்கு நம்மை அழைத்துப் போகின்றன என்பது நன்கு சிந்தித்தால் உணரப்படும்.

இனி திருவுருங்கள் பற்றிச் சிந்திப்போம். உருவ வழிபாட்டு அவசியம் பற்றியும், சிவலிங்கத்திருவுருவம் பற்றிய கருத்து விளக்கமும் வேறோர் இடத்தில் உணர்த்தப்படுகின்றது. சிவலிங்கம் இறைவனின் குறியீடாக அமைவது, உருவமல்லாதது, அருவமும் அல்லாதது. எனவே அருவுருவத் திருமேனி என இதனைக் கூறுவர். அருவத் திருமேனி வழிபாடு ஞானமார்க்கத்திற்குரியது. எம்போன்ற சிற்றறிவினர்க்குரிய சரியை, கிரியை வழிகளுக்கு உதவும் வகையில் உருவத்திருமேனிகள் பல உள்ளன. அவற்றையே ஆலயங்களில் வைத்து வழிபடுகிறோம்.

சிவபெருமானது சிறந்த மூர்த்தங்களுள் ஒன்று நடராஜ வடிவம். இது ஐந்தொழிலைக் குறிக்கும் ஆனந்த தாண்டவ வடிவமாகும். இடதுபாதம் தூக்கி வலதுபாதம் ஊன்றி ஆடும் இந்த நடனத்தில்,

**"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊன்றும் மலர்ப்பதத்தே உற்ற திரோதம் முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு"**

என்ற திருப்பாடலுக்கமைய உடுக்கிலிருந்து பிறக்கும் நாதம் படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அக்கினி ஏந்திய கரம் அழித்தலையும், முயலகன்மேல் ஊன்றிய பாதம் மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கின்றன. இந்த ஆனத்த தாண்டவத்தில் சிவகாமசுந்தரியின் உருவம் இடம்பெறல் முக்கியம். நடராஜ தாண்டவத்தின் பல்வேறு வகையான மூர்த்திகள் அமைக்கப் படுகின்றன. கால் மாறி ஆடிய மூர்த்தி, ஊர்த்துவ தாண்டவமூர்த்தி என்று பலவாகும். இவற்றைவிட சோமாஸ்கந்தர் (நடுவில் பால முருகனும், இருபுறமும் சிவனும் உமையுமாக அமர்ந்த திருக்கோலம்), சந்திரசேகரர் (பிறை சூடிய பெருமானின் நின்ற திருக்கோலம் - உமையுடன் கூடியும் தனியாகவும் இருவகையிலமையும்), பிக்ஷாடனர் (பிக்ஷை ஏற்கும் திருக்கோலம்), தக்ஷிணாமூர்த்தி (தெற்கு முகமாக ஆலமரத்தின் கீழ் அமர்ந்து சநகர், சநாதனர், சநந்தனர், சநற்குமாரர் ஆகிய நான்கு சீடர்களுக்கும் ஞானநிலையை விளக்கும் கோலம்) என்பன சிவனின் மூர்த்தி பேதங்களுட் சிலவாகும். சிவாலயங்களில் இம்மூர்த்திகள் பரிவார தெய்வங்களாக அமையும். மூலஸ்தானத்தில் சிவலிங்கமே அமைதல் வழக்கம்.

பரம்பொருளின் திருவருட் சக்தியானது பெண்வடிவாக தாய்மைத் திருவுருவாக அம்பிகை என அன்போடு வழிபடப் படுகின்றது. சதாசிவப் பரப்பிரம்மத்தின் சக்தியாக பரமமங்கள ஸ்வரூபியாக உருவகப்படுத்தப்படும் தேவி மனோன்மணியின் தோற்றம் அபய வரத ஹஸ்தங்களுடனும், ஜபமாலை தாமரை களுடனும் நின்ற கோலத்தில் அமைக்கப்படுகிறது. பாசம், அங்குசம், வரதம், அபயம் என்பவற்றுடன் புவனேஸ்வரியாகவும், சதாசிவ மூர்த்தியாகிய பரமசிவனுடன் இணைந்து காணப்படும் வேளையில் கௌரி என்ற பெயருடன் வலக்கரத்தில் நீலோற்பலம் ஏந்தி, இடக்கரம் தொங்கிவிட்ட தோற்றத்துடனும் அமைக்கப்படுகிறது.

மாராசுரனை அழித்ததனால், மஹாமாரி என்ற மூர்த்தம் உருவாகியது. முக்கண்ணும், நான்கு கரமும் (கபாலம், கத்தி, பாசம், உடுக்கு), இடக்கால் மடித்து வலக்கால் தொங்கவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்த தோற்றமும், தலையைச் சுற்றி ஒளிரும் அக்கினிப் பிழம்பும் மஹாமாரியின் திருவருவமாகும். ஐந்து தலை நாகமொன்று சிரசின்மேல் படமெடுத்திருக்க இவள் தோற்றத்தை அமைப்பதுமுண்டு. இவள் நோய்களுக்கு அதிபதி.

மகிஷாசுரமர்த்தனியாகிய துர்க்கை எருமைத் தலைமேல் நிற்பவளாகவும், சங்கு, சக்கரம், சூலம் என்பன தரித்தவளாகவும் காணப்படுவாள். எட்டுக்கரங்களுடனும், பத்துக்கரங்களுடனும், பதினெட்டுக் கரங்களுடனும் அமைக்கப்படும் வேறுவகையான துர்க்கையின் திருவுருவங்களும் உள்ளன.

காளியின் திருவுருவம் பெரும்பாலும் நின்ற உருவிலும் மிகச்சில இடங்களில் இருந்த உருவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இது மஹாமாரியின் உருவத்தையொத்ததெனினும் அக்கிளி, ஜடை, பாம்பு என்பன இருப்பதில்லை. கத்திக்கும் பதிலாகச் சூலம் இருக்கும். (சில இடங்களில் மஹாமாரியின் உருவத்திலும் சூலம் இருப்பதைக் காணலாம்).

விக்கினேஸ்வரப் பெருமானின் பருத்த தொந்தியும், தும்பிக்கையும், சுளகுக்காதும் கொண்ட உருவம் யாவரும் அறிந்ததே. “ஓம்” என்ற பிரணவ வடிவமாக அமைந்தது. விநாயகரிகரின் முகம். நான்கு கரங்களில் பாசம், அங்குசம், ஒடித்த கொம்பு, மோதகம் என்பவற்றை வைத்திருப்பார். துதிக்கை இடதுபுறம் திரும்பியிருக்கும். சில இடல்களில் மாறியிருப்பதும் உண்டு. இவர் வலம்புரிவிநாயகர் என அழைக்கப்படுவர்.

எல்லா உலகும் இவருள் அடக்கம் என்பதனை இவரது பருத்த தொந்தியும், எல்லா அறிவும், சகலகலாவல்லமையும் உடையவர் என்பதைப் பெரிய செவிகளும், மலநீக்கத்தை முறித்த தந்தமும், ஞானம் வழங்குவதை மோதகமும் காட்டுகின்றன. பேருருவமுடையவரெனினும் சின்னஞ்சிறு எலியையே வாகனமாகக் கொண்ட தன்மை இவர் பெருமைக்கும் நுண்மைக்கும் அப்பாற்பட்டவர் என்பதையும் காட்டும்.

விநாயகரை இருந்த கோலத்திலும், நின்ற கோலத்திலும் அமைக்கும் வழக்கம் உள்ளது. சிவனுக்குச் சமனானவர் என்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து முகங்களுடன் பஞ்சமுக விநாயகர் என்ற உருவமும் அமைக்கப்படுகிறது. பதினாறு வகையான கணபதி உருவங்கள், மற்றும் முப்பத்திரண்டு வகையான திருவுங்கள் என்பன நூல்களிற் சொல்லப்பட்டுள்ளன.

விநாயகரை வல்லபாசக்தியுடன் கூடியவராக வழிபடும் முறை கிரியா மார்க்கத்திலுண்டு, சித்திபுத்திவிநாயகர் என்று இரண்டு சக்திகளுடன் புராணங்கள் சில விநாயகரைச் சித்திரிக்கின்றன. எனினும் நமது ஆலயங்களில் விநாயகரைத் தனியே அமைப்பதே மரபு. இவரைப் பிரம்மசாரி என்றும் கூறுவர்.

சைவசமய தத்துவார்த்த உண்மைகளை விளங்கிக் கொள்ளாதவர்களுக்கு இவை முரண்பாடுகளாகவும், மயக்கம் தருவனவாகவும் இருக்கும். ஆனால் எமது சமயத்தில் திருவுருவங்கள், கிரியைகள், புராணங்கள் என்பன வெளிப்படையான கருத்துக் களையோ பௌதீக ரீதியான விளக்கங்களையோ கொண்டவை யல்ல! உள்ளார்ந்த தத்துவ உண்மைகளின் படிமங்களே இவை என்ற பேருண்மையைத் தெரிந்து உணர வேண்டும்.

விநாயகப் பெருமானின் வல்லமை என்ற சக்தியே 'வல்லபாசக்தி' என்ற ஒரு மனைவியாகவும், வெற்றி, அறிவு என்பன சித்தி, புத்தி என்னும் இரு மனைவியராகவும் உருவகிக்கப்படுகின்றன. முருகப்பெருமானுக்கும் இப்படியே வள்ளி தெய்வயானை இருவரும் இச்சை, கிரியை (செயல்) ஆகியவற்றின் உருவகங்களாகவே அமைகின்றனர்.

நாடகத்திற்காக ஒருவன் பல வேடங்கள் போட்டாலும் அவன் உண்மையின் அந்தப் பாத்திரங்களாவதில்லை. அவன் அவனாகவே இருக்கிறான். ஒரு தனிமனிதன் தனது தந்தைக்கு, அடிபணியும் மைந்தனாகவும், தனது மைந்தனுக்குக் கட்டுப்பாடுமிக்க தந்தையாகவும், மனைவிக்கு இனிய கணவனாகவும் காட்சி தருகின்றான்.

உலகமெங்கும் வியாபித்திருக்கும் நீரானது வானத்தில் முகிலாகவும், புவிநோக்கி வரும்போது மழையாகவும், பாய்ந்தோடும்போது நதியாகவும், தேங்கிநிற்கும்போது குளமாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் இந்து நாகரீகத்தின் பலதெய்வ வழிபாட்டு முறைக்கும், திருவுருவங்களிலே காணும் முரண்பாடுகளுக்கும் விளக்கமளிக்கும் நல்ல உதாரணங்களாகும்.

முருகப்பெருமானை அவரது ஞானசக்தியாகிய வேல்வடிவமாக வைத்து வழிபடும் மரபு பல இடங்களிலும் உண்டு. இது ஆகம விதிகளுக்கு முரண்பாடானதெனினும் பல ஆலயங்களில் மூலமூர்த்தியாக மூலஸ்தானத்தில் வேல் அமைந்துள்ளது.

சக்திகள் இன்றி இளமுருகனான (பாலமுருகனாக) பாலசுப்பிரமணியர் (இரு கைகளுடன்), வள்ளி தெய்வயானையுடன் கூடிய முத்துக்குமாரசுவாமி (நான்கு கரங்களில் வரதம், அபயம், சக்தியாயுதம், குலிசாயுதம் இவற்றுடன் வேலாயுதம் கொண்டது.) ஆறு முகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு வள்ளி, தெய்வயானையுடன் கூடிய ஷண்முகப் பெருமான் ஆகியன முருகனின் பல்வேறுபட்ட மூர்த்தி பேதங்களாகும்.

முருகனுக்கு வலப்புறத்தில் வள்ளியும், இடப்புறத்தில் தெய்வயானையும் நிற்க முருகனது உருவம் அமையும். தேவியர் இருவரும் முருகனது பக்கத்திலுள்ள கரம் தாமரைமலர் அல்லது நீலோற்பல மலர் கொண்டதாகவும், வெளிப்புறத்திலுள்ள கரம் தொங்கவிட்டதாகவும் அமையக் காட்சியளிப்பர்.

இவற்றைவிடத் துறவிக்கோலத்தில் பழனியாண்டவர் திருவுருவமும் செய்யப்படுகின்றது. மாங்கனிக்காக விநாயகரும் முருகனும் போட்டியிட்ட தத்துவார்த்தமுள்ள புராணக்கதையை நினைவூட்டும் உருவம் இது.

முருகப்பெருமானுக்கு வாகனம் மயில். அவரது கொடி சேவல். இவை முறையே பிந்துதத்துவம், நாததத்துவம் ஆகியவற்றைக் குறிக்கின்றன.

நாய்வாகனத்துடன் நிர்வாண கோலத்தில் பயங்கரமாகக் காட்சி தருபவர் பைரவர். இவரை க்ஷேத்திர பாலர் எனவும் அழைப்பர். கோவிலையும் கிராமத்தையும் பாதுகாக்கும் காவற்றெய்வம் இவரே. இவரைச் சூலவடிவத்திலும் வழிபடுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைத் தவிர நவக்கிரகங்கள், சூரிய சந்திரர்கள், அறுபத்துமூவர் நாயன்மார்கள், சண்டேஸ்வரர் ஆகியோருக்கும் தனித்தனி சந்நிதானங்கள் அமையும். சண்டேஸ்வரர் கூப்பிய கரத்துடன் காணப்படுவார். விநாயகர் கோவிலில் இவர் கும்போதர சண்டேஸ்வரர் எனவும், சிவன் கோயில்களில் த்வனி சண்டேஸ்வரர் எனவும், முருகன் கோவிலில் சுமித்திர சண்டேஸ்வரர் எனவும், சக்தி கோயில்களில் தாரிகா சண்டேஸ்வரி எனவும் அழைக்கப்படுவர். அதற்கேற்ப உருவங்களிலும் சிறு வேறுபாடுகள் காணப்படும். வழிபாட்டின் பூரண பலனைத் தருபவர் சண்டேஸ்வரரே. முதற் பூஜை விநாயகருக்கு அமைவதுபோல இறுதிப் பூஜை இவருக்குரியது.

பாலகிருஷ்ணர், பூதேவி ஸ்ரீதேவி சமேத மஹாவிஷ்ணு, பாமாருக்மணி சமேத ஸ்ரீகிருஷ்ணர், பாம்பணையிற் பள்ளி கொண்ட ஸ்ரீரங்கநாதர் ஆகிய பலவித மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இவைதவிர முருகப்பெருமானின் வேல்போல, மஹாவிஷ்ணுவின் சக்கராயுதமும் தனியே பிரதிஷ்டை செய்யப்படுவதுண்டு. சக்கராழ்வார் என இது சொல்லப்படும்.

மூலமூர்த்தியாக விநாயகர், சிவன், சக்தி, சுப்பிரமணியர், பைரவர், விஷ்ணு என்போர் அமைவதற்கேற்ப பலிபீடத்தருகில் வைக்கப்படும் பசுவானது, முறையே மூஷிகம், நந்தி, சிம்மம், மயூரம், நாய், கருடாழ்வார் என அமையும். சக்தி ஆலயங்களில் சிம்மத்திற்குப் பதிலாக நந்தி அமைவதுமுண்டு.

மூலஸ்தானத்திலும் பரிவார சந்நிதிகளிலும் ஸ்தாபிக்கப்படும் இத்தகைய திருவுருவங்கள் பெரும்பாலும் சிலாவிக்கிரகங்களாக (கருங்கல்லினால் செய்தவை) இருக்கும். வேல், சூலம் முதலியன உலோக வார்ப்புக்களே. இவற்றைவிட உற்சவங்களுக்குப் பயன்படுத்தும் மூர்த்திகள் உலோகங்களினால் செய்யப்படுகின்றன. தாம்ர விக்கிரகங்கள் என்று சொல்லப்படும் இவை தங்கம், வெள்ளி, செம்பு, பஞ்சலோகம் முதலியவற்றால் உருவாக்கப்படும். உற்சவங்களுக்குப் பயன்படுவதால் இவை உற்சவமூர்த்திகள் அல்லது எழுந்தருளிகள் என அழைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகமார்க்கத்திலே நமது உடலிலே உள்ள ஆறுதாரங்கள் பயன்படுமாற்றை முன்பு கூறினோம். இவை சக்கரங்கள் எனக்கூறப்படுவதுண்டு. இவற்றைப் பௌதிக நிலையில் உருவமைத்ததுபோல, உலோகத்தகடுகளில் சில வரிவடிவத் தோற்றங்களை எழுதி இறைவனது அருட்சக்தியை வெளிப்படுத்தும் ஒரு சாதனமாகப் பயன்படுத்தும்போது இயந்திரங்கள் அல்லது சக்கரங்கள் எனப்படும்.

ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு விதமான யந்திரங்கள் அமையும். இவை தங்கம், வெள்ளி, அல்லது செப்புத் தகட்டில் வரையப்படும். யந்திரங்களை விக்கிரகங்கள் போல வெளியே வைத்துப் பூஜிப்பதுமுண்டு. உரிய முறைப்படி பூஜித்து, ஜபித்து உருவேற்றியபின் கும்பாபிஷேகத்தின்போது பீடத்தில் மூர்த்தியை ஸ்தாபிக்குமுன் இந்த யந்திரத்தை ஸ்தாபித்து அதன் மேல் மூர்த்தியை ஸ்தாபிப்பதுமுண்டு. இந்த யந்திரங்களில் பீஜாக்ஷரங்கள் எனப்படும் மந்திர எழுத்துக்கள் சிலவும் இடம்பெறும்.

யந்திரங்களில் மேலானதும் பிரசித்தி பெற்றதுமான ஸ்ரீராஜராஜேஸ்வரி யந்திரத்தை ஸ்ரீசக்ரம் என்று சிறப்பித்துக் கூறுவர். இது தகட்டிலே வரைந்து பயன்படுத்தப்படும்போது 'பூப்ரஸ்தாரம்' எனக்கூறப்படும். முப்பரிமாணத் தோற்றத்தில் இதன் முழு அமைப்பும் வெளித்தெரியும்படி விக்கிரகங்களைப் போல வார்த்து உருவாக்கும்போது இதை மேருப்ரஸ்தாரம் என்பர். இந்த யந்திரத்திலே அம்பிகையை ஆராதிக்கும் ஸ்ரீசக்கர பூஜையானது மிகவும் சிறப்பான ஒன்று.

ஆலயங்களில் பல்வேறு விதமான வாகனங்களையும் நாம் காண்கின்றோம். ஆன்மாவைப் பதி செலுத்தி நிற்கிறது என்பதையும், இறையுணர்வை ஆன்மா தாங்கியிருக்க வேண்டும் என்பதையும் வாகனங்களில் தெய்வத திருவுருவங்கள் ஏறிவரும் காட்சி குறிப்பதாகக் கொள்ளலாம். ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு வாகனம் சிறப்பாகக் கூறப்படுகிறது. வாகனங்கள் மரத்தினால் செய்யப்பட்டு மக்கு முதலியவற்றில் சீர் செய்யப்பட்டு வர்ணங்கள் பூசை அழகுபடுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல சூரன்போர் முதலிய புராண நிகழ்ச்சிகளை நிகழ்த்திக்காட்டும் சடங்குகளுக்குரிய சூரன், கஜமுகாசுரன், யமன் போன்ற உருவங்களும் செய்யப்படுகின்றன.

இவ்வகையில், திருவுருங்கள், வாகனங்கள், யந்திரங்கள் முதலியவை உள்ளடக்கிய திருக்கோயில்கள்தாம் நமது சைவக் கிரியைகளின் அடித்தளமாக அமைகின்றன. தெளிவான சிந்தனையுடன் நமது சைவாலயங்களின் அமைப்பு, நோக்கம், தத்துவார்த்த உட்பொருள் முதலியவற்றைப் புரிந்துகொண்டு கிரியைகளைப் பற்றி ஆராயப்புகுந்தால் அவற்றின் சிறப்பை மேலும் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியைகள் - ஓர் ஆரம்ப விளக்கம்

சமய அனுஷ்டானங்கள் யாவும் கிரியைகளோடும் சம்பிரதாய பூர்வமான சடங்குகளோடும், தொடர்புபட்டவைகளாகவே அமைகின்றன. இது சைவசமயத்துக்கு மட்டுமன்றி ஏனைய சமயங்களுக்கும் பொருந்துவதே.

சைவசமயத்தைப் பொறுத்தவரை அதன் கட்டுக்கோப்பை நிலைப்படுத்தி வைக்கும் சட்ட அமைப்புப்போன்று இருப்பவை கிரியைகளே. சிந்தனையளவில் சமயத்தை நிறுத்திவைக்காது நமது நாளாந்த வாழ்க்கையுடன் ஒட்டியுறவாடும் நெறிமுறையாக, உணர்வுபூர்வமாக இணைந்து வளர்வதற்கு உதவுபவை கிரியைகள்.

சைவசித்தாந்தக் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தக் கூடியவகையில் அவற்றின் தத்துவக் கருத்துக்களை விளக்கும் வகையில் நமது நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டுபவை கிரியைகளே. ஆத்ம ஞானம் அடைவதே நம் நோக்கு என்பது நமது அன்றாடக் கிரியைகளிலிருந்து அறியவரும்.

ஆஸ்திக மதங்கள் யாவுமே இருவகையான வழிமுறை களைத் தம்மகத்தே கொண்டிருக்கின்றன. அறிவுவழி, செயல்வழி என்பவையே அவை. தத்துவஞான விளக்கங்களை சைவசித்தாந்த நெறியறிவை உள்ளடக்கியது முதல்வழி. இறைவழிபாட்டு உபாயங்களைக் கூறுவது இரண்டாவது வழி. கிரியைகள் இந்த இரண்டாவது வழியினுள் அடங்கும்.

சைவாலயக் கிரியைகள் என்னும்போது அவற்றை ஆன்மார்த்தம், பாரர்த்தம் எனப்பகுத்தாராய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஒருவர் தமது சொந்த நன்மை கருதிச் செய்பவை ஆன்மார்த்தக் கிரியைகள் என்றும், எல்லா உயிர்களதும் நன்மை கருதிச் செய்பவை (லோக க்ஷேமார்த்தம் செய்பவை) பரார்த்தக் கிரியைகள் எனவும் கூறப்படும்.

பரார்த்தக் கிரியைகளை மூன்று பகுதிகளாக வகைப்படுத்திக் கூறலாம். கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என்பனவே அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பிரிவாகிய கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்பதில் ஆலயம் அமையப்போகும் நிலத்தைக் தேர்ந்தெடுத்து முறைப்படி நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து விதிப்படி ஆலயத்தையும் மூர்த்திகளையும் உருவாக்கி ஆலயத்திலே மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வதுவரை அடங்கும்.

இரண்டாவது பிரிவாகிய பிரதிஷ்டாதி உற்சவாந்தம் என்பதில் பிரதிஷ்டை செய்த நாளிலிருந்து ஆலயத்தில் நிகழவேண்டிய நித்திய பூஜை, திருவிழா முதலிய கிரியைகள் அடங்கும்.

மூன்றாவது பிரிவாகிய உற்சவாதி பிராயச்சித்தாந்தம் என்பதில் நித்தியபூஜை முதலியவற்றில் ஏற்படும் குற்றம் குறைகளை நீக்குவதற்காகச் செய்யப்பெறும் பிராயச்சித்தம் முதலியன அடங்கும்.

பரார்த்தக் கிரியைகளை வேறொருவகையில் மூன்று பிரிவாக வகுக்கும் நியதியுமுண்டு. அவை நித்தியம், நைமித்திகம், காமியம் என்பனவாம். தினமும் ஆலயங்களில் நிகழும் கிரியைகள் நித்தியக் கிரியைகளாம். விசேஷமாக அவ்வப்போது நிகழ்பவை நைமித்திகமாம். வேண்டுதல்கள் காரணமாக நிகழ்த்தப்படுபவை காமியக்கிரியைகளாம்.

சைவக்கிரியைகளில் விரிவாக ஆராயப்பட வேண்டியதும், பரந்துபட்ட கிரியைகளை உள்ளடக்கியதும் பரார்த்தக் கிரியையே. பக்தர்கள் பெரிதும் அறிந்துகொள்ள விரும்புவதும், அவசியம் அறிந்து கொள்ள வேண்டியதும் ஆலயங்களிலே நிகழும் பரார்த்தக் கிரியைகளின் விளக்கங்களையே.

பரார்த்தக் கிரியைகளில் முதலாவது பகுதியாகிய கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்பது மிக நுணுக்கமும் ஆழமும் கொண்டது. சாதாரண மக்கள் அதிகளவு இவைபற்றி அறிந்திருக்க வேண்டிய அவசியமுமில்லை.

பிரதிஷ்டை என்னும் கும்பாபிஷேகம் முதல் பிராயச்சித்தம் வரையிலான கிரியைகளின் விளக்கங்களைச் சைவமக்கள் விரிவாக அறிந்திருத்தல் அவசியம். அதற்கு இந்நூலிலுள்ள கட்டுரைகள் ஓரளவு துணை செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வாங்கக் கிரியைகள்

எந்தக் கிரியையாயினும் ஆரம்பத்தில் பஸ்மதாரணம், (விபூதி தரித்தல்) பவித்திர தாரணம் (தர்ப்பை அணிதல்) பிராணாயாமம், சங்கல்பம், விநாயக வழிபாடு, கலசபூஜை (தீர்த்த பாத்திரத்திற்கு), கண்டாபூஜை (மணிக்கு), தீபபூஜை (திருவிளக்கிற்கு) வருண கும்ப பூஜை, புண்ணியாக வாசனம், பஞ்சகவ்ய பூஜை முதலியன வழமையாக இடம்பெறும். இவை பூர்வாங்கக் கிரியைகள் (பூர்வ - ஆரம்ப, தொடக்க) எனக் கூறப்படும். (பூர்வக் கிரியை வேறு, பூர்வாங்கக் கிரியை வேறு)

## பஸ்மதாரணம் (விபூதி தரித்தல்)

விபூதி சிவ சின்னங்னளுள் ஒன்று. சைவர்கள் எந்நேரமும் விபூதி அணிந்திருத்தல் அவசியம். "ஆளடையாளத்திற்காகத் திருநீறு இட்டுக்கொள்" என உபநிடத வாக்கியம் கூறுகிறது. நாம் எப்போதும் சிவ சிந்தனையிலிருந்து நீங்காதிருப்பதற்கு விபூதி உதவுகின்றது. 'வாழ்க்கை நிலையற்றது, நாம் என்றோ ஒருநாள் சாம்பராகிவிடுவோம்' என்ற எண்ணம் எங்கள் மனத்தில் இருப்பதற்கும் ஒருவகையில் உதவுகின்றது இந்தத் திருநீறு. இந்த எண்ணம் இருக்குமானால் நாம் தீயவற்றை நீக்கி நல்லவற்றைச் செய்ய முயற்சிப்போமல்லவா?

விபூதி பசும் சாணத்தினை நீறாக்குவதால் பெறப்படுகிறது. பசு சைவர்களின் போற்றுதலுக்குரியது. எல்லாத் தெய்வாம் சங்களும் பசுவில் இருப்பதால் கோமாதா என்றும் காமதேனு என்றும் போற்றி வணங்குகிறோம். அதன் சாணமே நீறாகி வருவதனால் அதற்கு ஒரு தனித்தன்மை உண்டு. பசுஞ் சாணம் நல்ல ஒரு தொற்று நீக்கி என்றும் அதில் பல சிறப்பம்சங்கள் உள்ளன என்றும் மருத்துவ ரீதியிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. விபூதியிலும் அத்தகைய சிறப்பம்சங்கள் உண்டு. உடலில் உள்ள தேவையற்ற நீர்த்தன்மையை உறிஞ்சும் தன்மையும் விபூதிக்குண்டு. இவ்வாறு பல சிறப்பம்சங்கள் உள்ள விபூதியை நாம் ஒரு நற்கருமம் தொடங்குமுன் தரித்துக்கொள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமல்லவா? நெற்றியில் திருநீறின்றிச் செய்யும் எக்காரியமும் பலனளிக்காது. அதனால் எந்தக் கிரியையும் ஆரம்பிக்கும்போது விபூதி தரித்தல் அவசியம். அதுவும் மந்திர சகிதமாகத் தரிக்கும்போது இன்னும் சிறப்பல்லவா?

## விநாயக வணக்கமும் குருவந்தனமும்:

ஆரம்பத்தில் விநாயகரை வழிபடுவது எந்தக் காரியத்துக்கும் அவசியமானது. நெற்றியில் மும்முறை குட்டி விநாயகரை வழிபாடு செய்துவிட்டே எந்தக் காரியமும் ஆரம்பிக்கப்படுகிறது. " வெண்ணிற உடைதரித்தவரும் எங்கும் நிறைந்தவரும், மலர்ந்த முகத்தவருமாகிய விநாயகப் பெருமானை எல்லா இடையூறுகளும் நீங்குவதற்காகத் தியானிக்கின்றேன்" என்று பிரார்த்தித்து பிரம்ம, விஷ்ணு மகேஸ்வரர்களின் வடிவமாக விளங்கும் பரப்பிரும்ம ஸ்வரூபமான குருவையும் நமஸ்கரித்துக் கொள்வது முதற் கிரியையாகும்.

இதையடுத்து, கிரியைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுபநாளானது சிவமயமாக அமைய வேண்டுமெனவும், மனம், வாக்கு, காயங்களினால் நாம் செய்த பாபங்களெல்லாம் சிவஸ்மரணத்தால் (சிவனை நினைப்பதனால்) நீங்கிவிட வேண்டுமெனவும் பிரார்த்தனை செய்வதும் இவ்வாரம்பக் கிரியையில் அடங்கும்.

## ஆசமனம்:

ஆத்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் ஆகிய மூன்று தத்துவங்களையும் நினைத்து ஸ்வதா என்ற மந்திர முடிவுடன் வலது உள்ளங்கையில் எடுக்கப்பட்ட உழுந்து அமிழக்கூடிய அளவு நீரை உட்கொண்டு பெருவிரலடியினால் உதடுகளைத்து துடைத்தல் ஆசமனமாகும். இதன் மூலம் உடலும் மனமும் தூய்மை பெறுவதாகப் பாவனை செய்யப்படுகிறது.

## தொடுமிடந் தொடுதல்:

முகம், மூக்கின் இருபுறம், இரு கண்கள், வயிறு, மார்பு, புயங்கள், இரு காதுகள் ஆகிய பன்னிரண்டு உறுப்புக்களையும் பெருவிரல் அணிவிரல் இரண்டினாலும் தொடுவதனன்மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வுறுப்புக்களின் அதிதேவதைகளை தியானித்து உடலைத் தெய்வீகமாக்குதல்.

**பிராணாயாமம்:**

பிராணவாயுவைக் கட்டுப்படுத்திச் சுவாசத்தை நெறிப்படுத்து வதன் மூலம் மனத்தை ஒருவழிப்படுத்தி இறை நினைவில் நிறுத்துதல் பிராணாயாமம் எனப்படும். (பிராண-ஆயாமம்) வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல்களை உள்ளேமடக்கிப் பெருவிர லினால் வலது மூக்கை மூடியபடி இடது மூக்கால் மூச்சை உள்ளிளுத்து மோதிர விரலினால் இடது மூக்கையும் மூடி மூச்சை உள்ளடக்கிப் பின் இடது மூக்கை அடைத்தபடி வலது மூக்கால் சுவாசத்தை வெளிப்படுத்துவதே பிராணாயாமம் செய்யும் முறை.

**சங்கல்பம்:**

மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் தூய்மை பெற்று மனக்கட்டுப்பாடும் அடைந்தபின், செய்யப்போகும் கிரியையினைச் சொல்லி அதனை நிறைவேற்றி வைப்பதாக மனத்தில் உறுதி கொள்ளுதலே சங்கல்பமாகும்.

தர்ப்பையினால் மோதிரம்போல் செய்யப்பட்ட பவித்திரத்தை வலதுகை மோதிர விரலில் அணிந்து கொண்டு தர்ப்பாசனத்தில் அமர்ந்திருப்பதாகப் பாவனை செய்து இரு தர்ப்பைகளைக் காலின்கீழே இட்டு வேறுசில தர்ப்பைகளை மடித்து மோதிரவிரலினூடு வைத்துக் கொண்டு வலமுழந்தாளின் மேல் விரித்து வைக்கப்பட்ட இடக் கைமேல் மூடிய வலக்கையை வைத்துக் கொண்டு சங்கல்பம் செய்யப்படும். சிறிது அட்சதை, பூ என்பனவும் வலது கைக்குள் வைத்துக் கொள்வர்.

சங்கல்பத்தில் கிரியை நிகழும் இடம், வருஷம், மாதம், பட்சம், திதி, நட்சத்திரம், கிழமை என்பன யாவற்றையும் கூறி இன்ன நோக்கத்திற்காக இன்ன கிரியையைச் செய்யப் போகின்றேன் என்று மனத்திட்பம் செய்வது மரபு.

**கலசபூஜை:**

பூஜைகளில் பயன்படுத்தப்படும் நீரை வைத்திருக்கும் பாத்திரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலசமாகும். அதனைப் பூஜித்துக் கலசத்தின் முகத்திலே விஷ்ணுவும், கழுத்திலே ருத்திரனும், அடியிலே பிரம்மாவும் நடுவிலே மாத்ருகணங்களும், உள்ளே சமுத்திரங்களும் பூமியும், நால் வேதங்களும் இருப்பதாகப் பாவித்துக் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி ஆகிய ஏழு நதிகளும் ஏனைய புண்ணிய தீர்த்தங்களும் பூஜை நிகழும் வேளை கலசத்தில் வந்து இறைபணி செய்ய வேண்டுமெனப் பிரார்த்திப்பர். சிவாசாரியார் கலசநீரைத் தம்மீதும் பூஜைத் திரவியங்கள் மீதும் தெளித்துப் புனிதப்படுத்துவார்.

## கண்டா பூஜை:

கண்டா என்பது மணி. பூஜையின் போது பயன்படுத்தப்படும் மணியை இறையம்சமாகப் பாவித்து அதனை பூசித்து மும்முறை அடித்துத் "தேவர்களை அழைக்கவும், அசுரர்களை அகன்று போகச் செய்யவும் மணியை அடிக்கின்றேன்" என்று பிரார்த்திப்பர். இடையூறுகளை நீக்கி மங்கலம் அருளும் சக்தி கண்டா நாதத்துக்கு உண்டு.

## தீப பூஜை:

கிரியைகள் நடைபெறும் இடத்தில் இடைவிடாது சுடர்விட்டு எரியுமாறு பல தீபங்கள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். குத்து விளக்கினைச் சந்தனம், குங்குமம், பட்டு இவற்றால் அலங்கரித்துத் தீபலட்சுமியை அதில் ஆவாஹனம் செய்து செல்வம், ஆயுள், ஆரோக்கியம், மங்கலம் எனபவற்றைத் தரும்படி பிரார்த்திப்பர்.

## விக்னேஸ்வர பூஜை:

சந்தனம், மஞ்சள் உருண்டை, கோமயம் (பசுச்சாணம்) அல்லது கூர்ச்சம் இவற்றுள் ஏதாவது ஏதாவதொன்றிலே விநாயகப் பெருமானது திருவுருவைத் தியானித்து ஆவாகனம் செய்து (எங்கும் வியாபித்திருக்கும் இறைவனைக் குறித்த ஒரு ஸ்தானத்துக்கு எழுந்தருளச் செய்வது) உபசாரங்கள் வழங்கி (உபசாரங்கள் பற்றிய மேலதிக விளக்கத்தை வேறிடத்திற் காண்க) அர்ச்சித்தல் முறை. இதன்பின் விநாயகரை நினைத்துத் தேங்காயை இரு பாதிகளாக உடைத்து நெற்பொரி அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லத்துடன் அவற்றை நைவேத்தியம் செய்து இடையூறுகள் நேராமல் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திப்பர்.

'க்ஷணிகலிங்க பூஜை' என இது கூறப்படும். கணநேரத்தில் விநாயகரை நினைத்துப் பூசிப்பதற்காகத் தற்காலிகமாக அமைக்கப்படும் அருவுருவ அடையாளச் சின்னமே இங்கு பயன்படுகிறது. அதனால் இங்கு விநாயகர் திருவுருவம் வைத்துப் பூசிப்பதோ பஞ்சாசன பூஜை முதலிய விரிவான பூஜைகள் செய்வதோ முறையன்று. நம் முன்னோர்கள் அவ்வாறு செய்திலர்.

## பஞ்சகவ்ய பூஜை:

மண்டப நடுவிலே சிறு மேடையொன்றை அரிசியால் அமைத்து ஒன்பது பதங்களாக அதைப் பிரித்து மத்தி, கிழக்கு, தெற்கு வடக்கு, மேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய பதங்களிலே முறையே சிவதத்துவம், சதாசிவ தத்துவம், வித்தியா தத்துவம், புருஷ தத்துவம், கால தத்துவம், பிரகிருதி தத்துவம், பிருதுவி தத்துவம், அப் தத்துவம், வாயு தத்துவம் ஆகிய தத்துவங்களாகப் பூஜித்து அவற்றில் முறையே சுப்ரதிஷ்ட பாத்திரம், சுசாந்த பாத்திரம், தேஜோவத் பாத்திரம், ரத்நோதக பாத்திரம், அவ்வியக்த பாத்திரம், அமிர்தாத்மக பாத்திரம், சூரிய பாத்திரம், சம்யுக்த பாத்திரம் ஆகிய பாத்திரங்களில் பால், தயிர், நெய், கோஜலம், கோமயம், தர்ப்பையிடப்பட்ட நீர், அரிசிமா, நெல்லிக்காய் வற்றல், மஞ்சள்மா ஆகியவற்றை இட்டுப் பூஜித்து அவற்றுக்குரிய மந்திரங்களை ஜெபித்தல் பஞ்சகவ்ய பூஜையாகும். இவற்றை ஒன்று சேர்த்து அபிஷேகத்துக்குப் பயன்படுத்துவர். விசேஷ காலங்களில் விரிவாகப் பூஜை செய்து தனித்தனியே அபிஷேகம் செய்வதுமுண்டு. இது விஷேச பஞ்சகவ்யம் அல்லது நைமித்திக பஞ்சகவ்யம் எனப்படும். சாதாரண நாட்களில் பால் மட்டும் வைத்து ஏனைய நான்கு பசுவின் கொடைகளாகிய தயிர், நெய், கோஜலம், கோமயம் ஆகியவற்றைச் சேர்த்ததாக பாவனை செய்து ஐந்து கோஷ்டங்களுக்குரிய பூஜைகளுடன் ஆறாவதாகிய ஈசானத்துக்குரிய தர்ப்பை நீரையும் சேர்த்துப் பூசிப்பது மரபாக இருந்துவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புண்ணியாஹ வாசனம்:

மேடை ஒன்றிலே உரிய பொருட்களை முறையே பரப்பிக் கும்பம் வைத்து (கும்பம், அதற்குரிய பொருட்கள், அதன் தத்துவார்த்தம் என்பன தனியே வேறொரு இடத்தில் விளக்கப்படுகின்றன) அலங்கரித்து வருணணதேவனை ஆவாகனம் செய்து உபசரித்துப் புண்ணியாக ஜபம் செய்யப்படுகிறது.

இந்த ஜபத்தில் கூறப்படும் நீண்ட மந்திரத்தின் சில சிறப்பான பகுதிகள் வருமாறு:

உங்களால் அனுமதிக்கப்பெற்றுப் புண்யாக வாசனம் செய்கிறேன்.

அவ்வாறே மந்திர ஜபம் செய்யலாம்.
தண்ணீர் சிவமயமாக, மங்களமானதாக இருக்கட்டும்.
நல்ல வாசனைகள் எம்மைக் காக்கட்டும்.
நல்மனமுடையவர்களாக ஆவார்களாக.
அழிவற்றதாகவும் குற்றமற்றதாகவும் அமையட்டும்.

இனிய எண்ணங்களையே நினைப்பேன். இனியவற்றையே உருவாக்குவேன். இனியவற்றையே பிறருக்கும் வழங்குவேன். இனிய வார்த்தைகளையே பேசுவேன். தேவர்களுக்கு இனிமை பயப்பனவும் மனிதர்கள் கேட்க விரும்புகின்றதுமான சொற்களையே நான் பேசுவேன். தேவர்கள் என்னைக் காப்பார்களாக. அழகிய பேச்சை வழங்கப் பிதிரர்கள் வாழ்த்துவார்களாக.

சாந்தி உண்டாகட்டும். புஷ்டி உண்டாகட்டும். மகிழ்ச்சி உண்டாகட்டும். செழுமை உண்டாகட்டும். தடையின்மை உண்டாகட்டும். ஆயுள் விருத்தி உண்டாகட்டும். ஆரோக்கியம் உண்டாகட்டும். செல்வமும் தானியமும் விருத்தியாகட்டும். பசுக்களும் பிராமணர்களும் சுபமாக இருக்கட்டும். ஈசானதிக்கில் எல்லாக் குற்றங்களும் நீங்கட்டும். தென்கிழக்குத் திசையில் என்ன பாபம் செய்யப்பட்டதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை யாவும் சமனமடையட்டும். வடதிசையில் செய்யப்படும் எல்லா நற்காரியங்களும் தடையின்றி நடக்கட்டும். அவை யாவும் மேலும் மேலும் வளர்ச்சி அடையட்டும். எல்லாம் மங்கலமாக ஆகட்டும். எல்லாம் செல்வமுடையதாக ஆகட்டும்.”

புண்ணியாஹ வாசனம் முடிந்ததும், விக்நேஸ்வரர் பஞ்சப்பிரம்ம தேவர்கள், வருணன் ஆகியோரை யதாஸ்தானத்துக்கு உத்வாசனம் செய்து (உரிய இடங்களுக்குப் போக விடுத்து) கும்ப ஜலத்தினால் தலசுத்தி செய்யப்படும். அதாவது கிரியைகள் நிகழும் இடம் யாவும் அந்த நீரைப் புரோக்ஷிப்பர் (தெளித்தல்).

இடையூறுகள் நீங்குவதற்காக விக்நேஸ்வர பூஜையும், பூஜைத் திரவியங்களின் சுத்திக்காவும் சரீர சுத்திக்காகவும் பஞ்சகவ்ய பூஜையும், மண்டப சுத்திக்காகப் புண்ணியாக வாசனமும் நிகழ்த்தப் படுகின்றன.

## சகளீகரணம்:

களம் என்றால் சரீரம். சகளம் (சிவத்துவத்தோடு) சேர்ந்த சரீரம். சகளீகரணம் என்பது சரீரத்தை சிவ சொரூபமாக்குதல். சிவ மந்திரங்களைத் தமது தேகத்தில் பதித்தல் மூலம் சிவாசாரியார் தாமே சிவவடிவமாதல் இதன் நோக்கமாகும். இது கரநியாசம். அங்க நியாசம் என இரு பகுதிகளையுடையது. நியாசம் என்பது பதித்தலைக் குறிக்கிறது.

முதலில் இடக்கைகையையும் பின்னர் வலக்கையையும் மேற்புறமும் கீழ்ப்புறமும் மாறித்துடைத்து அமிர்தத்தினால் கழுவப்பட்டதாகப் பாவிப்பர். இதன்பின் இரு கட்டை விரல்களாலும் இரு உட்கைகளையும் தடவிப் பின் கட்டை விரலால் ஏனைய விரல்களை முறையே வருடுதலும் சிவாய நம: சக்தயே நம: என்று கூறி இரு கைகளையும் மாறித் தொடுதலும் கரநியாசத்தில் அடங்கும்.

இதன்பின் இருதயஸ்தானத்தில் ஆசனம் மூர்த்தி இரண்டையும் பெருவிரல் மோதிரவிரல் இரண்டினாலும் நியாசம் செய்து கட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களை நீட்டி ஏனைய விரல்களை மடக்கித் தலையிலும், ஏனைய விரல்கள் ஒவ்வொன்றினாலும் முகம், கண், குஹ்யம் (மர்மம்), பாதம் ஆகிய இடங்களிலும், நடு மூன்று விரல்களினால் முக்கண்களிலும், இருதயம், சிரசு, சிகை ஆகிய இடங்களிலும் நியாசம் செய்யப்படும். இதன்பின் சுட்டுவிரல்கள் இரண்டாலும் கழுத்தின் பின்புறம் தொடங்கி இருபுறங்களிலும் மார்புவரை கவச நியாசமும், இரு கரங்களையும் ஒன்று சேரந்த்துத் தட்டி அஸ்திர நியாசமும், தலையைச் சுற்றிப் பத்துத் திசைகளிலும் சோடிகையும் (நொடித்தல்), விரலால் திக்பந்தனமும் (திசைக்காவல்), வலக்கைச் சுட்டுவிரலால் தலையைச் சுற்றி அவகுண்டனமும் (மறைத்தல்), செய்து அங்கநியாசம் செய்யப்படும்.

இவ்வகையில் தன்னில் சிவோஹம்பாவனை செய்தபின்னரே சிவாசாரியார் மேற்கொண்டு பூஜைகளைதத் தொடரத் தகுதி யானவராகிறார். அந்தந்த மூர்த்திகளுக்கான கிரியைகளைச் செய்யும்போது அந்தந்த மூர்த்தியாகத் தன்னை பாவனை செய்யவேண்டும்.

**பூதசுத்தி:**

அங்க நியாசம், கர நியாசம் என்பவற்றால் தூய்மைப் படுத்தப்பட்ட உடலை மேலும் தூய்மைப்படுத்துதல் இக்கிரியையின் நோக்கமாகும். இத்தூல உடம்பானது பஞ்சபூதங்களின் சேர்க்கை. இததூல தேகத்தை மந்திரம், பாவனை, கிரியைகள் முதலியவற்றால் தகித்துப் புதியதொரு தேகத்தை அமைப்பதாகப் பாவனை செய்வதே இச் செயலாகும். கூர்மாசனத்தின் மீது மான் தோல், தர்ப்பை இவற்றை விரித்து சிவாசாரியார் சுகாசனத்திலிருந்து கண்களை மூடியவாறு அந்தர்முகமமாக (உள்முகமாக) பூதசுத்தி நிகழ்த்துவர்.

விநாயக வழிபாடுமுதல் பூதசுத்தி வரையிலான இந்தப் பூர்வாங்க கிரியைகள், எல்லாக் கிரியைகட்கும் முன்னோடியாக எப்போதும் நிகழ்வன. கிரியைகள் நடக்கும் இடம், உபயோகிக் கப்படும் பொருள்கள் நடத்தி வைக்கும் சிவாசாரியாரின் மனம் வாக்கு காயம் என்பன தூய்மை பெறவும் மன ஒருமைப்பாடு அடையவும் இக் கிரியைகள் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில பொதுவான கிரியைகள்

நாள்தோறும் அல்லது அடிக்கடி நடைபெறுகின்ற சில பொதுவான கிரியைகள்பற்றி இப்போது பார்ப்போம். கோயிலிலே நடைபெறுகின்ற சாதாரணக் கிரியைகளின் இடையேயுள்ள வேறுபாடுகள், அவற்றின் பெயர்கள் என்பவற்றைக்கூடப் பலர் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றார்கள். ஆனால் தெரிந்துகொள்ள அக்கறையில்லாமல் இருப்பதுதான் வருத்தத்திற்குரியது.

சாதாரண மக்கள் மாத்திரமல்லாமல், ஆலயங்களில் நிர்வாக சபைகளிலே அங்கத்தவர்களாக, ஆலய பரிபாலகர்களாக அல்லது சமய சங்கங்களிலே நிர்வாகிகளாக உள்ள பலருக்கே இந்த மிகச் சாதாரணமான விஷயங்கள் தெரியாமலிருப்பதை அவதானிக்க முடிகிறது.

'அபிஷேகம்' என்ற சொல் மந்திர நீராட்டு அல்லது முழுக்கு என்ற வகையில் சாதாரணமாக இறைவனை முழுக்காட்டும் நித்திய சேவையைக் குறிப்பதெனினும் பலர் இதை அறியாதிருக்கின்றனர். கும்பம் வைத்து திருமுழுக்காட்டுவது மட்டுமே அபிஷேகம் என நினைக்கிறார்கள்.

இதேபோல அபிஷேகம், தீபாராதனை, அர்ச்சனை, வேத பாராயணம், ஆசீர்வாதம் இவை ஒவ்வொன்றும் வேறு வேறான அம்சங்கள் என்பதை புரிந்துகொள்பவர் சிலரே! இவை ஒவ்வொன் றிற்கும் வேறு வேறு வகையான மந்திரங்கள் உண்டு என்பதையும், வேறு வேறு மூர்த்திகளுக்குப் பூஜை நடைபெறும் போதும் தீபாராதனை, ஆசீர்வாதம் போன்ற சிலவற்றில் மாற்ற மில்லையாயினும் அர்ச்சனை ஸ்தோத்திரம் முதலியவை மாறுகின்றன என்பதையும் அடியார்கள் புரிந்துகொண்டு அவதானிக்க வேண்டும். இப்பகுதியில் இடம்பெறும் விளக்கங்கள் அதற்கு துணைசெய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிஷேகம், அலங்காரம்:

மூர்த்திகளின் திருவுருவங்களை மந்திர நீரால் முழுக் காட்டுதலே அபிஷேகம் எனப்படுகிறது. சுத்தமான நீர் இதற்கு அவசியம். ஆற்றுநீர் கிடைக்கும் இடங்களில் அதனைப் பயன்படுத்துவர். வசதியுள்ள இடங்களில் புனித நதியிலிருந்து நீரை எடுத்து யானை மீது ஏற்றி சகல மரியாதைகளுடனும ஆலயத்துக்குக் கொண்டுவந்து அபிஷேகத்திற்குப் பயன்படுத்து வதுண்டு. பொதுவாகக் கோயிலில் மூலஸ்தானத்திற்கு ஈசான திசையில் மகாமண்டபத்துக்கு வடக்கே அமைந்திருக்கும் தீர்த்தக் கிணற்றிலிருந்து அபிஷேகத்திற்கு நீரைப் பெறுவர்.

ஏறக்குறைய அரைமணித்தியாலத்திற்கு மேற்பட்ட நேரத்தை அபிஷேகத்திற்கு ஒதுக்குதல் வேண்டும் என ஆகமங்கள் உரைக்கின்றன. அபிஷேக நீரில் பாதிரி, அலரி, தாமரை முதலிய மலர்களை இடுவதன் மூலம் நறுமணமும் குளிர்ச்சியும் ஊட்டப் படுவதுண்டு.

நல்லெண்ணெய், அரிசிமா, மஞ்சள்மா, அபிஷேகக்கூட்டு, (சம்பக்கூட்டு) பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், வெந்நீர், தேன், கருப்பஞ்சாறு, பழரசம், இளநீர், அன்னம், விபூதி, குங்குமம், சந்தனம், கும்பஜலம் என்பன அபிஷேகத்துக்குரிய விசேஷ திரவியங்களாகும். இவற்றை இவ் வரிசையிலே பயன் படுத்துவது முறை. பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம் என்பன பூர்வாங்கக் கிரியைகளில் கூறப்பட்டபடி ஏற்கனவே பூஜித்துத் தயார் செய்யப்பட்டிருக்கும். அபிஷேக ஆரம்பத்திலும், இவை ஒவ்வொன்றும் அபிஷேகம் செய்வதற்கிடையிலும் சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்வது அவசியம். ஒவ்வொரு தடவையும் கற்பூர நீராஜனம் செய்வது நன்று.

இவ்வளவு காரியங்களும் தினசரி செய்யப்படுவது கஷ்டமே. ருத்ராபிஷேகம் முதலியன நிகழும் வேளைகளிலாவது இவற்றைக் கிரமமாகக் கடைப்பிடிப்பது ஆலயத்தில் தெய்வ சாந்நித்தியத்தை வளர்க்க உதவும். நித்திய பூஜையின்போது சுத்த ஜல அபிஷேகம் முக்கியமாக நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகம் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது ஸ்ரீருத்ரம், சமகம், புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், பஞ்ச சாந்தி முதலிய வேத மந்திரங்கள் ஓதப்படுதல் அவசியம். அம்பிகையின் ஆலயங்களில் விரிவான அபிஷேகங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாம ஸ்தோத்திரம், லலிதா திரிசதி ஸ்தோத்திரம் என்பன ஓதப்படும் வழக்கமும் உண்டு. வேதகோஷம் நிகழ்த்த வாய்ப்பில்லாத இடங்களில் தமிழ் வேதமாகிய திருமுறைகளைப் பண்ணுடன் ஓதுவதும், நாதஸ்வர கானம் இசைப்பதும் பொருத்தமானவை.

அபிஷேகம் ஆரம்பித்து அலங்காரம்வரை இடையீடின்றித் தொடர்ந்து நடத்துதல் முக்கியம். ஆரம்பத்தில் எண்ணெய் அபிஷேகத்தின்போது நீரை வார்ப்பது போல வார்த்து விடுதல் முறையன்று. இரு கைகளாலும் பூசித் தேய்த்து விடுவதும், கைகால் பிடித்து விடுதல் போன்றவற்றைப் பாவனையாகச் செய்வதும் நன்று. இவ்வாறு சில சிவாச்சாரியர்கள் பொறுமையுடனும், பக்தியுடனும் செய்கின்றபோது தரிசனம் செய்யும் பக்தர்கள் அதிலே ஒன்றிப்போய்க் கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டிருப்பர்.

அன்னாபிஷேகம் நிகழும் போது திரையிடப்படுவது மரபு. பச்சரிசி அன்னத்தை உருட்டி உருட்டி இறைவன் திருவுருவிலே அங்கங்கள் மேல் பதித்து உருவம் முழுவதும் அன்ன உருவமாகக் காட்சி தரும்படி செய்து குங்குமம் புஷ்பம் முதலியவற்றால் அலங்கரித்த பின் திரை விலக்கிக் கற்பூர நீராஜனம் செய்வார்கள்.

அன்னாபிஷேகத்தில் செய்வதுபோல் அரைத்த சந்தனத்தைச் சாத்தி அலங்கரித்தல் சந்தனக்காப்பு எனச் சொல்லப்படுகிறது. சந்தனக் காப்பு நோய்களை நீக்குவதைப் பலனாகக் கொண்டது.

ஒவ்வொரு பொருளால் அபிஷேகம் செய்வதற்கும் ஒவ்வொரு பலன் உண்டு.

அபிஷேகம் நிறைவுற்றவுதும் தோய்த்துலர்ந்த திருவொற்றாடையினால் ஈரம் போகுமாறு உத்வர்த்தனம் செய்து (துடைத்து) அதன்பின் விதவிதமாக அலங்கரிப்பர். ஒரு தாய் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி நீராட்டுவாளே, அதே அளவு தாய்மையும், பாசமும் பொங்க இவற்றைச் செய்யவேண்டும். இறைவனே நமக்குத் தாயாய் இருக்கும் பேரருளாளன். எனினும் குழந்தைகள் தமது தாய் தந்தையர்க்குத் தாமே தலைசீவி விடுதல், அலங்கரித்தல் முதலிய பணிகளை விருப்புடன் செய்து மகிழ்வதுபோல நாமும் நமது தாயுந் தந்தையுமாயிருக்கும் இறைவனுக்கு இவ்வாறு பணிசெய்து மகிழ்தல் இனிமை பயக்கும் ஓர் அனுபவமாகும்.

இறைவனுடன் ஓர் இறுக்கமான பற்றுதலையும், நெகிழ்வோடு கூடிய பக்தி உணர்வையும் இயல்பாகவே இனிமை, கனிவு, பொறுமை, பாசம், தாய்மை, கருணை, தூய்மை ஆகிய நற் குணங்களையும் எம்மிடத்தில் வளர்க்க இவை பயன்படும். குழந்தைகளுக்காகத் தாய் மருந்துண்ணும் தன்மைபோல ஆணவாதி மல அழுக்குகளைக் களைந்து தூய்மை பெறுவதற் காக ஆன்மாக்கள் திருவருட்கடலில் திருமுழுக்காடுவதன் அவசியம்பற்றி இறைவனையே நாம் திருமுழுக்காட்டி இன்ப மடைகின்றோம். அவனது திருவுருவம் குளிர அவனது உள்ளம் குளிரும். ஆண்டவனின் அகம் குளிர இவ்வுலக மாந்தரின் இதயமெல்லாம் குளிருமன்றோ?

நம்மைக் காக்கத் தானே வெண்ணீறு பூசி நிற்கும் வைத்திய நாதனாகிய பரம்பொருளை நமக்காக நாம் நீராட்டி மகிழ்கின்றோம்,

**"உன்னைச் சிங்காரித் துன்னழகைப் பாராமல்**
**என்னைச் சிங்காரித் திருந்தேன் பராபரமே"**

என்று கழிவிரக்கமுற்றுப் பாடுகிறார் தாயுமானவர்.

அபிஷேகம் நிறைவுற்றதும் வாசனைப் பொருள்களினால் தூபமிட்டு விதவிதமான ஆடை ஆபரணங்களாலும், மலர் மாலைகளாலும், சந்தனம், குங்குமம் முதலியவற்றாலும் அலங்காரம் செய்வர்.

## நைவேத்தியம்:

இறைவனுக்கு அமுது செய்வித்தலையே நைவேத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்றோம். விஷேச அபிஷேகங்களைத் திரை நீக்கி அடியார்கள் தரிசிக்கும் வகையில் செய்வர். அதன்பின் திரையிட்டு அலங்காரம், தூபம், நைவேத்தியம் என்பன நிகழ்த்துவர். உணவிற்கு நிவேதனம், அன்னம், அமுது, ஹவிசு என்று பலவகையான பெயர் வழங்குகிறது. நன்கு சமைக்கப்பட்ட அன்னம் (சாதம்) தினசரி நைவேத்தியமாக பயன்படுத்தப்படும். சுத்தோதனம் என்றும் சுத்தான்னம் என்றும் இதனைக் கூறுவர். பச்சரிசியே நைவேத்தியத்திற்குரியது. பஞ்சஹவிஸ் என்று ஐவகையாகக் கூறப்படும் சுத்தான்னம், பாயசான்னம், எள்ளன்னம், பயற்றன்னம், சர்க்கரையன்னம் என்பனவும் புளிச்சாதம், எழுமிச்சம்பழச் சாதம், தயிர்ச் சாதம் என்னும் பலவகையான அன்ன வகைகளும் மோதகம், வடை, முறுக்கு முதலிய சிற்றுண்டி வகைகளும் நைவேத்தியமாகப் பயன் படுத்தப்படும்.

இவற்றைத் தயார் செய்வதற்காக ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளி அமைந்திருக்கும். பரிசாரகர்கள் எனப்படுவோர் இதனைத் தயார்செய்வதற்கு நியமிக்கப்படுவர். இவர்கள் சிவதீஷை பெற்றவர்களாயும் நித்திய கர்மானுஷ்டானங்களை உடையவர்களாயும், ஆசாரசீலர்களாயும் இருத்தல் வேண்டும்.

வெற்றிலை, பாக்கு, நன்கு கனிந்த வாழைப்பழங்கள், மாதுளம்பழம், மாம்பழம், பலாப்பழம் முதலிய பழவகைகள் என்பன நிவேதனத்திற்கு உகந்தன. பழங்கள் நன்கு கனிந்தவையாக இருப்பது அவசியம். நமது கனிந்த உள்ளத்தை ஆண்டவனுக்கு சமர்ப்பிக்கும் பாவனையே கனிகளை நைவேத்தியம் செய்வதன் உட்கருத்து. அதேபோல அவற்றிலுள்ள இனிமையும், சுவையும் எமது வாழ்க்கையில் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதாகவும் கொள்ளலாம்.

வாழைப்பழத்தை நிவேதனம் செய்வதில் நம்மவரிடையே ஒரு தவறான மனப்பாண்மை காணப்படுகிது. கதலி வாழைப்பழம் தவிர்ந்த ஏனைய இனங்களான கப்பல், இதரை முதலியவற்றைச் சுவாமிக்குச் சமர்ப்பிக்கக் கூடாது என்று பலர் தவறாக நினைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறார்கள், "கதளீ பலம் நிவேதயாமி" என்று சிவாச்சாரியர்கள் சொல்லதைக் கேட்டு அதன் அர்த்தத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டமையே இதற்கு காரணம். கதளீ என்ற வடமொழிச் சொல்லின் பொருள் வாழை. "கதளீ பலம்" என்றால் வாழைப்பழம். இச் சொல் வாழையின் எல்லா இனங்களையும் குறிக்கும். எனவே எல்லா இன வாழைப் பழங்களையும் நைவேத்தியம் செய்யலாம்.

வெற்றிலை பாக்கு, பழவகை முதலியவற்றையும், பக்தர்கள் செய்து படைக்கின்ற பொங்கல் முதலியவற்றையும் தீபாராதனை, அர்ச்சனை என்பவற்றின் பின் நிவேதனம் செய்வதே மரபு.

தேங்காயைக் குடுமியுடன் உடைத்து அதன்பின் குடுமியை நீக்கி இரு பாதிகளையும் நிவேதிப்பது வழக்கம். மாசு நீக்கிய வெள்ளையுள்ளத்திற்குத் தேங்காய் குறியீடாக அமைகிறது. அதை மூடிநிற்கும் பலமான ஓட்டை உடைத்த பின்பே தேங்காயின் வெண்மை புலப்படுகிறது. வலிய மல நீக்கத்தை இது குறிக்கின்றது. அடியார்கள் சிதறு தேங்காய் உடைப்பதும் இதனைக் குறித்தே. நமது துன்ப துயரங்களை இறைவன் சந்நிதானத்தில் சிதறடித்து இன்ப வாழ்வைப் பிரார்த்திப்பதைக் குறிக்கின்றது.

## தீபாராதனை:

பூஜையின் முக்கிய அம்சம் இதுவே. பலவகையான தீப வகைகளை இறைவனுக்குக் காட்டி ஒளியேற்றி பக்தர்கள் இறைவன் திருக் கோலத்தைக் கண்டு களிக்க வகை செய்வது தீபாராதனை. (ஆராதனை - வழிபாடு) தீபங்களால் வழிபடுதல் என்பது பொருள்.

தீபங்கள் பல வகையாக உண்டு. பொதுவாக வழக்கிலுள்ளவை: (வரிசைப்படி) அடுக்குத்தீபம், நாகதீபம், பஞ்சமுகதீபம், வில்வதீபம், கும்பதீபம், ஈசானாதி பஞ்சதீபங்கள், நட்சத்திரதீபம், ஒற்றைத் தீபம், கற்பூர தீபம், பஞ்சாராத்திகை என்பனவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பதீபமும், ஈசானாதி பஞ்சதீபங்களும் முதலிலேயே ஏற்றிவைக்கப்பட்டு அவற்றுக்கு உபசாரங்கள் செய்யப்படும். முதலில் கும்பதீபம் காட்டப்படும். அதன் நான்கு திக்குகளிலும், ஈசான திக்கிலுமாக (வடகிழக்கு) வைக்கப்பட்ட ஐந்து தட்டுக்களும் ஈசானம், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்ற வரிசைப்படி எடுத்துக்காட்டப்படும். (வலமாக வருகின்றதெனினும் வடக்குத் தட்டின் பின்னரே மேற்குத் தட்டு என்பது கவனிக்கத்தக்கது.) இதன்பின் ஒற்றைத்தீபம் காட்டப்படும்.

தீபங்களை ஏற்றிக்கொடுக்கும் உதவியாளர் தீபமுகத்தையே சிவாச்சாரியாருக்கு முன் நீட்டவேண்டும், அவர் நிரீக்ஷணம் முதலிய சம்ஸ்காரங்களைச் செய்து புஷ்பத்தால் அர்ச்சித்த பின்பே தீபத்தை திருப்பி அவர் கையில் கொடுக்க வேண்டும். ஒரு கையால் ஒரு தீபத்தைக் கொடுத்து மறு கையால் மற்றத் தீபத்தை வாங்குதல் முறையற்றது. இரண்டு கையாலும் பயபக்தியோடு கொடுத்தலும், வாங்குதலுமே முறை.

தீபங்கள் காட்டும் போது வலமாக காலிலிருந்து தலை வரை மும்மறை சுற்றி அந்தந்த இடங்களில் நிதானமாக நிறுத்திக் காட்ட வேண்டும். முதல்முறை சுற்றிக் காட்டுவது உலக நன்மைகாகவும், இரண்டாம் முறை காட்டுவது கிராம நன்மைக் காகவும், மூன்றாம் முறை காட்டுவது உயிர்களின் நன்மைக்காகவும் என ஆகமங்கள் கூறும்.

தீபங்களின் பின் கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் என்ற உபசாரப் பொருட்களையும் முறைப்படி காட்டி உபசரிப்பார். ஒவ்வொரு தீபத்தையும், உபசாரப் பொருட்களையும் காட்டும்போது அவற்றுக்குரிய வேத மந்திரங்ளை வேதாத்யயனம் பயின்ற அத்யயன பட்டர் ஓதுவார்.

தீபங்கள் பல முகங்களையுடையனவாக ஆரம்பித்து படிப்படியாகக் குறைந்து ஒரு முகமுடையதாக நிறைவு பெறுகிறது. அதன்பின் கற்பூரதீபம் காட்டியதும் அது (கற்பூரம்) முழுமையாக எரிந்து ஒன்றுமில்லாமல் போவதையும் கவனிக்கலாம். இதுவும் ஆன்ம கோடிகள் பலபொருளுடன் பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து வாழ்ந்து அனைத்தையும் படிப்படியாக நீக்கி, இறைவனுடன் ஒன்றி நிற்கும் நிலையைக் காட்டுகிறது.

## அர்ச்சனை:

யஜுர் வேதத்திலே இறைவனை நூறு பெயர்கள் கூறி வணங்கும் பகுதி ஒன்றுண்டு. இது சத்ருத்திரீயம் எனப்படும். இதை அடியொற்றிப் புராணங்களில் பரம்பொருளின் எண்ணிறைந்த நாமங்களைக் கூறி அர்ச்சிக்கும் முறை வளர்ந்தது. குழந்தைகளை ஆசையுடன் அநேக செல்லப் பெயர்களை இட்டு அழைப்பது போன்றது இது. அர்ச்சனை என்பது "ஓம்" என்னும் பிரணவத்தில் ஆரம்பித்து இறைவனது நாமத்தை நான்காம் வேற்றுமையுடன் கூறி (இன்னாருக்கு என்று) நம: (வணக்கம்) என்ற இறுதிப் பகுதியுடன் முடிவுறும். ஒவ்வொரு நாமத்தையும் கூறியவுடன் ஒவ்வொரு புஷ்பமாக இறைவனது பாதாரவிந்தத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வர்ச்சனை மந்திரத் தொகை பதினாறு, நூற்றெட்டு, முந்நூறு, ஆயிரம் என்ற வகையில் அமையும். இவை முறையே ஷோடச நாம அர்ச்சனை, அஷ்டோத்தரசத நாமார்ச்சனை, திரிசதி நாமார்ச்சனை, சகஸ்ர நாமார்ச்சனை என வழங்கும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி இந்த எண்ணிக்கைகளில் நாமாவளிகள் (நாம வரிசைகள்) உள்ளன. சகஸ்ர நாமாவளிகளை மீண்டும் மீண்டும் வாசித்தும், ஒரே நேரத்தில் பலர் நின்று அர்ச்சனை செய்தும் எண்ணிக்கைகளை அதிகரித்து லக்ஷார்ச்சனை, கோடி அர்ச்சனை என்பனவும் செய்யப்படுகின்றன. அர்ச்சனைக்கு மலர்கள் மட்டுமல்லாமல் அக்ஷதை, குங்குமம், வில்வம் முதலிய பத்திர வகைகள், மாதுளம் முத்து எனபனவும் பயன்படுத்தப் படுகின்றன. ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்ற இறைவனின் ஐந்து முகங்களைக் குறித்து ஐந்து சிவாச்சாரியர்கள் நின்று அர்ச்சிப்பது பஞ்சமுகார்ச்சனை என்றும், முருகனின் ஆறு முகங்களுக்கும் ஆறு சிவாச்சாரியர்கள் நின்று அர்ச்சிப்பது ஷண்முகார்ச்சனை என்றும் கூறப்படுகின்றன. (ஷண்முக அர்ச்சனை - ஷட் + முகம் - ஷட் - ஆறு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையை நவசக்திகளாகப் பாவித்து ஒன்பது சிவாச்சாரியர்கள் நின்று அர்ச்சிக்கும் மரபும் உள்ளது.

அர்ச்சனையின் இறுதியில் வேத மந்திரம் கூறி புஷ்பாஞ்சலி செய்தல் மரபு. ஸ்வர்ண புஷ்பம், மந்திர புஷ்பம், லாஜபுஷ்பம் என்று இவை பல வகைப்படும். ஸ்வர்ணம் என்பது தங்கம். மன்னராட்சிக் காலத்தில் மன்னனுக்குக் காணிக்கையாக பொன்னோடு, பூவைச் சமர்ப்பித்தனர். அவ்விதம் நாணயத்தோடு சேர்த்துப் புஷ்பாஞ்சலி செய்தல், ஸ்வர்ண புஷ்பம். நெற்பொரியுடன் சேர்த்து புஷ்பாஞ்சலி செய்தல் லாஜபுஷ்பம், லாஜம் என்பது நெல்மலர் (நெற்பொரி). மந்திர சகிதமாக இவை வழங்கப்படுவதனால் மந்திர புஷ்பம் எனப்படும்.

புஷ்பங்களால் அர்ச்சிப்பது மலர்ந்த உள்ளத்தைச் சமர்ப்பிக்கும் பாவனையாகவும், மலர்ந்த வாழ்வை வேண்டுவதாகவும் அமைகிறது. மலர்கள் தாராளமாக இயற்கையில் கிடைப்பவை. இவற்றை ஆண்டவன் பாதங்களில் அள்ளி இறைத்து வழிபட வேண்டும்.

மகாவிஷ்ணு ஒருமுறை பரமேஸ்வரனை ஆயிரம் நாமங்கள் சொல்லித் தாமரை மலரால் அர்ச்சனை செய்தார். இறுதியில் ஒரு மலர் பற்றாமல் போய்விட்டது. தாமரைக் கண்ணனான விஷ்ணு தமது கண்களிலொன்றைப் பிடுங்கி அர்ச்சித்தார். பெருமகிழ்வுற்ற பரமேஸ்வரன் சக்கரத்தை அவருக்கு அருள் செய்தார். (மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன். - திருப்பல்லாண்டு)

## தோத்திரம்:

இசையோடு கூடிய பாடல்கள் மூலம் இறைவனைத் துதித்துப் பாடுதல் அடுத்த அம்சமாகும். நால் வேதங்களும் ஞானிகளால் இயற்றப்பட்ட சுலோகங்களும் தமிழ் வேதமான திருமுறைப் பாடல்களும் மற்றும் துதிப் பாடல்களும் இதில் இடம்பெறும். வேதங்களை முறைப்படி பயின்ற அத்யயன பட்டர் வேதங்களை முதலில் ஓதுவார். தொடர்ந்து வடமொழித் துதிகளும் தமிழ் வேத பாராயணமும் நடைபெறும். திருமுறை ஓதும் நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் நேரடியாகத் தாமும் இறைவழிபாட்டுடன் ஒன்றிநிற்க வழிசேர்க்கும் ஒன்றாகும்.

இறையருள் பெற்ற நாயன்மாராற் செய்யப்பட்ட திருவருட் பாக்களைப் பன்னிரு திருமுறைகளாக வகுத்துள்ளனர் சான்றோர். பன்னிரு திருமுறைகளும் ஓதுவதற்கு இயலாதபோது அவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த ஐந்தினை ஓதுவது மரபு. இவற்றைப் பஞ்சபுராணம் என்பர்.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பனவே அவை. இவற்றை இந்த வரிசை தப்பாமலும் உரிய முறைப்படியும் ஓதுதல் முக்கியம். இவற்றின் பின் ஏனைய அடியார்களின் பாடல்கள் (திருப்புகழ், அபிராமி அந்தாதி, கந்தரனுபூதி முதலியன) ஓதப்படலாம்.

திருப்புராணம் ஓதுமிடத்துப் பெரியபுராணம் மட்டுமே ஓதப்பட வேண்டும். ஏனைய கந்தபுராணம் முதலியன திருமுறை வரிசைகளின் பின்னரே ஓதப்படவேண்டும்.

## ஆசீர்வாதம்:

ஆலய பரிபாலகர்கள், திருவிழா முதலானவற்றை நடத்தும் எசமானர்கள் (உபயகாரர்), கிராம மக்கள், உலக மாந்தர் யாவருக்கும் சகல நலன்களும் கிடைக்கவேண்டுமெனவும் ஆலயம் சகல செல்வங்களுடனும், நித்திய, நைமித்திகச் சிறப்புக் களுடனும் விளங்கவேண்டுமெனவும் சிவாசாரியார் பிரார்த்திக்க அங்கு வந்துள்ள ஏனைய பிராம்மணோத்தமர்கள் யாவரும் சேர்ந்து "ததாஸ்து" (அவ்வாறே ஆகட்டும்) என்று ஆமோதிப்பர். இதுவே ஆசீர்வாதம் எனப்படும்.

ஒவ்வொரு ஸ்லோகமும் அல்லது வசனபாகமும் ஒவ்வொரு விஷயங்களைக் குறித்து ஆசீர்வதிப்பதாகப் பல பகுதிகளை உள்ளடக்கியதாக ஆசீர்வாதம் அமையும். சொல்லழகும், பொருட் சிறப்பும் அடுக்குத் தொடர்களுங்கொண்டு கேட்பதற்கு இனிமையாக இருக்கும். சந்தர்ப்பத்திற்குப் பொருத்த மானவையாக, கால அவகாசத்திற்கு இசைவாகப் பொறுக்கி எடுத்த சில ஆசீர்வாதங்களை ஆலயங்களிற் பயன்படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாட்டியம்:**

இசையுடன் இணைந்த தோத்திரங்கள் போலவே நாட்டியமும் இறைவழிபாட்டின் ஓர் அம்சமாகத் திகழ்ந்தது. இன்று கிரியைகளின் ஓரங்கமாக வழிபாட்டோடு இணைந்து இது கைக்கொள்ளப் படாவிட்டாலும் முறையான பக்திமயமான நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்துவது தவறல்ல.

இசை, நடனம், சிற்பம், ஓவியம் ஆகிய பலவித கலைகள் இந்து கலாச்சாரத்தின் உயிர்நாடிகளாக சைவாலயக் கிரியைகளுடன் இணைந்து வளர்ந்து வந்தன. கிரியைநெறி இயந்திரப் பாங்காக இல்லாமல் பக்திமயமானதாக உள்ளத்தோடு ஒன்றி நிற்பதாக அமைய இன்னும் இவை உதவியாக இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பபூஜை, அக்னிகார்யம் என்பவற்றின் விளக்கம்

ஆலயங்களில் நிகழும் விசேஷ கிரியைகள் எல்லாவற்றிலும் கும்பம் முதலிடம் பெறுகிறது. தமிழர்களின் வாழ்வோடு சிறப்பாக இந்துக்களின் கலாசாரத்தோடு பின்னிப் பிணைந்த ஒரு மங்கலத் திருவுருவமாக நிறைகுடம் அமைந் துள்ளது. இதே நிறைகுடம் கிரியைகளில் பயன்படுத்தப் படும்போது கும்பம் எனப்படுகிறது.

நிறைகுடம் ஓர் அடையாளப் பொருளாகவும் மங்கலச் சின்னமாகவும் இருக்க, கும்பம் இறைவனை ஆவாகனம் செய்து வழிபடும் ஒரு பூஜாஸ்தானமாக அமைகின்றது.

உருவமற்ற அருவமான பரம்பொருளை எங்கள் சிற்றறிவுக்கு எட்டும் வகையில் திருவுருவங்களாக அமைத்து வழிபடுவது ஒருவகை வழிபாடாகும். உருவமல்லாமலும் அருவமல்லாமலும் இடைப்பட்ட நிலையில் ஒரு குறியீடாக அருவுருவமாகக் காட்சி தருவது லிங்கம். இது சிவபிரானைக் குறித்தலின் சிவலிங்கம் என்பர்.

எல்லாமூர்த்திகளையும் ஆவாகனம் செய்து வழிபடுதற்கு கும்பம் உதவுகிறது. கும்பம் சர்வதேவதா ஸ்வரூபம். அது ஒரு தெய்வீகத் திருமேனியாகப் பாவனை செய்யப்படுகிறது. மந்திரங்களை அதில் பதித்து இறைவனை அங்கு எழுந்தருளச் செய்து சகல உபசாரங்களும் வழங்கிப் பூஜைகளை நிகழ்த்துவர்.

கும்பம் உருவாக்கப்பட்ட உலோகம் அல்லது மண் உடலாகவும் கும்பத்தில் சுற்றப்படும் நூல் எழுபத்தீராயிரம் நாடிகளாகவும் தண்ணீர் இரத்தமாகவும் உள்ளே இடப்படும் நவரத்தினங்கள் முதலியன எலும்புகளாகவும் தங்கம் அல்லது நாணயம் சுக்கிலமாகவும், தேங்காய் சிரசாகவும் மாவிலை மயிராகவும், கூர்ச்சம் குடுமியாகவும் அதில் பதிக்கப்படும் மந்திரம் உயிராகவும் கொள்ளப்பட வேண்டுமென சகலாகம சங்கிரகம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் அமைக்கப்படும் கும்பங்கள் இருவகை. ஒன்று நவராத்திரி, வரலக்ஷ்மி விரதம் போன்ற பூஜைகளுக்காக வீட்டிலோ ஆலயத்திலோ வைக்கப்படும் கும்பம். பூஜை வேளையில் கும்பத்தில் ஆவாகனம் பூஜை உபசாரம் முதலிய வழிபாடுகள் முடித்தபின் மூர்த்தியை மீண்டும் ஸ்வ ஸ்தானத்துக்கு எழுந்தருளச் செய்து கும்பத்தைக் கலைத்து விடுவர்.

மற்றொருவகைக் கும்பம் அபிஷேகத்திற்குரியது. எங்கும் நிறைந்த பரம்பொருட் சக்தியை சிவாசாரியார் தமது மனோசக்தியாலும் மந்திர சக்தியாலும் ஆகர்ஷித்துக் கும்பத்திலே ஆவாகனம் செய்து அதில் பூஜை செய்து தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துகிறார். இதன்பின் இக்கும்பமானது பிம்பம் எனப்படும் திருவுருவத்தில் அபிஷேகம் செய்யப்படும்போது தெய்வ சாந்நித்தியமும் இறையருட் சக்தியும் அத் திருவுருவத்திலே மேலும் பொலிகிறது. மந்திரங்கள் உருவேற்றப்படும்போது (மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்படும் போது) அபரிதமான சக்தி உருவாகுவதுபோலத் திருவுருவத்திலே மீண்டும் மீண்டும் அபிஷேகங்கள் பூஜைகளைச் செய்யும்போது அங்கு அருட்சக்தி மிகுவதில் வியப்பென்ன? இது விஞ்ஞானபூர்வமாகவும் ஏற்புடையதே!

கும்பம் அமைத்தலில் பலவகையான முறைகள் உண்டு. ஒரு கும்பம் மாத்திரம் அமைத்து அதில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து பூஜை செய்தல் ருத்திர கும்ப பூஜை எனப்படும். இதனுடன் அஷ்ட வித்யேஸ்வரர்கள் எனக் கூறப்படும் எட்டுப் பரிவார தெய்வங்களுக்கும் வேதிகையில் எட்டுத் திக்கிலும் ஒவ்வொரு கும்பமாக ஒன்பது கும்பங்கள் வைத்துப் பூஜித்தல் நவகலச ஸ்நபனகும்ப பூஜை எனப்படும்.

இதற்குமேல் விரிவாகப் பதினேழு, இருபத்தைந்து, நாற்பத்தொன்பது, எண்பத்தொன்பது, நூற்றெட்டு, இருநூற்றொன்பது, நாநூற்றொன்பது, ஆயிரம், ஆயிரத்தொன்பது என்ற எண்ணிக்கையில் கலசங்களை ஸ்தாபித்து வழிபடும் ஸ்நபனாபிஷேகங்களும் ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளன.

தற்போது 108, 1000 என்ற எண்ணிக்கைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காபிஷேகங்கள் செய்யப்படுகின்றனவெனினும் விரிவான ஸ்நபன கும்ப அபிஷேகம் வழக்கில் அதிகமில்லை. ருத்ர கும்ப அபிஷேகமும் நவகலச ஸ்நபன கும்ப அபிஷேகமுமே சாதாரணமாக எங்கும் நிகழுகின்றன.

இக் கும்பங்களை ஸ்தாபிப்பதற்காக ஆசனங்களாக வாழையிலைகளைப் பரப்பி அவற்றில் நெல், பச்சரிசி, பயறு, உழுந்து, எள்ளு, கடலை, துவரை ஆகிய தானியங்களும் நெற்பொரி தர்ப்பை என்பனவும் அடுக்கடுக்காக இடப்படுகின்றன.

இவற்றை ஆசனங்களாகக் கொண்டு க்ஷிதி (நிலம்) எனப்படும் பிருதுவி தத்துவம் முதல் குடிலை எனப்படும் சுத்த மாயை ஈறாக முப்பத்தாறு தத்துவங்களையும் இவற்றிலே விரிவாகப் பூஜிப்பர். அல்லது அனந்தர், தர்மர், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம், பத்மம் என ஆறாக வகுத்து ஷடுத்தாசனமாகப் பூஜிப்பதும் உண்டு. முன்னையதைப் பஞ்சாசன பூஜை என்பர். அனந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்பனவே பஞ்சாசனம் எனப்படுபவை.

இவ்வாறு ஆசன பூஜைகளின் மூலம் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த மெய்ப்பொருளைப் பிரதான கும்பத்திலே ஆவாகனம் செய்வர் (எழுந்தருளச் செய்தல்). ஆவாகனம் செய்த இறைவனை ஸ்தாபனம் (அமருமாறு வேண்டுதல்) சந்நிதானம் (அங்கிருந்து அருள் சுரக்குமாறு வேண்டுதல்) சந்நிரோதனம் (பூஜை நிறைவு பெறும் வரை அவ்விதமே நிலைபெற வேண்டுதல்) முதலிய முத்திரைகள் மூலம் இறையருளை அங்கு பொலியச் செய்வர். இதன்பின் பாத்தியம் (சுத்திகரித்தற் பொருட்டாக பாதங்களில் நீர் விடுதல்) ஆசமனம் (அருந்துவதற்கு ஒரு துளி நீர் வாயிலே விடுதல்) அர்க்கியம் (பூஜைக்குரிய விசேஷ ஜலம் சிரசிலே ஒரு துளி விடுதல்) முதலிய உபசாரங்களை வழங்கிப் பூஜிப்பர்.

இத்தகைய உபசாரங்கள் ஷோடசோபசாரங்கள் எனப் பதினாறு வகையாகவும் சதுஸ்ஷஷ்டி உபசாரங்கள் என அறுபத்துநான்கு வகையாகவும் கூறப்படுவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுபசாரங்களின்போதும் வேறுபல கிரியைகளின் போதும் பலவகையான முத்திரைகள் சிவாசாரியாரால் பயன்படுத்தப்படும். முத்திரை என்பது அடையாளம். பரத நாட்டியத்திலே முத்திரைகள்மூலம் பல உட்பொருள்களை விளக்குவர். மேலும் இவை பாவனைகளாகவும் அமைகின்றன. மந்திரம், பாவனை, கிரியை என்ற மூன்றும் இணைந்ததே நமது ஆலய வழிபாட்டு முறை. பாவனைகளை முத்திரைகள் மூலம் காட்டுவது மரபு. உதாரணமாக வணக்கம் செலுத்தும் பாவனையை நமஸ்கார முத்திரை மூலம் காட்டுவது வழக்கம்.

பிரதான கும்பபூஜையின்பின் (பஞ்சாசன பூஜையின் பின்) ஆவரண பூஜை செய்யப்படும். பிரதான மூர்த்தியைச் சூழவுள்ள பரிவார கணங்களை ஒவ்வொரு ஆவரணமாக (வரிசையாக, சுற்றுவட்டமாக) பூஜித்தலே ஆவரண பூஜை.

ஸ்நபன கும்ப பூஜையில் ஐந்து ஆவரணங்கள் உள்ளன. முதலாம் ஆவரணத்தில் பஞ்சப்பிரம்ம மந்திரங்கள் எனப்படும் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்ற ஐந்து மந்திரங்களும் ஷடங்க மந்திரங்கள் எனப்படுகின்ற ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என்ற ஆறு மந்திரங்களுமாகப் பதினொரு மந்திரங்களும் பூஜிக்கப் படுகின்றன. (சம்ஹிதா மந்திரங்கள் என இப் பதினொன்றையும் சொல்வர்)

இரண்டாம் ஆவரணத்தில் அஷ்டவித்தியேஸ்வரர்கள் எண்மர் பூஜிக்கப்படுவர். இவர்கள் பிரதான மூர்த்திகளுக்கேற்ப மாறுபடுவார்கள்.

மூன்றாம் ஆவரணத்தில் கணநாதர்கள் எண்மர் பூஜிக்கப் படுவர். இவர்களும் பிரதான மூர்த்திகளுக்கேற்ப மாறுபடுவார்கள்.

நான்காவது ஆவரணத்தில் எண்திசைக் காவலர்களான இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அட்டதிக்குப் பாலகர்களும் பிரம்ம விஷ்ணுக் களும் பூஜிக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது ஆவரணத்தில் வஜ்ரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், அங்குசம், கதை, த்ரிசூலம், பத்மம், சக்ரம் ஆகிய தசாயுதங்களும் பூஜிக்கப்படும்.

(அம்பிகையின் பூஜையில் தசதிக் பாலகர்களுக்குப் பதிலாக லோக பாலினிகள் - பெண்பாலில் - பூஜிக்கப்படுவர். தசாயுதங்களும் அம்பிகைக்கும், விநாயகருக்கும் வேறுபடும்.)

இவ்வளவும் சாதாரண கும்பபூஜையில் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அக்கினி காரியம் நிகழும். மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனுக்கு அக்கினி அத்தியாவசிய மாகிறது. அகில உலகுக்கும் சக்தி வழங்கி அதனை இயங்கவைக்கும் இப் பிரபஞ்சத் தலைவனாகவும் பிரத்தியட்ச தெய்வமாகவும் கருதப்படும் சூரியன், அக்கினிக் குழம்பாகவே காட்சி தருகின்றான். அக்கினியே பெரும் சக்தி வடிவம்தான்.

இயற்கைப் பொருள்களை வழிபட்ட மனிதர் அக்கினியைத் தெய்வமாக வழிபட்டதோடு ஏனைய தெய்வ சக்திகளுக்கிடையில் பாலமாக நின்று எல்லாக் கடவுளர்க்கும் எமது வழிபாட்டை எடுத்துச் செல்லும் தூதுவனாகவும் அக்கினியைக் கொண்டனர். "தேவா வை அக்னி முகா"என்பது வேதவாக்கியம். தேவர்கள் அக்கினியை முகமாக உடையவர்கள் என்பது இதன் பொருள்.

சோதி வடிவமாகச் சுவாலிக்கும் அக்கினியின் வடிவே சிவலிங்கம். தேர், இராஜ கோபுரம் என்பனவும் இதன் வடிவிலே அமைக்கப்படுகின்றன.

பரமசிவன் பிரம்ம விஷ்ணுவுக்களுக்குச் சோதிப் பிழம்பாகவே காட்சி தந்தார். இத்தகைய சிறப்புக்களும் வரலாற்றுப் பெருமையும் மிக்க அக்கினி வழிபாடு ஆலயங்களில் முக்கிய இடம்பெறுகிறது. இதற்கென உருவாக்கப்பட்ட ஓம குண்டங்களிலே மா, பலா, ஆல், அரசு, அத்தி, பலாசு முதலிய சமித்துக்களை (சுள்ளிகள்) மந்திர சகிதமாக இட்டுத் தீமூட்டி நெய் வார்த்து அக்கினி வளர்த்து அதிலே வேண்டிய தெய்வங்களை ஆவாஹனம் செய்து உபசாரங்கள் வழங்கிப் பிரார்த்திப்பது அக்கினி காரியக் கிரியையின் முக்கிய அம்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வக்கினிகுண்டத்திலிருந்து கும்பம் ஒரு நூல்மூலம் தொடுக்கப்படும். இது நாடீ சந்தானம் எனப் பெயர் பெறும். அக்கினி காரிய முடிவில் அக்கினியில் ஆவாகனம் செய்யப் பெற்ற மூர்த்தியை ஏலவே அதே மூர்த்தியை ஆவாகனம் செய்து பூஜித்த கும்பத்திலே ஒடுக்குவர். இவ்விருதிறத்தாலும் சாந்நித்தியம் அடைந்த கும்பம் பின்னர் மூர்த்தியின் திருவுருவத்திலே அபிஷேகம் செய்யப்படுகிறது.

மகோற்சவ காலத்தில் கொடிப்படமும், பிரதிஷ்டா காலத்தில் விக்கிரகமும் இவ்வாறு நாடிசந்தானம் செய்யப்பெற்று அக்கினி, கும்பம் ஆகிய இரண்டு விதத்தாலும் வரவழைக்கப்பட்ட தெய்வ சாந்நித்தியத்தைப் படத்திலோ, மூர்த்தியிலோ ஏற்றுவது வழக்கம்.

கும்ப வேதிகைக்கு ஈசான திக்கிலே யாகேஸ்வரன், யாகேஸ்வரி என்று கூறப்படும் சிவசக்தி கும்பங்கள் வைக்கப்பட்டு அவர்கள் முதலில் பூஜிக்கப்படுவது அவசியம். அவர்களே யாகத்தை ரக்ஷிப்பவர்கள்.

அக்கினி காரியம் செய்வதற்குரிய குண்டம் ஆலயங்களில் ஸ்பன மண்டபத்திலே ஸ்நபன வேதிகைக்கு கிழக்குப் புறமாக அமையும். மகோற்சவ யாகசாலை மேற்கு நோக்கியிருப்பதால் இங்கு அக்கினிகுண்டம் வேதிகைக்கு (வேதிகை - பிரதான கும்பம் வைக்கும் மேடை) மேற்கில் அமையும். கும்பாபிஷேகம் முதலியவற்றுக்கு அமைக்கப்படும் யாகங்களில் ஒரு குண்டம் முதல் முப்பத்து மூன்று குண்டம் வரை வேறு வேறு திக்குகளில் அமையும்.

யாககுண்டத்தின் முன்பு சிவாச்சாரியார் வடக்கு முகமாக அமர்ந்து அர்க்கியம் கூட்டி சகளீகரணம் அந்தர்யாகம் என்பன செய்தபின் குண்ட சம்ஸ்காரங்கள் எனப்படும் நிரீஷணம் முதலிய பதினெட்டு வகை கிரியைகளைச் செய்வர்.

சம்ஸ்காரம் என்பது சீர்செய்தல், தகுதியாக்குதல், சுத்திகரித்தல் என்ற கருத்துக்களை உடையது. நிரீஷணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியன முன்னர் குறிப்பிட்டவகையில் பாவனா மார்க்கமாக முத்திரைகள் மூலம் செய்யப்படும் சிறு சிறு கிரியைகளாகும். அக்கினிகாரியம் ஆரம்பிக்குமுன்னர் இவ்வாறு குண்ட சம்ஸ்காரம்(10), அக்கினி சம்ஸ்காரம்(4), ஆஜ்ய சம்ஸ்காரம்(18) என்பன முறையே குண்டம். அக்கினி, நெய் என்பவற்றைப் பக்குவப்படுத்துவதற்காகச் செய்யப்படுகின்றன. குண்டசம்ஸ்காரம் முடிந்ததும் குண்டத்தின் நடுவில் வாகீஸ்வரன், வாகீஸ்வரி ஆகியோரைத் தியானித்து ஆவாகனம் செய்வர். அக்கினியை ஒரு தட்டில் எடுத்து வரச்செய்து ராக்ஷசர்களின் பொருட்டு அதிலிருந்து ஒரு துண்டை நிருதி திக்கிலே போட்டுவிட்டு அக்கினி சம்ஸ்காரம் செய்து பூதாக்கினி, பிந்துவக்கினி, ஜடராக்கினி ஆகிய மூன்று வகை அக்கினிகளையும் சிவாச்சாரியர் தமக்குள்ளிருந்து வெளிக்கொணர்ந்து வெளியிலுள்ள அக்கினியுடன் சேர்ப்பதாக பாவனைபண்ணி அதனைப் பூஜிப்பர். மும்முறை வலமாகச் சுற்றி அக்கினியைக் குண்டத்தில் இட்டு அக்கினி கொண்டு வந்த பாத்திரத்தில் சிறிது அட்சதையும், நீருமிட்டு அதனை ஒரு புறத்தே வைப்பார்.

அக்கினியின் காவலுக்காக பரிதி விஷ்டரங்கள் எனப்படும் சமித்துக்கள், மற்றும் தர்ப்பையால் உருவாக்கப்பட்ட தண்டு முதலியவற்றைக் குண்டத்தைச் சுற்றி புருவமாக அமைக்கப்பட்டுள்ள மேகலைகளின்மேல் வைத்து அவற்றில் திக்கு பாலகர்களை பூஜிப்பர்.

வளர்க்கப்பட்ட அக்கினியிலே மூர்த்தியை ஆவாகனம் செய்து உபசாரங்கள் வழங்கிப் பூஜிப்பர். விசேஷமாகக் குறிப்பிட்ட சிலவகை மரங்களினாற் செய்யப்பட்ட சிருக், சுருவம் என்பன அக்கினி காரியத்திற்கு நெய் வார்க்கும் கரண்டி போன்ற கருவிகளாகும்.

அக்கினிகாரியத்தின் இறுதியில் சிருக்கினை நெய்யால் நிரப்பி சுருவத்தை அதன்மேல் கவிழ்த்து வைத்து நுனியில் பூ, நெற்பொரி என்பன வைத்து சிவாச்சாரியர் எழுந்து நின்று “வௌஷட்” என்பதை இறுதியில் கொண்டதாக அமையும்படி குறித்த தெய்வத்தின் மூலமந்திர உச்சாரணத்துடன் நெய்யை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்துப் "பூர்ணாகுதி" வழங்குவர். இவ்வேளையில் தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றையும் சமித்து, நெற்பொரி, வஸ்திரம், தர்ப்பை என்பவற்றையும் அக்கினிக்கு வழங்குவர்.

இறுதியில் அக்கினியில் இருக்கும் தெய்வத்தை உத்வாசனம் செய்து, ஏற்கனவே கும்பத்துடன் அக்கினியை இணைத்துப் போட்டிருந்த நாடீசந்தான நூலினை எடுத்து அட்சதை, தர்ப்பை, பூ இவற்றுடன் சேர்த்துக் கும்பத்திலே இடுவதன் மூலம் அங்கே ஒடுக்குவர்.

இதன்பின் அன்ன உருண்டைகளைப் பலி நிவேதனமாக திக்பாலகர்களுக்கு வழங்கி நீராஜனம் செய்தபின் யாக அக்கினியில் உருவாக்கப்பட்ட சாம்பலை நெய்யிற் குழைத்துப் பெறும் ரக்ஷை எனப்படும் கரிப் பொட்டினைக் கும்பங்களுக்கு இட்டு யாவரும் அணிந்துகொள்வர்.

அக்னியை சிவாசாரியன் தம்மிடத்திலே ஒடுக்கிக்கொள்வார்.

இதன்பின் சிவம் வர்த்தனி கும்பங்களை உத்வாசனம் செய்துவிட்டு பிரதான கும்பங்களை வீதிவலமாக எடுத்துவந்து அபிஷேகம் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய நைமித்திகக் கிரியைகள்

ஆலயங்களில் தினமும் நடைபெறும் நித்திய பூசைகள் ஆலயங்களின் வசதிக்கேற்ப ஒருவேளை முதல் பன்னிரு வேளைகள் வரை நிகழும். திருச்செந்தூர் முதலிய தமிழகக் கோயில்களில் பன்னிரு வேளைகள் பூஜை நிகழ்கிறது. எங்கள் நாட்டில் வசதி படைத்த பல கோயில்களில் ஆறு காலப் பூஜை நடைபெறுகிறது.

சூரியன் உதிப்பதற்குச் சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு முன் நிகழவேண்டியது முதலாவது பூசை. இது உஷத் காலப் பூஜை எனப்படும். இரண்டாவதாக நிகழும் கால சந்திப் பூஜை, சூரியன் உதித்து மூன்று மணித்தியாலங்களுக்குள் நிகழும். உச்சிக் காலப்பூஜை நடுப்பகலுக்குரியது. சூரியன் மறைவதற்கு ஒன்றரை மணி நேரத்துக்கு முன் நிகழ்வது சாயரட்சைப் பூஜை (சாயங்காலப் பூஜை). இதன் பின் நிகழும் ஐந்தாவது பூஜைக்கு இரண்டாங்காலப் பூஜை என்று பெயர். சாயங்காலப் பூஜையிலிருந்து ஒன்றரை மணித்தியாலத்தின் பின் நிகழ்வது இது. இரண்டாம்காலப் பூஜை நடந்து ஒன்றரை மணித்தியாலம் வரை அர்த்தயாமப் பூஜைக்குரிய காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து நோக்கின் அதிகாலை நான்குமணி, காலை எட்டு மணி, பகல்பன்னிரண்டு மணி, பிற்பகல் நாலரை மணி, மாலை ஆறு மணி, இரவு ஏழரை மணி ஆகியவை முறையே ஆறு காலப் பூஜைகளுக்கும் உரிய நேரங்கள் எனலாம்.

இந்த ஆறு வேளைப் பூஜை நடைபெறும் வசதி இல்லாத இடங்களில் கால சந்தி, உச்சிக்காலம், மாலை என மூன்று வேளை அல்லது காலை, மாலை என இரண்டு வேளைகள் பூஜை நடைபெறும். மிகவும் வசதி குறைந்த சிறிய ஆலயங்களில் ஒரு வேளைப் பூஜை நடைபெறுவதுமுண்டு.

அதிகாலையில் நீராடி நித்திய கர்மானுஷ்டனங்களை முடித்துத் தூய ஆடைகளும் விபூதி ருத்திராட்சமும் தரித்தவராக அர்ச்சகர் ஆலயத்தை அடைவர். திருநந்தி தேவரையும், துவார பாலகர்களையும் பிரார்த்தித்து அனுமதி பெற்று மண்டபத்தை அடைந்து சகளீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம் முதலியவற்றைச் செய்து பூஜைக்குத் தயாராக தம்மை ஆக்கியபின் வைரவர் ஆலயம் சென்று வணங்கி முதல் நாளிரவு அவரிடம் ஒப்புவித்த திறப்பினை அங்குச முத்திரையால் எடுத்துவந்து வாசலில் நின்று திருப்பள்ளி எழுச்சி முதலியன பாடித் துவார பூஜை நிகழ்த்திச் சிவசக்தி மந்திரத்தை உச்சரித்தபடி கதவைத் திறப்பார்.

உள்ளே துப்பரவு செய்து நிர்மால்யம் களைந்து (அர்ச்சித்த பூக்கள் மாலைகளை அகற்றி) பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம் ஆகியவற்றைக் கொடுப்பர். இதன்பின் முதலில் விநாயகர் பின்பு மூலவர் (மூலஸ்தானத்திலுள்ள பிரதான மூர்த்தி) அதன்பின் சக்தி ஆகியோரின் பூஜைகள் - அபிஷேகம் முதல் தோத்திரம் வரை நிகழும். ஏனைய பரிவார தேவர்களுக்கு இவ்வேளையில் பெரும்பாலும் பூஜை நிகழ்வதில்லை. இவ்வேளை யில் நைவேத்தியமாகப் பாலையே பயன்படுத்துவது மரபு.

கால சந்திப் பூஜையில் சூரியன் தனிச் சந்நிதானத்தில் இருந்தால் அவருக்கே முதற்பூஜை நிகழும். இதன்பின் சந்திரன், விநாயகர், மூலவர், ஏனைய பரிவாரங்கள் யாவருக்கும் விரிவாக அபிஷேகம் முதல் தோத்திரம் வரை பூஜைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சிக்காலப் பூஜைக்குமுன் அர்ச்சகர் 'மாத்யாஹ்நிகம்' எனப்படும் உச்சிக் காலத்திற்குரிய தமது நித்திய கர்மானுஷ் டானங்களை முடித்தபின் விக்நேஸ்வர பூஜை முதல் சிவோகம் பாவனை வரையிலான பூர்வாங்கக் கிரியைகளைச் செய்து ஸ்நபன கும்ப பூஜை செய்து, பின்னர் அபிஷேக ஆராதனைகளை விரிவாக நிகழ்த்துதல் முறை. இதேபோல ஏனைய மூன்று காலப் பூஜைகளுக்கும் நிகழும். இரவு அர்த்தயாம பூஜை நிறைவுற்றதும் ஆலயத் திறவுகோலை வைரவர் சந்நிதியில் வைத்துக் கோயிற் பாதுகாப்பை அவரிடம் ஒப்புவித்தல் வழக்கம்.

ஸ்நபன மண்டபத்திலே அமைக்கப்பட்டிருக்கும் ஓம குண்டத்திலே தினமும் அக்கினி காரியம் செய்தல் நித்தியாக்கினி என்றும், ஆலய வீதியில் எட்டுத் திக்குகளிலும் அந்தந்த திக்குபாலகர்களான இந்திரன் முதல் ஈசானன் வரையானோர்க்கும் பத்ரலிங்கம் என்னும் பலிபீடத்திலே (கொடிமரத்திற் கருகிலுள்ளது போல்) உரிய முறைப்படி அவ்வத் தேவர்களுக்கும் சாத உருண்டைகளைப் பலியாக வழங்கி மகிழ்வித்தல் நித்திய பலிதானம் என்றும் சொல்லப்படும்.

நித்தியோற்சவர் என்ற பெயருடன் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கும் உற்சவ மூர்த்தியைத் தினமும் ஒருதரம் பூஜையின் முடிவில் வீதிவலம் வரச்செய்தல் நித்தியோற்சவம் எனப்படும், (இம்மூர்த்தி பெரும்பாலும் ஒருவர் அல்லது இருவர் தூக்கிச் செல்லத்தக்கதாக மிகச் சிறிதாக இருக்கும்).

இங்கு குறிப்பிட்ட நித்தியாக்கினி காரியம், நித்திய பலிதானம், நித்தியோற்சவம் என்பன வசதிபடைத்த சில கோயில்களில் மட்டுமே நிகழும்.

ஆகம விதிப்படி அமைய வேண்டிய பூஜைக்கிரமம் எது என்பதை பக்தர்கள் ஓரளவு அறியவேண்டியதன் அவசியம் கருதியே இவை இங்கு விபரிக்கப்பட்டன. ஆயின், சந்தர்ப்ப சூழ்நிலைகள், இடம், பொருள், ஏவல்களுக்கேற்பவும் கால மாறுதல்களை அநுசரித்தும் இன்று இவற்றின் மிகச் சுருங்கிய வடிவத்திலேயே நித்திய பூஜைக் கிரியைகளை நாம் காண வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியிருப்பனும் தினமும் ஒரு தடவையாவது குறைந்த பட்சம் குளிர்ந்த நன்னீரை மட்டுமாவது தாராளமாகப் பயன்படுத்தி அபிஷேகம் செய்தல் அவசியமாகும். தீபாராதனையில் எல்லா வகையான தீபங்களையும் தினமுங் காட்டுதல் இயலாதெனினும் ஒற்றைத்தீபம், கற்பூரத்தீபம், பஞ்சாராத்திரிகை ஆகியவற்றை நிதானமாக நிறுத்தி ஒழுங்காகக் காட்டுவதும், தாராளமாகப் பூவினால் அர்ச்சித்து இயன்ற அளவு நாமங்களைக் கூறிப் பூஜை நிகழ்த்தலும் அவ்வாறே மிகவும் அவசியம்.

சுகந்த தூபமிட்டு, தீபம் காட்டியபின் நைவேத்தியம் செய்து திரையை நீக்கித் தீபங்காட்டுதலும், அடுத்துக் கற்பூரதீபங் காட்டுதலும் அதையடுத்து அர்ச்சனையும் அதன் முடிவில் பஞ்சாராத்திரிகை அல்லது மீண்டும் ஒருமுறை கற்பூரதீபம் காட்டுவதும் மிகமிகக் குறைந்த அளவு கிரியையாகும். இவற்றையேனும் ஒழுங்காக நிறைவேற்ற முடியாத அல்லது விரும்பாத அர்ச்சகர்கள் ஆலய கிரியைகளில் பங்கேற்பது வருந்தத்தக்கது!

**நைமித்திகக் கிரியைகள்:**

நைமித்திகம் என்பது விசேஷ கிரியையாகும். சுக்கிர வாரம் (வெள்ளிக்கிழமை), சோமவாரம் (திங்கட்கிழமை), முதலிய வாரந்தோறும வருகின்றவையும், பிரதோஷம் முதலிய இரு வாரங்களுக்குக் கொருமுறை வருபவையும், மாதப்பிறப்பு, கார்த்திகை, சதுர்த்தி, பூரணை முதலிய மாதமொரு முறை வருவனவும், நடேசரபிஷேகம் ஆகிய இரு மாதங்களிற்கொரு முறை வருபவையும், ஆடிப்பூரம், ஆவணிமூலம், கந்தசஷ்டி, நவராத்திரி ஆகிய வருஷமொரு முறை வருபவையும், கிரகண பூஜை, மகாமகம் போன்ற பல வருடங்களுக்கொரு முறை வருபவையுமென்று நைமித்திகக் கிரியைகள் பலவகைப்படும். பிரதிஷ்டை என்னும் கும்பாபிஷேகமும் நைமித்திகமே.

இவை, குறிப்பிட்ட தினங்களில் அவற்றுக்குரிய மரபு முறைப்படி விசேஷ அபிஷேகம், பூஜை, விசேஷ அர்ச்சனை, உற்சவம் முதலிய அம்சங்களைக் கொண்டவையாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காமியக் கிரியைகள்:**

ஏதாவது பிரத்தியேக நற்பலன்களை விரும்பி நாம் செய்கின்ற கிரியைகள் காமியக் கிரியைகளாகும். நமது குறிக்கோள் நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்துடன் நித்திய நைமித்தியங்களைச் செய்வித்தலும், ருத்ராபிஷேகம், ஸ்நபனா பிஷேகம், சங்காபிஷேகம் போன்றவற்றைச் செய்வித்தலும் காமியக்கிரியைகள் எனக் கூறப்படும்.

பிரதிபலனை எதிர்பாராது நம்கடமை இதுவென எண்ணிக் கிரியைகளை நடத்துவதே சிறப்பு. எனினும் லௌகீக வாழ்வில் ஈடுபட்டுள்ள சாதாரண ஆன்மாக்களாகிய நாம் எமது ஆசைகள் பூர்த்தியடையும் பொருட்டு இக்கிரியைகளை நடத்துவித்தல் தவறல்ல. முறையாகவும், பக்தியுடனும் இவற்றை நடத்தி, அதன் பெறுபேறுகள் யாவும் சிவார்ப்பணமே என்றெண்ணிச் சமர்ப்பித்தல் உயர்ந்த பக்குவ நிலைக்கு நம்மை வளர்க்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவம்

உற்சவம் (உத்சவம்) என்னும் சொல் விழா என்று பொருள் படும். இச்சொல்லுக்கு உத்தமமான யாகம் என்றும், மேலான ஐந்தொழில்கள் என்றும் உட்பொருள்கள் கூறுவர். போக மோக்ஷங்களை அருள்வது உற்சவத்தின் பலன்.

கிரியைகளில் நித்தியம், நைமித்திகம், காமியம் என மூவகை இருத்தல் போல, உற்வத்திலும் மூவகை உண்டு. நித்திய பூஜையின் இறுதியில் செய்யப்படுவது நித்தியோறசவம். வருடம் தோறும் குறித்த ஒரு காலப்பகுதியில் வருவது நைமித்திக உற்சவம். இஷ்ட பூர்த்திகளின் பொருட்டு செய்யப்படுவது காமிய உற்சவம்.

நைமித்திக உற்சங்களில் சிறந்தது மகோற்சவம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் பிரம்மோற்சவமாகும். நித்தியக் கிரியைகளின் போது ஏற்படும் குற்றம் குறைகளுக்குப் பிராயச் சித்தமாக அமைவது இந்த மகோற்சவமாகும்.

**உற்சவாந்த காலம்:**

மகோற்சவ காலத்தை நிர்ணயிக்கும் வகை நான்கு. **சௌரம், சாந்திரம், நட்ச்சத்திரம், சாவனம்** என்பனவே அவை. சூரியன் ஒரு ராசியை விட்டு அடுத்த ராசிக்கு செல்கின்ற காலம் சங்கிராந்தி எனப்படும். இந்த நாளை இறுதி நாளாகக் கொண்ட மைவது (அதாவது, ஏதாவது ஒரு மாதப்பிறப்பினை இறுதி நாளாகக் கொண்டமைவது) **சௌரமாச உற்சவம்.** இவ்வுற்சவம் பிரஜா விருத்தியைக் கொடுக்கும்.

வைகாசிச் சதுர்த்தசி, மாசிமாத ஷஷ்டி, ஆனிமாத கிருஷ்ணபக்ஷ அஷ்டமி, பன்னிரண்டு மாதங்களிலும் வரும் பௌர்ணமி, அமாவாசை என்னும் திதிகளில் ஏதாவது ஒன்றை இறுதியாகக் கொள்வது **சாந்திரமாச உற்சவம்.** இது முத்தி தரவல்லது.

மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், ஆனிஉத்தரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிஉத்தராடம், ஆவணித் திருவோணம், புரட்டாதிப் பூரட்டாதி, ஐப்பசி அஸ்வினி, கார்த்திகைக் கார்த்திகை, மற்றும் எல்லா மாதங்களிலும் வரும் திருவாதிரை இவற்றுள் ஒன்றை அந்தமாகக் கொள்வது **நட்சத்திர மாச உற்சவம்**. இது பாவ நிவாரணத்தைச் செய்யும்.

ஒரே மாசத்தில் வரும் நட்சத்திரமோ திதியோ இரு முறை வருமாயின், பிந்தியதையே உற்சவமாகக் கொள்ள வேண்டும். பிந்தியதற்குச் சங்கிராந்தி தோஷம் முதலியன இருப்பின் முந்தியதைக் கொள்ளவேண்டும்.

அரசன், எஜமான் இவர்களுடைய ஜன்மநட்சத்திரம் அல்லது கோயில் கும்பாபிஷேக தினம் இவற்றுள் ஒன்றை இறுதியாகக் கொள்வது **சாவனோற்சவ**மாகும். இது சாந்தியைக் கொடுக்கும்.

**நால்வகை உற்சவங்கள்:**

மகோற்சவமானது கொடியேற்றம் முதல் தீர்த்தம் ஈறாக யாகம், பலி என்பனவற்றுடன் செய்யப்படுவது. ஐந்தொழில் விளக்கமாக இது அமைகிறது. இதனைச் **சாகல்யம்** என்ற பெயரால் ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. இதைவிட கொடியேற்றுதலின்றி யாகதரிசனம், பலியிடுதல் முதலிய ஏனைய அம்சங்கள் யாவுமுள்ள விழா **பாவனம்** எனப்படும். யாகம், பலி இவையும் இல்லாமலே செய்யப்படுவது **சாந்தீகம்**, ஒரேநாளில் செய்து முடிக்கப்படுவது **மாங்கல்யம்.**

இவ்வாறு உற்சவமானது மாங்கல்யம், சாந்தீகம், பாவனம், சாகல்யம் என நால்வகைப்படும்.

**கொடித்தம்பம்:**

மகோற்சவம் நிகழ்வதற்குக் கொடிமரம் அவசியம். இது நந்தி பலிபீடம் என்பவற்றையடுத்து மனிதனின் முள்ளந்தண்டை நிகர்த்து நிமிர்ந்து நிற்கும். மூங்கில், கருங்காலி, வில்வம், தேவதாரு, பலாசு, தென்னை முதலிய மரங்களுள் ஒன்று கொடிமரமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும். உலோகத் தகடுகளால் போர்த்தப்பட்டு மேலே கொடிச் சீலை விரிந்து நிற்கத்தக்க அமைப்புக்களையும் கொண்டதாக உருவாக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமட்டத்திலிருந்து கர்ப்பக்கிரக விமானத்தின் (ஸ்துாபியின்) கலச மட்டம் வரையிலான உயரமே கொடி மரத்தின் உயரமாகும். இதன் அடியிலுள்ள சதுரவடிவான பாகம் பிரம்மபாகம். அதன் மேலுள்ள எண்கோண அமைப்பு விஷ்ணுபாகம். அதற்கு மேல் விருத்தமாக அமைவது ருத்ரபாகம்.

**கொடிச்சீலை:**

கொடிமரத்தில் ஏற்றப்படும் கொடிச்சீலையின் நீளம் தம்பத்தின் உயரத்தைப் போல் இரு மடங்கு உடையதாக இருக்க வேண்டும். அந்த ஆலய மூர்த்தியின் வாகனம் கொடிப்படத்தின் மையத்தில் வரையப்படும். அதன் முதுகில், அவ்வாலய மூர்த்தியின் அஸ்திரதேவர் வரையப்படும். இது ஆன்மா மலபரிபாகம் அடைந்ததைக் குறிக்கும். இவற்றை விட சூரிய சந்திரர்களும், அஷ்ட மங்கலப் பொருள்களும் வரையப்பட்டிருக்கும்.

**சித்தாந்தக் கருத்துக்கள்:**

இப்படம் தெளிவாகத் தெரியும் வண்ணம் மேற்புறத்தில் குறுக்குச்சட்டம் ஒன்று கட்டப்பட்டு அதன் மேல் கொடியேற்ற உதவும் கயிறு கட்டப்படுவதற்கமைவாக மேற்பாகம் முடிச்சாக அமைக்கப்படும். அம் முடிச்சு பிரம்மக் கிரந்தி எனப்படும். இதில் இணைக்கப்பட்டுக் கொடியை ஏற்றப்பயன்படுகின்ற மஞ்சட் கயிறு ஆன்மாவை இறைவனிடம் சேர்ப்பிக்கும் திருவருட் சக்தியாகும். கொடித்தம்பம் பதியாகிய இறைவனையும் கொடிச்சீலையிலுள்ள நந்தி பக்குவமடைந்த ஜீவான்மாவாகிய பசுவையும் குறிக்கும். இடையில் காணப்படும் தர்ப்பைக்கயிறு பாசமாகிய மும்மலமாகும். பக்குவான்மாவை வழிநடத்தும் திரோதான சக்தியைக் கொடிச்சீலை குறிக்கின்றது.

ஆன்மாவைப் பந்தித்து நிற்கின்ற பாசமலங்கள், ஆன்மா பக்குவமடைந்து திருவருட்டுணையால் இறைவனைச் சேரும்போது வலிகுன்றி வாளாவிருக்கும். (இல்லாமல் போய்விடுவதில்லை) இதையே அங்கிருக்கும் தர்ப்பைக் கயிறு காட்டுகின்றது.

கொடியேற்றியதும், திருவருட்சக்தியாகிய நூற்கயிறும், பாசமாகிய தர்ப்பைக்கயிறும், திரோதான சக்தியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிச்சீலையும் அதில் வரையப்பட்டுள்ள ஆன்மாவாகிய நந்தியும் தம்பத்தோடு சுற்றப்பட்டு அதனோடு ஐக்கியமாகி மறைய, இறைவனைவிட வேறாக ஒரு பொருள் இல்லை என்ற உண்மை தெளிவாகிறது.

**பூர்வாங்கக் கிரியைகள்:**

மகோற்சவ ஆரம்ப தினமாகிய துவஜாரோகண தினத்திற்கு (கொடியேற்ற நாளுக்கு) முதல் நாள் மாலையிலே சில பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகிவிடும். ஆசாரிய வரணம் முதல் அங்குரார்ப்பணம் வரையிலான கிரியைகள் முதல் நாளிலே நடைபெறுதல் நன்று. சில இடங்களில் மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் இரண்டையும் கொடியேற்றும் நாளிலே செய்தலும் உண்டு.

**ஆசார்ய வரணம்:**

வரணம் என்பது வரித்தல். மகோற்சவக் கிரியைகளை நடத்துவதற்குரிய குருவினை வரித்தல், அதாவது நியமித்தல் என்பதே இக் கிரியையின் பொருள். (நியமித்தல் என்பது அதிகாரதோரணையில் கட்டளையிடுதல். ஆனால் வரித்தல் என்பது அக்காரியத்தைச் செய்யும்படி வேண்டுதல்).

ஆலய தர்மகர்த்தா, உபயகாரர் ஆகியோர் குருவின் இல்லத்துக்கு மங்கலப்பொருட்கள் சகிதமாக, மங்கல வாத்தியங் களுடன் செல்வர். சாயங்கால சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து ஆசார்ய லக்ஷணத்துக்கமையத் தம்மை அலங்கரித்துக்கொண்டிருக்கும் பிரதான குருவையும் சாதகாசாரியார் உதவியாளர் யாவரையும், வணங்கி வீதிவலமாக ஆலத்துக்கு அழைத்து வருவர்.

மண்டபத்திலே அமர்ந்து விநாயகரைத் துதித்து ஆசமனம், பிராணாயம், சங்கல்பம் முதலினய செய்தவுடன் உபயகாரர் ஓரளவு தக்ஷிணையைக் குருவிடம் வழங்கி நமஸ்கரித்து மகோற்சவத்தை பொறுப்பேற்று நடத்துமாறு வேண்டுவர்.

குருதக்ஷினை என்பது குருவை மகிழ்விப்பதற்காகவும், தமது ஆத்ம சமர்ப்பணத்தை உணர்த்துமுகமாகவும் வழங்கப் பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காணிக்கை, இது குருவின் கடமைக்காக வழங்கப்படும் சம்பளம் அல்ல. குருத்துவம் என்பது தொழில்ரீதியாக கூலி பேசப்படும் ஒன்றல்ல. கொடுப்பவரதும், பெறுபவரதும் மனநிலையே இங்கு முக்கியம். சிலர் சம்பளமாக நினைப்பது தவறு.

பிரதம சிவாசாரியாரும் ஏனைய குருமாரும் மகோற்சவம் நிறைவுபெறும்வரை ஆலய சமீபமாக அவர்களுக்கென்று அமைக்கப்பெற்ற விடுதியில் தங்கி, சிவசிந்தனையுடன் இருத்தல் அவசியம். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் இறைபணி நடத்துவதன்றி ஏனைய காரியங்களில் ஈடுபடாமலும், வீண் வார்த்தைகளைப் பேசாமலும், குடும்பத் தொடர்பையும், காலை உணவையும் விலக்கியும் விரதம் அனுஷ்டிப்பவர்களாகவும் இருப்பது அவசியம்.

**ஆரம்பக் கிரியைகள்:**

குருவை அழைத்து வந்ததும், சங்கல்பம், விக்னேஸ்வர பூஜை, சகளீகரணம், சாமான்யார்க்கியம், புண்ணியாகவாசனம் என்பவற்றைச் செய்வர். (இவற்றின் விபரம் 'பூர்வாங்கக் கிரியைகள்' என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது)

**அநுஜ்ஞை:**

அநுஜ்ஞை என்பது அனுமதி பெறுதல் ஆகும். ஒரு தாம்பாளத்தில் பச்சரியைப் பரப்பி அதில் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, சந்தணம், மஞ்சள், நாணயம், புஷ்பம், பத்திரம், தர்ப்பை என்பவற்றை வைத்து அவற்றைப் புண்ணியாக தீர்த்தம் தெளித்துத் தூய்மைப்படுத்தி அவற்றுக்குப் பூஜை நிகழ்த்துவர்.

அங்கு வந்திருக்கும் பிரம்மனோத்தவர்களிடமும், விக்கினேஸ்வரப் பெருமானிடமும், மூலமூர்த்தியிடமும், அஸ்திர தேவரிடமும், உற்சவமூர்த்தியிடமும் சென்று பூஜை செய்து மகோற்சவத்தை நன்முறையில் நடத்த அனுமதியும், ஆசியும் தந்தருளுமாறு வேண்டுவர்.

**கிராமசாந்தி:**

ஆலயம் அமைந்துள்ள கிராமத்திலுள்ள தீயசகதிகள், துஷ்டதன்மைகள் முதலியவற்றால் பெருவிழாவுக்கு இடையூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படாமல் மங்கலமுண்டாகும்படி காவற்தெய்வமாகிய வைரவப் பெருமானுக்கு விஷேட பூஜை, ஓமம், பலி என்பன செய்தலே கிராமசாந்தியாகும். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகள் முதலியவற்றால் ஏற்படும் தீமைகளும் அசுரர், ராட்ஷசர், பூதர், பைசாசர் என உருவகப்படுத்தப்படுகின்றன. எவையானாலும் தீயனவற்றை ஒழிப்பதே கிராமசாந்தி.

இதனைப் புரிந்து கொள்ளாத பலர், மகோற்சவத்துக்கு முதல் நாள் பேய், பிசாசுகளை கட்டிவைப்பதாகவும், கொடியிறக்க நாளில் அவிழ்த்து விடுவதாகவும் கூறுவர். இந்தக் கிரியைகளின் போது சிறுவர்களை அருகே வரக்கூடாது எனப் பயமுறுத்துவர். சிலர் இக் கிரியைகளைத் தரிசிக்காமல் விலகிக்கொள்வதுமுண்டு.

தெய்வ காரியங்களில இப்படிப் பயப்படும்படியான கிரியைகள் எதுவுமில்லை என்பதை யாவரும் உணர்ந்து இக் கிரியைகளின் உட்பொருளை அறிய முற்பட வேண்டும். கிராமசாந்தி மூலம் கிராமத்தின் காவலை உறுதிப்படுத்தும் வைரவரிடம் வேண்டுதல் நடத்துவது போலவே மகோற்சவ இறுதியில் வைரவரை மகிழ்விக்கும் வகையில் வைரவர் மடை நடத்தப்படுவதும் கவனிக்கத்தக்கது.

ஆலயத்தின் கிழக்கு, மேற்கு அல்லது நிருதி திசையில் ஒரு தற்காலிக மண்டபம் அமைத்து வைரவருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பம் வைத்து ஒழுங்கு செய்தபின் அஸ்திர தேவரை மங்கல வாத்தியம் சகிதம் வீதி வலம் வரச்செய்து அங்கு எழுந்தருளச் செய்வர். கும்பங்களை மட்டுமின்றி யந்திரம் வரைந்து வைத்து அதிலும் வைரவர் முதலானோரை ஆவாகனம் செய்து பூஜைகள் நிகழ்த்துவர். ராட்ஷசர்களுக்கும், தசாயுதங்களுக்கும் பலி உருண்டைகள் வழங்கித் திருப்தி செய்தபின் வைரவரை அக்கினியிலும் ஆவகனம் செய்து அன்னம், வடை முதலியனவும் ஆகுதியாக இடுவர். பலிப் பொருளான நீற்றுப்பூசனிக்காய், கத்தி அவற்றையும் பூஜித்து பசுகாயத்ரியை உச்சரித்து நீற்றுக்காயை வெட்டிப் பலி கொடுத்து அதன் உடபாகத்தை ஓமம் செய்வர். பூர்ணாகுதி கொடுத்தபின் சகல தேவர்களுக்கும் பலதாம்பூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவேத்தியம் செய்து நீராஜனம் செய்தபின் சுவஸ்தானங்களுக்கு எழுந்தருளிவிப்பர். இதன் பின் வலம்வந்து கைகால்களைச் சுத்தம் செய்தபின்னர் ஆலயத்தினுள் செல்லுதல் மரபு.

**அஷ்டபலி**

கிராமசாந்தியில் பலி கொடுத்த நீற்றுக் காயை எட்டுத் துண்டுகளாக்கி அவற்றை வெளிவீதியில் எட்டுத் திசைகளிலும் நின்றவாறு கிராமவாசிகளாக இருக்கின்ற பூதங்களுக்கு பலியாக எறிந்துவிடுதல் மரபு. இங்கு இந்த நீற்றுக்காய்த் துண்டு மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. கமுகம்பூ, தென்னம்பூ, வட்டமாக வெட்டப்பட்ட நீற்றுக்காய்த் துண்டுகள், பந்தம் என்பன பயன்படுத்திப் பிரவேச பலிபோல இக்கிரியை செய்யப்படத் தேவையில்லை.

**வாஸ்து சாந்தி:**

நிலத்தில் உள்ள குற்றங்குறைகளை நீக்குவதற்காக செய்யப்படுவது வாஸ்து சாந்தி என்னுங் கிரியை.

பூமிக்கு அதிபதி பிரம்மாவை மகிழ்வித்து வழிபாடியற்றுவது வாஸ்து சாந்தியில் இடம்பெறுகிறது. வாஸ்துசாந்தி ஆலய மண்டபத்திலே செய்யப்படுகிறது.

வாஸ்து சாந்திக்குரிய வாஸ்து மண்டலம், நெல்லினை மேடையாகப் பரப்பி அதன் மேல் வாழையிலை இட்டு அதன்மேல் அரிசியைப் பரப்பி அதன் மேல் எள்ளினால் அல்லது அரிசி மாவினால் கோடுகள் வரைந்து அமைக்கப்படும். இம் மண்டலம் இரு வகையாக அமைக்கப்படும். ஆண் தெய்வங்களுக்குரியது மண்டூகபத வாஸ்து சாந்தி மண்டலம். பெண் தெய்வங்களுக்குரியது பரமசாயிபத வாஸ்துசாந்தி மண்டலம். சக்தி அம்சமான முருகனுக்கும் இதுவே உரியது.

இம் மண்டலத்துக்கு ஈசான திக்கில் காயத்திரி, சாவித்திரி ஆகிய இரு சக்திகளுடன் கூடிய பிரம்மாவிற்கும், சிவம் வர்த்தனிக்கும், மண்டலத்துக்கு கிழக்கில் புண்ணியாக வாசனத்துக்கும் கும்பங்கள் வைத்து அதன்முன் ஓமகுண்டம் அமைக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் விக்னேஸ்வர பூஜை, புண்ணியாக வாசனம், முதலிய பூர்வாங்கக் கிரியைகளைச் செய்து சிவம் வர்த்தனியையும், பிரம்மாவையும் கும்பத்தில் பூஜித்து மண்டலத்தில் வாஸ்து புருசனையும் பிற தேவதைகளையும் பூஜித்து நெற்பொரியினால் பலிதானமும் கொடுத்து முறைப்படி அக்கினி காரியமும் செய்வர்.

இங்கும் கிராமசாந்தியைப் போலவே நீற்றுக்காயொன்றைப் பலியிடுவர். அதன்பின் வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் மனித உருவாகச் செய்யப்பட்ட வாஸ்துபுருஷனைப் பூஜித்து அக்கினியில் பொருத்தி எரிமூளச்செய்த பின் அவ்வுருவத்தை ஆலய மண்டபங்கள், வீதிகள் முதலிய இடங்களில் இழுத்துவந்து ஈசான திக்கில் போட்டு விடுவர். இவ்வுருவத்தின் பின்பாக வாஸ்துகும்ப நீர் தெளித்துச் செல்வர். வெட்டிய நீற்றுப்பூசணிக்காயையும் இதனுடன் எடுத்துச் சென்று போட்டுவிடுவர். இவறறைக் கொண்டு சென்றவர்கள் நீராடிவிட்டு ஆலயத்தினுள் வருதல் வேண்டும். (கைகால்களையாவது நன்கு சுத்தம் செய்தல் அவசியம்).

**மிருத்சங்கிரகணமும் அங்குரார்ப்பணமும்:**

ஐந்தொழில் விளக்கமாகிய மஹோற்சவத்தில் படைத்தலைக் குறிப்பன இவையிரண்டும். நற்காரியங்கள் எதனையும் தொடங்கும் போது முளைப்பாலிகையிடுதலாகிய அங்குரார்ப்பணம் மிக முக்கியமாகச் செய்யப்படும். இதற்கு வேண்டிய மண்ணை மந்திரசகிதமாகப் பெறுவதே மிருத்சங்கிரகணமாகும். (மிருத் - மண்: சங்கிரகணம் - சேகரித்தல்).

ஆலயத்தின் ஈசானம், மேற்கு, வாயு அல்லது வடக்குத் திசையில் இது செய்யப்படும். அஸ்திரதேவரையும் எழுந்தருளச் செய்து மங்கல வாத்திய சகிதம் குரு இங்கு வந்து சேருவார்.

அஸ்திர தேவரையும், அதற்குமுன் (கிழக்கே) சப்த வாரிதி கும்பத்தையும் ஸ்தாபிப்பர். அதற்கு கிழக்கே நவபதம் அதற்கும்முன் அஷ்டதள பத்மம் (எட்டிதழ்க் கமலம்) அதற்கும்முன் நாற்கோணம் என்பவற்றை அரிசிமாவினால் அமைப்பர். நாற்கோணத்தில் மண்வெட்டி ஒன்று கூர்ச்சம், மாவிலை என்பன கட்டப்பட்டதாக வைக்கப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வாங்கக் கிரியைகளை நிறைவேற்றியபின் கும்பத்திலே ஏழு சமுத்திரங்களையம், நவகோஷ்டத்தில் பிரம்மாவையும் எட்டு மண்டல தேவர்களையும், பத்மத்திலே அஷ்டதிக்கு பாலகர்களையும் பூமிதேவியையும் பூஜிப்பர். மண்வெட்டியின் குற்ற நீக்கத்திற்காக தைலம், பால், தயிர், இளநீர் என்பவற்றால் அபிஷேகித்தபின் மும்முறை மண்ணை வெட்டி ஒரு தட்டிலிட்டு பட்டினால் மூடுவர். சப்தரிஷி கும்ப ஜலத்தினால்மண் எடுத்த இடத்தை அபிஷேகம் செய்து நவதானியமிட்டு சமதளமாக்குவர்.

சகல தேவர்களையும் உத்வாசனம் செய்து (தத்தம் இடத்திற்கு எழுந்தருளச் செய்து) மண் நிரப்பிய தட்டத்துடன் வீதி வலம் வந்து யாகசாலையை அடைவர்.

யாகசாலையின் வாயுதிக்கிலே (வடமேற்கு) கார்த்திகை, உரோகிணி சகிதமாக அமிர்தேஸ்வர கும்பம் வைத்து (அமிர்தேஸ்வரன்- சந்திரன்) சுற்றிவர துவாதசாத்தியர்களுக்கு (பன்னிரு சூரியர்கள்) பன்னிரண்டு சிறிய மண்சட்டிகளும் வைக்கப்பட்டிருக்கும். மிருத்சங்கிரகணத்தில் எடுத்துவந்த மண்ணினால் இவை நிரப்பப்பட்டு வில்வம், அரசு, மாவலை இவற்றால் அலங்கரிக்கப்படும்.

பூர்வாங்கக் கிரியைகளை அடுத்து சந்திரனையும், பன்னிரு சூரியர்களையும் பூஜித்தபின் தூய்மையான பாத்திரமொன்றிலே பசுப்பால் விட்டு அதில் நவதானியத்தை இட்டுப் பூஜித்து உரிய மந்திரங்களுடன் பாலிகைகளில் (மண்சட்டி) அதனை விதைப்பர். சந்திரகும்ப நீரில் சிறிது இவற்றுக்கு வார்த்து மீண்டும் கும்பத்தை நீரால் நிரப்பி ஸ்தாபிப்பர்.

இவ்வளவுடன் முதல்நாள் கிரியைகள் நிறைவுபெறும். மறுநாள் காலை ரட்ஷாபந்தனத்துடன் துவஜாரோகண விழா துவங்கும். இவ்வங்குரார்ப்பண முளையானது பசுமையாக நன்கு செழித்து வளர்ந்தால் கிராமம் சிறக்குமென்பது ஐதீகம். (அங்குரம்-முளை).

**ரட்ஷாபந்தனம்:**

ரட்ஷா என்பது காப்பு. காவலுக்காக கட்டப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக்கட்டுதல் எனவும் கூறுவார். எடுத்த கருமம் தடையின்றி நிறைவேறுவதற்கும், அக் கருமமன்றி வேறுசெயல்களில் ஈடுபடாது தடுப்பதற்கும் காப்புக் கட்டப்படும்.

சிவாச்சாரியாரும், தர்மகர்த்தாவும் ரட்ஷாபந்தனம் செய்துகொண்ட பின் உற்சவம் முடியும்வரை ஆலயச் சூலை விட்டு அப்பாற் செல்லலாகாது. இக்கால எல்லையில் அவர்களின் உறவினரால் ஏற்படும் ஆசௌசம் முதலியன அவர்களைத் தீண்டா.

காவலுக்காகக் கட்டப்படும் காப்பு, மூர்த்திகளுக்கும் கட்டப்படுவது வழக்கம். எல்லா உலகங்களையும் காக்கும் அவருக்கே காவலா என ஐயுறலாம். சகல பிரபஞ்சங்களுக்கும் இறைவனுள் அடங்கும் அவருள், அடங்கிய அனைவருக்கும் காவல் செய்யும் காரணமாகவே அத் திருவுருவங்களுக்குக் காவல் செய்யப்படுகிறது. மேலும் தன் குழந்தைகளின் நோய் தீரத் தான் மருந்துண்ணும் தாய் போல நமக்காக இறைவன் காப்புக்கட்டும் பாவனையும் இதில் தொனிக்கிறது.

'கங்கணம் கட்டுதல்' என்ற மரபுச் சொற்றொடர் இங்கு நோக்கற்பாலது. ஒரு காரியத்தை விடாது முயன்று செய்துமுடிக்கத் தீர்மானிப்பதைக் கங்கணம் கட்டுதல் என்று சொல்லுவர். கங்கணம் என்பது காப்பு. ஏடுத்த காரியத்தை நிறைவேற்றி முடிக்கும் ஆயத்தம் கொள்வது இக் கிரியையின் நோக்கமெனவும் கொள்ளலாம்.

ஒருதட்டில் அரிசி பரப்பி அதில் தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம், மாவிலை, வீபூதி என்பனவும், ரட்ஷா சூத்திரம் (காப்புக் கயிறு) எனப்படும் மஞ்சள் பூசிய நூலும் வைக்கப்பட்டிருக்கும்.

துவஜாரோகண தினத்தன்று காலையில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்கள் யாவும் நிறைவேற்றிய சிவாச்சாரியார் வழமையான நித்திய பூஜைகள் யாவும் முடித்துப் பூர்வாங்கக் கிரியைகளையும் செவ்வனே நிறைவேற்றிய பின் ரட்ஷாபந்தன பொருள்களைப் பூஜிப்பர். இதன் பின் மங்கல வாத்தியங்கள் முழங்க சிவாச்சாரியர் தனது வலக்கை மணிக்கட்டில் ரட்ஷை நூலைக் கட்டி விபூதியால் முடிச்சிலே காப்பிட்டுக் கொள்வார். இதன்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல மூர்த்திகளுக்கும் காப்புக் கட்டப்படும். இதனைப் பெரும்பாலும் ஸ்நபன கும்ப பூஜையின் பின் அபிஷேகம் செய்யும் போது செய்வதே வழக்கம்.

**ஸ்நபன கும்ப பூஜைகள்:**

துவஜாரோகணத்திற்குரிய கொடிப்படம், தம்பம், அஸ்திர தேவர், நந்தி பலிபீடம் முதலியவற்றுக்கும், மூலமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேகங்கள் செய்வதற்காக ஸ்நபன கும்பங்கள் மண்டபத்திலே வைக்கப்படும். படத்திலுள்ள அஸ்திர தேவப் பிரதிஷ்டைக்கும், நந்திக்கும், பலிபீடத்துக்கும் கும்பங்கள் வைக்கப்படும். இவற்றைவிட சாந்திகும்பம், யாகேஸ்வரன், யாகேஸ்வரி (சிவம் வர்த்தனி) கும்பங்கள் என்பனவும், ஓமகுண்டமும் தயாராக அமைக்கப்பட்டிருக்கும். மண்டபத்தில் ஒரு புறத்தில் கொடிப்படம் கட்டபபட்டிருக்கும்.

கும்பங்கள் யாவற்றுக்கும் பூஜைகள் செய்து அக்கினி காரியம் செய்வர். கொடிப்படத்திற்கு புண்ணியாகநீர் தெளித்து பிம்பசுத்தி செய்தபின் அதிலுள்ள நந்திக்கு நயோன்மீலனம்(கண் திறத்தல்) செய்யப்படும். ரட்ஷாபந்தனமும் கொடிப்படத்திற்குச் செய்யப்படும்.

**பூர்வசந்தானமும் பச்சிமசந்தானமும்:**

படத்திலுள்ள நந்தி, அஸ்திரதேவர் இரண்டையும் பிரதிஷ்டை செய்தற்பொருட்டு (அதாவது அங்கு தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்திவதற்காக) இரண்டு வகைக் கிரியைகள் செய்யப்படுகின்றன.

முதலில் பசுபோதத்தை நீக்குவதற்காகச் செய்யப்படுவது பூர்வ சந்தானம். இதன்பின் அக்கினியிலும், கும்பத்திலும் பூஜித்த தெய்வ சாந்நித்தியத்தைப் படத்திலே ஒடுக்குவது பச்சிம சந்தானம்.

அக்கினி கும்பத்திலிருந்து கும்பம், படம், மூர்த்தியின் திருவுருவம் என்பவற்றை இணைக்கும் வகையில் இடப்படும் நூல் நாடீசந்தானம் எனப்படும். இந்நூலின் வழியாக தெய்வ சாந்நித்தியத்தை அக்கினியிலுருந்து படத்திற்கு எழுந்தருளச் செய்வது மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவத்தை மூன்று பாகங்களாகப் பிரித்து பிரம்ம பாகம், விஷ்ணு பாகம், ருத்திரபாகம் (முறையே கீழே, மத்தியிலே, மேலே) என்று பாவித்து மும்முறை ஸ்பர்சாகுதி செய்வர். ஆத்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவ தத்துவம் என்னும் தத்துவங்களையும் அவற்றின் அதிபதிகளையும், பிருதுவி முதலிய அஷ்ட மூர்த்திகளையும், அவற்றின் அதிபதிகளையும் இங்கு பூஜிப்பர். இவவிதம் பிரதிஷ்டைகள் நிறைவேறியதும் அக்கினியில் பூர்ணாகுதி கொடுத்து ரட்ஷை எடுத்து (கரிப்பொட்டு) கும்பங்கள், படம் யாவற்றுக்கும் இடப்படும்.

**அபிஷேக ஆராதனைகள்:**

அதன்பின் கும்பங்களை வீதிவலமாகக் கொண்டுவந்து அபிஷேகம், அலங்காரம் என்பன நிறைறேற்றித் தீபாராதனைகள், பூஜைகள் நடைபெறும். உற்சவ மூர்த்திக்கு விஷேட பூஜைகள் நடத்தி எழுந்தருளுவித்துத் தம்பத்திற்குத் தெற்கே வடக்கு முகமாக இருக்கச் செய்வர்.

**பேரீதாடனம்:**

நாததத்துவமே பிரபஞ்ச சிருஷ்டிக்கு மூலகரணம். நடராஜமூர்த்தியின் வலக்கரமொன்றில் இருக்கும் உடுக்கிலிருந்து பிறக்கும் ஓசையே ஒலிகள், மொழிகள், இசைகள் என்பவற்றிற்கும் சகல சிருஷ்டிக்கும் ஆதாரமாக இருக்கின்றது. சரஸ்வதி வீணை வாசிப்பதும், கண்ணன் வேய்ங்குழல் ஊதுவதும், நாரதர் தம்புரா இசைப்பதும், நடராஜ தாண்டவத்தின் போது மகாவிஷ்ணு தாளம் கொட்டுவதும், நந்தி மத்தளம் வாசிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கன.

இங்ஙனம், படைத்தல் தொழிலைக் குறிக்கும் கொடியேற்ற விழா ஆரம்பத்தில் நாததத்துவத்தை பேரீ எனப்படும் மேளத்தில் பூஜித்து மந்திர சகிதமாக குரு, மேளத்தில் ஒலியெழுப்பி சகல தேவர்களையும் அங்கு எழுந்தருளும்படி வேண்டுதலே பேரீதாடனமாகும்.

மண்டபத்திலே அரிசிமாவினால் கோலமிட்டு நெல் மேடை பரப்பி இருமண்டலங்கள் அமைத்து முதலாவதில் அஸ்திர தேவரையும், இரண்டாவதில் மேளவாத்தியத்தையும் வைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வாங்கக் கிரியைகளின் பின்னர் அஸ்திர தேவரைப் பூஜித்து, மேளத்திலே நாத தத்துவத்தை ஆவாகனம் செய்து பூஜை செய்வர்.

மேளம் அடிக்கும் கம்பினை சிவசக்தி ரூபமாகப் பாவனை செய்து சிவாச்சாரியார் அதனை எடுத்து வேதமந்திரங்களைக் கூறி முறையே ஒருமுறை, இருமுறை, மும்முறை என்ற வகையில் மேளத்தை அடித்துப் பின்னர் "இன்ன தெய்வத்திற்கான மகோற்சவ விழாவை நடத்துவதற்காக சகல தேவர்களையும் இங்கு அழைக்கின்றேன். சகல மங்கள வாத்தியங்களையும் இப்போது ஆரம்பித்து வைக்கின்றேன்" என்று பிரார்த்திப்பார்.

பேரீதாடனம் என்னும் இக்கிரியை சில இடங்களில் கும்ப பூஜை ஆரம்பமாகும் போதே செய்யப்பட்டுவிடுவதுண்டு.

**துவஜஸ்தம்ப ஆவாகனம்:**

அஸ்திர தேவருக்கு அபிஷேகம் செய்து ஆவாகனம் செய்தபின், கொடிக்கம்பத்தினைச் சாந்திகும்ப நீரால் புரோக்ஷித்து ஆத்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவ தத்துவம் என்பவற்றையும் நான்கு வேதங்களையும் தம்பத்தில் பூஜித்து ரட்ஷாபந்தனம் செய்து சாந்தி கும்பத்தினால் அபிஷேகம் செய்யப்படும். ஆலய மூலமூர்த்தியைத் தம்பத்திலே ஆவாகனம் செய்து எழுந்தருளுவித்து ஏற்கனவே ஸ்தாபித்து வைத்த ஸ்நபன கும்பங்களால் அபிஷேகம் செய்வர்.

இதன்பின் கொடிப்படத்தை வீதிவலமாகக் கொண்டுவந்து கொடியிலிணைக்கப்பட்டுள்ள மஞ்சட்கயிற்றைத் தம்பத்தின் நுனியிலிணைத்துப் படம் தெரியும் படியாகக் கட்டி வைத்துப் படத்திலுள்ள நந்தி, அஸ்திரதேவர் ஆகியவற்றுக்கென ஸ்தாபித்த கும்பங்களினால் புரோஷித்து, அபிஷேகம் செய்யும் பாவனையில் கண்ணாடியைப் படத்திற்கு முன் பிடித்து அதில் அபிஷேகம் செய்வர். தம்பத்திலும், அதைச் சுற்றிலும் சகல தேவர்களையும் பூஜிப்பர்.

**சமஸ்த தேவதாவாஹனம்:**

சகல விதமான தேவர்களையும் பெயர் சொல்லி அழைத்து மகோற்சவ காலத்தில் தத்தம் பரிவாரங்கள் சூழ எழுந்தருளுமாறு அழைப்பதே சமஸ்ததேவதா ஆவாகனம். எல்லா வாத்தியங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்திவிட்டு சாதகாசாரியர் இசையோடு இதை வாசிக்கும் போது கேட்க இனிமையாக இருக்கும்.

**துவஜாரோகணம் (கொடியேற்றம்):**

சிவாச்சாரியார் சங்கல்பபம் செய்து நவக்கிரகங்களை மகிழ்வக்கும் வகையில் தானம் வழங்கி, நடைபெறவுள்ள காரியம் தடையின்றி நிகழும் பொருட்டு யாத்ரா தானம் வழங்கி, மூலவருக்கு பஞ்சாராத்திரிகம் காட்டி வணங்கி விநாயகரை நினைத்து தேங்காய் உடைத்துவிட்டு ஏகாக்ர சித்தமாக (ஒரே சிந்தனையுடன்) தம்ப நுனியை கொடிப்படம் சேரும்படி கொடியை ஏற்றுவார். சிவாசாரியார் கொடிச்சீலையைப் பற்றி அது ஒழுங்காக மேலேற வகைசெய்ய, உதவியாளர் கொடிக் கயிற்றைப் பற்றி மெல்ல இழுத்தேற்றுவது மரபு.

கொடிச்சீலையுள் மஞ்சட் கயிறு மறையும்படி வைத்து அதனைப் பலமாக முறுக்கி, தர்ப்பைக் கயிற்றையும் அதனுடன் சேர்த்துத் தம்பத்தில் வலமாக மூன்றுமுறையாவது, ஐந்து முறையாவது சுற்றப்படும். இறுதியில் மூலமூர்த்தியை நோக்கியிருக்குமாறு மேற்குப் பக்கத்தில் பிரம்மக்கிரந்தி முடிச்சு இட்டு பட்டுக்கள், மாவிலை, கூர்ச்சம் என்பவற்றையும் வைத்து அலங்கரிப்பர்.

**துவஜஸ்தம்ப பூஜை:**

இதன் பின் தைலக்காப்பு முதல் பன்னீர் ஈறாக சகல விதமான அபிஷேகங்கள் செய்து அலங்கரித்து திக்பாலகர் முதலானோருக்குத் தேங்காய்ப் பிரமாணத்தில் அன்ன உருண்டையைப் பலியாக வழங்கி நைவேத்திய தூப தீபாராதனைகள் நடத்துவர். அதன் முடிவில் அழகிய சுலோகங்கள் அமைந்த "பணிமாலா" முதலிய தோத்திரங்களைச் சொல்வர்.

துவஜஸ்தம்ப பூஜையின் போது முதலில் சாந்தி கும்பத்தை மட்டும் அபிஷேகித்து தைலம் முதலிய சகல அபிஷேகமும் செய்த பின் இறுதியில் தம்ப பிரதிஸ்டைக்கான ஸ்நபனத்தை அபிஷேகித்தல் சில இடங்களிலும், முதலில் ஸ்நபனாபிஷேகம் முடித்து அதன்பின் சகல விதமான திரவியாபிஷேகம் முடித்து, இறுதியில் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பத்தை அபிஷேகித்தல் சில இடங்களிலும் வழக்கமாக இருக்கின்றது.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஆலயத்தின் மரபுமுறைகளும், சிவாச்சாரியாரின் மரபு முறைகளும் தொடர்ந்து பின்பற்றப்படுவது அவசியம். இடம், பொருள், ஏவல் கருதியும் மரபு வழிமுறைகளை காப்பதற்காகவும் கிரியாமுறைகளில் இடத்துக்கிடம் சிறுசிறு வேறுபாடுகள் சில காணப்படுவது இயல்பு. அடியார்கள் இவற்றை ஒப்பிட்டு நோக்கி "அங்கு அப்படிச் செய்கிர்ர்கள், இங்கு இப்படிச் செய்கிறார்களே" என்று அங்கலாய்ப்பது தவறு. இத்தகைய சிறுசிறு வேறுபாடுகள் மந்திரஹீனம், கிரியாஹீனம், பக்திஹீனம் என்று சொல்லப்படும் அளவுக்குத் தவறாக இல்லாமல், விதிமுறைக ளிலிருந்து வழுவாமல் அமையுமெனில் சரியே.

ஆகமங்கள், பத்ததிகள் என்பன சில சந்தர்ப்பங்களில் தமக்குள் முரண்படுவது போல் காணப்படுவதைக் கவனிக்கலாம். இவற்றை அனுபவம் வாய்ந்த சிவாச்சாரியர்கள் தமது அறிவு, அனுபவம், யுக்தி இவற்றால் தெளிந்தே கைக்கொள்வர்.

பத்ததிகளில் கிரியா முறைகளைக் கூறுமிடத்தில் பெரும்பாலும் ".....இப்படிச் செய்க, அல்லது குருமுகமாக உபதேசம்பெற்ற முறைப்படி செய்க" என்று குறிப்பிடப்படுவதை அவதானிக்கலாம்.

கிரியைகளில் தவறு நேருமிடத்தில் சுட்டிக் காட்டும் அதிகாரம் பக்தர்களுக்கு உண்டு என்றாலும், அவற்றை நன்கு ஆராய்ந்து அதில் என்ன தவறு உண்டு என்பதை உணரக்கூடிய அறிவாற்ற லுடையவராகத் தாம் இருக்க முயற்சிப்பது முதலில் அவர்களது கடமை.

தவறு நேருமிடத்து அவதானித்து அதனைப் பின்னர் சிவாச்சாரியரிடம் தனியே எடுத்துக் கூறுவதும், ஆலய மரபுகளைப் பணிவோடு எடுத்துரைத்தலும் முறையாகும். சிவாச்சாரியாகளும் புதிதாக வேறிடங்களுக்குச் செல்லும் போது அந்த இடத்து நடைமுறைகளை வழக்கங்களை முதலிலே விசாரித்து அவற்றை ஆராய்ந்து கொள்ளத்தக்கவற்றைக் கொள்ளுதல் விரும்பத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணபதி தாளம்:**

மூர்த்திகளின் சிறப்பியல்புகளை தாள லயத்தோடு அழகிய வாக்கியங்களில் அமைத்துச் சொல்வது தாளம் எனப்படும். ஒவ்வொரு மூர்த்திக்கும் இத்தகைய தாளங்களும், அவரவர்களுக்கு விருப்பமான வேதப்பகுதி, தேவாரப்பண், தாளம், வாத்தியம், நிருத்தம், ராகம் என்பனவும் கூறப்பட்டுள்ளன. அவற்றை உரிய இடங்களில் பயன்படுத்துவர்.

துவஜஸ்தம்ப பூஜையும் தோத்திரமும் முடிந்ததும் கணபதி தாளம் முதலில் சொல்லப்படும். அவருக்குரிய வேதம், பண், ராகம் முதலியன இசைக்கப்பட்டதும் மூலமூர்த்தியின் வாகனத்துக்குரிய தாளம் (விருஷப தாளம், மூஷிக தாளம், சிம்மதாளம், மயூரதாளம் முதலியன) இசைக்கப்படும். இதன்பின் அஸ்திர தேவரும், சுற்றுப்பலி போடப்படும் பலிபீடமும் பூஜிக்கப்படும்.

**வேதகோஷம்:**

சைவசமயத்தின் மூலவித்தாக உள்ள நால் வேதத்தின் சிலபகுதிகளை வேதாத்தியயனம் பயின்ற பிராமணோத்தமர்கள் முறைப்படி ஓதுவர்.

**மகாசீர்வாதம்:**

பெரிய வாழ்த்துரை விண்ணப்பம் (மகா ஆசீர்வாதம்) என்பது இது. ஆலயத்திற்கும், கிராமத்திற்கும், நாட்டிற்கும், ஆலய பரிபாலகர்களுக்கும், எசமானர்களுக்கும், பக்தஜனங்களுக்கும், சகல ஜீவராசிகளுக்கும் சர்வமங்களமுண்டாகி சகல செல்வ போகங்களும் நிறைந்து, அமைதியான இன்ப வாழ்வு கிட்ட வேண்டுமென்றும், இறுதியில் முத்தியின்பம் பெற வேண்டுமென்றும், வாழ்த்தி விண்ணப்பிப்பதே ஆசீர்வாதமாகும்.

ஒவ்வொரு ஆசீர்வாத வாக்கியங்களையும் சிவாசாரியர் கூற ஏனைய பிராம்மணோத்தமர்கள் ததாஸ்து (அப்படியே ஆகட்டும்) என்று தமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைக் கூறுவர்.

இவற்றுட்சில குறுகிய வாக்கியங்களாகவும் சில மிக நீண்ட வாக்கியங்களாகவும் அழகிய அடுக்குத் தொடர்களுடன் அமைந்து கேட்பதற்கு இனிமையாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்தியாஹனம்:**

மூலமூர்த்திக்கு நேரெதிராகக் கோபுர வாசலுக்கு அண்மையில் பிரம்மசந்தி எனப்படும் ஸ்தானமும் கிழக்கு முதல் ஈசானம் வரையிலான எட்டுத் திசையிலமைந்த ஸ்தானங்களும் நவசந்திகள் எனப்படும் இவ்விடங்களில் அந்தந்த சந்திக்குரிய தேவர்களை மகிழ்வித்து அவர்களுக்குரிய வேதம், பண், ராகம், தேவாரம் என்பவற்றை இசைத்து மஹோற்சவகாலத்தில் அங்கு சாந்நித்தியமாகி நின்று மூலமூர்த்திக்குச் சேவையாற்றித் திருவிழாக் காலப் பந்தோபஸ்துக்கு அநுசரணையாக இருந்து காவல்புரியும்படி வேண்டுதல் சந்தியாவாஹனத்தில் நடைபெறும்.

பத்யம், கத்யம், சூர்ணிகை என்று பலவிதமான செய்யுள் வசனநடைகளில் அழகிய சொற்றொடர்களாலமைந்த துதிகள் இங்கு பயன்படுத்தப்படும்.

ஆலய வெளிவீதியிலேயே இது நிகழவேண்டும். வெளிவீதி வாகனம் போக்குவரவுள்ள பகிரங்க வீதியிருக்குமிடங்களில் உள்வீதியிலும் நிகழ்வதுண்டு. அஸ்திர தேவரும் இதற்கென அமைந்த ஒரு பலிபீடத் தட்டும் தாங்கிவரப்பட்டு வீதியில் ஒவ்வொரு சந்தியிலும் (பிரம்மசந்தியிலும் எட்டுத் திக்கிலுமாக ஒன்பது இடங்கள்) அன்ன உருண்டைகளைப் பலியிடுவதுடன் இக்கிரியை நடைபெறும்.

தமிழ்வேதம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் தேவார திருமுறைகளுக்கு எமது ஆலய வழிபாட்டுக் கிரியைகளில் முக்கிய இடம் கொடுக்கப்படுவது அவசியம். நவசந்திகளிலும் அந்தந்தத் தேவர்களுக்குரிய பண்முறை அமைந்த திருமுறைகளைப் பாடவேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவது அத்துணை சிரமமானதன்று. ஆனால் பெரும்பாலான கோவில்களில் உரிய பண்களுக்கு அமைந்த தேவாரங்களைப் பாடாமல் நினைவில் வந்த ஏதோவொரு தேவராத்தைப் பாடுவதைக் காணும்போது மனவருத்தமாக உள்ளது. சிலவிடங்களில் பண்ணைப் புலப்படுத்தும் ஆற்றலின்றி அப்பண்ணாற் பெயரிட்ட பதிகத்தில் ஒரு பாடலைச் சும்மா படித்தலும் கவலைக்குரியதே.

பத்ததியைக் கவனித்து உரிய தேவாரப் பாடல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கூட்டியே தயார் செய்து வைத்திருந்து முறைப்படி பாடுவதற்கான ஏற்பாடுகளைச் சிவாசாரியார்களும் தர்மகர்த்தாக்களும் செய்ய வேண்டும். அதேபோல குறிப்பிட்ட ராகத்தில் பெயரைச் சொல்ல அதனை நாதஸ்வர வித்துவான் வாசிப்பதும் இங்கு இடம்பெறுகிறது. ஒரு சில நிமிடங்களுக்காவது ராகத்தை வாசிக்கவைத்து அந்த ராகதேவதையின் சாந்நித்தியத்தை அங்கு நிகழச்செய்வது நன்றாகும்.

**கட்டியம்:**

சுவாமி வீதிவலம் வர ஆரம்பிக்கும் போது சொல்லப்படும் வரவேற்பு இது. அரசர் கொலுமண்டபத்துள் பிரவேசிக்கும்போது கட்டியக்காரன் பராக் சொல்லி அறிவிப்பது போன்றதே இதுவும். இதற்கெனக் கட்டியப் பொல்லு ஒன்று செய்யப்பெற்று அதனை ஒருவர் சுவாமிக்கு முன் தாங்கிவருதல் சில இடங்களில் உண்டு. சுவாமி வீதிவலம் வருவதற்காகப் புறப்படுகிறார் என்றும் அதற்காக இன்ன இன்ன தேவர்கள் சமூகமளிக்கிறார்கள் என்றும் தனித்தனியே அறிவிக்கப்படும்.

விநாயகர் முதல் சண்டேஸ்வரர் ஈறாக எல்லாத் தெய்வங்களையும் கூறி அவர்களின் சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டுக் கோபுர வாசலில் வைத்துச் சொல்லுதல் கட்டியத்தில் இடம்பெறும். வீதிவலம் முடிந்து திரும்பும்போதும் அதே வாக்கியங்கள் சொல்லப்பட்டு இன்னார் வீதியுலா முடிந்து மீண்டும் சொந்த இடம் திரும்புகிறார் என்றும் அறிவிக்கப்படும்.

**யாகபூஜை:**

ஆலயத்தின் ஈசான திக்கிலே மேற்கு வாசலாக யபகமண்டபம் அமைந்திருக்கும். துவாஜரோகணத்தன்று இரவு இங்கு யாகபூஜை ஆரம்பமாகும். தீர்த்தத் திருநாளன்று பகல் யாகபூஜை நிறைவுபெறும். பத்து நாட்களிலுமாக பதினெட்டுக்கால பூஜைகள் இங்கு நிகழும்.

துவாஜரோகணத்துக்கு முதல்நாளிரவே இங்கு வாயு மூலையில் சந்திரகும்பம் ஸ்தாபித்து அங்குரார்ப்பணம் நிகழ்த்தப் பட்டிருக்கும். யாக மண்டபத்தின் மத்தியிலே அமைந்த வேதிகையில் (மேடை) மூல மூர்த்திக்குரிய ஸ்நபன கும்பங்கள் வைக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும். வேதிகையில் மேற்குப்புறத்தில் ஓமகுண்டம் இருக்கும். நான்கு திக்குகளிலும் வாசல்கள் விட்டுப் பரிவார கும்பங்கள், யாகேஸ்வரன், யாகேஸ்வரி கும்பங்கள், புண்ணியாஹகும்பம் முதலியன அமைந்திருக்கும்.

யாகமண்டப அமைப்பானது எல்லா ஆலயங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும். ஆயினும் பரிவார கும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜிக்கப்படும் தேவர்கள் மூலமூர்த்திக்கு ஏற்ப மாறுபடும். பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம், சங்காபிஷேகம் என்பவற்றுக்கு அமைக்கப்படும் யாக மண்டபத்திற்கும் மஹோற்சவ யாக மண்டபத்திற்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. ஆனால் மஹோற்சவ யாகம் ஒரே ஒரு குண்டத்துடன் மேற்கு நோக்கியமாக அமையும். ஏனையவை கிழக்கு நோக்கியதாக ஒரு குண்டத்திலிருந்து முப்பத்து மூன்று குண்டம் வரை வசதிக்கு ஏற்ப அமையும்.

துவாஜரோகண தினத்தில் மூல மூர்த்திக்கும் பரிவாரங் களுக்கும் சாயங்கால பூஜை நிறைவேறியதும் யாக மண்டபத்திலே புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்கக் கிரியைகளை நிறைவேற்றியபின் சிவாசாரியார் முறைப்படி யாகபூஜையைச் செய்வார். இதன் பின் தம்பத்திற்கு விசேஷ அபிஷேகம் பூஜை என்பன நிகழ்த்தி வசந்த மண்டபத்திலே அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருக்கும் உற்சவ மூர்த்திக்கு விசேஷ தீபாராதனை பூஜைகளை நிகழ்த்தி வந்ததும் யாக அக்கினியை நன்கு சுவாலிக்கச் செய்து பூர்ணாகுதி கொடுத்து ரக்ஷையிட்டுத் தீபாராதனை, வேதபாராயணம், தேவார பாராயணம் என்பன நிகழ்த்துவர். பின்னர் சுவாமி வீதிவலம் வருவார்.

**பாதசேவையும், பாத தீர்த்தமும்:**

வீதிவலம் வந்து கோபுர வாசலுக்கு வந்ததும் மங்கள வாத்தியங்களை வாசிப்போர் வலம்செய்து வணங்குவர். இந்தப் பாதசேவை முடிந்ததும் பாததீர்த்தம் வழங்கி (கால் கழுவும் நீர்) நீராஜனம் காட்டப்படும். இறுதியில் வைரவர், சண்டேஸ்வரர் பூஜைகளும் வீபூதி பிரசாதம் வழங்கலும் நடைபெறும்.

இரண்டாம் நாள் முதல் மஹோற்சவம் நிறைவுறும் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான கிரியைகள் இதேபோல் நடைபெறுமெனினும் பல கிரியைகள் வசதி கருதிச் சுருக்கமாக நடத்தப்பெறும். வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா போன்ற நாட்களில் சில விஷேச கிரியைகள் இடம்பெறும்.

மஹோற்சவம் முப்பொருள் தத்துவத்தை விளக்குகின்ற வகையை முன்பு பார்த்தோம். ஐந்தொழில் விளக்கமாக இது அமையும் விதத்தை இப்போது பார்ப்போம்.

வாஸ்த்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், பேரீதாடனம், ரஷாபந்தனம், துவஜாரோகணம், திருக்கல்யாணம் என்பன படைத்தலைக் குறிக்கும். வாகனோற்சவம், பலிதானம் என்பன காத்தலைக் குறிக்கும். வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா என்பன அழித்தலைக் குறிக்கும். சூர்ணோற்சவம், அங்குர விசர்ஜனம், துவஜ அவரோகணம், மௌனோற்சவம், ரஷாபந்தன விசர்ஜனம் என்பன மறைத்தலைக் குறிக்கும். தீர்த்த உற்சவம், சண்டேஸ்வர உற்சவம், ஆசார்ய உற்சவம் என்பன அருளலைக் குறிக்கும்.

**சாந்தி கர்மம்:**

தினமும் உற்சவம் முடிந்ததும் வீதி உலா சென்று வந்த உற்சவ மூர்த்தியின் மூர்த்திகரம் (தெய்வ சாந்நித்தியம்) குறையாமலிருத்தற் பொருட்டு சாந்தி கர்மமானது செய்யப்படுகிறது. பல்வேறுபட்ட மக்களால் பார்க்கப்பட்டும் தவறுதலாகச் சில வேளைகளில் தீண்டப்பட்டும் ஏற்பட்ட தோஷங்களை நீக்குவதற்காக உற்சவ மூர்த்தியின் அலங்காரங்களை நீக்கி அபிஷேக ஆராதனைகள் செய்தல் அவசியம்.

நடைமுறையில் பெரும்பாலான ஆலயங்களில் இது நடைபெறுவதில்லை. இருந்தாலும் அலங்காரங்கள் முதலியவற்றை யாவது அகற்றிவிடுதல் நன்று.

**வேட்டைத் திருவிழா:**

எட்டாம்நாள் மாலை நடைபெறும் இவ்விழாவை மிருக யாத்திரை எனவும் கூறுவர். துஷ்ட மிருகங்களைக் கொன்றொழித்து, மக்களைக் காத்தற்காக மன்னர்கள் வேட்டையாடுதலைக் கைக் கொண்டிருந்தனர். இதேபோல எம்மைத் துன்புறுத்தும் அறுபகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மலங்கள் முதலிய விலங்குகள் நோய்கள் இவற்றை வேட்டையாடி அழிப்பதற்காக இறைவன் வேட்டைத் திருவிழாவை மேற்கொள்வதாக ஐதீகம்.

ஆயுதங்களுடன் மூர்த்தியை அலங்கரித்து எழுந்தருளச் செய்து பூந்தோட்டத்திலோ அல்லது இதற்கெனத் தயார் செய்த வேட்டைக்கான இடத்திலோ மிருகங்களின் உருவங்களை வைத்து அங்கு அஸ்திர தேவரைப் பூஜித்து நீற்றுப் பூசினிக்காய் பலியிடுவது வழக்கம். வேட்டையிலிருந்து திரும்பியதும் பிரயாச்சித்த அபிஷேகம் செய்யப்படும்.

**தேர்த்திருவிழா:**

சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட தேரானது அழித்தலைக் குறிப்பது. தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. அங்கு இறைவன் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது. வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடுவதற்கு நமது இருதய பீடத்திலே இறைவனை எப்போதும் எழுந்தருள வைத்திருக்க வேண்டும். தேர் சரியான பாதையிலே ஓடுவதிற்கிசைவாகச் சறுக்குக் கட்டைகள் போட்டு அதனைக் கட்டுப்படுத்துவது போல நமது வாழ்க்கையையும் நல்வழிகளில் நெறிப்படுத்த வேண்டும். மேலே கோபுரம் போல் குவிந்து செல்லும் தேர்க்கலச முடிவில் குடைநிழல் தெரிகிறது. மனம் குவிந்து மேலான சிந்தனையுடன் இறைவனைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழல் நம்மைத் துயர வெளியிலிருந்து பாதுகாக்கும்.

தேர்க்காலிலே தேங்காயைச் சிதற அடித்து நமது துன்ப துயரங்களைச் சிதற வைப்பதையும் வலிய தேங்காய் ஓடு பிரிந்து வெண்ணிற உட்பாகம் வெளிப்படச் செய்து மல நீக்கத்தை உருவகப் படுத்துவதையும் இந்தத் தேர்த் திருவிழாவில் காணலாம்.

இவ்வாறு அநேக தத்துவங்களை விளக்கும் தேர்த் திருவிழா ஒன்பதாம் நாள் பகல் நடைபெறும். வழமையான கிரியைகள் நடைபெற்று உள்வீதி வலம் வந்து வெளியே கொண்டு வந்து சுவாமியை தேரிலே வீற்றிருக்கச் செய்வர். முன்னதாகத் தேர்த்தட்டு புண்ணியாகவாசனம் செய்து சுத்தம் செய்யப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரில் சுவாமி இருக்கையில் யாத்ராதானம் முதலியவற்றை வழங்கி விநாயகரைப் பிரார்த்தித்துத் தேங்காய் உடைத்ததும் தேர் புறப்படும்.

தேர் சுற்றி வந்ததும் சுவாமிக்குப் பச்சை சாத்தும் வழக்கம் எங்கும் உண்டு. உக்கிரமூர்த்தியாக அழித்தல் தொழில் முடிந்து வரும் இறைவனைக் குளிர்விக்கும் பாவனையே இது. சுவாமிக்குப் பச்சை சாத்துவது மட்டுமன்றி சிவாசாரியார்களும் உதவியாளர் களுங்கூட அவ்வேளையில் பச்சைவேட்டி சால்வைகளுடன் காணப்படுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

**சூர்ணோற்சவமும், தீர்த்தத் திருவிழாவும்:**

மறைத்தலாகிய தொழிலைக் குறிப்பது சூர்ணோற்சவம். ஆன்மாக்களை ஆணவாதி மலங்களில் அழுந்தச் செய்து அநுபவ வாயிலாக இறையுணர்வு பெறச் செய்வதே ஆண்டவனின் அருள் நோக்கம்.

நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல என்ற ஆன்றோர் வாக்கு நோக்கற்பாலது. துன்பத்தின் பின்னர்தான் இன்பத்தை நன்கு அநுபவிக்கலாம். உடலைப் பற்றியுள்ள அழுக்குகளோடு மன அழுக்குகளான காமக் குரோதம் முதலியவற்றையும் நீக்குவதற்கு அடையாளமாகத் திருப்பொற் சுண்ணம் இடித்து இறைவனுக்குச் சாத்தப்படுகின்றது. இறைவனை முழுக்காட்டி நாமும் தீர்த்தமாடுகின்றோம்.

சூர்ணம் என்பது தூள். பொன்னிறமான பொடி என்பது பொற்சூர்ணம் எனக் கூறப்பட்டுப் பின்னர் பொற்சுண்ணம் என மருவியது. மஞ்சட்பொடி முதலியவற்றைத் தயார் செய்து வைத்திருந்து சவர்க்காரம் பூசிக் குளிப்பது போல முற்காலத்தில் பயன்படுத்தி வந்தார்கள். அதனையே இங்கு திருப்பொற் சுண்ணத்திற்குப் பயன்படுத்துகிறோம். தீர்த்தத் திருவிழா அருளலைக் குறிக்கும்.

ஆன்மாக்களின் நன்மைக்காக ஆண்டவனுக்கு இவற்றைச் செய்வதன் தத்துவார்த்த உண்மைகள் முன்னர் காப்புக் கட்டுதல் முதலிய விஷயங்களில் விளக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாகதரிசனம், மஹாபிஷேகம்:**

திருப்பொற்சுண்ணமிடித்துத் தீர்த்தமாடியபின் சுவாமியை யாக வாசலில் கொண்டு வந்து யாகதரிசனம் செய்வித்துப் பூர்ணாகுதி வழங்குவர். ரக்ஷை தயாரித்து மூர்த்திகளுக்குச் சாத்துவர். உற்சவமூர்த்தியை உரிய இடத்தில் எழுந்தருளச் செய்தபின் யாக கும்பங்களை உத்தாபனம் செய்து பிரதான கும்பங்களை எடுத்து வந்து மூல மூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். அங்குர விசர்ஜனம் செய்து முளைப்பாலிகைகளைச் சகல மூர்த்திகளுக்கும் சாத்தி நீராஜனம் செய்வதையடுத்து வழமையான வைரவர் பூஜை, சண்டேஸ்வரரர் பூஜைகளுடன் தீர்த்தோற்சவம் நிறைவு பெறும்.

பக்தர்களுக்கு விபூதிப் பிரசாதங்களுடன் ரக்ஷையும், முளைப்பாலிகைளுடன் வழங்கப்படும். அடியார்கள் அவற்றையும் பக்தியோடு தரிப்பார்கள்.

**கொடியிறக்கம்:**

பத்தாம்நாள் சாயங்காலப் பூஜைகள் முடிந்து உற்சவ மூர்த்திக்கு விசேஷ பூஜைகள் நிகழ்ந்தபின் சுவாமியை எழுந்தருளச் செய்து ஸ்தம்ப மண்டபத்திற்குக் கொண்டு வருவர். வசந்த மண்டப விசேஷ பூசையின் போது திருவூஞ்சல் நடத்தும் வழக்கமும் உண்டு.

ஊஞ்சல் மகிழ்ச்சியின் சின்னம். அதேநேரத்தில் மேலும் கீழும் அசைந்து ஏற்றமும் தாழ்வும் மிக்க வாழ்க்கையில் சமநிலை பேணவேண்டும் எனும் தத்துவத்தைக் காட்டுவதாகவும் உள்ளது. அதனால் இறைவனை ஊஞ்சலாட்டி மகிழ்கின்றனர் அடியார்கள்.

கணபதி தாளம் முதலியவற்றை துவஜாரோகணத்தின் போது செய்தது போற் செய்து சமஸ்த தேவதா விசர்ஜனம் செய்வர். (கொடியேற்ற நாளில் சமஸ்தேவதா ஆவாகனம் செய்து சகல தேவர்களையும் அழைப்பது போல கொடியிறக்கும் போது அவர்கள் சுவஸ்தானங்களுக்கு எழுந்தருளச் செய்வதே விசர்ஜனமாகும்)

கொடிக் கயிற்றை அவிழ்த்துக் கொடியைச் சகல வாத்திய கோஷங்களுடன் இறக்கிக் கொடித்தம்ப கூர்ச்சத்தை மூலமூர்த்தி யிடமும் கொடிப்படத்தை நந்தியிடமும் சமர்ப்பித்து நீராஜனம் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் உற்சவ மூர்த்தியை வீதிவலம் வரச் செய்வர். கொடியிறக்க நாளில் முதலில் வெளிவீதி வலம் வந்த பின்னரே உள்வீதி வலம்வருதல் முறை. வெளிவீதி வலம்வரும் போது நவசந்திகளிலும் முதலாம் நாள் ஆவாகனம் செய்த தேவர்களை மகிழ்வித்த பின் உத்வாகனம் செய்வர்.

இதன்பின் உள்வீதியில் வலம்வரும்போது கிழக்குக் கோபுர வாசலிலிருந்து தென்கிழக்கு வரை மங்கல வாத்தியமும் அங்கிருந்து தெற்கு வாசல்வரை வேதபாராயணமும், தென்மேற்குவரை திருமுறை பாராயணமும் மேற்குத்திசைவரை சங்கநாதமும் வடமேற்குவரை தாள வாத்தியமும் (தவில்), வடக்குவரை கீத இசையும் (நாதஸ்வரம்) இசைத்து, வடகிழக்கு வரை மௌனமாகவும் அங்கிருந்து வாயில்வரை சகல வாத்திய கோஷங்களுடனும் வந்து இருப்பிடம் சேர்ப்பர்.

**சண்டேஸ்வர உற்சவம்:**

இதன்பின் பைரவர், சண்டேஸ்வரர் பூஜைகள் முடித்து சண்டேஸ்வர உற்சவமூர்த்தியை வீதிவலம் வரச் செய்வர். சண்டேஸ்வரமூர்த்தி சிறிய விக்கிரமாக அமைந்திருப்பதால் சிறுவர்கள் அதனைத் தூக்கிக் கொண்டு விளையாட்டாக ஓடி வருவதனைப் பல இடங்களில் காணமுடிகிறது. இது தவறான ஒன்றாகும். தலைசிறந்த பக்தராகவும், பக்தகோடிகளின் வழிபாட்டுப் பலனை அனுக்கிரகம் செய்பவராகவும் உள்ள சண்டேஸ்வரரைப் பணிவுடனும் பக்தியுடனும் கௌரவமாக வீதிவலம் வரச் செய்தல் அவசியமாகும்.

சண்டேஸ்வர உற்சவத்தின் பின் சிவாசாரியார் சகல மூர்த்திகளின் ரஷாபந்தனங்களையும், அகற்றித் தமது கரத்திலுள்ள ரஷாபந்தனத்தையும் நீக்குவர்.

**ஆசார்ய உற்சவம்:**

மஹோற்சவத்தின் இறுதிக் கட்டமாக அமைவது ஆசாரிய உற்சவம். இறைவன் குரு, லிங்கம், சங்கமம் என்ற மூன்று இடங்களில் நின்று அருள் செய்வதாகச் சாஸ்திரங்கள் பகரும்.

குரு கிரியைகளை நடத்தும் சிவாசாரியார், லிங்கம் என்பது பிம்பமாகிய திருவுருவமாகும். சங்கம் என்பது திருவடியார் கூட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம வழிபாட்டை எடுத்துக் காட்டுவது மாஹேசுரபூசை (அன்னதானம்) ஆகும். மஹோற்சவம் நிறைவுபெற்ற மறுநாளில் சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்வது மரபு.

மஹோற்சவ காரியங்களைச் செவ்வனே நிறைவேற்றி வைத்துத் திருவருட் பேற்றினைத் தந்தருளும் குருமூர்த்தியாகிய சிவாசாரியாரைப் பூமாலை முதலியவற்றால் அலங்கரித்து மங்கலவாத்திய சகிதம் வீதிவலமாக அழைத்து வந்து மண்டபத்தில் அமரச்செய்து அடியார்கள் யாவரும் அவரை வணங்கி இயன்று அளவு குருதட்சிணை வழங்கி விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு குருவின் அருளுரைகளையும் செவிமடுத்தபின் அவரை விடுதிவரை அழைத்துச் சென்று பின்னர் தமதில்லம் திரும்புவர்.

வயதாலோ, தகுதியாலோ, அநுபவத்தாலோ மிகக் குறைந்த நிலையில் இருந்தாலுங்கூட மஹோற்சவத்தை நடத்திவைத்த சிவாசாரியாரை சிவசொரூபமாகப் பாவித்து வழிபடுவது அவசியம். இது அடியார்கள் பக்தி நிலைபெறவும் அருள்பெற்றுய்யவும் வழிவகுப்பதுடன் சிவாசாரியார் தமது நிலையை உயர்த்திக் கொள்ளுவதற்கும் வழி வகுக்கும்.

**வாகனத் திருவிழாக்கள்**

வாகனத் திருவிழாக்கள் எல்லாமே தத்துவார்த்த உட்பொருளைக் கொண்டவையாகவும் புராணக் கதைகளை விளக்குவையாகவுமே அமைகின்றன. 'ஏன்?' என்று கேட்கின்ற புதிய தலைமுறையினருக்கு, அதனோடு சம்பந்தப்பட்ட புராணக் கதைகளையும் அவற்றால் உணர்த்தப்படக்கூடிய தத்துவங்களையும் மூத்தவர்கள் எடுத்துக் கூறவேண்டும். அப்படி நமது சமய மரபுகள் பாரம்பரியமாக நிலைபெறவேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய திருவிழாக்களை நமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

சாதாரணமாகக் கிரியைகளில் ஈடுபாடு காட்டமுடியாத அல்லது பொறுமையாக வழிபாடு செய்யமுடியாதவர்கள்கூடத் திருவிழாக்களைப் பார்த்து மகிழ்வதற்காக வருகிறார்கள். அதன்மூலமாகவாவது அவர்களது உள்ளத்தில் சமயக் கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவதற்கும் இறைநம்பிக்கை வளர்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறதல்லவா?

இனி, கிராம மக்கள் அனைவரும் அங்கு வருகிறார்கள். தமக்குள் உள்ள வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகளை மறந்து எல்லோரும் ஒன்றாக இறைவனது திருவுருவம் தாங்கிய அந்த வாகனத்தைத் தாமும் தூக்கவேண்டும் என்று ஆவலோடு ஒன்றிணைகிறார்கள். அவர்கள் யாவரது மனத்திலும் அப்போது இறைசிந்தனை மட்டுமே இருக்கிறது. இதனால் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உண்டாகிறது. ஆலயச் சூழல் அந்த இறைபவனியை எதிர்பார்த்துத் தூய்மையும் அழகும் உடையதாக ஆக்கப்படுகிறது. சுகாதாரமும் அழகுணர்ச்சியும் மகிழ்ச்சியும் பரவுகிறது. இவ்வாறு சமூகவியல் நோக்கிலும் வாகனத் திருவிழாக்கள் பயன்பாடுடையவையாகின்றன.

**கைலாச வாகனம்**

கைலாசவாகனத் திருவிழா பல ஆலயங்களில் சிறப்பாக நடைபெறுவதுண்டு. இது சிவபிரானின் திருவிளையாடலொன்றை எடுத்துக்காட்டும் திருவிழாவாகும். ஆணவத்தை அடக்கி அருள்வழங்கும் இறைவனின் கருணையைக் காட்டுவனவாகவும், ஆணவம் நீங்கித் தாம் செய்த தவறுக்கு வருந்தினால் இறையருள் கிட்டும் என்ற உண்மையைப் போதிப்பனவாகவுமே திருவிழாக்கள் அமைகின்றன எனக் கூறப்படுகிறது. கைலாசவாகனத் திருவிழாவும் அத்தகையதே.

இராவணன் பெரும் சிவபக்தனாயினும் தனது வீரத்தினாலும் வரபலத்தினாலும் அகந்தை கொண்டவனாக ஆனான். வானுயர வளர்ந்து நிற்கும் கைலை மலையானது தனது புஷ்பக விமானம் பறப்பதற்குத் தடையாக உள்ளது எனக்கருதி அதனைப் பெயர்த்து எறிய முற்பட்டான்.

கைலைமலையில் வீற்றிருந்த சிவபிரான் தமது காற்பெருவிரலைச் சிறிதே அழுத்தியதும் இராவணன் மலையின்கீழ் நசுங்கினான். அவ்வேளை அங்கு வந்த நாரதரின் புத்திமதியால் தனது தவறை உணர்ந்த இராவணன் சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்து அதிலிருந்து மீண்டான். இந்தக் கதையை நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தும் வகையில் கைலாசவாகனத் திருவிழா நடைபெறுகின்றது.

**ஏனைய வாகனத் திருவிழாக்கள்**

ஏனைய வாகனத் திருவிழாக்களுக்கும் இவ்வாறே தத்துவப் பின்னணிகள் உண்டு. முருகப் பெருமானுக்கு ஆட்டுக்கடா வாகனம் உண்டு. அசுரர்கள் யாகத்திலே தோற்றுவித்து அனுப்பிய கொடிய கடாவை அவர் அடக்கிய கதை அதன் அடிப்படை. பூதவாகனம் சில இடங்களில் உண்டு. பூதகணங்கள் இறைவனது ஏவலர்கள் என்பதை இது காட்டுகிறது. குதிரை வாகனம் வீரத்தின் அறிகுறி. வேகம் மிகுந்த அழகிய குதிரைகளை அடக்கி அதில் பயணிப்பது வீரத்தைக் காட்டுவதாகும்.

தேர்த் திருவிழாவில் பல தத்துவங்கள் உண்டு. தேரின் பீடத்திற்குமேல் பல தட்டுக்களும் கீழே பல தட்டுக்களும் சிற்ப, சித்திர வேலைப்பாடுகளுடனும் அமைந்து காணப்படும். இவை மேலேழு உலகங்களையும் கீழ் ஏழு உலகங்களையும் பிரதிபலிப்பன. பீடம் பூமியைக் குறிப்பது. அங்குதான் இறைவன் வீற்றிருப்பார். கர்மபூமி எனப்தற்கிணங்கப் பூமியில்தான் வினைகளைச் செய்து ஆண்டவனைச் சென்றடைய வழி கிடைக்கும் என்பதை இது காட்டுகிறது. ("இந்தப் பூமி அவன் உய்யக் கொள்கின்ற ஆறு")

இதயபீடமாகவும் தேர்த்தட்டைக் கருதலாம். தேர்த்தட்டில் சுவாமி எழுந்தருளினால்தான் தேர் அசையும். இதயத் தாமரையில் எம்பெருமானை இருத்தி வைத்தால்தான் இந்த மனித வாழ்க்கை சுகமாக நகரும்.

இறைவன் நம்மைத் தேடிவந்து கருணைசெய்வதையே வீதி உலாக்கள் காட்டுகின்றன. அதிலும் ஆலயத்தினுள் வந்து தரிசிக்க முடியாத அடியவர்களுக்காக அவன் இவ்வாறு இரங்கி உலா வருகிறான். இந்த உலாவைத் தரிசிப்பதே ஒரு தீட்சை ஆகும். சாம்பவ தீட்சை என இது கூறப்படும். இவ்வாறு அவன் வருகின்றபோது விமானத்துடன் கூடிய கருவறைக்குள் இருப்பதுபோன்ற அதே தோற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் தேருக்கு இருக்கிறது. அப்பர் சுவாமிகளுக்குத் திருவையாற்றிலேயே கைலைக் காட்சியைக் காட்டியதுபோல ஆலய வீதியிலேயே ஆலயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறைக் காட்சியைக் காட்டும் அருட்பொலிவுதான் தேர்த்திருவிழா.

**சப்பறமும் மஞ்சமும்**

தேரின் மாற்று வடிவங்கள்தான் மஞ்சமும் சப்பறமும். கருவறையைத் தேர் நினைவூட்டுவது போல இராஜகோபுரத்தை நினைவூட்டுவது சப்பறமாகும். சப்பை ரதம் என்பதே சப்பறம் ஆயிற்று எனக் கூறுவர் சிலர். தேரின் சிறிய வடிவம் மஞ்சமாக அமைகிறது. தேர் அழித்தலைக் குறிப்பதால் அதில் இராஜகம்பீரத்துடன் உக்கிரமாக வருகின்ற ஆண்டவன் மஞ்சத்தில் வரும்போது அடியவர் குறைகேட்பதற்காக வருவதுபோன்ற பாவனையை உணரலாம். கம்பீரத்துடன்கூடிய சாந்தநிலை இது.

**பிக்ஷாடனர் திருவிழா**

பிக்ஷாடனர் வடிவம் சிவபிரானது மாகேஸ்வர மூர்த்தங்கள் இருபத்தைந்தினுள் ஒன்று. தாருகாவனத்து முனிவர்களின் கதையுடன் சம்பந்தப்பட்டது. அக்கதையை நினைவூட்டி அறிவூட்டும் வகையில் சிவனது அந்த மாகேஸ்வர மூர்த்தமாகிய பிக்ஷாடனர் திருவுருவத்தை அலங்கரித்து வீதி உலாக் கொண்டுவருவதே பிக்ஷாடனர் திருவிழாவாகும்.

கிரியைகள் மற்றும் விழாக்களின் பொருளைத் தெரிந்துகொள்ளாமலும் அவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளாமலும் வெறும் வெளிவேஷங்களிலும், ஆடம்பரங்களிலும் மயங்கிநிற்கும் அடியார்கள் பலரை நாம் இன்று எங்கும் காணக்கூடியதாக உள்ளது. இதுபோலவே புராண காலத்திலும் தாருகாவனத்திலே சில முனிவர்கள் இருந்தனர். அவர்கள் வேத வேள்விகளில் வல்லவர்கள். தாம் செய்கின்ற வேள்விகளும் அங்கு தாம் ஓதுகின்ற வேத மந்திரங்களுமே தமக்கு நற்பலன்களைத் தரவல்லவை என்றும் அந்தப் பலன்களைத் தர இறைவன் தேவையில்லை எனவும் செருக்குற்று நின்ற அவர்களை அடக்குவதற்காக பிக்ஷாடன வடிவத்துடன் சென்றார் சிவபிரான்.

அவரைத் தம் யாகபலத்தினாலேயே வென்றுவிடலாம் என அகந்தைகொண்ட அவர்கள் அபிசார வேள்வியொன்றை நடத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வேள்வியிலிருந்து ஒரு கொடிய மான் பிரபஞ்சத்தையே அழித்துவிடும் பேரொலியை எழுப்பிக்கொண்டு புறப்பட்டது. அதனைத் தன் கைகளில் பற்றி அதன் பேரொலி முழுவதையும் தன் காதிலேயே வாங்கிக்கொண்டு பிரபஞ்சத்தைக் காப்பாற்றினார். முயலகன் என்ற கொடிய அசுரனையும் பாம்புகளையும் அக்கினியையும் ஏவிவிட்டனர். பாம்புகளை ஆபரணமாக அணிந்துகொண்டு அக்கினியை அடக்கிக் கையில் ஏந்தியவாறு முயலகனை அடக்கிக் காலின் கீழ் அமுக்கியவாறு ஆனந்த தாண்டவம் ஆடிநின்றார். அவரது அருளாற்றலை உணர்ந்து தமது அகந்தை நீங்கிய முனிவர்கள் சிவனை வணங்கி அடிபணிந்தனர்.

**மாம்பழத் திருவிழா**

முருகன் கோவில்களில் மாம்பழத் திருவிழா சிறப்பாக நடைபெறும். அன்னை தந்தையரே முதன்முதற் தெய்வம் என்பதை எடுத்துக் காட்டவும், ஞானத்தின் சிறப்பை எடுத்துக் காட்டவும் இந்தக் கதை புராணங்களில் இடம்பெறுகிறது. சிவனைத் தரிசிக்கக் கைலை வரும் நாரதர் அபூர்வமான மாங்கனி ஒன்றைக் கொண்டு வருகிறார். அதனைப் பாகம் பிரிக்காமல் ஒருவரே உண்ணவேண்டும் என்ற நிபந்தனையையும் கூறுகிறார். சிவபிரானின் இரு புதல்வர்களாகிய பிள்ளையாரும் முருகனும் அந்த மாங்கனி தமக்கே வேண்டும் என்கின்றனர்.

உலகினை முதலில் வலம் வருபவருக்கே மாங்கனி என்கிறார் சிவபிரான். மயில்மீது ஏறிப் பறந்தான் முருகன். விநாயகர் சிந்தித்தார் அம்மையப்பரே உலகம். எனவே அவர்களை வலம் வந்து தமது செய்கைக்கான பொருளை விளக்கினார். மாங்கனி அவரிடம் கொடுக்கப்படுகிறது.

பூமியைச் சுற்றிவந்த முருகன் கோபத்துடன் அவ்விடம் விட்டு அகல்கிறார். ஆண்டியாக மாறிப் பழநிமலையில் தவக்கோலத்தில் இருக்கிறார். அம்மையப்பர் சென்று சமாதானம் செய்து அவரது கோபத்தைத் தணிக்கின்றனர். இந்தச் சுவையான கதை நாடகம்போல விழாவில் நடத்தப்படும்போது மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பக்தி முக்தி பாவனை**

பொதுவாக ஐந்தாம் திருவிழாவாக அநேக ஆலயங்களில் நடத்தப்பெறுவது இவ்விழா. பக்தர்கள் பக்குவநிலையில் சிவனோடு ஐக்கியமாகிவிடுகின்ற முக்தி நிலையைக் காட்ட இவ்விழா நடைபெறுகிறது. சிவபக்தர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நான்கு நாயன்மார்களை அல்லது சண்டேஸ்வரரை அடியாராக வைத்து இவ்விழா வடைபெறும். கோவிலின் கோபுர வாசலுக்கு வெளியே பக்தர் இருக்க உள்ளே இறைவன் இருக்க கோபுரவாசல் சாத்தியிருக்கும் நிலையில் பிரார்த்தனை வழிபாடுகள் நடக்கும். அதன்பின் கோபுர வாசல் திறந்து பக்தரின் திருவுருவம் இறைவனுடன் ஒன்றாக வைக்கப்பட்டு தீபாராதனை நடைபெறும். பின்னர் ஒன்றாக வீதிவலம் வருவர்.

**வசந்தோற்சவம்**

பெரும்பாலும் மஹோற்சவத்தின் ஆறாம் திருவிழா வசந்தோற்சவமாக அமையும். வசந்தகாலம் மகிழ்ச்சிக்குரியது. வாழ்க்கையின் வசந்தகாலம் இளமைப் பருவம். காதல் தெய்வமாகிய மன்மதனின் கணைகளால் தாக்கப்படும் பருவம். இக்காலத்தை நினைவுகூர்ந்து மன்மதன், ரதி, வசந்தன் ஆகியோரை முதன்மைப் படுத்தி அழகாக அலங்கரிக்கப்பட்ட மண்டபமொன்றிலே இறைவனையும் இறைவியையும் அமரச்செய்து ஆடல், பாடல்களினால் மகிழ்வித்தல் இவ்விழாவின் முக்கிய அம்சமாகும். இல்வாழ்வின் ஆரம்பத்தைத் திருக்கல்யாணத்தில் நிகழ்த்துவதுபோல இங்கு இளமைப்பருவ நிகழ்வுகளை நடத்தி மகிழ்கிறார்கள்.

**பக்தி விழாக்கள்**

வாகனத் திருவிழாக்களைவிட அடியார்களின் பக்தி வெளிப்பாட்டை உணர்த்தும் வகையிலான திருவிழாக்கள் சிலவும் மஹோற்சவங்களில் இடம்பெறுகின்றன. வேதபாராயணத் திருவிழா, திருமுறைத் திருவிழா இரண்டையும் இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

திருமறை - திருமுறை எனவும், ஆரியவேதம் - தமிழ்வேதம் எனவும் ஒப்பிட்டுப் பேசப்படும் இவ்விரண்டும் இறைவனின் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களுக்குச் சமமானவை. ‘ஆரியம் கண்டாய், தமிழ் கண்டாய்’ எனத் திருமுறை போற்றும் இறைவன் வேதமந்திர ஒலியினாலும் திருமுறைப் பாடல்களினாலும் இலகுவில் ஈர்க்கப்படுபவர். இவ்விரு மந்திரங்களின் ஒலிஅதிர்வுகள் பிரபஞ்சத்தை ஒழுங்குபடுத்தி சாந்தியளிக்கும் பெருமை வாய்ந்தவை. இதனால் வேதியர்களை அழைத்து வேதபாராயணத்தை முறையாக நிகழ்த்துவதும் திருமுறை வல்லோராகிய ஓதுவார்களை அழைத்துப் பண்ணிசை நிகழ்த்துவதும் ஆலய மஹோற்சவ காலங்களில் இடம்பெறுகின்றது.

இதற்கும் மேலாக, அடியார்கள் இறைவனோடு இன்னும் நெருங்கிவந்து பக்தியுடன் உறவாடவும் உருகி வழிபாடாற்றவும் உள்ளத்தை வாட்டும் துன்பங்களை எடுத்துரைத்துப் பரிகாரம் காணவும் உதவுகின்ற சில செயற்பாடுகளும் உள்ளன. அவைதான் அங்கப்பிரதட்சணம், அடியளத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் என விரிந்து செல்கிறது. அங்கப் பிரதட்சணமும் அடியளத்தலும் தமது பணிவை வெளிப்படுத்திச் சரணாகதி அடைவதைக் காட்டி நிற்கின்றன. சிறந்த உடற்பயிற்சியாகவும் மனோதத்துவ ரீதியாக மனச்சாந்தி தரக்கூடியவையாகவும் உள்ள இவ்வகை வழிபாடுகள் மரபு ரீதியானவை.

கற்பூரச்சட்டி எடுத்தலும், காவடியும் தம் உடலை வருத்தி இறைவனின் இரக்கத்தை ஈர்க்க முயலும் முயற்சிகளாகும். சாத்வீக நிலையைக் கடந்து இராஜசம், தாமசம் என்ற நிலைகளையுடைய இவ் வழிபாட்டு முறைகள் சாதாரண நிலையிலுள்ள பக்தர்களால் பெரிதும் விரும்பி ஏற்கப்படுவன. ஆண்டவனுக்கு அடியவர்களின் மனநிலையே முக்கியமானது என்பதால் தேவாரம் பாடுபவரையும் தூக்குக் காவடியில் தொங்குபவரையும் சமமாகவே கணிப்பிட்டு அவர்களின் பக்தி, ஞானமுதிர்ச்சி, முயற்சி என்பவற்றுக்கிணங்க அவர்களின் வினைப்பயனை ஊட்டிப் புடம்போட்டு உயர்நிலை கொடுப்பார் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு சைவ சித்தாந்த தத்துவ உட்பொருள்களைக் கொண்டமைந்த மஹோற்சவத் திருவிழாக்கள் புராணக் கதைகளை விளக்குவனவாகவும் ஆகம அடிப்படையில் அமைவனவாகவும் இருப்பதைக் காண்கிறோம். சமுதாய மட்டத்தில் மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிப்படுத்தவும், சுத்தம் பேணவும் அழகுணர்ச்சியை வெளிப்படுத்தவும் பரஸ்பர ஒட்டுறவினைச் சகவாழ்வில் அனைவரும் கொள்ளவும் சாந்தியையும் ஆனந்தத்தையும் அடையவும் வழிவகுப்பதாகவுமுள்ள இவற்றைப் புரிந்துகொண்டு இவற்றில் ஈடுபடுவது நம் எல்லோரதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாகும்பாபிஷேகம்

ஆன்ம விடுதலைக்கு அவசியமான கிரியைகள் பற்றியும், அவை நடத்துவதற்குரிய இடமான ஆலயம் பற்றியும், திருவுருவங்களைப் பற்றியும் பார்த்தோம். அத்தகைய ஆலயமொன்றிலே திருவுருவத்தை ஸ்தாபித்து அங்கு தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துவதே மகாகும்பாபிஷேகம் என்னும் பெருவிழாவாகும். பிதிஷ்டை எனவும் இதனைக் கூறுவர். பிரதிஷ்டை என்பது நன்கு நிலைநிறுத்தல் எனப் பொருள்படும்.

பிரபஞ்சமெங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளைச் சிவாசாரியர் மந்திரம், பாவனை, கிரியைகளின் மூலமாக அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து வழிபட்டு அங்கு ஸ்தாபிக்கப்பட்ட திருவுருவத்திலே சேர்த்து நிலை பெற்றிருந்து ஆன்மகோடிகளுக்கு அருள்புரியுமாறு செய்தலே மஹாகும்பா பிஷேகத்தின் நோக்கமாகும்.

இக் கிரியையின் தத்துவார்ந்த உட்பொருளை சிறிது சிந்திக்கலாம். இறைவன் பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ளவன் என்பதும், கட்புலனாகாதவனாயும், உணர்வுகளுக்கு எட்டாதவனாயும், அதே நேரம் அடியார்க்கு எளியவனாகவும் இருப்பவன் என்பதும் சாஸ்திர நூற்றெளிவு.

பாலிலே தோன்றாது மறைந்திருக்கும் நெய்யைப் படிப் படியான கிரியை முறைகளினால் தோற்றுவித்து கையிலே பெறுவது போல,(பாலைக் காய்ச்சி தயிராக்கி அதனைக் கடைந்து வெண்ணெய் எடுத்து உருக்கி நெய்யைப் பெறுதல் படிமுறையான கிரியைகள்.) பிரபஞ்ச மூலங்களான பஞ்ச பூதங்களின் மார்க்கமாக படிப்படியாக பரம் பொருளை அண்மி வரச் செய்பவை கும்பாபி ஷேகக் கிரியைகள்.

மின்னலைக்கண்டு பயந்தனர் நமது முன்னோர்கள். பின்னர் அதனைத் தெய்வ சக்தியாக்கி வியந்தனர். விஞ்ஞானி அந்த மின்னலிலிருந்து மின்சாரத்தைக் கண்டுபிடித்தான். மின்சார சக்தியை உண்டாக்குவது இலகுவானதா? அதற்காக எத்தனை விதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் அதற்குரிய அளவுப் பிரமாணங்கள் தப்பாமல் உரிய முறைப்படி நியமிக்கப்பட்டு அதற்கான செயற்பாடு சரியான முறையில் நிகழ்த்தப்படும்போது மின்சாரம் தோன்றுகிறது. அதுபோல பிரபஞ்சத்தின் அடிப்படை மூலகாரணமாக அண்டவெளியெங்கும் பரந்தும் நிறைந்தும் கரந்தும் இருக்கின்ற பேரருட் சக்தியைச் சுரக்கச்செய்து அதனை நமக்கு வேண்டிய வடிவத்தில் நமக்குரிய இடத்தில் பெறுவதற்கு ஏகப்பட்ட செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. அவைதான் கும்பாபிஷேகக் கிரியைகள்.

நிலம், நீர், காற்று, ஆகாயம் என்பன பஞ்சபூதங்கள். பஞ்சபூதங்களின் வடிவாக இருப்பவன் பரம்பொருள். பஞ்சபூதங்கள் வடிவமாக மட்டுமின்றி சூரியன், சந்திரன், யஜமானன் ஆகியனவும் சேர்ந்த அட்டமூர்த்திகளின் வடிவமாகவும் இறைவன் இருக்கிறான்.

ஆகாய வடிவில் எங்கும் பரந்துள்ள ஆண்டவனை உணருதல் மிகவும் சிரமம். எமது புலன்களால் சிறிது உணரும் வகையில் வாயுவாக அவனை அறிதல் முதற்படி. வாயுவும் கண்ணால் தரிசிக்க முடிவதில்லை. அதற்கடுத்த படியில் அக்கினியாக ஆண்டவனைக் காண்கின்றோம். மூன்றாவது படி நீராக இறைவனை அறிதல். அதற்கும் அடுத்த படி எந்நேரமும், எல்லாவகைகளிலும் எம்மோடு தொடர்புற்றதும், நிலைபெற்றிருப்பதும், நாம் நிலைபெற்றிருக்க வகைசெய்வதுமாகிய மண் என்னும் ஐந்தாவது நிலை. இந்நிலையில் இறைவனைக் கண்டு வழிபடுதலே எம்மானோர்க்கு இசைந்த எளிய நிலை. இவ வகையில் மண்ணோடு தொடர்பு கொண்டிருக்கும் கருங்கல்லும், செம்பு முதலிய உலோகங்களும் இறையருளை ஆகர்ஷித்து எமக்கு வழங்கும் பெருஞ்சக்தி வாய்ந்தவையாக இருக்கின்றன.

**" (ப்ரம்மண) ஆகாசாத் ஸம்பூத:**
**ஆகாசத் வாயு:**
**வாயோ ரக்நி:**
**அக்நே ராப:**
**அத்ப்ய: ப்ருதிவீ "**

என்று இந்த பஞ்ச பூதப் படிமுறையை எடுத்துக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத்திரிய உபநிஷத்து, இவ்வைந்தும் தழுவியதாகக் கும்பா பிஷேகக் கிரியைகள் அமைவது கண்கூடு. யாகசாலையில் ஆகாய வெளியும், காற்றும் உள்ளன. அங்கு அக்கினி வளர்க்கப்படுகிறது. கும்பங்களில் நீர் நிறைக்கப் பெற்று அதிலேயே இறையருட் சக்தி ஆவாகனமாகிப் பின் மூர்த்தியில் அபிஷேகமாகிறது. கும்பம் உருவாக்கப்பட்ட உலோகம் பிருதுவி அம்சம். மண்ணோடு தொடர்புபட்டது. (மண் குடமே பயன்படுத்தப்படுவதும் உண்டு). இறுதியில் அபிஷேகமாகி ஸ்தாபிக்கப்பெறும் ஸ்தானமும் பிருதுவியுடன் தொடர்பான கருங்கல் விக்கிரகம் அல்லது உலோக விக்கிரகமாகும்.

அருட்சக்தியை ஆவாஹனம் செய்துவைக்கப்படும் திருவுருவங்கள் நல்லமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கருங்கல்லாக இருக்கவேண்டும். (ஆண்கல், பெண்கல், அலிக்கல் என்ற பேதங்களும் அவை பெறப்படும் இடங்களும் முக்கியம்) அல்லது சரியான முறையில் கலக்கப்பட்ட உலோகக் கலவையாக (பஞ்சலோகம்) இருக்கவேண்டும். அவை ஆகமங்களில் சொல்லப்பட்ட அளவுப்பிரமாணங்களில், அதற்கேற்ற அங்கலட்சணங்களுடன் உரிய ஆடை அணிகலங்கள், ஆயுதங்களுடன் செதுக்கப்பட்டு அல்லது வார்க்கப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். இந்தச் சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பாசாரி எனப்படுகிறார். அவருக்கென்று சில நியமங்கள், ஒழுக்கங்கள், பாரம்பரியக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. சிலையின் விதிமுறைகள் மட்டுமல்லாமல் சிலை செய்யப்படுபவரின் விதிமுறைகளும் சிலையின் சக்தியை நிர்ணயிக்கும். செய்யப்படும் திருவுருவை மனத்தில் கற்பனை செய்து அதன் தியான சுலோகத்தை உச்சரித்தவராக, அத்திருவுருவில் லயித்த மனதுடையவராக அவர் அச்செயலில் ஈடுபடும்போது அவரது எண்ண அலைகள் இயல்பாக அந்தச் சிலையின் உருவாக்கத்திற்கு உதவுகின்றன. சிலை செய்யப்படும் சிற்பாலயத்திலும் அத்தகைய புனிதமான அலைகளும் கதிர்வீச்சுக்களும் இருக்கவேண்டும்.

திருவுருவை ஸ்தாபித்து வழிபாடியற்றும் ஆலயமும் சிற்பாசாரியினால் முன்சொன்ன வகையிலே உருவாக்கப்படுகின்றன. அதற்கென்று அளவுப் பிரமாணங்களும் அமைப்பு விதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களிலே வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆகமங்களின் வழிநூல்களான சிற்ப சாஸ்திரங்கள் இவ்விதிமுறைகளை விரித்துக் கூறுகின்றன. மூன்றுபுறமும் மூடப்பட்டு முன்புறம் மட்டும் திறந்ததாகக் கருவறை அமைக்கப்படுகிறது. மேலே விமானம் அமைகிறது. 'மான' என்பது அளவைக் குறிக்கும். விமான என்பது மிகவும் துல்லியமான அளவு எனக் கருதலாம். எனவே விமானம் அமைக்கும்போது கவனிக்கவேண்டிய அளவுப்பிரமாணங்களின் முக்கியத்துவத்தை அச் சொல்லின் பொருளே குறித்து நிற்பதைக் காணலாம். வான் நோக்கி உயர்ந்து, குவிந்து கூம்பியிருக்கும் கோபுரங்களாக அவை அமைந்திருப்பதுடன் உச்சியில் உலோகக் கலசங்களையும் கொண்டிருக்கும். நாற்றிசையில் முப்புறமும், மேல், கீழ் ஆகிய பகுதிகளும் கருங்கல்லினால் (அல்லது வெள்ளைக்கல், அதமபட்சமாகச் செங்கல்) அமைக்கப்படுவது அதிர்வுகளையும் கதிர்வீச்சுக்களையும் நெறிப்படுத்தி ஒலி, ஒளி, முதலிய புறச்சக்திகளையும் திருவருட்சக்தியாகிய அகச்சக்தியையும் உள்வாங்கிச் சேமித்து வைத்திருந்து முன்புற வாயிலினூடாக அளவறிந்து வெளிவிடுவதற்காகவே. ஆகாய வெளியில் பரந்து நிறைந்து மறைந்திருக்கும் பிரபஞ்ச சக்தியாகிய இறையருட்சக்தியை மேல்நோக்கிக் குவிந்து கூர்மையாக நிற்கும் உலோகப் பொருளாகிய கலசங்கள் தாங்கிய விமானம் என்னும் ஸ்தூபி ஈர்த்துக் கீழேயுள்ள திருவுருவத்தில் சேமிக்கின்றது.

தாம்ர விக்கிரகம் எனப்படும் பஞ்சலோகத் திருவுருவங்கள் 'சபை' என்ற பெயரில் தனியான சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும். இவை எழுந்தருளிகள் அல்லது உற்சவ மூர்த்திகள் எனப்படும். இவை விழாக்களின்போது வீதி உலாவுக்கு எழுந்தருளுகின்றன. சக்தியைத் தற்காலிகமாகச் சேகரித்து உடனுக்குடன் வெளிவிடுவதன் மூலம் எல்லா வெளியிடங்களிலும் சக்திக் கதிர்வீச்சினை இவை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் **அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம்** என நால்வகைப்படுமென்று சிவாகமங்கள் வகுக்கின்றன. ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து அங்கு புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மூர்த்தியைப் பிரதிஸ்டை செய்வது **அநாவர்த்தனப் பிரதிஷ்டை.** முன்பிருந்த ஆலயம் முற்றாக அழிந்து விட்டால், அவ்விடத்தில் மறுபடி ஓர் ஆலயத்தை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்தல் **ஆவர்த்தனப் பிரதிஷ்டை.** பூஜை வழிபாடுகள் நடைபெறும் கோயிலில் திருத்த வேலைகளுக்காக பாலஸ்தாபனம் செய்து திருத்த வேலைகள் முடிந்தபின் மறுபடி மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வது **புனராவர்த்தனப் பிரதிஷ்டை.** ஆலயத்தினுள் மரணம் நிகழுதல், கள்வர் முதலியோர் நுழைதல் போன்ற காரணங்களால் நிகழும் பிரதிஷ்டை **அந்தரிதப் பிரதிஷ்டை.**

இந்த நான்கு வகைகளில் அந்தரிதப் பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. ஏனைய மூன்று வகைப் பிரதிஷ்டைக்கும் சுபமுகூர்த்தம் நிர்ணயித்தல் அவசியம். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்தும் சுத்தமாக இருக்கும்படியும், லக்கினம் ஸ்திரராசியாக இருக்கும் படியும், கிரகங்கள் அநுகூலமாகன இடங்களில் இருக்குமாறும் நன்கு கவனித்து முகூர்த்தம் நிர்ணயிக்கப்படும்.

மேலும் மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சிவாசாரியாருக்கும், ஆலய தர்மகர்த்தாவுக்கும் அநுகூலமானதாகவும் இம் முகூர்த்தைக் கணித்துக்கொள்வர்.

கும்பாபிஷேக விழாவானது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்வதால் இதனைத் தரிசித்தல் பெரும் பேறாகும். யாக தரிசனம் செய்தலும், ஓமப்புகையைச் சுவாசித்தலும், மந்திர ஒலிகளைக் கேட்டலும் உடல் நலத்தையும், புண்யத்தையும் ஒருங்கே தருவன என்று அறிஞர் கூறுவர்.

கும்பாபிஷேகமானது பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது நடைபெற வேண்டும் என்பது விதி. தெய்வ சாந்நித்தியத்தை வலுப்படுத்தி, அருட்சக்தியை அதிகரிக்கச் செய்ய இது அவசியம். கருங்கல்லினால் செய்யப்பட்ட பீடத்திலே கருங்கல் விக்கிரகத்தை வைத்து எட்டுப் பொருட்களின் கலவையான அஷ்டபந்தனம் என்ற மருந்தினால் அவை இணைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், யஜமானன் ஆகிய அஷ்ட மூர்த்திகளின் அம்சமான **குங்கிலியம், கொம்பரக்கு, சுக்கான்கல், தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம்** என்னும் எட்டுப் பொருட்களையும் உரிய அளவில் சேர்த்து இடித்துத் தயாரிக்கப் படுவதே அஷ்டபந்தனமாகும்.

பிரதானமான யாகசாலைக் கிரியைகளுக்கு அங்கமாக, முன்னேற்பாடாக பூர்வாங்கக் கிரியைகள் பல செய்யப்படுகின்றன. அவை பயிர்ச்செய்கைக்கு முன் வயலைத் தயார் செய்வதைப் போன்றவை. வயலை உழுது பண்படுத்தி அங்கிருந்து கற்கள், வேர்கள், களைகள் முதலிய வேண்டாதவற்றை அகற்றி நீர்பாய்ச்சி சொகுசுபடுத்தி அதன்பின்னரே விதைக்கப்படுகிறது. இறைதிருவுருவத்தையும் ஆலயத்தையும் அதன் சூழலையும் தூய்மை செய்து புனிதப்படுத்தி, இடையூறுகள் நேராமல் காவலிட்டு, தீய சக்திளை அகற்றிப் பாதுகாப்பு வேலிகளை இட்டு அதன்பின் அங்கு படிப்படியாக சக்தியை உருவாக்கும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

மந்திரம், பாவனை, கிரியை என முத்திறத்ததாக இவை அமைகின்றன. மந்திரங்களின் ஒலி அதிர்வுகள் சக்திச் செறிவை ஏற்படுத்துகின்றன. பாவனை என்பது மனோதத்துவம் - மனோசக்தி (Will Power) சார்ந்தது. மனோசக்தியின் பயன்பாடுகள் பற்றியும், சாதனைகள் பற்றியும், மனோதத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ செய்திகளை ஆதார பூர்வமாகக் கூறுகிறது. வைத்திய போதனைகளில் மனோவசிய முறை நன்கு பயன்படுத்தப்படுகிறது. ஒரு வைத்தியரின் போதனைகளால், அவரிடம் நோயாளி வைக்கின்ற நம்பிக்கையால் அரைப்பங்கு நோய் குணமாகிவிடுகிறது. மேலும், சுயவசிய முறைப்படி தனது உடலுறுப்புக்களைத் தானே வசப்படுத்திச் சில நோய்களை மாற்றிவிடக்கூடிய சக்தி மனவலிமைக்கு உண்டு. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தால் நமது கிரியைகளில் மனோசக்தி எவ்வளவு தூரம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பது விளங்கும். ஆக, இறைசக்தி இங்கு நிலைபேறாகிறது என்ற நம்பிக்கை சிவாசாரியாரிடத்தும் அடியார்களிடத்தும் இருப்பதே பாவனை என்பதாகும். கிரியை என்பது செயற்பாடுகளைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் நிகழும் கிரியைகளுக்கும் யாக மண்டபங்கள், வேதிகைகள், கும்பங்கள் முதலியன விதிப்படி அமைய வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஆலயமே ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தால்தான் அங்கு நிகழும் கிரியைகள் நாம் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரும்.

விஞ்ஞானப் பரிசோதனைகளை நாம் நிகழ்த்தும்போது அதற்கென ஆய்வுகூடங்கள் தேவைப்படுகின்றன. நினைத்த இடங்களிலெல்லாம் அவற்றைச் செய்துவிடமுடியாது. சூழல் அதற்கான ஒழுங்கமைப்பில் இருக்கவேண்டும். அளவுப் பிரமாணங்கள், வெப்பநிலைகள், ஓசைகளின் அளவு, சேர்க்கப்படும் பொருட்களின் அளவு மற்றும் செறிவு முதலியன அவற்றுக்கான கருவிகள் என இத்தனை விடயங்கள் ஒருங்குசேரும்போதுதான் பரிசோதனைகளைச் சரியானமுறையில் நிகழ்த்தி விளைவுகளைக் கண்டறிகிறோம். மருத்துவ சிகிச்சை நடக்கும்போதும் இதே நிலைமைகளை நாம் காணலாம். இதேபோன்றதொரு செயல்தான் பிரபஞ்சமெங்கும் பரந்திருக்கும் பேரருட் சக்தியை நாம் நமக்குள் பெற்று நம்மை உயர்த்தி அந்த அருட்சக்தியோடு ஒன்ற முயற்சிக்கின்ற வழிபாட்டு முறைகளும்.

ஆலயமும் அங்கு ஸ்தாபிக்கப்படும் திருவுருவங்களும் சரியாக அமைந்து மந்திரம், பாவனை, கிரியைகளும் ஒழுங்குற நடைபெற்று உயர்வான கும்பாபிஷேகம் மூலம் திருவருட்பொலிவு அங்கு ஏற்பட்டிருக்கும் நிலையில் நாம் அதனைப் பெற்று இன்புறத் தயாராக இருக்கவேண்டும் என்பதும் முக்கியமானதல்லவா?

பூரணமான ஒரு மஹா கும்பாபிஷேகமானது அறுபத்துநான்கு வகையான அங்கக் கிரியைகளைக் கொண்டது எனச் சில ஆகமங்கள் கூற, வேறு சில ஆகமங்கள் அதனைச் சுருக்கி ஐம்பத்தைந்து கிரியைகளையுடையது எனவும் விதிக்கின்றன.

இவற்றுள் முகூர்த்த நிர்ணயம், ஆசார்ய வரணம், சல்ய உத்தாரணம், திரவியபாகம், கர்ப்ப நியாசம், கணேச பூஜை, அநுஜ்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கின ஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரட்ஷாபந்தனம், ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயோன்மீலனம், கிராமப் பிரதட்சணம், சயனாரோபணம், அக்கினி காரியம், நாமகரணம், பிம்பசுத்தி, பிம்பப் பிரதட்ஷணம், கா்ப்பக் கிரக பதவிந்நியாசம், ரத்ந நியாசம், யந்திர ஸ்தாபனம், பிம்ப ஸ்தாபனம், அஷ்ட பந்தனம், ஷடத்துவ நியாசம், சாங்கோபாங்கப் பிரத்தயங்க நியாசம், ஸ்பர்சாகுதி, யாத்ராதானம், கும்பஉத்தாபனம், சகளீகரணம், ஆவாகனம், கும்பாபிஷேகம், ஆசீர்வாதம், ரட்சாவிசர்ஜனம், அவபிருதம், ஆசார்யோற்சவம் என்பன முக்கியமான கிரியைகளாகும்.

சல்யோத்தாரணம், ஜலாதிவாசம், தானயாதிவாசம், நயோன்மீலனம், கிராமப் பிரதட்ஷணம் முதலிய கிரியைகள் புதிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும்போது நடைபெறும். ஏனையவற்றுக்கு இவை இல்லை.

கும்பாபிஷேகத்தின் அங்கக் கிரியைகளை நோக்கு முன் பாலஸ்தாபனம் என்பது பற்றிச் சிறிது நோக்குவோம். வழிபாடு நடந்து வரும் ஒரு ஆலயத்திலே திருத்த வேலைகள் செய்யவேண்டி ஏற்பட்டால், அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருடகாலகட்டம் கடந்துவிட்டால் அங்கு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும். அதற்காக அங்குள்ள மூலமூர்த்தியிலே உள்ள தெய்வ சாந்நித்தியத்தை 'கலாகர்ஷணம்' முதலிய கிரியைகளின் மூலம் கும்பத்திலும் சித்திரத்திலும் ஆவாகனம் செய்து, பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் ஆலயத்தின் வேறொரு பாகத்தில் புதிதாக விதி முறைப்படி அமைக்கப்பெற்றபாலாலயத்தில் (இளங்கோயில்) ஸ்தாபித்து அங்கு அபிஷேகம் செய்து மூர்த்தியை மறுபடி ஆவாகனம் செய்து வைப்பார். இதுவே பாலஸ்தாபனம் எனப்படும்.

கும்பாபிஷேகத்தின் சில முக்கியமான அங்கக் கிரியைகளின் அர்த்தமும், நோக்கமும் இனிக் கூறப்படும். இக்கிரியைகள் மிக விரிவானவை என்பதால் கிரியைகளின் போது நடைபெறுகின்ற யாவற்றையும் விரிவாக எடுத்துக் கூறுவதற்கில்லை.

**ஆசாரிய வரணம்:**

பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தப் போகும் சிவாசாரியரைந் தேர்ந்தெடுத்து அவரிடம் கும்பாபிஷேகக் கிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நடத்துமாறு வேண்டுவதே இதன் அர்த்தம். சிவாசாரியரை சிவனாகவே பாவித்து அவரைப் பூஜித்து கும்பாபிஷேகத் திரவியங்களை அவரிடம் ஒப்புவித்தல் எஜமானது கடமையாகும். (வரணம்-வரித்தல்)

**திரவிய விபாகம், திரவிய சுத்தி:**

கும்பாபிஷேகத்திற்குரிய பொருட்களை முறைப்படி மந்திர சகிதமாக அந்தந்த தேவைகளுக்கேற்ப பிரித்தலே திரவிய விபாகம் எனப்படும். கும்பாபிஷேகத்திற்கென ஒதுக்கிய பணத்தை (ஏறக்குறைய ஆலய நிர்மாணத்திற்குச் செலவான தொகைக்குச் சமமான தொகையையே கும்பாபிஷேகத்திற்கும் செலவிட வேண்டும் என்பது ஆகமநூற் கருத்து) பதினொரு பங்காக வகுத்து மூன்று பங்கு யாகசாலைக்கும், ஒரு பங்கு அபிஷேத்திற்கும், ஒருபங்கு சிவாசாரியாருக்கும், ஒரு பங்கு இருத்துவிக்குகளுக்கும், இரண்டு பங்கு வேதாத்தியானத்திற்கும், இரண்டு பங்கு பிராமண போஜனம், அன்னதானம் என்பவற்றுக்கும், ஒரு பங்கு மண்டலாபிஷேகத் திற்குமாகப் பங்கிடுவர். இதன் பின் இவற்றை முறைப்படி சுத்திசெய்தல் திரவிய சுத்தி எனப்படும்.

**அநுஜ்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்:**

இவற்றின் விபரங்கள் மகோற்சவம் என்ற அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன.

**பிரவேசபலி:**

இடையூறுகள் நீங்கி, ஆரம்பிக்கும் காரியம் இனிது நிறைவேறும் பொருட்டாகவும், குற்றங் குறைகள் தவிர்க்கப்படுவதற்காகவும் செய்யப்படும் இக்கிரியையும் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி இவைகளைப் போன்றதே. ஆயின் இதில் பிரம்மஸ்தானம், இந்திரஸ்தானம் முதல் ஈசானஸ்தானம் வரையிலான ஸ்தானங்களாகிய நவசந்திகளிலும் இடைக்காலத்தில் தாமே வந்துறைந்த துர்த் தேவதைகளை அவர்களுக்குரிய மண்டலங்களை வரைந்து ஆவாகனம் செய்து, வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய், கமுகம்பூ, நெற்பொரி, இளநீர் என்பவற்றை நிவேதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியுருண்டைகளையும் வழங்கி மகிழ்வித்து நதிக்கரை, காடு, மலை முதலிய இடங்களுக்குச் சென்றுவிடுமாறு வேண்டுவர்.

அதன்பின் அந்தந்த திக்கிற்குரிய அதிதேவதைகளை (இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்) ஆவாகனம் செய்து அங்கு வந்து காவல் செய்யுமாறு வேண்டப்படுகிறது.

***ரக்ஷோக்ன ஹோமம்:***

ரக்ஷோக்ன தேவரைத் (ராக்ஷசர்களை அழிப்பவர்) திருப்தி செய்யும் இக்கிரியையின் நோக்கமும், பிரவேசபலி, கிராமசாந்தி என்ற இவை போன்றதே. பிரவேச பலி மூலம் அகற்றப்பட்ட தீய சக்திகளில் ஏதாவது ஆலயத்தின் உட்பிராகாரத்தில் நுழைந்திருக்கக்கூடும் என்பதற்காக இந்த தேவரைப் பூசித்தபின் அக் கும்பத்தின் நீரால் ஆலய உட்பிராகாரம் தெளிக்கப்படும். கருவறையிலிருந்து ஆரம்பித்து வலம்வந்து கோபுரவாசல்வரை இந் நீர் தெளிக்கப்படும்.

**திசாஹோமம்**

சிவாஸ்திரதேவர், அகோராஸ்திரம், பாசுபதாஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம் ஆகிய நான்கு அஸ்திரங்களையும் முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் வஜ்ரம் முதலிய தசாயுதங்கள் புடைசூழ ஆவாகனம் செய்து நாற்றிசைக் காவல் பொறுப்பினை ஒப்படைப்பது திசாஹோமம் ஆகும். இது பெரும்பாலும் உள் வீதியில் நிகழும். நான்கு திக்கிலும் தனித்தனியே கும்பங்களும் குண்டங்களும் வைத்து ஹோமம், பூஜை என்பன நிகழும். சில இடங்களில் ஒரே இடத்தில் நான்கு திசைகளில் கும்பங்கள் வைத்தலும் உண்டு.

திசா ஹோமத்தின் முடிவில் அங்கு பூஜிக்கப்பட்ட நான்கு கும்பங்களையும் எடுத்து அவற்றின் நீரைக் கோபுர வாசலில் இருந்து வீவலமாச் சொரிந்து காவலிடப்படுகிறது.

**தீமைகளையகற்றிக் காவலிடும் பூர்வாங்கக் கிரியைகளின் தொகுப்பு நோக்கு:**

கிராம சாந்தியில் பூத பைசாச, ராட்சச, பிரம்மராட்சசர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குரிய பலியினால் திருப்திசெய்யப்பட்டு அனுப்பப்பட்டபின் கிராமத்தின் காவலரான வடுகபைரவரிடம் காவல்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பிரவேச பலிமூலம் ஆலயத்தின் வெளிப்புறச் சூழலில் இருந்திருக்கக்கூடிய தீய சக்திகளைத் திருப்தி செய்வித்து தூர இடங்களுக்கு அகற்றியபின் அந்தத் திசைகளின் காவலர்களான இந்திரன், அக்னி முதலியவர்களை அழைத்து அவர்களிடம் காவல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதற்குப்பின்னரும் உட்புறங்களில் இவற்றையும் மீறி வந்து ஒளிந்துகொண்டிருக்கும் தீய சக்திகளை ரட்சோக்ன ஹோமம் மூலம் அகற்றித் திசாஹோமத்தில் ஆயுதப்படை மூலம் உள்வீதிக்கான காவல் ஸ்திரப்படுத்தப் படுகிறது.

**சாந்திஹோமம், சம்ஹிதா ஹோமம், மூர்த்திஹோமம்**

பிரதான மூர்த்தியுடன் இணைந்த வகையில் சம்ஹிதா மந்திரங்கள், அட்டமூர்த்தி - மூர்த்தீஸ்வரர்கள், மற்றும் அகோராஸ்திர சகித பாசுபதாஸ்திரம் ஆகியவற்றைத் தனித்தனியே கும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜித்து அக்கினி வளர்த்து அங்கும் இவர்களை ஆவாகனம் செய்து ஹோமங்கள் நடத்தப்படும்.

இக் கும்பங்கள் மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்படும். பாலாலயத்தில் தமது சக்திகளை ஒடுக்கியவாறிருந்த மூர்த்தியை மறுபடி கருவறைக்கு எடுத்துச் செல்வதற்காக மூர்த்திகரத்தை அதிகரிக்கும் கிரியைகளாக இவை அமைகின்றன.

**நவக்கிரக மகம்:**

பரிவார தெய்வங்களில் நவக்கிரகங்களுக்குத் தனியிடம் உண்டு. ஆன்மகோடிகளோடு நேரடித் தொடர்பு கொண்டு தமது கதிர்வீச்சுக்களால் உலகியல் வாழ்க்கையில் பல்வேறு மாற்றங் களையும், பலாபலன்களையும் செய்கின்றவர்கள் நவக்கிரக நாயகர்கள். இவர்களைக் கும்பத்திலும், அக்கினியிலும் ஆவாகனம் செய்து உபசாரங்கள், ஆகுதிகள் வழங்கி வழிபடுவது நவக்கிரக மகம் எனப்படும். (மகம்- யாகம்).

**நயனோன்மீலனம்:**

நயன உன்மீலனம் எனப் பிரித்து கண்திறத்தல் என்ற பொருளை இச் சொல் வெளிப்படுத்தும். ஓவியம், சிற்பம் என்பன உருவாகி முடிந்ததும் இறுதியாகவே கண் திறத்தலை செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முறைப்படி பூஜை அக்கினி காரியம் என்பவற்றை நிகழ்த்தி திரையிட்டு மூர்த்தியின் திருவுருவத்திலே தங்க ஊசியால் கண்களைத் திறந்து தானியக் குவியல் மீது விக்கிரகத்தை வைத்து பொன், தேன், நெய், தானியங்கள், பிராமணர்கள் தீபம் கண்ணாடி நிறைகுடம் சந்நியாசி, பக்த ஜனங்கள் ஆகியோரை தரிசிக்கச் செய்வர். சிற்பாசாரி சம்பாவனை செய்து கௌரவிக்கப்படுவர்.

**ஜலாதிவாசம்:**

நயன உன்மீலனம் செய்யப்பட்ட விக்கிரகத்தை நீரில் அமிழ்த்தி வைத்தலே ஜலாதிவாசம் எனப்படும். இதற்கென தயார் செய்யப்பட்ட சிறு கிணற்றிலே (தொட்டி) புனித தீர்த்தங்களை நிரப்பி அதனுள் ஆசனத்தின் மீது கழுத்தளவு நீரில் கிழக்கு நோக்கி விக்கிரகத்தை இருக்கச் செய்வர். தொட்டி தயார் செய்யும் சிரமத்திற்காக பெரிய பாத்திரங்களை பயன்படுத்துவதும் உண்டு.

மீன். தவளை, பாம்பு முதலிய நீர் வாழ் பிராணிகளை பொன்னால் அல்லது வெள்ளியால் செய்து இதனுள் போடுவதுண்டு.

**தான்யாதி வாசம்:**

இதன்பின் விக்கிரகத்தை தானியங்களால் மூடி வைப்பர். இதுவே தான்யாதிவாசம் எனப்படும். இவ்விரு அதிவாசக் கிரியைகளும் பிருதி, அப்பு ஆகிய இரு அம்சங்களுடனும் பரம்பொருளுக்குள்ள தொடர்பை வலுப்படுத்துவதாக அமைகிறது. இக்கிரியைகள் புதிய விக்கிரகங்களுக்கு மட்டுமே நிகழும்.

**சயனாரோபணம்:**

தானியங்களைப் பரப்பி மான்தோல் முதலியவற்றை விரித்து அதன்மேல் மெத்தை, தலையணை, விரிப்பு என்பவற்றை அமைத்து மூர்த்தியை அங்கு எழுந்தருளச் செய்து கிழக்கே தலை வைத்து மேல்நோக்கியபடி சயனிக்கச் செய்து செந்நிறத் துணியால் மூடி இறைவனை துயில வைக்கும் பாவனையே சயனாரோபனம் ஆகும். (ஆரோபணம் - ஏற்றுதல்)

**பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை:**

புனராவர்த்தன கும்பாபிஷேகத்திற்கு மட்டும் இக்கிரியை உண்டு. மூலமூர்த்தியிலுள்ள தெய்வசாந்நித்தியத்தை கும்பத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குமுன் விசேஷ ஸ்நபனாபிஷேகம் செய்து தீபாராதனை, பூஜைகள் செய்வது மரபு. இதுவே பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை எனப்படுகிறது.

**கடஸ்தாபனம்:**

கும்பம் வைப்பதற்கான நெல், அரிசி, பயறு, உழுந்து, எள், நவதானியம், நெற்பொரி, தர்ப்பை இவற்றை உரிய மந்திரங்கள் ஓதியவாறு முறைறப்படி பரப்பி குடத்தை கழுவி நூல்சுற்றி தூபம் காட்டி இதனுள் சந்தனம், நீர், பவித்திரம், நவரத்தினம், பொன் முதலியவற்றை இட்டு மாவிலை தேங்காய் என்பவற்றை வைத்து பட்டு, பூணூல், மாலை, கூர்ச்சம், பூ, சந்தனம் இவற்றை சாத்தி கும்பாபிஷேகத்திற்குரிய பிரதான கும்பங்களை அமைத்தலே கடஸ்தாபனமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வேத மந்திரங்கள் ஓதப்படும்.

**கலாகர்ஷணம்:**

பிம்பம் எனப்படும் விக்கிரகத்திலிருந்து இறையருள் சக்தியை - தெய்வசாந்நியத்தை - கும்பத்திலே வரச்செய்தலே கலாகர்ஷணம் ஆகும். பலவிதமான நியாசங்கள் மூலமாக இதனைச் செய்து கடஸ்தாபனம் செய்யப்பட்ட கும்பத்தில் மூர்த்தியை எழுந்தருளச் செய்த பின்னர் கும்பத்தை யாகத்தில் ஸ்தாபிப்பர்.

**சலபேரம்**

பாலாலயத்தில் தற்காலிகமாக முன்னர் ஸ்தாபித்து வைத்திருந்த மூலமூர்த்தியை தர்ப்பைக் கயிற்றினால் தொடுத்து ஒரு காளைமாட்டினைக் கொண்டு அதனை அசைப்பதாகப் பாவனை செய்தவாறு சிற்பாசாரி அசைத்தெடுப்பார். அந்த பிம்பம் (விக்கிரகம்) சுத்தம் செய்யப்பட்டு மூலாலயத்தில் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்படும்.

**விஷேச சந்தி:**

பூர்வாங்கக் கிரியைகள் நிறைவுற்றதும் சிவாச்சாரியர்கள் தமது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்தபின் ஓரிடத்தில் வரிசையாக அமர்ந்து விஷேச சந்தியாவந்தனத்தில் ஈடுபடுவர். இது சகளீகரணம், அங்கநியாசம், காயத்திரி ஜபம் மற்றும் பல்வேறு வகையான தர்ப்பணங்களும் அடங்கிய கிரியைகாகும். (தர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மந்திரநீர் சொரிந்து தேவர்கள் (முதலாலனோரை மகிழ்வித்தல்)

**கோவாசம்:**

இடச் சுத்திக்காகப் பசுவை ஆலயத்தினுள்ளே சிறிது நேரம் வாசம் செய்ய வைத்து, பசுவில் உறையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் பூஜித்துப் பசுவுக்கு வாயுறை வழங்கித் தீபம் காட்டுவர்.

**தூபிஸ்தாபனம்:**

கருவறை, மற்றும் பரிவார தெய்வங்களின் சந்நிதானங்களின் மேற்பகுதியிலுள்ள விமானம் மேலே துவாரமுள்ளதாக அமைக்கப்படும். அதனை மூடி உலோகத்தால் செய்த கலசம் வைக்கப்படும் இது ஸ்தூபி எனப்படும். கருங்காலி மரத்தினால் செப்புக் கலசமும் விமானமும் இணைக்கப்படுகின்றன. இதன் இடைவெளி வரகு எனும் தானியத்தினால் நிரப்பப் படுகின்றது. இத்தானியம் மிக நீண்ட காலம் பழுதுபடாமல் இருப்பதுடன் இடியைத் தாங்கும் சக்தியுமுடையது என்பர். கலசமானது வான்வெளியில் பரந்திருக்கும் இறையருட் சக்தியை ஈர்த்து உள்ளே அனுப்பிக் கருவறையிலிருக்கும் திருவுருவத்தில் சேமிக்கும் பணியைச் செய்கிறது.

ஆசாரியார் உபசாரம் செய்யப்பட்டு தலைப்பாகை முதலியவற்றால் அலங்கரித்தவாறு இந்தத் தூபிகளை நன்முகூர்த்தத்தில் விமானத்தில் பொருத்துவார்.

**தீபஸ்தாபனம்:**

மண்டபத்திலே வைத்து சர்வாலங்காரங்களுடன் கூடிய தீபம் ஒன்றை ஏற்றி வைத்து அருகிலே ஒரு பூரணகும்பத்தையும் ஸ்தாபித்து அதனை அர்ச்சித்து வீதி வலம் வரச் செய்து மூலஸ்தானத்தில் அதனை வைத்தலே தீபஸ்தாபனம் எனப்படும். இத்தீபம் கும்பாபிஷேகம் முடியும் வரை அணையாது பாதுகாக்கப்படும்.

**யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம்:**

ஆதாரசிலை எனப்படும் பீடக்கல்லினை உரியமுறைப்படி பொருத்தி அமைத்தபின் அதன்மேல் நவரத்தினங்களையும் பஞ்சலோகம் முதலியவற்றையும் உரிய முறைப்படி மந்திரசகிதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்து நியாசம் செய்து அதன்மேல் யந்திரத்தையும் ஸ்தாபித்து அது சேதமுறா வண்ணம் அதன்மேல் செம்பஞ்சினை பரப்பி வைப்பர்.

சயனத்திலிருந்து மூர்த்தியை எழுந்தருளச் செய்து வீதி வலமாக கொண்டு வந்து இந்த ஆசனத்தின் மீது வைத்து அஷ்டபந்தன மருந்தினைச் சாத்தி மூர்த்தியை பீடத்துடன் இறுகப் பொருத்துவர்.

**யந்திரபூஜை:**

இங்கு பதிக்கப் பெறும் யந்திரமானது உலோகத்தகட்டில் வரையப்பட்ட அந்தந்த மூர்த்தியின் அம்சங்களைக் கொண்டதாக அமையும். இது கும்பாபிஷேகத்திற்கு சுமார் ஒரு மண்டலம் முன்பதாகவே தயார் செய்யப்பட்டு தினமும் அபிஷேகம் பூஜை செய்து தெய்வசாந்நியத்தை பெற்றதாக இருக்கும்.

**தைலாப்பியங்கம்: (எண்ணெய் சாத்துதல்)**

விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதும் சிவாச்சாரியர் அதற்கு எண்ணெய் சாத்திய பின் பக்தர்கள் யாவரும் தாமே தமது கைகளால் எண்ணெயை சாத்தி வணங்குவர். நல்லெண்ணய், சந்தானாதி தைலம் முதலிய வாசனை தைலங்கள் இதற்கு பயன்படும். இது பாப நிவர்த்தியை செய்யும்.

**பிம்பசுத்தி:**

மூர்த்தியின் திருவுருவத்திலேற்பட்ட தோஷங்களை நீக்குவதற்காக விம்பசுத்தி செய்யப்படுகிறது. பலவிதமான புண்ணிய தீர்த்தங்களாலும் இதற்கென விதிக்கப்பட்ட பலவிதமான மரப்பட்டை கஷாயங்களாலும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். இதனால் விம்பம் சுத்தம் அடைகின்றது.

பதினாறு கும்பங்கள் வைத்து அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு திரவியங்கள் இடப்பட்டு அதற்குரிய மந்திரங்கள் தனித்தனியே ஓதிப் பூஜிக்கப்பட்டபின்னரே அபிஷேகம் செய்யப்படுகிறது.

**விசேஷ திரவிய ஹோமம்:**

பலவிதமான சமித்துக்கள் தானிய வகைகள் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுக்குரிய மந்திரங:களை ஓதி அக்கினியில் இட்டு ஆகுதி வழங்குவர். இந்த விஷேச திரவியங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன் விஷேசமாக சொல்லப்பட்டுள்ளது.

**யாகசாலையின் அமைப்பு:**

பஞ்சபூத விளக்கமாக யாகசாலை அமைவதை முன்னர் கண்டோம். யாகசாலை கோயில் பிரகாரத்தின் உள்ளே ஈசானம், அக்கினி, வடக்கு, மேற்கு, ஆகிய திசைகளில் அமையலாம். நன்கு மெழுகி தூய்மைப்படுத்திய தரையையும் நடுவிலே வேதிகை என்று சொல்லப்படும் மேடையையும் யாகசாலையின் பிரமாணத்திற்கு ஏற்ப எண்ணிக்கையுள்ள தூண்களையும் கொண்டதாக மேலே வேயப்பட்டு வெள்ளை கட்டிய விதானத்துடன் யாகசாலை அமையும்.

ஐந்து வகையான யாகசாலைகள் உள்ளன. யாகசாலையை பதங்களாக பிரிப்பதில்தான் இந்த வேறுபாடு ஏற்படுகிறது. மாவில் தோய்த்த நூலினால் சூத்திரங்களை அடித்து (கோடுகள்) பதங்களை ஏற்படுத்துவர். 44 சூத்திரங்களையும் இருபுறமும் இடுவது ருத்திர சூத்திரக் கிரமம் எனப்படும். இதில் 43x44=1849 பதங்கள் உண்டாம். 34 சூத்திரங்கள் அடிப்பது விஷ்ணு சூத்திரக் கிரமம். 24 சூத்திரங்கள் அடிப்பது பிரம்ம சூத்திரக் கிரமமம். 14 சூத்திரங்கள் அடிப்பது மனு சூத்திரக் கிரமம். 12 சூத்திரங்கள் அடிப்பது ரவி சூத்திரக் கிரமம்.

ரவி சூத்திரக் கிரமத்தில் 121 பதங்கள் உருவாகும். கும்பங்களுக்கான வேதிகை நடுவில் அமையும். அதனைச் சுற்றிலும் சஞ்சார பதங்கள், ஓமகுண்டங்கள் பரிவார யாக கும்பங்கள் என்பன அவற்றுக்குரிய இடங்களில் அமையப்பெறும்.

ருத்திர சூத்திரக் கிரம யாகசாலையில் முப்பத்துமூன்று குண்டங்களும், விஷ்ணு சூத்திரக்கிரமத்தில் இருபத்தைந்து குண்டங்களும், பிரம்ம சூத்திரக்கிரமத்தில் பதினேழு குண்டங்களும், மநுசூத்திரக்கிரமம், ரவிசூத்திரக்கிரமம் இரண்டிலும் ஒன்பது குண்டங்களும் அமையும்.

வசதி குறைந்த இடங்களில் ரவிசூத்திரக்கிரம யாகசாலை அமைத்து அங்கு ஐந்து குண்டங்கள் அமைப்பர். ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையிலும் கிழக்கே சதுரக் குண்டமும், தென்கிழக்கே யோனி குண்டமும் தெற்கில் அர்த்தசந்திரக் குண்டமும் தென்மேற்கில் திரிகோண குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும் வடமேற்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும் ஈசானத்தில் எண்கோண குண்டமும் அமையும். பிரதான குண்டம் வேதிகைக்கு முன்பாக அல்லது ஈசானத்திலும் கிழக்குக்குமிடையே அமையும்.

ஐவகை யாகசாலைகளுக்கும் முறையே நூறு, அறுபத்து நான்கு, முப்பத்தாறு, பதினாறு, என்ற எண்ணிக்கையில் தூண்கள் அமையும். மாவிலை, தோரணம், மாலைகள், பட்டு, கொடி, கரும்பு, கமுகு, இளநீர் முதலியவற்றால் யாகசாலையை அலங்கரிப்பர். அஷ்டமங்கலம், தசாயுதம் என்பன யாகசாலையை அலங்கரிப்பன.

**யாகபூஜை:**

யாகாசலையில் பிரவேசிக்கும் சிவாசாரியார் முதலில் விக்நேஸ்வரரர் பூஜை, புண்யாகவாசனம் என்பவற்றைச் செய்த பின் சூரிய பூஜை, துவார பூஜை தோரணங்கள் திரிசூலங்கள், கொடிகள் ஆகியனவற்றின் அதிதேவதைகளுக்கான பூஜை, பரிவார கும்ப பூஜை, அஷ்டமங்கல பூஜை, யாகேஸ்வரன் யாகஸேஸ்வரி பூஜை என்வற்றையும் செய்வர்.

இதன்பின் பிரதான வேதிகையிலுள்ள ஸ்நபன கும்பங்களில் பஞ:சாசனை பூஜை, ஆவரண பூஜை என்பவற்றை நிகழ்த்திப் பலவித நியாசங்கள் மூலமாக மந்திரசக்திகளைக் கும்பத்திலே பதித்துப் பூஜிப்பர்.

பின்னர் பிரதான குண்டத்திலே பிரதான சிவாசாரியார் அக்கினி காரியம் செய்ததும் அதிலிருந்து அக்கினியைப் பிரித்தெடுத்து ஏனைய குண்டங்களுக்குரிய சிவாசாரியார்கள் தங்கள் குண்டங்களில் இட்டு அக்கினிகாரியம் செய்வர்.

இவ்வாறு பிரதான குண்டத்திலிருந்து அக்கினியை பிரித்துக் கொடுப்பது அக்கினி விபஜனம் எனப்படும்.

யாகபூஜை, பகலில் சூரிய பூஜையுடனும் இரவில் சந்திர பூஜையுடனும் ஆரம்பிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகபூஜை, அக்னிகார்யம் என்பவற்றின் மிக விரிவான விளக்கம் தனியாகப் பிறிதோர் அத்தியாயத்திலும் தரப்படுகிறது.

**ஸ்பர்சாகுதி:**

யாகசாலையிலே அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து பூஜிக்கப்பட்ட தெய்வ சாந்நித்தியத்தை பிம்பத்திலே ஒடுக்குவதே ஸ்பர்சாகுதியாகும். அக்கினியுடன் கும்பத்தையும் கும்பத்துடன் பிம்பத்தையும் தர்ப்பைக் கயிறு, நூல் முதலியவற்றால் நாடீசந்தானம் செய்து (தொடுத்து) மும்முறை யாககுண்டத்திலும் மூலமூர்த்தியிலுமாக ஸ்பர்சாகுதி செய்து இறுதியில் நாடீ சந்தானத்தை மூலமூர்த்தியில் சேர்த்து விடுவர்.

**பூர்ணாகுதி:**

இறுதியில் பிரதான சிவாசாரியார் பிரதான குண்டத்தில் பூர்ணாகுதி வழங்கியதும் ஏனைய சிவாசாரியர்களும் தத்தம் குண்டங்களில் பூர்ணாகுதி கொடுத்துப் பிரதான குண்டத்தில் சம்யோஜனம் (சேர்த்தல்) செய்வர். பின்பு பிரதான குண்டத்தில் மஹாபூர்ணாகுதி வழங்கி ரக்ஷை எடுத்துக் கும்பத்திற்குச் சாததுவர்.

**கும்ப உத்தாபணம்:**

குறிக்கப்பட்ட சுபநேரத்தில் சகலவித தோஷங்களும் நிவர்த்தியாகும் பொருட்டு நவக்கிரகதானம், யாத்ராதானம் என்பன வழங்கியபின் பரிசாரகரை அலங்கரித்து அவரை வாகனமாகப் பாவித்து அவர் சிரசில் பிரதான கும்பத்தை வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க ராஜோபசாரங்களுடன் வீதி வலமாக எழுந்தருளிவிப்பர்.

ஸ்தூபிக்கென அமைக்கப்பட்ட கும்பத்தையும் இதனோடு அல்லது முன்பே வலமாகக் கொண்டு வந்து முதலில் ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்வர்.

**கும்பாபிஷேகம்:**

மங்கலவாத்தியங்களும், வேதகோஷங்களும் முழங்கப் பிரதான கும்பமும் அஷ்டவித்யேஸ்வர கும்பங்களும் மூலமூர்த்திக்கு முன்னர் வைத்து நியாசங்கள் செய்யப்பட்டபின் அபிஷேகம் செய்யப்படும். மஹாஹவிர் நிவேதனம் என்னும் விசேஷ நைவேத்தியத்தை நிவேதித்தபின் கதவைச் சாத்திவிடுவர். கதவு பூட்டியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் உள்ளே தேவர்கள் பூஜை செய்வதாக ஐதீகம்.

**தசதர்சனம்:**

இதன்பின் பண்ணிசை நிகழ்த்திக் கதவினைத் திறந்து மங்கலப் பொருட்களான பசு, நிறைகுடம், தீபம், கண்ணாடி முதலியவற்றையும், சுமங்கலிகளையும் அந்தணர்களையும், ஆலய எசமானையும், சந்நியாசியையும், அரசனையும் தரிசிக்கச் செய்வர். பின்பு தர்மகர்த்தாக்கள், உபயகாரர் முதலியவர்களுக்கு அபிஷேகம் நிகழும். (அவபிருத ஸ்நானம் என்று இதனைக் கூறுவர்)

**மஹாபிஷேகம்:**

பஞ்சாமிர்தம், பால், இளநீர் முதலிய சகல பொருட்களாலும் மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்து ஸ்நபனாபிஷேகம் செய்வது மஹாபிஷேகம் எனப்படும். இதன்பின் ஆசார்ய பூஜை நிகழும். சிவாசார்யர்களை உபசரித்து தட்சிணை தாம்பூலங்கள் வழங்கி நமஸ்கரித்து அவர்களது ஆசி பெறுவதுடன் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெறும். இரவு கல்யாண உற்சவம், திருவூஞ்சல் என்பன நிகழும்.

**மண்டலாபிஷேகம்:**

கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கொண்ட ஒரு மண்டலத்துக்கு விஷேச அபிஷேக ஆராதனைகள் நிகழும். திரிபட்சம் (மூன்று பட்சங்கள் கொண்டது) ஒரு மண்டலம். ஒரு பட்சம் பதினைந்து நாள். எனவே நாற்பத்தைந்து நாட்களே மண்டலாபிஷேகத்திற்கு உரிய காலமாகும்.

**சங்காபிஷேகம்:**

நாற்பத்தைந்தாம் நாள் சங்காபிஷேகம் நடைபெறும். பூஜைக்குரிய உபகரணங்களுள் சங்கு மிகத் தூய்மையானது. சங்கில் விடப்படும் நீர்புண்ணிய தீர்த்தத்திற்கு நிகராகிறது. நூற்றெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்திர சத சங்கம்) ஆயிரத்தெட்டுச் சங்கினாலும் (அஷ்டோத்தர சஹஸ்ர சங்கம்) வசதிக்கேற்பச் சங்காபிஷேகம் நிகழும்.

பிரதான கும்பத்தில் வலம்புரிச் சங்கும் ஏனையவற்றிற்கு இடம்புரிச் சங்கும் உபயோகிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாகசாலை, யாகபூஜை என்பவற்றின் சிறப்பான விளக்கம்

## யாகம்

இந்துசமய மரபிலே யாகம் என்பது தொன்மையானது. வைதிக மரபில் வழிவழி வந்தது. வேள்வி எனத் தமிழில் கூறுவர். வேட்டல் என்பது யாகம் செய்தல் என்னும் பொருளை உடையது. இதே சொல்லுக்கு விருப்பம் என்ற கருத்தும் உண்டு. எனவே யாகத்தை விருப்புடன் செய்யவேண்டும் என்பது புலப்படும்.

யாகம் என்பது 'யஜ்' என்பதை அடியாகக் கொண்டது. யஜ் - வழிபாடு. ஆகவே பக்திபூர்வமான ஒரு வழிபாட்டுமுறையே யஜ்ஞும் எனப்படும் யாகம் ஆகும். யாகம் செய்கிறான் என்பதற்கு 'தனோதி' என்றொரு சொல் வடமொழியில் பயன்படுகிறது. இச்சொல், நீட்டுதல், விரித்தல், செய்தல் என்ற கருத்துக்களைக் கொண்ட 'தந்' என்ற வினையடியை உடையது. எனவே மிக விரிவாக நீண்ட முறையில் இறைவழிபாடு செய்வதற்குரிய ஒரு முறையே யாகம் என்பது புலப்படும்.

வேதகாலத்தில் இருந்த யாக வழிபாட்டு முறைகள் ஆகம வழிபாட்டு மரபிலும் தொடர்கின்றன. ஆகம மரபில் வருகின்ற எல்லாக் கிரியைகளிலும் யாகங்கள் இடம்பெறுகின்றன.

யாகம் என்று சொல்லும்போது அக்னி வழிபாடே முதன்மை பெறுகிறது. அதற்கு அங்கமாக அக்னி குண்டத்தருகே யாக மேடையும் அதைச்சூழ யாக மண்டபமும் அமைத்து பல்வேறு தேவதைகளை அங்கு ஆவாஹனம் செய்து வழிபடுதல் இடம்பெறலாயிற்று. ஆனால் இன்றைய யாக வழிபாட்டைப் பொறுத்தவரை அக்னிவழிபாடு சிறிது சுருங்கி, யாக வழிபாட்டின் ஓர் அங்கமாக அமைந்திருக்கிறது எனவும் கூறலாம்.

மந்திரங்களை மனனம் செய்தும் உச்சரித்தும் அக்கினியில் அவிசொரிந்தும் நிகழ்த்துகின்ற யாக வழிபாட்டில் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் இணைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத்தால் மூன்று பயன்கள் விளைகின்றன என காஞ்சிப் பெரியவர் விளக்கம் தருகிறார்.

1. இவ்வுலக வாழ்க்கை மகிழ்ச்சியாக இருப்பதற்கான இறையருள் கிட்டுதல்.

2. சுவர்க்கலோக இன்பங்கள் பெறுதல்.

3. முத்திநிலை அடைதல்.

"ஸஹ யஜ்ஞா ப்ரஜா ஸ்ருஷ்ட்வா" (பிரஜைகளை யாகங்களோடு சிருஷ்டித்தார்) எனக் கீதை சொல்வதனால் மனித வாழ்வில் யாகங்களுக்குரிய முக்கியத்துவம் புலப்படுகிறது.

மேலும் கீதையில்,
"தேவான் பாவய தானேன தே தேவா பாவயந்து வ:
பரஸ்பரம் பாவயந்த: ஸரேய: பரம வாப்ஸ்யத." எனவும் கூறப்படுகிறது.

(யாகத்தைக் கொண்டு நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்யுங்கள். அவர்கள் மழை முதலியவற்றால் உங்களுக்கு நன்மையைச் செய்யட்டும். பரஸ்பரம் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு மேலான சுகத்தைப் பெறுங்கள்)

**யாகபூஜை**

யாகபூஜை எனும்போது யாகமண்டபம், அதன் அமைப்பு, அதன் உறுப்புக்கள், தத்துவார்த்த உட்பொருள், அங்கு அமைக்கப்படும் வேதிகை, மற்றும் கும்பங்கள் வைக்கப்படும் இடங்கள், குண்டங்களின் அமைவிடமும் அமைப்பும், கும்பங்களிலும் யாக மண்டப உறுப்புக்களிலும் ஆவாஹனம் செய்து பூஜிக்கப்படும் தேவதைகள் போன்ற விபரங்களை நன்கு புரிந்துள்ள நிலையில் ஒரு சிவாசாரியர் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் ஒருங்கு குவிந்த நிலையில் யாகக் கிரியைகளில் ஈடுபட முடியும் என்பது தெளிவு.

**யாகமண்டபத்தின் விளக்கம்**

யாகசாலை அல்லது யாக மண்டபம் என்பது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவோலக்கம் போன்றதே. அதாவது ஒரு சக்கரவர்த்தி தனது பரிவாரங்கள் சகிதம் அத்தாணி மண்டபத்தில் வீற்றிருப்பதைப் போலவே நாம் நமது வழிபடு தெய்வத்தை அதன் பரிவாரங்கள் சகிதம் யாகமண்டபத்தில் வீற்றிருக்கச் செய்கிறோம்.

திருவோலக்கத்திலிருக்கும் மன்னனிடம் புலவர்கள் சென்று புகழ்கூறிக் கவிபாடுவார்கள். மக்கள் சென்று குறைநிறைகள் சொல்லி வேண்டுதலைத் தெரிவிப்பார்கள். அவ்வாறே யாகசாலையில் வீற்றிருக்கும் தெய்வத்திற்கும் நாம் சகலவித உபசாரங்கள் வழங்கி, வாழ்த்திப், புகழ்பாடிக், குறையிரந்து வேண்டுதல்களைச் சமர்ப்பிக்கிறோம். ராஜோபசாரம், தேவோபசாரம் என இவ்விரு உபசாரங்களையும் **பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்** அவர்கள் ஒப்பிட்டுக் காட்டி விளக்கியுள்ளார்.

ஆலயத்தின் கருவறையிலே மூலமூர்த்தி வடிவிலும், சபாமண்டபம் அல்லது வசந்தமண்டபத்திலே உற்சவ மூர்த்தி வடிவிலும் வீற்றிருக்கும் அதே தெய்வத்தை இங்கு யாகத்திலே கும்பத்தின் உருவத்திலே எழுந்தருளச் செய்கிறோம்.

**கும்பத்தின் நோக்கம்**

கும்பமானது சர்வ தேவதா ஸ்வரூபம் எனச் சொல்லப்படுகிறது. எந்தத் தெய்வ சக்தியையும் ஆவாகனம் செய்து வழிபடுகின்ற ஓர் அதிஷ்டானமாக - அருவுருவ ஸ்தானமாக கும்பம் விளங்குகிறது. விரத பூஜைகளின்போது கும்பத்திலேயே தேவதைகளை எழுந்தருளச் செய்கிறோம். கும்பாபி ஷேகத்தின்போது மூலமூர்த்தியிலிருக்கும் பெரும் சக்தியைத் தற்காலிகமாக கும்பத்தில் ஆவாகனம் செய்தே யாகசாலையில் எழுந்தருளச் செய்கிறோம்.

கும்பத்தின் குடம் அந்த தேவதையின் உடல் ஆகிறது. அதில் சுற்றப்படும் நூல், நாடி நரம்புகளாகவும், நிரப்பப்படும் நீர் குருதியாகவும், அதில் போடப்படும் இரத்தினங்கள் சுக்கிலமாகவும், ஏனைய வாசனைப்பொருட்கள் மற்றும் உலோகம் முதலியன தாதுப் பொருட்களாகவும், தேங்காய் சிரசு ஆகவும், மாவிலை சிகை ஆகவும், தர்ப்பைக் கூர்ச்சம் ஜடாமுடி ஆகவும், ஆவாகன மந்திரம் அதன் உயிர் ஆகவும் அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தர்ப்பை ஜடாமுடி என்பதும் மாவிலை சிகை என்பதும் கவனிக்கத்தக்கது. சிகை - தலைமயிர், ஜடாமுடி - தலைமயிரால் ஆன மகுடம். இவை ஞானத்தின் அடையாளங்கள்.

**தர்ப்பையின் சிறப்பு**

இங்கு மாவிலையும் தர்ப்பையும் முக்கியத்துவம் பெறுகின்றன. இரண்டுமே சக்திச் செறிவும் நல்ல அதிர்வுகளும் கொண்டவை. பிராணசக்தியை ஈர்த்துச் சேமித்து வைக்க உதவுபவை.

தர்ப்பை கூர்ச்ச வடிவில் அங்கு போடப்படுகிறது. கும்பாபிஷேக வேளையில் கும்பத்தினுள்ளே இன்னொரு கூர்ச்சம், பவித்திரம் என்பவையும் தர்ப்பையாலானவையாகப் போடப்படுகின்றன.

தர்ப்பை நமது கிரியைகளில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது ஒருவகைப் புல். மஹாவிஷ்ணுவின் அவதாரத்துடன் தொடர்புடையது இது. மிகவும் சக்திச் செறிவும் நல்ல அதிர்வும் உடையது தர்ப்பை.

கிரியைகள் செய்யும்போது தர்ப்பாசனத்தில் அமரும்படி சொல்லப்படுகிறது. நமது ஆன்மசக்தி பூமிக்குள் செல்வதை இது தடுக்கிறது. கிரியையின் தொடக்கத்தில் சங்கல்பம் எனப்படும் கிரியை உறுதிமொழியின் போது வலதுகை மோதிரவிரலிலே தர்ப்பையால் செய்யப்பட்ட பவித்திரம் அணியப்படுகிறது.

ஹோமத்தில் தர்ப்பை மிக முக்கியமாகப் பயன்படுகிறது. ஓமகுண்டத்தைச் சுற்றிப் போடப்படும் விஷ்டரம், பரிஸ்தரணம் என்பவற்றிலும் தொடுபுல், ஞானகட்கம், தர்ப்பைக் கயிறு எனப் பலவிதமான பிரயோகங்களிலும் தர்ப்பை சிறப்பிடம் பெறுகிறது.

**யாகசாலையின் அமைப்பு:**

யாகமண்டப அமைப்பானது எல்லா ஆலயங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும். ஆயினும் பரிவார கும்பங்களில் ஆவாகனம் செய்து பூஜிக்கப்படும் தேவர்கள் மூலமூர்த்திக்கு ஏற்ப மாறுபடும். பிரதான மூர்த்தி யார் என்பதைப் பொறுத்து யாகத்தில் சுற்றியுள்ள கும்பங்களின் எண்ணிக்கையிலும், அவற்றில் ஆவாகனம் செய்து பூஜிக்கப்படும் தேவதைகளிலும் வேறுபாடு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம், சங்காபிஷேகம் என்பவற்றுக்கு அமைக்கப்படும் யாக மண்டபத்திற்கும் மஹோற்சவ யாக மண்டபத்திற்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. ஆனால் மஹோற்சவ யாகம் மேற்கு நோக்கி அமையும். கும்பாபிஷேக யாகசாலைகள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியதாக ஒரு குண்டத்திலிருந்து முப்பத்து மூன்று குண்டம் வரை வசதிக்கு ஏற்ப அமையும். சிலவேளைகளில் கும்பாபிஷேக யாகசாலைகளும் மேற்கு நோக்கியதாக அமைக்கப்படுவதுண்டு.

யாகசாலை கோயில் பிரகாரத்தின் உள்ளே (முதலாம், இரண்டாம், மூன்றாம் பிராகாரங்களுக்குள்) ஈசானம், அக்கினி, வடக்கு, மேற்கு, நிருதி, வாயு ஆகிய திசைகளில் அமையலாம். (இதில் மேற்கு மத்யமம். நிருதி, வாயு அதமம்) நன்கு மெழுகி தூய்மைப்படுத்திய தரையையும் நடுவிலே வேதிகை என்று சொல்லப்படும் மேடையையும் யாகசாலையின் பிரமாணத்திற்கு ஏற்ப எண்ணிக்கையுள்ள தூண்களையும் கொண்டதாக மேலே வேயப்பட்டு வெள்ளை கட்டிய விதானத்துடன் யாகசாலை அமையும்.

சாதாரண யாகசாலையானது நான்கு புறமும் வாயில்கள் கொண்டதாகவும் 16 தூண்களால் தாங்கப்பட்டதாகவும் இருக்கும். நடுவில் ஒரு வேதிகை (மேடை) இருக்கும். 16 தூண்களில் நான்கு தூண்கள் மேடையின் நான்கு மூலைகளிலும் நான்கு தூண்கள் நான்கு மூலைகளிலும் அமையும். ஏனைய எட்டும் நான்கு வாசல்களின் இருபுறமுமாக அமையும்.

மாவிலை, தோரணம், மாலைகள், பட்டு, கொடி, கரும்பு, கமுகு, இளநீர் முதலியவற்றால் யாகசாலையை அலங்கரிப்பர். அஷ்டமங்கலம், தசாயுதம் என்பனவும் யாகசாலையை அலங்கரிப்பன.

நான்கு திசைகளிலும் உள்ள ஒவ்வொரு வாயில்களிலும் தோரணமும், நடுவில் ஒரு சூலம், இருபக்கங்களிலும் ஒவ்வொரு சூலமும் இருக்கும். தோரணங்களின் நுனிகளில் ஏழு, ஐந்து, அல்லது மூன்று தர்ப்பைகளால் ஆன இருபது அங்குல நீளமான தர்ப்பை மாலைகள் தொங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத் திக்குகளிலும் எட்டுக் கொடிகள் உள்ளன. கிழக்கு முதல் வலமாக முறையே இவை மஞ்சள், சிவப்பு, நீலம், புகைநிறம், வெள்ளை, சித்ரவர்ணம், பொன்னிறம், பளிங்குநிறம் ஆகிய நிறங்களில் அமைந்திருக்கும். எண்திசைக்குமுரிய யானைகளின் உருவங்கள் அவ்வக் கொடிகளில் வரையப்பட்டிருக்கும்.

நடுவிலுள்ள வேதிகையைச் சுற்றி தெய்வ மாதர்களான ஊர்வசி, மேனகை, ரம்பா, திலோத்தமை, சுமுகி, சுந்தரி, காமுகி, காமவர்த்தனி ஆகியோர் தாங்கிநிற்கும் அஷ்டமங்கலங்கள் சித்திரங்களாக வரையப்பட்டிருக்கும். இதேபோல யாக கும்பங்கள் இருக்கும் சுற்றில் தசதிக் பாலகர் கும்பங்களினருகே தசாயுதங்கள் வரையப்பட்டிருக்கும்.

யாகமண்டபத்தினுள்ளே கும்பங்கள் வைக்கப்படும் இடங்களும் ஹோமகுண்டங்கள் அமையும் இடங்களும் சிவாசாரியர் பூஜை செய்வதற்காக நடமாடுகின்ற சஞ்சார பதங்களும் தனித்தனியே வகுக்கப்பட்டு தேவபதம், மானுடபதம், ராக்ஷசபதம் என்ற பெயர்களில் வகுக்கப்பட்டிருக்கின்றன. வாயுமூலையில் சந்திரகும்பமும் அதைச் சுற்றி முளைப் பாலிகைகளும் வைக்கப்படும். ஈசான மூலையில் யாகேஸ்வரன், யாகேஸ்வரி இருக்கையும் நிருதி மூலையில் புண்யாக, பஞ்சகவ்ய பூஜைகளுக்கான மேடையும் இருக்கும்.

ஐந்து வகையான யாகசாலைகள் உள்ளன. யாகசாலையை பதங்களாக பிரிப்பதில்தான் இந்த வேறுபாடு ஏற்படுகிறது. மாவில் தோய்த்த நூலினால் சூத்திரங்களை அடித்து (கோடுகள்) பதங்களை ஏற்படுத்துவர். 44 சூத்திரங்களை இருபுறமும் இடுவது **ருத்திர சூத்திரக் கிரமம்** எனப்படும். இதில் 43x43=1849 பதங்கள் உண்டாகும். 34 சூத்திரங்கள் அடிப்பது **விஷ்ணு சூத்திரக் கிரமம்.** இதில் 33x33=1089 பதங்கள் அமையும். 24 சூத்திரங்கள் அடிப்பது **பிரம்ம சூத்திரக் கிரமம்.** இதில் 23x23=529 பதங்கள் அமையும். 14 சூத்திரங்கள் அடிப்பது **மனு சூத்திரக் கிரமம்**. இதில் 13x13=169 பதங்கள் அமையும். 12 சூத்திரங்கள் அடிப்பது **ரவி சூத்திரக் கிரமம்.** இதில் 11x11=121 பதங்கள் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத்திர சூத்திரக் கிரம யாகசாலையில் முப்பத்துமூன்று குண்டங்களும், விஷ்ணு சூத்திரக்கிரமத்தில் இருபத்தைந்து குண்டங்களும், பிரம்ம சூத்திரக்கிரமத்தில் பதினேழு குண்டங்களும், மநுசூத்திரக்கிரமம், ரவிசூத்திரக்கிரமம் இரண்டிலும் ஒன்பது குண்டங்களும் அமையும்.

வசதி குறைந்த இடங்களில் ரவிசூத்திரக்கிரம யாகசாலை அமைத்து அங்கு ஐந்து குண்டங்கள் அமைப்பர். ஒவ்வொரு வரிசையிலும் கிழக்கே சதுரக் குண்டமும், தென்கிழக்கே யோனி குண்டமும் தெற்கில் அர்த்தசந்திரக் குண்டமும் தென்மேற்கில் திரிகோண குண்டமும், மேற்கில் விருத்த குண்டமும் வடமேற்கில் அறுகோண குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும் ஈசானத்தில் எண்கோண குண்டமும் அமையும். பிரதான குண்டம் வேதிகைக்கு முன்பாக அல்லது ஈசானத்திலும் கிழக்குக்குமிடையே அமையும்.

ஐவகை யாகசாலைகளுக்கும் முறையே நூறு, அறுபத்து நான்கு, முப்பத்தாறு, பதினாறு, என்ற எண்ணிக்கையில் தூண்கள் அமையும்.

ருத்ர சூத்திரக்கிரம யாகசாலையை எடுத்துக்கொண்டால் நடுவில் இருக்கும் பதம் **சிவபதம்** எனப்படும். இதனைச் சுற்றியுள்ள எட்டுப் பதங்கள் **சக்தி பதங்கள்.** அதற்கு வெளியே உள்ள பதினாறும் **நாத பதங்கள்.** அதற்கு வெளியே உள்ள இருபத்துநான்கும் **பிந்து பதங்கள்.** அதற்கு வெளியே உள்ள முப்பத்திரண்டும் **சதாசிவ பதங்கள்**. அதற்கு வெளியே நாற்பது **மகேஸ்வர பதங்கள்.** அதற்கு வெளியே நாற்பத்தெட்டு **அஷ்டவித்யேஸ்வரர்** பதங்கள். அதற்கு வெளியே ஐம்பத்தாறு **ஈசபதங்கள்.** அதற்கு வெளியே அறுபத்துநான்கு **சுத்தமாயா பதங்கள்.** அதற்கு வெளியே எழுபத்திரண்டு **மந்திர பதங்கள்.** அதற்கு வெளியே எண்பது **வர்ணபதங்கள்.** அதற்கு வெளியே எண்பத்தெட்டு **கணபதங்கள்.** அதற்கு வெளியே 96 **பிரகிருதி பதங்கள்.** அதற்கு வெளியே 104 **காலபதங்கள்**. அதற்கு வெளியே 112 **கலாபதங்கள்.** அதற்கு வெளியே 120 **வித்யாபதங்கள்.** அதற்கு வெளியே 128 **வைஷ்ணவபதங்கள்**. அதற்கு வெளியே 136 **அவித்யா பதங்கள்.** அதற்கு வெளியே 144 **விக்ருதி பதங்கள்.** அதற்கு வெளியே 152 **பிரம்மபதங்கள்**. அதற்கு வெளியே 160



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தைவ பதங்கள்.** அதற்கு வெளியே 168 **ராட்சத பதங்கள்.** இவ்வாறு ஆவரணங்களாக அமையும்.

இந்த உத்தமோத்தம ருத்ரசூத்திரக்கிரம யாகசாலையில் பிந்து - சதாசிவ பதங்களுக்கிடையில் எட்டு, சுத்தமாயா - மந்திர பதங்களுக்கிடையில் எட்டு, காலபதங்கள் - கலாபதங்களுக்கிடையில் எட்டு, விக்ருதி - பிரம்ம பதங்களுக்கிடையில் எட்டு, என முப்பத்திரண்டு குண்டங்களுடன் பிரதான குண்டமுமாக முப்பத்துமூன்று குண்டங்கள் அமையும். விஷ்ணுசூத்திரத்தில் வெளியே எட்டுக் குண்டங்கள் குறைவதனால் 25 குண்டங்களும் இவ்வாறே பிரமசூத்திரக் கிரமத்தில் இன்னும் எட்டுக் குறைவதனால் 17 குண்டங்களும், மநுசூத்திரக் கிரமத்தில் இன்னும் எட்டுக் குறைவதனால் ஒன்பது குண்டங்களும் அமையும். இதேபோலவே ரவி சூத்திரத்திற்கும் ஒன்பது குண்டங்களே.

**யாகபூஜை:**

யாகபூஜை ஆரம்பமாகுமுன் பூர்வாங்கக் கிரியைகள் பல செய்யப்படும். அநுஜ்ஞை, விக்னேஸ்வர பூஜை, பஞ்சகவ்ய பூஜை, புண்யாகவாசனம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் ஆகியன இவற்றுள் முக்கியமானவை. யாகபூஜையின் தேவைக்கேற்ப இன்னும் பல கிரியைகள் பூர்வாங்கமாகச் செய்யப்படுவதுண்டு.

யாகசாலையின் உள்ளே அக்கினி மூலையிலுள்ள அக்னி கும்பத்திற்கு அடுத்ததாக வடக்குப்பக்கத்தில் இருப்பது சூரிய கும்பம். முதலில் அதற்குப் பூஜை ஆரம்பமாகும். சூரிய அனுஜ்ஞை பெற்றபின் கிழக்கு வாசலில் (பூர்வ த்வாரம்) பூஜை ஆரம்பமாகும்.

சூரிய பூஜையின்முன் சிவாசாரியர் தம்மைச் சூரியனாக ஆக்கி (பாவனை) அதனை நிகழ்த்தியபின் அதனை மாற்றுவதற்காக கால் கழுவி விபூதி தரித்தபின் மீண்டும் சிவோகம்பாவனை செய்து வேறு விசேஷார்க்யம் தயார் செய்துகொண்டே பூர்வ த்வாரத்தில் பூஜை ஆரம்பமாகும். நான்கு வாயில்களிலும் அந்தந்த வாசல்களுக்குரிய உறுப்புக்களையும் அவற்றின் தெய்வீக சக்திகளையும் முதலில் பூஜித்தபின் யாகமண்டபத்துள் நுழைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பங்களைப் பூஜிக்கும் ஒரு மரபும் முன்பு இருந்தது. (இப்போதும் தீக்ஷா யாகம் அவ்வாறே பூஜிக்கப்படுகிறது) ஆனால் இப்போது ஒவ்வொரு துவாரமும் பூஜிக்கப்பட்டபின் அந்தத் துவாரத்தினூடாக உள்ளே நுழைந்து அங்குள்ள கும்பங்களைப் பூஜிப்பது வழக்கமாக உள்ளது.

நவக்கிரகங்கள், நான்கு வேதங்கள், நான்கு யுகங்கள், ஐந்து கலைகள், அஷ்ட கஜங்கள் மற்றும் தோரணம், சூலம், கொடி, பதாகை முதலியவற்றுக்கான தேவதைகள் என்பன எல்லாம் யாகசாலையின் பல்வேறு பாகங்களில் அர்ச்சிக்கப்படுகின்றன. இங்கு இன்னொரு முக்கியமான விடயம் கவனிக்கப்படவேண்டும். ஒரே யாகசாலையில் பல்வேறு ஸ்தானங்களில் ஒரே தெய்வசக்தி ஆராதிக்கப்படுவதை அவதானித்துச் சிலர் குழப்பமடைவதுண்டு. உதாரணமாக கணபதி, சரஸ்வதி, மஹாலக்ஷ்மி, ஆகியோர் நான்கு துவாரங்களிலும் பூஜிக்கப்படுகின்றனர். மஹாலக்ஷ்மி மீண்டும் யாகத்தினுள்ளும் கும்பத்தில் பூஜிக்கப்படுகிறாள். கணபதியின் வேறுபட்ட மூர்த்தங்கள் யாககும்பங்களில் பூஜிக்கப்படுகின்றன. எங்கும் நிறைந்திருக்கும் இறைசக்தியை ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் நாம் ஆராதிக்கவேண்டிய தேவை ஏற்படும்போது அங்கங்கே அவரது சக்தி வெளிப்படும் என்பதே இதன் தத்துவ விளக்கமாகும்.

பொதுவாக சாயங்காலத்தில் யாகபூஜை ஆரம்பிப்பதே மரபு. சந்திரகும்ப பூஜையும் அதனோடிணைந்த அங்குரார்ப்பணமும் சாயங்காலத்திற்குரியது. பயிர் முளைத்தலுக்கு சந்திரனே காரணர். எனவே கிருத்திகா, ரோகிணி சமேதராக அமிர்தேஸ்வரர் என்ற பெயரில் சந்திரனை ஆராதித்து, அங்குரார்ப்பணமும் செய்தபின் யாகபூஜை தொடங்குவர்.

ஒரு நாளில் பகல், இரவு என இருகால யாகபூஜைகள் நடைபெறவேண்டும். பகலில் சூரிய பூஜையுடனும் இரவில் சந்திர பூஜையுடனும் யாகபூஜை ஆரம்பிக்கும். யாகபூஜை நடைபெறும் நாட்கள் ஒற்றைப்படையாகவும், காலம் இரட்டைப்படையாகவும் அமையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குவாயிலின் தேவதைகள் அர்ச்சிக்கப்பட்டதும் துவாரத்தின் இடப்புறம் இரண்டு கும்பம், வலப்புறம் ஒருகும்பம் என மூன்று கும்பங்கள் பூஜிக்கப்படும். இவ்வாறே தெற்கு, மேற்கு, வடக்குத் துவாரங்களும் எண்திசைக் கொடிகளும் பதாகைகளும் பூஜிக்கப்படும்.

இதன்பின் அஷ்டபைரவர்களை எட்டுத்திக்கிலும் வணங்கி அவர்கள் மகிழ்ச்சியடைந்து யாகத்தைக் காப்பதாக பாவனை செய்யவேண்டும். பஞ்சகலைகளில் சாந்திகலை முதலிய நான்கும் நான்கு துவாரங்களினருகே கும்பங்களில் பூஜிக்கப்பட்டன. இப்போது யாகசாலை மத்தியில் மேற்புறத்தில் கட்டப்பட்டுள்ள கொடியில் சாந்தியதீதகலை பூஜிக்கப்படும்.

நான்கு வாசல்களின் வெளிப்புறத்திலே வாசலருகே நால்வேதங்களுக்கும் தனித்தனியே கும்பங்கள் வைக்கப் பட்டிருக்கும். மேஷம் முதலிய பன்னிரு இராசிகளின் ஸ்தானத்தில் போட்டிருக்கும் 12 கம்பங்களும் துவாதச ஆதித்தியர்கள் எனப்படும் 12 சூரியர்களுக்குரியன. கிழக்குப்புற வாயிலின் வடக்குப்புறக் கம்பத்திலேயே ஆரம்பிக்கவேண்டும். நடு வேதிகையுடன் இணைந்துள்ள நான்கு கம்பங்களும் தர்மன், ஞானன், வைராக்யன், ஐஸ்வர்யன் ஆகியோருக்குரியவை. இவை அக்னி திசையில் அதாவது முன்புறத் தெற்குக் கம்பத்தில் ஆரம்பமாகின்றன.

இதன்பின் புற்களால் வேயப்பட்ட கூரைத்தடிகள், புற்கள், மூங்கில்கள், அவற்றின் கட்டுக்கள், தூண்கள், மேற்கட்டி, தர்ப்பை மாலை முதலிய யாவும் அவற்றுக்குரிய தெய்வங்களின் பெயரால் அர்ச்சிக்கப்படுகின்றன. வேதிகையைச் சுற்றியுள்ள உபவேதிகையின் நாற்புறமும் அகோராஸ்திர மந்திரத்தால் அர்ச்சித்து துவாரங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டபின் மேற்குத் துவாரத்தில் நித்ய த்வார பூஜை சிறப்பாகச் செய்யப்படுகிறது. மஹோற்சவ யாகசாலையில் மேற்கு வாசலே முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கு மேற்குமுகமாகவே பிரதான மூர்த்தி கும்பவடிவில் அமர்ந்திருப்பார். விசேஷ யாகசாலைகளும் முன்பு மேற்கு முகமாக அமைக்கப்பட்டதுண்டு.

இப்போது கிழக்குமுகமாகவே யாகம் அமைவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலேயே நித்ய த்வார பூஜை செய்யவேண்டும் என்போர் உளர். ஆனால் பொதுவாகவே யாகசாலைகளில் மற்றெல்லா வாயில்களுக்குமில்லாத தனிச்சிறப்பு மேற்கு வாயிலுக்கு எப்போதுமுண்டு எனக் கூறுவாரும் உளர். இதுபற்றி அறிஞர்கள் கூடி முடிவெடுக்கவேண்டும். சிவாசாரிய மாணவர்கள் தமது குருவின் கட்டளையை ஏற்பதே முறை.

மேற்குவாயிலில் இரண்டாவது பூஜை முடிந்ததும் அந்த வாசல் வழியாக குரு உள்ளே நுழைகிறார். அப்போது வானம், நடு, பூமி (ஆகாசம், அந்தரிக்ஷம், பூமி) ஆகிய மூன்று இடங்களிலும் இருக்கக் கூடிய தடைகளை மூன்று செயற்பாடுகள்மூலம் நீக்கிவிட்டே உள்ளே நுழையவேண்டும். பாசுபதாஸ்திர மந்திரமே இங்கு பயன்படுகிறது. பசுபதியாகவும் உருத்திரராகவும் இருக்கும் சிவனே எந்த யாகத்தையும் காத்து நிற்பவர். யாகேஸ்வரன், யாகேஸ்வரி என யாகத்தைக் காப்பவர்களாக ஈசானத்தில் அமர்ந்திருப்பவர் பாசுபதாஸ்திர தேவரும் அவரது சக்தியுமாகவே ஆராதிக்கப் படுகிறார்கள்.

மேலே ஆகாயத்தை நோக்கிச் சிவமந்திரத்தை உச்சரிப்பதன்மூலமும் அஸ்திரமந்திரம் உச்சரித்து நாராச முத்திரையால் புஷ்பத்தை எறிவதன்மூலமும் பாசுபதாஸ்திரத்தை உச்சரித்தபடி வலது குதிக்காலால் மும்முறை பூமியில் அடிப்பதன்மூலமும் முறையே இம்மூவித விக்கினங்களும் நீக்கப்படுகின்றன.

இச்சந்தர்ப்பத்தில் மும்முறை மணியை அடிக்கும்படி கூறப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. ராட்சதர்கள் அகன்று செல்வதற்கும், தேவர்கள் வருவதற்குமாகவே மணி அடிக்கப் படுகிறது.

“ஆகமார்த்தந்து தேவானாம் கமனார்த்தந்து ரக்ஷசாம்
குர்வே கண்டாரவம் தத்ர தேவதாஹ்வானு காரணம்”

என்ற சுலோகம் இங்கு கவனிக்கத்தக்கது.

பின்னர் திரைச்சீலையில் திரஸ்கரணி மூர்த்தியையும் மேலே பாசுபதாஸ்திர மூர்த்தியையும் அர்ச்சித்தபின் சிறிது இடதுபுறத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி வலது காலை முன்னே எடுத்து வைத்து சத்யோஜாத மந்திரத்தை உச்சரித்தவாறு உள்ளே நுழையவேண்டும். வாசலுக்கு வடக்கே அஸ்த்ர த்வாரபாலரும் வலமாகச் சுற்றிவந்து நிருதியில் வாஸ்து பிரம்மாவும் கும்பங்களின்றியே அர்ச்சிக்கப்படுவர். (நிருதி பூர்வ கும்பமாக சிவன், சக்தி, பைரவர் ஆகியோரின் யாகசாலைகளில் மட்டும் வாஸ்து பிரம்மா கும்பமாக இருப்பார். ஆனால், அவருக்குரிய பூஜை பின்னர் தனியாக இடம்பெறுகிறது.)

வேதிகையைச் சுற்றிவர அஷ்டமங்கலங்கள் பூஜிக்கப்படும். இதேபோல் தசதிக் பாலகர்களின் கும்பங்களினருகில் தசாயுதங்களும் அர்ச்சிக்கப்படும். வேதிகைக்கு முக்னே இருபுறமும் துவாரபாலர்களின் கும்பங்கள் இருக்கும்.

யாகேஸ்வர கும்ப பூஜை இருமுறை நிகழும். முதலில் நிகழ்வது சலாசன பூஜை. பின்னர் நிகழ்வது ஸ்திராசன பூஜை. சல என்பது அசைவது. ஸ்திர என்பது நிலையானது. மூலமூர்த்தியை ஸ்திராசனமாக நிலைநிறுத்தி வைக்கிறோம். உற்சவ மூர்த்தியை சலாசனமாக எழுந்தருளும் வகையில் வைக்கிறோம். இங்கு பாசுபதாஸ்திர தேவரும் சக்தியும் ஆவாகனம் செய்யப்பட்டபின் யாகத்தைக் காக்கும்பொருட்டு ஒருமுறை யாகத்தைச் சுற்றி எழுந்தருளுவதால் முதலில் சலாசன பூஜை செய்யப்படுகிறது. அதன்பின் யாகம் நிறைவேறும்வரை அவர்கள் நிலையாக அங்கு வீற்றிருந்து காத்தருளும்படி ஸ்திராசன பூஜை செய்யப்படுகிறது.

யாகத்தை வலம்வர எழுந்தருளும்போது குரு முதலில் சக்திகும்பத்தை எடுத்துவரவேண்டும். அதன்பின் சிஷ்யன் அஸ்திரகும்பத்தை எடுத்துவரவேண்டும். அவ்வாறே குரு முதலில் வர்த்தனி கும்பத்திலிருந்து இடைவிடாது நீர் தாரையாகச் சொட்டும்படி ஜலத்துளியை விட்டுக்கொண்டு பாசுபதாஸ்திர மந்திர உச்சாரணத்துடன் முன்னே செல்ல சிஷ்யன் பின்னே சிவகும்பத்துடன் செல்லவேண்டும். ஈசானத்திலிருந்து ஈசானம்வரை இவ்வாறு சுற்றிவந்தபின் முதலில் சிஷ்யன் கும்பத்தை வைத்தபின்னர் குரு வர்த்தனியை வைக்கவேண்டும்.

யாகபூஜை சந்திர சூரியர்களின் ஆராதனையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகிறது. இவையிரண்டும் சிவனது கண்கள். அதுமட்டு மல்லாமல் உலகின் இரவு - பகல் ஆகவும், உயிர்ப்பொருட்களின் உயிர்ப்பாகவும் உயிர் வாழ்க்கையின் நித்திய சாட்சிகளாகவும் இருப்பவை இவ்விரண்டுமே.

இம்முதற்பொருட்களின் வழிபாட்டைத் தொடர்ந்து யாகத்தின் காவல் முக்கிய இடம் பெறுகிறது. நற்செயல்கள் நிகழுகின்ற வேளைகளிலெல்லாம் தீய சக்திகள் அவற்றை அழிக்க முயல்வது உலக வழக்கம். இதிகாச புராணங்களில் யாகங்களைக் குழப்பும் அசுர சக்திகளைக் காண்கிறோம். எனவே துவாரபாலர்கள் யாகேஸ்வரன், யாகேஸ்வரி, தசதிக் பாலகர், தசாயுதங்கள் என்பன படிமுறையாக வணங்கப்படுவது மரபு.

இதன்பின்னர் ஏனைய பரிவார தெய்வங்களும் வழிபட்டபின் பிரதான வேதிகைக்குச் செல்வதைக் காணலாம். இதற்கிடையில் குருவழிபாடும் சிறப்பிடம் பெறுகிறது. சைவ மரபில் சதாசிவர் முதலிய சப்த குருமார் போற்றப்படுகின்றனர். பிரதான வேதிகைக்குப் போகமுன்னர் இக்குருவழிபாடு நடைபெறுகின்றமை குருவுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

இன்னொரு முக்கியமான விஷயம் இங்கு கவனிக்கத்தக்கது. சாதாரண தேவர்களை வழிபட்டபின் பிரதான தெய்வத்தை அர்ச்சிப்பதற்குமுன் அந்தர்யாகம் (அகமுக வழிபாடு) என்ற சிறப்பான கிரியை ஒன்று நடைபெறுகிறது. ஆத்மார்த்த பூஜை இல்லாத இடத்தில் எவ்வாறு பரார்த்த பூஜை பயனளிப்ப தில்லையோ அவ்வாறே குரு தனக்குள் தான் இறைவனைக் கண்டுணரும் அகவழிபாட்டைச் செய்யவில்லை யானால் யாகபூஜை எவ்வித பயனையும் தராது என ஞானிகள் கூறுவர்.

பூதசுத்தி, ஸ்தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி முதலியவற்றின்மூலம் மனம், வாக்கு, காயம் மூன்றையும் ஆலயச் சூழலையும் சுத்திகரித்து இறைசிந்தனையில் லயித்து சிவாத்துவித நிலையில் சிவமாம் தன்மைஅடைந்த பிறகு ஒரு சிவாசாரியர் யாகபூஜையை நிகழ்த்தும் தகுதியைப் பெறுகிறார். எனவே, யாகபூஜையின் இடையில் வருகின்ற பூதசுத்தி முதலிய அந்தர்யாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளின் முக்கியத்துவத்தை யாவரும் உணர்ந்துகொள்ளலாம்.

**வேதிகாபூஜை (பஞ்சாசனார்ச்சனா)**

யாகசாலையின் மத்தியிலிருக்கும் பிரதான மேடையில் ஐந்து ஆவரண தேவர்கள் புடைசூழ, நடுநாயகமாக பிரதான மூர்த்தி கொலுவீற்றிருப்பார். ஐந்து ஆவரணங்களில் இரண்டாவது ஆவரணத்துக்குரிய தேவர்கள் மட்டும் கும்பத்தில் ஆராதிக்கப்படுவது சாதாரண யாகசாலை மரபு. ஏனைய ஆவரண தேவர்கள் பாவனையாக அர்ச்சிக்கப்படுவர்.

இவர்கள் வீற்றிருக்கும் ஆசனத்துக்கே தனியாகப் பூஜை உண்டு. இது பஞ்சாசனம் எனப்படும். ஆதாரசக்தியாக ஆமை வடிவம் ஒன்று இப்பஞ்சாசனத்தைத் தாங்கி நிற்க அதன்மேல் ஆயிரம் தலைகளுளள்ள அனந்தன் என்ற பாம்பு உருவமான அனந்தாசனமும், அதன்மேல் சிங்கமுகங்களைக் கொண்ட சிம்மாசனமும் அதன்மேல் காலம், கலை, நியதி முதலியவற்றின் உருவமாயமைந்த யோகாசனமும் அதன்மேல் தாமரை வடிவிலமைந்த பத்மாசனமும் இறுதியில் சூரிய, சந்திர, அக்கினி, சக்தி ஆகிய மண்டலங்களை உள்ளடக்கிய விமலாசனமும் இப்பஞ்சாசனத்தில் அடங்கியிருக்கும்.

இவ்வாசனங்களை பிரதிபலிக்கவே நெல், அரிசி, பயறு, உழுந்து, எள்ளு ஆகிய தானியங்களைப் பரப்பி அதன்மேல் கும்பம் வைக்கப்படுகிறது. எனவே, பஞ்சாசன பூஜை கும்பத்தைத் தாங்கியிருக்கும் நெல் முதலிய தானியங்களுக்கே செய்யப்பட வேண்டியது என்பதும் அதன்பின் நிகழ்வதே கும்பத்திற்குரிய பூஜை என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

பஞ்சாசனத்தின்மேல் ஆசன, மூர்த்தி, மூலமாகப் பிரதான மூர்த்தி தியானிக்கப்பட்டு முத்திரைகளால் மகிழ்வோடு ஆவாகனம் செய்யப்படுகிறது. இங்கு பிரதான கும்பத்தில் மூர்த்திகரத்தை முழுமையாக ஏற்படுத்தும் வகையில் அங்கம் அங்கமாக நியாசங்கள் பலவும் (நியசித்தல் - பதித்தல்) செய்யப்படும். இதன்பின் ஐந்து ஆவரணத்திற்குமுரிய தேவதைகள் தனித்தனியே ஆராதிக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நிகழ்வு அக்னிகாரியமாகும். இதற்கென அமைந்த அக்னிகுண்டத்தில் அல்லது குண்டங்களில் அக்னியை வளர்த்து அங்கு பரிவார சகிதமாக பிரதான மூர்த்தியை ஆவாகனம் செய்து ஆகுதிகளும் விசேஷ திரவியஹோமங்களும் செய்யப்படும்.

பிரதான குண்டத்திலே பிரதான சிவாசாரியார் அக்கினி காரியம் செய்ததும் அதிலிருந்து அக்கினியைப் பிரித்தெடுத்து ஏனைய குண்டங்களுக்குரிய சிவாசாரியார்கள் தங்கள் குண்டங்களில் இட்டு அக்கினிகாரியம் செய்வர். இவ்வாறு பிரதான குண்டத்திலிருந்து அக்கினியை பிரித்துக் கொடுப்பது அக்கினி விபஜனம் எனப்படும்.

ஒவ்வொரு காலமும் யாகசாலையில் விசேட உபசார பூஜைகள் நடைபெறும். மூன்று நட்கள் முதல் ஒன்பது நாட்கள் வரை யாகபூஜை நடைபெறுவதுண்டு. முடிவில் மஹாபூர்ணாகுதி, விசேட தீபாராதனை, வேத, தோத்திர, திருமுறை பாராயணங்கள், கீத, நாத, நர்த்தன உபசாரங்கள், அந்தர்பலி, பகிர்பலி முதலியன நிகழ்ந்தபின் பிரதான கும்பம் சகல வாத்ய கோஷங்களுடனும், வேத திருமுறை பாராயணங்களுடனும் வீதி வலமாக மூலாலயத்தை அடையும். பிரதான கும்பமும் அஷ்டவித்யேஸ்வர கும்பங்களும் அங்கு லயப்படுத்தப்பட்டபின் அபிஷேகமாகும்.

இதன்பின்னர் யாகசாலையில் ஸ்திராகுதி வழங்கியபின் முன்பு விபஜனம் செய்யப்பட்ட அக்னி பிரதான குண்டத்தில் ஒடுக்கப்பட்டு பிரதான சிவாசாரியரின் இருதயத்தில் சேர்க்கப்பட்டபின் பரிவார தேவதைகள் யதாஸ்தானம் செல்லுமாறு (அவரவர் இடங்களுக்கு) வேண்டப்படுகின்றனர்.

யாகசாலையின் நடுவிலிருக்கும் வேதிகையானது சதுரமாகவும், விருத்தமாகவும், எண்கோணமாகவும், அறுகோணமாகவும் அமையலாம். சதுரம் ஸ்திதி எனவும் வட்டம் சயனம் எனவும் அறுகோணம் யானம் எனவும் அவற்றுக்குத் தனித்தனியே பெயர்கள் உண்டு.

வேதிகையில் அதோபட்டிகை, மத்யபட்டிகை, அஷ்ட கஜங்கள், அஷ்ட நாகங்கள், கும்பகண்டம், ஊர்த்வ பட்டிகை, ஜகனத்திரயம், பங்கஜம் முதலிய உறுப்புக்கள் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சகுண்ட யாகசாலை
# - ஒரு தத்துவப் பார்வை

பஞ்சகுண்ட யாகசாலையில் நான்கு திசைகளிலும் நான்கு குண்டங்கள் அமைய, ஐந்தாவது குண்டம் ஈசான திக்கில் (வடகிழக்கில்) அமையும்.

ஈசான குண்டமே பிரதான குண்டம். அங்கு சிவாக்கினி முறைப்படி வளர்க்கப்பட்டு அதன் நான்கு திசைகளிலும் நான்கு அக்கினிகள் பூஜிக்கப்பட்டு அவை பின்னர் அங்கிருந்து ஏனைய நான்கு குண்டங்களிலும் சேர்க்கப்படும்.

இப்போது பிரதானகுண்டத்திலிருப்பது சிவாக்கினி. இந்த அக்கினியில்தான் மூலமூர்த்தியின் பிரதான அம்சம் அவாஹனம் செய்யப்படும். அத்தோடு ஆகாய மூர்த்தியும் அதன் அதிபதியும் இங்கு எழுந்தருளச் செய்வர். ஈசானம், நேத்ரம், அஸ்த்ரம் ஆகிய மந்திரங்கள் இங்கு சிறப்பிக்கப்படுகின்றன. ஈசானம் என்பது மேலே உள்ள திசையையும் குறிப்பது. இறைவனது மேல்நோக்கிய முகம் ஈசானம். ஈசன் என்றால் யாவற்றையும் ஆள்பவன். அவன் யாவற்றையும் தனது கண்களால் பார்த்துக்கொண்டிருக்கிறான் எப்தைக் குறிக்கவே இங்கு நேத்ர மந்திரம் (நோத்ரம் - கண்) சிறப்பிக்கப்படுகிறது. யாவரையும் காத்துநிற்பதற்கு அஸ்திரமந்திரம் உதவுகிறது. (அஸ்த்ரம் - ஆயுதம்)

கிழக்குத்திசையிலுள்ள குண்டத்தில் இருப்பது ஆஹவனீயாக்கினி. ஹவனம் என்ற சொல் யாகம், பிரார்த்தனை, அர்ப்பணம் முதலிய பொருள்களைக் கொண்டது. எனவே ஆஹவனீயம் என்பது ஹோமம் செய்து பிரார்த்தித்து அர்ப்பணித்தல் ஆகும். இந்த அக்கினியில் வாயு மூர்த்தியும் அதன் அதிபதியும் ஆவாஹனம் செய்யப்படுகின்றனர். சம்ஹிதா மந்திரங்கள் எனப்படும் பதினொரு மந்திரங்களில் இங்கு தத்புருஷ மந்திரமும் இருதய மந்திரமும் சிறப்பிக்கப்படுகிறன.

இவ்வுலக வாழ்க்கையில் ஆன்மா காற்றின் தன்மைபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைபாயும் மனத்தைக் கட்டுப்படுத்தித் தனது ஈடேற்றம் கருதி இறைவனைத் (தத்புருஷ) தனது இதயத்திலிருத்திப் (இருதயமந்திரம்) பிரார்த்தனை வழிபாடுகளைச் செய்துகொண்டிருக்கவேண்டும் என்பதை இது குறிப்பாகக் காட்டுகிறது. உலகியல் வாழ்வில் ஆன்மீகத்தை இக் கிழக்குக் குண்டம் குறிப்பதாகக் கொள்ளலாம். கிழக்குத்திசையின் குண்டம் சமசதுரவடிவில் அமைந்திருக்கும். சமநிலையில் வாழ்வதன் அவசியத்தை இது காட்டுகிறது.

தென்திசையிலிருப்பது தட்சிணாக்கினி. அதில் வஹ்னி(தீ) மூர்த்தியும் அதன் அதிபதியும் எழுந்தருளுவர். அகோரமந்திரமும் சிரோமந்திரமும் இங்கு சிறப்பிக்கப்படுவன.

தட்சிணம் என்றால் தெற்கு. தென்திசை யமனுக்குரியது. ஆன்மா உடலைவிட்டதும் செல்லும் திசை இதுதான். அந்திமக் கிரியைக்குப் பயன்படும் அக்கினி தட்சிணாக்கினியே. சிவன் இத்திசையில் அகோரமூர்த்தமாக அக்கினி வடிவில் காட்சியளிப்பதாலேயே இத்திசையில் அக்கினி (வன்னி) மூர்த்தியும் அகோர மந்திரமும் சிறப்பிக்கப்படுகின்றன. சிரோமந்திரம் என்பது தலையைக்குறிப்பது. (சிரம் - தலை)

கிழக்கேயுள்ள ஆஹவனீயாக்கினியில் நாம் ஹோமம் செய்து பிரார்த்தித்து நமது உலகியல் தேவைகளை வேண்டும் அதே நேரத்தில் நமது நிலையாமையை நினைத்து நமது இறப்புக்குப் பிந்திய நிலையின் தேவைகளை நினைப்பதற்கு தென்திசைக் குண்டம் வழிசமைக்கிறது. இக்குண்டம் அர்த்த சந்திரன் அதாவது பாதிச் சந்திரனின் வடிவில் அமைந்திருக்கும். வளர்வதும் தேய்வதும் சந்திரனின் இயல்பு. பாதிச் சந்திரன் இரண்டுக்கும் இடைநிலை. வாழ்க்கையும் உயர்வு தாழ்வை உடையது. இடைநிலையில் வாழ்வது இறுதிக்கு நல்லது என்பதை இதன்மூலம் உணரலாம்.

கிழக்கு, தெற்குத் திசைக் குண்டங்களிற்கு அடுத்ததாக வடக்குக் குண்டமே பூஜிக்கப்படுவது வழக்கம். சிவனது அழகுமுகமாகிய வாமதேவ முகத்தைக் குறிப்பதோடு அவனது வாமபாகமாகிய இடப்பாகத்துக்குரியதும் இக்குண்டமே. அப்பாகமே சக்திக்குரியதுமாகும். அதனால்தான் அழகு, மென்மை, மேன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றைக் குறிக்க இக்குண்டம் தாமரை வடிவில் (பத்மம்) அமைக்கப்படுகிறது.

இங்கு உள்ள அக்கினி கேவலாக்கினி. கேவலம் என்ற சொல் இன்றைய பயன்பாட்டிலிருப்பதுபோலக் கீழானது என்ற பொருளையுடையதன்று. கேவலம் என்றால் தனித்தது எனப் பொருள். வேறொன்றையும் சாராது தனியாக நிற்கும் தூய அக்கினி இது. இங்கு எழுந்தருளுவோர் ஜலமூர்த்தியும் அதன் அதிபதியுமாவர். நீருக்குள் நெருப்பும் நெருப்புக்குள் நீரும் உண்டு என்பதை ஆழ்ந்து சிந்திப்போர் தத்துவார்த்தமாக உணர்வர். நீர் அதிகமானால் நெருப்பை அணைக்கும். நெருப்பு அதிகமானால் நீரை வற்றச் செய்யும். இரண்டும் சமநிலையிலிருந்தால் யாவும் இயல்பாயிருக்கும்.

இங்கு சிறப்பிக்கப்படும் மந்திரங்கள் வாமதேவ மந்திரமும் சிகா மந்திரமும். சிகா என்றால் தலைமயிர். அழகைத் தருவதும் அதிமுக்கியமான உறுப்பாகிய சிரசைக் காப்பதும் சிகையே. பண்டை நாளிலிருந்து அறிவின் சின்னமாக சிகையைக் கருதினர். வடக்குத்திசை காந்தப் புலம் செறிவாயுள்ள பகுதி. சக்திச்செறிவு, சக்தியின் திசை (இடப்புறம்), அறிவுத் தேட்டம் என்பன இங்கு ஒருங்கிணைவது கவனிக்கத்தக்கது.

உலகியலில் ஆன்மீகத்தை மேம்படுத்தி, இறப்புக்குப் பிந்திய வாழ்வுபற்றிய சிந்தனையோடு செயற்பட்டால் அறிவும் அழகும் இனிமையும் மிக்க தாமரைமலர்ப் பாதத்தை நாடும் வாய்ப்புக் கிட்டும் என்பமை இம்மூன்று குண்டங்களின் வரிசைப்பாடு உணர்த்துகின்றன.

அடுத்து வருவது மேற்குக் குண்டமாகிய வ்ருத்த குண்டமெனப்படும் வட்ட வடிவாயமைந்த குண்டம். இங்கு உள்ள அக்கினி கார்ஹபத்யாக்கினி. கிருஹம் என்னும் வீட்டிற்கு உரியது கார்ஹபத்யம். இங்கு எழுந்தருளுவோர் பிருதுவி மூர்த்தியும் அதன் அதிபதியுமாவர். சத்யோஜாத மந்திரமம் கவச மந்திரமும் இங்கு சிறப்பிக்கப்படுகின்றன.

சத்யோஜாதம் சிவனது அனுக்கிரக முகம். அருட்செறிவு மிக்கது. கருணை வடிவானது. கவசம் என்பது பாதுகாப்பைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருதுவது. கிருஹஸ்தாசிரமத்தில் இருந்துகொண்டு வாழ்வின் பாதுகாப்பைக் கருதி யாவருக்கும் சேவையாற்றிக் கொண்டிருக்கவேண்டும் என்பதை இது குறித்துநிற்கிறது.

இவ்வாறு படிமுறையாகவும் பகுதியாகவும் சேகரித்த சக்தியைப் பிரதான குண்டத்தில் ஒன்றுசேர்த்து அதனைப் பரதான கும்பத்திலே ஒன்றுசேர்த்து அதை மூலமூர்த்தியில் அபிஷேகம் செய்கிறோம். இதுவே திருவுருவில் இறைசக்தி எழுந்தருளச் செய்யும் கிரியையாகும்.

ஆகாயம் என்னும் பரவெளியில் பரந்திருக்கும் இறையருட்சக்தி நம்மை நாடி இறங்கி வரும் முறையை இங்கு தெளிவாக நோக்கினோம். மறுதலையாக மேற்குக் குண்டத்திலிருந்து ஈசான குண்டம் வரை நாம் மீண்டும் இவற்றைச் சிந்தித்துப் பார்த்தால் உலகியல் வாழ்விலிருந்து படிப்படியாக ஆன்மீகநிலையில் உயர்ந்து சதாசிவ மூர்த்தியிடம் நாம் ஐக்கியமாகிவிடும் நிலையையும் இது காட்டுகிறது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாக வாசலின் (துவாரம்) பாகங்களைக் காட்டும் ஒரு மாதிரிப் படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாகபூஜையில் இடம்பெறும் சில முக்கிய ஸ்தானங்கள்

தக்ஷிண வாம மத்ய பாகேஷு
வலம், இடம், நடு ஆகிய பகுதிகளில்

த்ருணாவ்ருத மண்டபே புல்லினால் வேயப்பட்ட மண்டபத்தில்

ஸ்தம்பேஷு யாகத்தைத் தாங்கும் கம்பங்களில்

த்ருணேஷு மேலே வேயப்பட்ட புற்களில்

பந்தேஷு கம்புகளைக் கட்டிய கட்டுக்களில்

வம்ஶேஷு மூங்கில்தடி மற்றும் குழைகளில்

ஸ்தூணேஷு அலங்காரத் தூண் அமைப்புக்களில்

ஊர்த்வகாயாம் கொண்டைபோல அலங்கரிக்கப்பட்ட உச்சிப் பகுதியில்

விதானே மேற்கட்டியில்

தரங்கேஷு அலைகள் போன்ற அலங்காரப் பகுதியில்

தர்ப்பமாலாயாம் தர்ப்பை மாலைகளில்

அங்கணேஷு முற்றம் போல அமைந்துள்ள இடைவெளிகளில்

வேதிகாதாரே வேதிகையின் அடிப்பகுதியில்

உபவேதீ பரித: உபவேதிகையின் சுற்றிவர

த்வாரோர்த்வே வாசலின்மேல்

ஊர்த்வே மேலே

அத: கீழே

பூமௌ பூமியில்

த்வாராக்ரே வாசலின் ஆரம்பத்தில்


அதஸ்ஸோபானே கீழ்ப்படியில்

ஊர்த்வ ஸோபானே மேல் படியில்

மத்ய ஸ்தம்போபரி த்வஜே மத்தியில், மண்டபத்தின் மேல் கொடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாக மண்டபமும் கும்பங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விநாயகர் யாகசாலை :

1. சந்திரன்
2. சூரியன்
3. சாந்திகலாத்துவாரம்
4. சுப்ரபூதர்
5. சுவக்திரர்
6. வித்யாகலாத்துவாரம்
7. வாமனர்
8. சங்கபாலர்
9. நிவிர்த்திகலாத்துவாரம்
10. மூஷிகர்
11. கிரிதண்டர்
12. பிரதிஷ்டாகலாத்துவாரம்
13. உக்கிரர்
14. கும்போதரசண்டர்
15. மாலினி
16. யாகேஸ்வரன்
17. யாகேஸ்வரி
18. இந்திரன்
19. அக்கினி
20. யமன்
21. நிருதி
22. வருணன்
23. வாயு
24. குபேரன்
25. ஈசானன்
26. பிரம்மா
27. விஷ்ணு
28. க்ஷேத்ரபாலர்
29. வீரேசர்
30. சப்தகுரு

2. சிவன் யாகசாலை :

1. சந்திரன்
2. சூரியன்
3. சாந்திகலாத்துவாரம்
4. நந்தி
5. மஹாகாலர்
6. வித்தியாகலாத்துவாரம்
7. பிருங்கி
8. விநாயகர்
9. நிவிர்த்திகலாத்துவாரம்
10. விருஷபர்
11. ஸ்கந்தர்
12. பிரதிஷ்டாகலாத்துவாரம்
13. தேவி
14. சண்டேஸ்வரர்
15. வாஸ்துபிரம்மா
16. யாகேஸ்வரன்
17. யாகேஸ்வரி
18. இந்திரன்
19. அக்கினி
20. யமன்
21. நிருதி
22. வருணன்
23. வாயு
24. குபேரன்
25. ஈசானன்
26. பிரம்மா
27. விஷ்ணு
28. மஹாலக்ஷ்மி
29. விக்னவிநாயகர்
30. சப்தகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தேவி யாகசாலை:

1. சந்திரன்
2. சூரியன்
3. சாந்திகலாத்துவாரம்
4. பத்ரிணி
5. தீப்தாதேவி
6. வித்தியாகலாத்துவாரம்
7. குத்தினி
8. காளி
9. நிவிர்த்திகலாத்துவாரம்
10. மந்திரிணி
11. மாலினி
12. பிரதிஷ்டாகலாத்துவாரம்
13. உன்மதா
14. முனினீ
15. வாஸ்துபிரம்மா
16. யாகேஸ்வரன்
17. யாகேஸ்வரி
18. சசிதேவி
19. ஸ்வாஹாதேவி
20. ஸ்வர்க்காதேவி
21. வர்க்காதேவி
22. காலகண்டி
23. நிர்மிணீ
24. நாரிணி
25. சுசுகேதினி
26. சரஸ்வதி
27. மஹாலக்ஷ்மி
28. மண்டப ஸ்ரீமஹாலக்ஷ்மி
29. விக்நேஸ்வரர்
30. சப்தகுரு

4. சுப்பிரமணியர் யாகசாலை :

1. சந்திரன்
2. சூரியன்
3. சாந்திகலாத்துவாரம்
4. சுதேஹர்
5. சுமுகர்
6. வித்தியாகலாத்துவாரம்
7. மஹாவல்லி
8. தேவசேனாபதி
9. நிவிர்த்திகலாத்துவாரம்
10. மயூரர்
11. கஜர்
12. பிரதிஷ்டாகலாத்துவாரம்
13. தேவசேனா
14. சுமித்திரர்
15. மஹாலக்ஷ்மி
16. யாகேஸ்வரன்
17. யாகேஸ்வரி
18. இந்திரன்
19. அக்கினி
20. யமன்
21. நிருதி
22. வருணன்
23. வாயு
24. குபேரன்
25. ஈசானன்
26. பிரம்மா
27. விஷ்ணு
28. க்ஷேத்ரபாலர்

28.A. துஹாஸ்திரதேவர்

29. விநாயகர்
30. சப்தகுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பைரவர் யாகசாலே :

1. சந்திரன்
2. சூரியன்
3. சாந்திகலாத்துவாரம்
4. கணபதி
5. நரகாந்தபைரவர்
6. வித்தியாகலாத்துவாரம்
7. ஸ்கந்தர்
8. பீமபைரவர்
9. நிவிர்த்திகலாத்துவாரம்
10. வடுகபைரவர்
11. ரக்தபைரவர்
12. பிரதிஷ்டாகலாத்துவாரம்
13. துர்க்கா
14. விஜயபைரவர்
15. வாஸ்துபிரம்மா
16. யாகேஸ்வரன்
17. யாகேஸ்வரி
18. இந்திரன்
19. அக்கினி
20. யமன்
21. நிருதி
22. வருணன்
23. வாயு
24. குபேரன்
25. ஈசானன்
26. பிரம்மா
27. விஷ்ணு
28. மஹாலக்ஷ்மி
29. பக்தவடுகன்
30. சப்தகுரு

இங்கு சுப்பிரமணியர் யாகத்தில் வாயுகும்பத்திற்குத் தெற்கில் இரண்டாவது கும்பமாக மேலதிக கும்பம் ஒன்று வரும். அது குஹாஸ்திரருக்குரியது.

அவ்வாறே அம்பிகையின் யாகத்தில் வாயுகும்பத்திற்கு கிழக்கே இரண்டாவது கும்பமாக மேலதிக கும்பம் ஒன்று வரும். அது ’க்ஷேத்ரபாலருக்குரியது.

சிவனது யாகத்தில் காரணாகமத்தின்படி சிலர் ஈசான கும்பத்திற்கு தெற்காக இரண்டாவதாக ஒரு கும்பம் வைப்பதுண்டு. அது ’க்ஷேத்ரபாலருக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரண தேவர்கள்

## 1. விக்நேஸ்வரர்

| | |
|---|---|
| முதலாவது ஆவரணம் : | சம்ஹிதாமந்திரதேவர்கள்: பஞ்சப்பிரம்ம மந்திரங்களும், ஷடங்க மந்திரங்களுமாகப் பதினொரு மந்திரங்கள் சம்ஹிதாமந்திரங்கள் எனப்படும். இவை அந்தந்த மூர்த்திக்கேற்ப சில மாறுபாடு களுடன் அவரவர்க்குரிய பீஜாக்ஷரங்க ளுடன் பஞ்சாவரண பூஜையில் முதலா வது ஆவரணத்தில் பூஜிக்கப்படுகின்றன. |
| இரண்டாவது ஆவரணம் : | அஷ்டவித்தியேஸ்வரர்கள்: வரதர், வீரர், விக்நேசர், கஜானவர், பக்ஷ்யப்பிரியர், சுஜகர்ணர், விநாயகர், லம்போஷ்டர். |
| மூன்றாவது ஆவரணம் : | கணநாதர்கள்: ப்ரபூதர், சுவக்திரர், வாமனர், சங்கபா லர், மூஷகர், கிரிதுண்டர், உக்கிரர், கும்போதரர். |
| நான்காவது ஆவரணம் : | திக்பாலகர்கள்: இந்திரன், அக்னி, யமன், நிருதி, வரு ணன், வாயு, குபேரன், ஈசானன், பிரம்மா, விஷ்ணு. |
| ஐந்தாவது ஆவரணம் : | தசாயுதங்கள்: நாராசம், சூலம், குந்தாலி, வேதாளம், பாசம், அங்குசம், தண்டம், குடாரம், முசலம், கட்கம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சிவன்

முதலாவது ஆவரணம் : சம்ஹிதா மந்திரதேவர்கள்

இரண்டாவது ஆவரணம்: அனந்தர், சூக்ஷமர், சிவோத்தமர், ஏக நேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி.

மூன்றாவது ஆவரணம்: நந்தி, மஹாகாளர், பிருங்கி, விநாயகர், விருஷபர், ஸ்கந்தர், தேவி, சண்டேஸ்வரர்.

நான்காவது ஆவரணம்: திக்பாலகர்கள்

ஐந்தாவது ஆவரணம் : வஜ்ரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், த்வஜம், கதை, திரிசூலம், பத்மம், சக்கரம்.

## 3. சக்தி

முதலாவது ஆவரணம் : சம்ஹிதா மந்திரதேவர்கள்

2ம் ஆவரணம்: வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ, காளீ, கலவிகரணீ, பலவிகரணீ, பலப்பிரமதனீ, சர்வபூததமனீ.

3ம் ஆவரணம் : பத்ரிணீ, தீப்தா தேவீ, குந்தினீ, காலினீ, மந்திரிணீ, மாலினீ, உன்மதா, முனினீ.

4ம் ஆவரணம்: சசிதேவீ, ஸ்வாஹாதேவீ, ஸ்வர்காதேவீ, வர்க்காதேவீ. காலகண்டி, நிர்மிணீ, நாரிணீ, சுகேதினீ, சரஸ்வதி, மஹாலக்ஷ்மீ.

5ம் ஆவரணம்: கட்கம், கபாலம், கண்டா, நாராசம், டமருகம், த்வஜம், வேதாளம், க்ஷுரிகம், பாசம், வஜ்ரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சுப்பிரமணியர்

1ம் ஆவரணம் : சம்ஹிதாமந்திரதேவர்கள்

2ம் ஆவரணம் : ஜயந்தர், அக்கினிசிகர், கிருத்திகா புத்திரர், பூதபதி, சேநாநீ, குகர், ஹேமசூலர், விசாலாக்ஷர்.

3ம் ஆவரணம் : கஜேந்திரர், சுதேஹர், மஹாவல்லி, சுமுகர், மயூரர், தேவசேனாபதி, தேவசேனா, சுமித்திரர்.

4ம் ஆவரணம் : திக்பாலகர்கள்.

5ம் ஆவரணம் : வஜ்ரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், அங்குசம், கதை, திரிசூலம், பத்மம், சக்கரம்.

## 5. பைரவர்

1ம் ஆவரணம் : சம்ஹிதாமந்திரதேவர்கள்

2ம் ஆவரணம் : அசிதாங்கபைரவர், ருருபைரவர், சண்டபைரவர், குரோதனபைரவர், உந்மத்தபைரவர், கபாலபைரவர், பீஷணபைரவர், சம்ஹாரபைரவர்.

3ம் ஆவரணம் : ஹேதுக்னர், திரிபுரக்னர், வஹ்நி, யமஜிஹ்வா, காலர், கராளீ, ஏகாங்கிரி, பீமர்.

4ம் ஆவரணம் : திக்பாலகர்கள்.

5ம் ஆவரணம் : வஜ்ரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், அங்குசம், கதை, திரிசூலம், பத்மம், சக்கரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாகசாலையில் தேவையான பொருட்கள்

சாதாரண யாகசாலையில் வேதிகையில் ஸ்நபன கும்பங்களும் (பிரதான கும்பம், சக்தி கும்பம், அஷ்டவித்யேஸ்வர கும்பம் எட்டு) பரிவாரமாக 30 கும்பங்களும் அமையும். இதில் ஈசானத்தில் சிவம் வர்த்தனி கும்பங்கள் இரண்டும் வாயுவில் சந்திரகும்பம் ஒன்றும் போக மீதி 27உம் வரிசையில் அமையும்.

ஒன்றுக்கு மேற்பட்ட யாகசாலைகள் இருப்பின் சந்திரகும்பம் ஓரிடத்தில்மட்டும் தனியே வெளியில் வைப்பது மரபு. அங்ஙனமாயின் யாகசாலைகளுக்குள் சந்திரகும்பம் அவசியமில்லை.

27 கும்பங்களில் அக்னி மூலையில் 6 கும்பங்களும் ஏனைய மூன்று மூலைகளிலும் தலா 7 கும்பங்களுமாக அமையும்.

**சிவன் யாகசாலையில் ஈசானத்திலும் (ஈசான கும்பத்துக்குத் தெற்குக் கும்பத்துக்குத் தெற்கே-க்ஷேத்ரபாலர்) சுப்பிரமணியர் யாகத்தில் வாயு விலும் (வாயுகும்பத்துக்குத் தெற்குக் கும்பத்துக்குத் தெற்கே-குஹாஸ்திரம்) அம்பிகைக்கு வாயுவிலும் (வாயுகும்பத்துக்கு வடக்குக் கும்பத்துக்கு வடக்கே-ேத்ரபாலர்) ஒவ்வொரு கும்பங்கள் அதிகமாகத் தேவைப்படும்.**

இக்கும்பங்களுடன் கூர்ச்சங்கள், ஞானகட்கம், பரிதி, விஷ்டரம், பரிஸ்தரணத் தர்ப்பைகள், தொடுபுல், கட்டைப்புல், அக்னிகார்யத்துக்கான உபகரணங்களும் திரவியங்களும், தீபாராதனை-அர்ச்சனைக்கு வேண்டிய பொருட்கள், பாத்யம்-அர்க்யம்-ஆசமனீயம் ஆகியவற்றுக்குரியன, வெற்றிலை, பாக்கு, பழம், நைவேத்யம், பலியுருண்டைகள், பூர்ணாகுதிப் பொருட்கள் என்பனவும் யாகசாலையில் இருக்கவேண்டியன.

மேலும் அஷ்டமங்கலப் பலகைகள், தசாயுதப் பலகைகள், ஆசனப் பலகைகள், கும்பம் தூக்க வேட்டி முதலியனவும் பஞ்சகுண்ட, நவகுண்ட விசேஷ சமித்துக்களும் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஷ்டமங்கலம்**- கிழக்கிலிருந்து முறையே எட்டுத்திக்குகளிலும் தர்ப்பணம் (கண்ணாடி), பூர்ணகும்பம், **விருஷபம்**, யுக்மசாமரம் (இரட்டைச் சாமரைகள்), ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம், சங்கம், தீபம்.

**சிவன், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர், அம்பிகை** ஆகியோருக்கு மேற்குறிப்பிட்ட பொருட்களே அஷ்டமங்கலப் பொருட்களாகும். ஆனால், விருஷபம் இருக்குமிடத்தில் அந்தந்த மூர்த்திகளின் வாகனம் இடம்பெறும். விநாயகருக்கு மாத்திரம் மாற்றமுண்டு.

**விநாயகர்**- சத்ரம் (குடை), ரத்னகும்பம், மூஷிகம், கமலம் (தாமரை), கார்முகம், தந்தம், அங்குசம், கட்வாங்கம்.

**தசாயதங்கள்** - இந்திரனிலிருந்து விஷ்ணு வரை திக்பாலக கும்பங்களுக்கு அருகில் முறையே இத் தசாயுதங்கள் வைக்கப்பட வேண்டும்.

வஜ்ரம், சக்தி, தண்டம், வாள்(கத்தி), பாசம், அங்குசம், கதாயதம், திரிசூலம், பத்மம், சக்கரம்.

**சிவன், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர்** முதலியோருக்கு இவற்றில் மாற்றமில்லை. ஆனால் **விநாயகர், அம்பிகை** ஆகியோருக்கு மாற்றமுண்டு.

**விநாயகர்** - நாராசம், திரிசூலம், குந்தாலீ, வேதாளம், பாசம், அங்குசம், தண்டம், குடாரம், முசலம், கட்கம்.

**அம்பிகை** - கட்கம், கபாலம், கண்டா, நாராசம், டமருகம், துவஜம், வேதாளம், க்ஷுரிகம், பாசம், வஜ்ரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்டமங்கலம்
### (விநாயகருக்குரியது)




சத்ரம்



ரத்னகும்பம்

மூஷிகம்



கமலம்




கார்முகம்
(வில்)



தந்தம்




அங்குசம



கட்வாங்கம்
(நுனியில்
எலும்புடன்கூடிய தடி)

## அஷ்டமங்கலம்
### (ஏனைய தெய்வங்களுக்கு)




தர்ப்பணம்




பூர்ணகும்பம்


விருஷபம்



யுக்மசாமரை



ஸ்ரீவத்ஸம்



ஸ்வஸ்திகம்



சங்கம்

தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாயுதங்கள்


வஜ்ரம் (குலிசம், இடி)


சக்தி


தண்டம் (தடி)


கட்கம் (வாள்)


பாசம் (கயிறு)


அங்குசம் (துறட்டி)


கதை

திரிசூலம்


பத்மம்


சக்ரம்

### விநாயகருக்கு மாறுபட்டு வருவன


நாராசம் (அம்பு)


குந்தாலி (மண்வெட்டி)


வேதாளம் (பிசாசு)


குடாரம் (கோடரி)


முசலம் (உலக்கை)

### அம்பிகைக்கு மாறுபட்டு வருவன


கபாலம் (மண்டை ஓடு)


கண்டா (மணி)


டமருகம் (உடுக்கு)


த்வஜம் (கொடி)


ʼரிகம் (சிறு கத்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாத்யம்** - லாமிச்சை, சந்தனம், அறுகு, வெண்கடுகு, நீர்.

**அர்க்யம்** - எள்ளு, யவநெல், தர்ப்பைநுனி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு, நீர்.

**ஆசமநீயம்** -ஏலம், கராம்பு, பச்சைக்கற்பூரம், சம்பகமொட்டு, சாதிக்காய், பூலான்கிழங்கு, நீர்.

**பஞ்சகுண்ட விசேஷ சமித்து.**

பூர்வகுண்டம்-- கருங்காலி
உத்தரகுண்டம்- இத்தி
தீணகுண்டம் -- அரசு
பச்சிமகுண்டம்- அத்தி


**நவகுண்ட விசேஷ சமித்து, தானியம்.**

பூர்வம்- வன்னி, கோதுமை
ஆக்னேயம்- ஆல், வெண்கடுகு
தீணம்- கருங்காலி, எள்ளு
ஈசானம்- எருக்கலை, உழுந்து
உத்தரம்- வில்வம், துவரை
நிருதி- இத்தி, நெல்
பச்சிமம்- அரசு, பயறு
வாயு- அத்தி, கடலை
பிரதானம் - பலாசு, மூங்கிலரிசி, நெல்லு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33 குண்டங்கள் அமைந்த 44 ருத்திர யாகசாலை




காமிகம்


33 குண்டங்கள் அமைந்த 44 ருத்திர ருத்திர ருத்திர யாகசாலை

இதில் 1849 பதங்களும் 21 ஆவரணங்களும் உள்ளன. சிவபதம் முதலாக ராக்ஷஸபதம் ஈறாக 21 பதங்களுக்கும் பெயர்கள் உள்ளன. அவைகளுள் சதாசிவபதத்தில் 9 குண்டங்களும், ஆசாபதத்தில் 8 குண்டங்களும், கலாபதத்தில 8 குண்டங்களும், பிரம்மபதத்தில் 8 குண்டங்களுமாக 33 குண்டங்கள் அமைக்கப்படவேண்டும். இங்குள்ள நான்கு பேடைகளிலும் உள்ளிருந்து முறையே அஷ்டவித்தியேசர் கும்பங்கள், நந்தி முதலியோரின் 8 கும்பங்கள், லோகபாலகர்களின் 10 கும்பங்கள், பின் தசஆயுதங்கள் இவைகள் வைக்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு (34) சூத்திர
## 25 இருபத்தைந்து குண்டயாகசாலை





காமிகம்

34 சூத்திரங் கொண்ட விஷ்ணு சூத்திர 25 குண்டயாகசாலை. இதில் 16 ஆவரணங்கள் உள்ளன. 1089 பதங்களும் உள்ளன. 33 [illegible] பதங்களின் பெயர்கள்தான் இதிலுள்ள பதங்களுக்கும் சிவபதம் [illegible] விஷ்ணு பதம் வரை 17 பதங்களாம். இதில் தசாயுதங்களை முன்னும் [illegible] லோகபாலகர் கும்பங்களிலேயே பூஜிக்கவேண்டும். 64 தூண்கள் நாட்டப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24 சதுர்விம்சதி
## பிரம்ம சூத்திர ஸப்ததச குண்ட யாகசாலை





காமிகம்

24 சூத்திரங்கள் கொண்ட 17 குண்டங்கள் அமைக்கப்படும் பிரம்ம சூத்திர யாகசாலை, இதில் 11 ஆவரணங்களும் 529 பதங்களும் உள்ளன. 33 குண்டயாகசாலையி லுள்ள சிவபதம் முதல் கணபதம் வரை 12 பதங்களின் பெயர்களாம். இதில் மூன்று ஆவரணங்கள் உள்ளன. வேதியிலேயே முதலாம் ஆவரணம் உள்ளது. அதில் அஷ்ட வித்யேசரையும் வைக்கவும். நந்தி முதலியோரை இரண்டாம் ஆவரணத்தில் வைக்கவும். லோகபாலர்களையும் தச ஆயுதங்களையும் மூன்றும் ஆவரணத்தில் வைக்கவும், மற்றவை புத்தித்திறமையைக் கொண்டு ஊகித்துக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 கணசூத்திர நவகுண்ட யாகசாலை




காமிகப்படி


### 18 சூத்திர கணசூத்திர நவகுண்ட யாகசாலை

289 பதங்களும் 8 ஆவரணங்களும் உள்ளன. இதில் நவகுண்டங்கள் அமைக்கலாம். சிவ, சக்தி, நாத, பிந்து, சதாசிவ, மகேஸ்வர, ருத்திர, விஷ்ணு, பிரம்மா என 9 பதங்களின் பெயர்களாம். இவற்றுள் மாகேஸ்வர பதத்தில் குண்டங்கள் அமைக்கவும். பிரதானம் விருத்தம். மற்றவை ஊகித்து அறியவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 கலா சூத்திர நவகுண்ட யாகசாலை




புவனங்கள் 225. ஆகவே புவனபதங்கள் இதில் உள்ளன


### 16 சூத்திர யாகசாலை (காமிகப்படி)

லிங்கஸ்தாபனத்திலும் உருவமூர்த்திகளின் ஸ்தாபனத்திலும் உற்சவத்திலும் ஸம்புரோக்ஷணத்திலும் தீக்ஷையிலும் பாலஸ்தாபனத்திலும் 16 சூத்திர (கலாசூத்திர) யாகசாலை அமைக்கவேண்டும். இதில் நவகுண்டங்கள் போடலாம். இதில் உள்ள பதங்கள் பின்வருமாறு: இதில் மத்திய பதத்தைவிட 7 பதங்கள் உள்ளன. இதில் 225 பதங்கள் உள்ளன. சிவ, சக்தி, நாத, பிந்து, சதாசிவ, மகேஸ்வர ருத்திர, விஷ்ணு என 8 பதங்களின் பெயர்களாம். சதாசிவபதத்தில் குண்டங்களையும், 32 தூண்களையும் அமைத்துக் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனுசூத்திர நவகுண்ட யாகசாலை





மனுசூத்திர யாகசாலை (காமிகப்படி)

14 பதினான்கு சூத்திரங் கொண்ட இந்த யாகசாலையில் 169 பதங்கள் உண்டாகின்றன. மத்திய பதத்தையும் சேர்த்து பதங்கள் ஏழு உள்ளன. சிவ, சக்தி, சுத்த மாயா, கண, தேவ, அசுத்தமாயா, ராக்ஷஸ என அப்பதங்களின் பெயர்களாம். எல்லா யாகசாலைகளிலும் உள்ளிருந்து வெளியே பதங்கள் சிருட்டிக் கிரமமாக எண்ணப்பட வேண்டும். தேவபதங்களில் குண்டங்களும் அசுத்தமாயா பதங்களில் சஞ்சாரபதமும் 16 தூண்களும் அமைக்கப்படும் 10, 9, 5, 3 முழங்கள் உயரம் உள்ள தூண்கள் அமைக்கலாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரவி சூத்திர பஞ்சகுண்ட யாகசாலை




இது மத்தியம யாகசாலை ஆகும் (காமிகப்படி)


### ரவி சூத்திர பஞ்சகுண்ட யாகசாலை

விமானஸ்தாபனம், புரோக்ஷணம் முதலிய காரியங்களுக்கு இந்த யாகசாலை அமைக்கவேண்டும். விமானம், சூலம், பவித்திரோத்ஸவம் முதலியவைகளுக்கு ருத்திர பதமும் 11 பதங்களும் ரவிசூத்திரமும் 12 சூத்திரமும் கொண்டயாகசாலை சிறந்ததாம். 16 தூண்களும் 7 அல்லது 9 முழ அகலம் கொண்டதாகவும் அமைக்க வேண்டும். இதில் 5 குண்டங்கள் அமைக்கவும். 9 குண்டங்கள் போடுவது கடினம். இதில் 5 ஆவரணங்கள் உள்ளன. பிரம்ம, தேவ, பைசாச, மானுஷ, அசுத்தமாய, ராக்ஷஸ என 6 பதங்கள் உள்ளன. மானுஷபதத்தில் இநில் குண்டம் போடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்தி அல்லது தசசூத்திர ஏககுண்ட யாகசாலை படம் 25




இது அதம யாகசாலையாகும் (காமிகப்படி)


யாகசாலைகளில் குண்டங்களை சதுரஸ்ரமாகக் காட்டுகின்றோம். ஆனால் அந்தந்த திக்குக்குரிய குண்டங்களை ஊகித்து அமைத்துக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1009 கலசம் அல்லது சங்கு – வியூகம்

காமிகாகமம்





44 சூத்திரங்கள் அடித்து 1849 பதங்கள் அமைக்குக. 64 ஸ்தம்பங்களுடன் கூடிய யாகம் உகந்தது. 15 முழம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1009 கலசம் அல்லது சங்கு – வியூகம்

## காமிகாகமம் – இன்னொரு வகை





56 சூத்திரங்கள் அடித்து 3025 பதங்கள் அமைக்குக. 64 ஸ்தம்பங்களுடன் கூடிய யாகம் உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1009 கலசம் அல்லது சங்கு – வியூகம்

## சுப்ரபேதாகமம்




50 சூத்திரங்கள் அடித்து 2401 பதங்கள் அமைக்குக. 64 ஸ்தம்பங்களுடன் கூடிய யாகம் உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1000 கலசம் அல்லது சங்கு – விருத்தம்

## காரணாகமம்




46 சூத்திரங்கள் அடித்து 2025 பதங்கள் அமைக்குக. 64 ஸ்தம்பங்களுடன் கூடிய யாகம் உகந்தது. 21 சூத்திரங்கள் வட்டமாக அமைத்து இரண்டிரண்டு பத வரிசைகளில் சங்கு அமையுமாறு 14 ஆவரணங்கள் பயன்படுத்த வேண்டும். இடையில் ஆறு ஆவரணங்கள் சஞ்சார பதம்.


14 ஆவரணங்களுக்கும் முறையே 8, 16, 24, 32, 56, 64, 72, 84, 96, 100, 104, 108, 116, 120 என்ற எண்ணிக்கையில் கலசம் அல்லது சங்குகளை அமைக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 கலசம் அல்லது சங்கு

## காரணாகமம்





பதினாறு சூத்திரங்கள் அடித்து 225 பதங்கள் அமைக்குக. முப்பத்தாறு ஸ்தம்பங்களுடன் கூடிய யாகம் உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 கலசம் அல்லது சங்கு

## சுப்ரபேதாகமம்





பதினான்கு சூத்திரங்கள் அடித்து 169 பதங்கள் அமைக்குக. இருபத்தெட்டு ஸ்தம்பங்களுடன் கூடிய யாகம் உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 கலசம் அல்லது சங்கு

## யுக்திபூர்வமானது





பதினாறு சூத்திரங்கள் அடித்து 225 பதங்கள் அமைக்குக. முப்பத்தாறு ஸ்தம்பங்களுடன் கூடிய யாகம் உகந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுபத்ரா தீக்ஷா மண்டலம்




வெள்ணிறம் = விபூதி
பொன்னிறம் = மஞ்சள்மா
மற்றவை = குங்குமங்கள் பலவித நிறங்கள்

மேற்சிருந்து கிழக்காகவும், தெற்கிருந்து வடக்காகவும் 12—12 சூத்திரங்கள்

நடுவிலே ஒன்பது பதங்கள் வெண்ணிறம். பத்மம். நான்கு மூலைகளிலும் 4x16 பதங்கள் ஸ்வஸ்திகம் - பொன்னிறம். மீதியாக நான்கு திக்குகளிலும் 4ஒ3-12 பதங்களினாலான நீள்சதுரங்கள் நான்கு அமையும். அவற்றில் 3, 1, 3, 1 ஆகிய பதங்களினாலே பீடமும் லிங்கமுமாக அந்தந்தத் திக்குக்குரிய லிங்கத்தின் நிறத்தினால் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்னி கார்யம்

## பல்வகைப்பட்ட கிரியா முறைகள்

அக்கினியை ஒரு தெய்வமாகவும், ஏனைய தெய்வங்களை வழிபடும் ஊடகமாகவும் (தூதுவன்) கொள்ளப்படும் முறை மிகப் பழங்காலம் முதல் இருந்து வருகிறது. வேத வேள்விகள் முதல் இன்றைய கும்பாபிஷேகக் கிரியைகள் வரை அது பலதரப்பட்ட வேறுபாடுகளையும் செயல்முறைகளையும் கொண்ட **அக்னிகார்யம்** என்ற கிரியையாக வளம்பெற்றுள்ளது.

இன்றைய நிலையில் **வைதிக அக்னிகார்யம், சிவாகம அக்னிகார்யம், தாந்திரிக அக்னிகார்யம், சம்மேளன அக்னிகார்யம்** எனப் பலவகையான கிரியாமுறைகள் வழக்கிலுண்டு.

**ஸ்ருதி** எனப்படும் வேதங்களில் சொல்லப்பட்ட யாக கர்மாக்களைச் செய்வது **சிரௌத யாகம்** எனப்படும். இங்கு செங்கட்டிகளால் அமைக்கப்படும் பல்வேறு விதமான யாக குண்டங்கள் சொல்லப்படுகின்றன. **ஸ்மிருதி** எனப்படும் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சம்ஸ்காரங்கள் என்னும் கிரியைகள் அந்தணர்களுக்கானவை. இவை **ஸ்மார்த்தக் கிரியைகள்** எனப்படும். வைதிகப் பிராமணர்கள் தமது இல்லங்களில் நடத்துகின்ற ஸ்மார்த்தக் கிரியைகளின்போது வைதிக அக்னிகார்யம் இடம்பெறுகிறது. இதற்கு **ஸ்தண்டிலம்** எனப்படும் மேடை பயன்படுகிறது. ஸ்தண்டிலம் என்பதற்கு புல், பூண்டு என்பன இல்லாத வெறும் மண்தரை என்பதே கருத்து. மணல்மூலம் உருவாக்கிய சிறு மேடையை ஸ்தண்டிலமாகப் பயன்படுத்துவர்.

பொதுவாக சைவாலயங்களில் நடைபெறும் கிரியைகளின்போது சிவாகமங்களில் சொல்லப்பட்ட ஆகம அக்னிகார்யமே இடம்பெறுவது வழக்கம். சைவாலயங்களில்கூட திருக்கல்யாண விழாக்கள் நடைபெறும்போது மிகச்சில ஆலயங்களில் **வைதிக அக்னிகார்யம்** செய்யப்படுகிறது. முப்பத்து மூன்று குண்டங்களுடன் கூடிய மஹாகும்பாபிஷேகம் முதலிய சில நிகழ்வுகளில் **வேத சிவாகம சம்மேளன அக்னிகார்யம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பதுண்டு. ஸ்ரீசக்ர பூஜை முதலிய சாக்த வழிபாடுகளின்போது **தாந்திரிக அக்னிகார்யம்** - (தந்திரங்கள் எனப்படும் சாக்த ஆகமங்களின் அடிப்படையில் அமைந்தது) - நடைமுறையிலுண்டு.

மிகப் பரவலாக அந்தணர்களின் இல்லங்களில் நடைபெறும் வைதிக அக்னிகார்யம், சைவாலயங்களில் நடைபெறும் சிவாகம அக்னிகார்யம் ஆகிய் இரண்டையும் பற்றிய விளக்கங்களை இந்நூலில் விரிவாகப் பார்க்கலாம்.

வைதிக அக்னிகார்யம் என்பது ஆத்மார்த்தமாக உபாசிக்கப்படுவது. இது நித்திய வழிபாட்டுக்குரியது. திருமணமாகாத பிரமச்சாரிகள் தினமும் காலை, மாலை **சமிதாதானம்** என்னும் அக்னிகார்யத்தைச் செய்துவருவர். சமித் ஆதானம் என்ற வகையில் இங்கு சமித்து எனும் சுள்ளிகளுக்கே முக்கியத்துவமுண்டு. நெய் இடம்பெறுவதில்லை. மிகச் சில மந்திரங்களைக் கூறி சமித்துக்களை அக்கினியில் சமர்ப்பித்துப் பிரார்த்தனை செய்து ரக்ஷ எடுத்துத் திலகமாகத் தரிப்பதோடு இது சிறிய அளவில் முடிந்துவிடுகிறது.

திருமணம் செய்துகொண்ட கிருஹஸ்தர்கள் திருமணக் கிரியையின்போது ஆரம்பிக்கின்ற **ஔபாசனம்** என்ற அக்னி கார்யத்தை நாள்தோறும் செய்துவரவேண்டும் என்பது விதி. இன்று இது சாதாரண நடைமுறையில் அதிகம் இல்லை எனினும் நித்திய ஔபாசனம் செய்துவரும் அந்தணர்களும் உள்ளனர். நித்யாக்னி என்ற வகையில் இந்த அக்னி அணையாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இங்கும் மிகச் சில மந்திரங்களுடன் நெய்யும் அட்சதையும் ஆகுதியாகக் கொடுக்கப்படுவதாக அமைகிறது. இல்லத்தலைவிக்கு இந்த அக்னியில் பாத்தியதை உண்டு. தலைவன் இல்லத்தில் இல்லாத சமயங்களில் மந்திரம் இல்லாமல் அந்த ஆகுதிகளை வழங்கும் அதிகாரம் இல்லத் தலைவிக்கு உண்டு. மனைவியை இழந்தவருக்கு ஔபாசனாக்னி இல்லை.

கிருஹஸ்தனுக்குரிய சம்ஸ்காரங்கள் செய்யப்படும் போது பெரும்பாலும் இந்த ஔபாசனாக்னியிலேயே ஹோமங்கள் செய்யப்படும். மிகச்சில சம்ஸ்காரங்களுக்கு விதிவிலக்காக **லௌகிகாக்னி** எனப்படும் - சாதாரணமாக உடனே உண்டாக் கப்படுகிற - அக்னியில் ஹோமங்கள் செய்யப்படுவதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔபாசனாக்னியை நித்யாக்னியாகப் பேணிவராதவர்களின் இல்லங்களில் இந்த சம்ஸ்காரங்கள் நடைபெறும்போது புதிதாக அக்னியை உண்டாக்கி, விடுபட்டுப்போன ஔபாசனக் கிரியைகளுக்காக பிராயச்சித்தங்கள் செய்து **விச்சின்ன ஔபாசனாக்னி சந்தானம்** என்ற கிரியையின்மூலம் ஔபாசன அக்னியை உண்டாக்கி அதில் அந்த சம்ஸ்காரங்களைச் செய்வர்.

இவற்றைவிட **அக்னிஹோத்ரம்** என்ற ஒரு நித்யாக்னியும் உண்டு. இதனைச் செய்பவர்கள் அக்னி ஹோத்ரிகள் எனப்படுவர். அக்னியை அணையாமல் காத்து தினமும் காலை மாலையில் ஆகுதிகள் வழங்குவது இந்த அக்னிஹோத்ரம் மற்றும் ஔபாசனம் முதலியவற்றில் உள்ள சிறப்பம்சமாகும்.

இந்த நித்யாக்னிகளில் உள்ள இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், வாழ்க்கை முழுவதும் ஒருவர் காத்துப் போஷித்து வந்த அந்த அக்னியே அவரது வாழ்க்கையின் முடிவிலும் அவரை தஹிப்பதற்கு உதவுகிறது.

அக்னியைக் குறிக்கப் பொதுவாக முத்தீ என ஒரு சொல் வழங்குவது மரபு. **ஆஹவனீயம், கார்ஹபத்யம், தட்சிணாக்னி** என்பனவே அப் பிரிவுகளாகும். (நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் அந்தணர்களை ''முத்தீச் செல்வத் திருபிறப்பாளர்'' எனக் குறிப்பிடுகிறார்) ஹவனம் என்பது யாகம், வழிபாடு என்ற பொருட்களையுடைய சொல்லாகும். அதனடிப்படையில் பிறந்ததே ஆஹவனீயம் என்பது. இது இறைவழிபாடுகளுக்குரிய அக்னியாகும். கார்ஹபத்யம் என்பது கிருஹம் (வீடு) என்ற சொல்லில் பிறந்தது. வீட்டுக்குரிய லௌகிக அக்னி இதுவாகும். இவ்வக்னியிலேயே ஸ்தாலீபாகம் என யாகத்திற்குரிய ஹவிஸ் தயார்செய்யப்படுவது மஹா யாகங்களில் காணப்படும் மரபு. தட்சிணம் என்பது தெற்குத் திசை. தென்திசைக்குரியது தட்சிணாக்கினி. இது இறுதிக் கிரியைகளுக்குரியது.

ஒருவர் கிருஹஸ்தாசிரமத்தில் காலடி எடுத்து வைத்தவுடன் அக்னி ஆதானம் செய்து அதை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒன்று வேத வேள்விகள் நிகழ்த்துவதற்குரிய **ஸ்ரௌதாக்னி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றது வீட்டுக் கிரியைகளுக்குரிய **க்ருஹ்யாக்னி**. இதுவே **கார்ஹபத்ய அக்னி**யாகும். இது ஔபாசனத்திற்குரியது. இந்த அக்னியிலிருந்து தேவகாரியங்களுக்குரிய ஆஹவனீயாக்னியும் பிதிர் காரியங்களுக்குரிய தட்சிணாக்னியும் பிரித்தெடுக்கப்படும்.

அக்னிக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள முக்கிய தொடர்புபற்றி **பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா** அவர்கள் எழுதிய சில கருத்துக்கள் மிகப் பொருத்தமானதாக இருப்பதால் இங்கு தரப்படுகிறது.

"நெருப்பும் நீரும் தூய பொருள்கள். அவை தாம் தூய்மையுடையனவாக இருப்பதோடு பிற பொருள்களைத் தூயனவாக்கவும் உதவுவன. இவை முறையே அக்னிதேவனுக்கும், வருணனுக்கும் பௌதிகரூபமாய் இருப்பதால் தெய்வத் தன்மை வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் அக்னி இந்துமதத்தின் எல்லாப் பிரிவினருக்கும் பிரத்யட்ச தெய்வம். யாகங்களில் தேவர்களின் பிரதிநிதியாக - தேவதூதனாக - விளங்குபவன் அக்னிதேவன். "அக்னிமுகா வை தேவா:" என்பது (தேவர்கள் அக்னியைத் தம் வாயாக உடையவர்கள்) வேத வாக்கு. யாகத்தில் வழங்கப்படும் ஹவிஸ்ஸை (அவியுணவை) உரிய தேவரிடம் கொண்டு சேர்ப்பவன் என்னும் பொருளில் ஹவ்ய வாஹனன் என்றொரு பெயரும் அக்னிக்குண்டு.

"............உடலை அக்னிக்கு இரையாக்குவதும் ஒருவகை ஹோமமேயாகும். ............ அக்னியால் உருப்பெற்ற இவ்வுடம்பு இறுதியில் அக்னியிலேயே மறைகிறது. எங்கிருந்து வந்ததோ அங்கேயே ஒடுங்குகிறது. இங்கு உடல் அக்னியிலிருந்து உருப்பெற்றதெவ்வாறெனின்,...

"உணவுண்ணத் தொடங்கும்போது ப்ராணாய ஸ்வாஹா முதலிய ஹோம மந்திரங்களால் வயிற்றினுள்ளிருக்கும் **ஜடராக்னிக்கு** உணவை ஆகுதியாக்குகின்றோம். உண்ட உணவு அந்த அகத் தீயினால் பக்குவப்படுத்தப்பட்டு இரத்தமாக மாறுகிறது. இரத்தத்தின் பரிணாமமே சுக்கில சுரோணிதங்களென்பதும் அவற்றின் கலப்பிலிருந்தே பௌதிக சரீரம் தோன்றுகின்றதென்பதும் யாவருமறிந்ததே. (பிந்து அக்னி என்ற இன்னொரு அக்னியும் நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுக்குள் இருப்பதனால்தான் - காமாக்னி எனவும் அதைச் சிலவேளைகளில் வர்ணிப்பர் - மனித உற்பத்திக்கான உணர்வு கிளர்ந்தெழுகிறது - தொகுப்பாசிரியர்) அகத்தீயிலிருந்து உருப்பெற்ற உடலானது அகத்தீ கனன்றுகொண்டிருக்கும் வரை இயங்கிக் கொண்டிருக்கிறது. அது அணைந்ததும் பயனற்ற கட்டையாகிவிடவே புறத்தீக்கு இரையாகி ஒடுங்கிவிடுகிறது."

இவ்வாறு அக்னியானது பிறப்பிலிருந்து இறப்புவரை மனித வாழ்வில் தொடர்புபட்டிருப்பது என்பதும் வழிபாடுகள் யாவற்றிலும் அக்னி முதலிடம் பெறுகிறது என்பதும் மனம் கொள்ளத்தக்கது. ஆத்மார்த்தமான வைதிகாக்னிகாரியமானது வீட்டில் நித்ய வழிபாட்டுக்குரியதாக விளங்குகிறது. வீட்டில் நிகழ்கின்ற சம்ஸ்காரங்கள், சாந்தி கர்மாக்களில் லௌகிகாக்னியும் இடம்பெறுகிறது. இவற்றுக்கு அப்பால் ஆகமரீதியான இறை வழிபாடுகளில் - ஆலயங்களில் - ஆகம அக்னி பயன்படுகிறது.

வைதிக அக்னி உருவாக்குவதில் அதிக கிரியைகள் இல்லை. ஆனால் பாத்ர சாதனங்கள் என அக்னிகார்யத்திற்கான உபகரணங்களை அவ்வவ்விடத்தில் அமைப்பதிலும் அக்னி மேடையைச்சுற்றி அங்கு அக்னிகார்யம் செய்வதற்கான சூழலை ஏற்படுத்தும் புற நிகழ்வுகளிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. அக்னி மேடையாகிய ஸ்தண்டிலம், ப்ராதேசம் எனப்படும் சுமார் ஒரு சாண் அளவு சதுரமாக அமைக்கப்படும். அம் மேடையில் கிழக்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் மும்மூன்று கோடுகள் தர்ப்பை அல்லது சமித்தினால் வரைந்து நீர் தெளித்து அதன்பின் அங்கு அக்னியை ஸ்தாபிப்பர். இது அக்னிஸ்தண்டிலத்திற்கான சம்ஸ்காரமாகக் கருதலாம். இதேபோல் பாத்ர சம்ஸ்காரம், ஆஜ்ய சம்ஸ்காரம், தர்வீ சம்ஸ்காரம் என்பன ஏனைய சம்ஸ்காரங்களாகும்.

அக்னிக்குக் கொடுக்க வேண்டிய ஆகுதிகள் வழங்கிய பின்னர் நாம் விரும்பும் அனைத்துத் தேவதைகளையும் கருதி அவ்வவற்றுக்குரிய மந்திரங்களைக் கூறி ஆகுதிகளை வழங்கலாம். இறுதியில் அக்னியை விசேடமாக வழிபட்டு உத்தராங்கமான சில கிரியைகளைச் செய்வதோடு அக்னிகார்யம் நிறைவுபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகம அக்னிகார்யத்தில் அக்னிகுண்டம், அக்னி, நெய் என்பன தனித்தனியே சம்ஸ்காரம் செய்யப்பட்டு அக்கினிக் குழந்தையை அதன் பெற்றோர் மூலமாக உருவாக்கிப் படிப்படியாக வளர்த்தெடுக்கின்ற கிரியைகள் தத்துவார்த்த உட்பொருள்களும் உருவகச் சிறப்புக்களும் மிக்கதாக இலக்கிய ரசனை மிக்கதாக அமைந்துள்ளது. தனது ஆத்மாவிலிருந்து அக்னியைப் பிறப்பிப்பதும் முடிவில் அதனை மீண்டும் தன்னோடு சேர்த்துக்கொள்வதும் ஆகம அக்னிகார்யத்தில் காணப்படும் தனித்துவமான ஓர் அம்சமாகும்.

அக்னியை உருவாக்கும்போது அரணிக் கட்டைகளைக் கடைந்து எடுப்பது ஒரு முறை. சூரியகாந்தக் கல் எனப்படும் பூதக் கண்ணாடியூடாக சூரியஒளியினைப் புகச்செய்து அதன்மூலம் அக்னியை எடுப்பது இன்னொரு முறை.

அந்த அக்னியில் நாம் விரும்பும் தேவதையை முறைப்படி ஆவாஹனம் செய்து உபசாரம் வழங்கி அமரச் செய்தபின்னரே ஆகுதிகள் வழங்கப்படுவதைக் காணலாம். அதுமட்டுமல்லாமல், ஒரு நேரத்தில் ஒரு தெய்வத்தை மட்டுமே ஆகம அக்னியில் ஆவாஹனம் செய்வது மரபு. அந்த தேவதைக்குரிய ஆகுதிகள் வழங்கி முடிந்ததும் அந்த தேவதையை அக்னியிலிருந்து அதற்குரிய கும்பத்தில் சேர்த்தபின்னரே வேறு தேவதையை அந்த அக்னியில் ஆவாஹனம் செய்வர்.

ஆலயங்களிலும்கூட நித்யாக்னி உண்டு. அதற்கென விசேடமாயமைந்த அக்னி குண்டத்தில் அக்னியை அழிந்துவிடாமல் பாதுகாத்து அங்கு தினமும் காலை, மாலையில் பிரதான மூர்த்தியை எழுந்தருளச்செய்து ஆகுதிகள் வழங்குவது மரபு.

சிவாசாரியர் பரார்த்த பூஜைக்குமுன் தம்மைத் தயார் செய்யும் ஆத்மார்த்த பூஜையில் மானசிகமான பூஜை வழிபாடாகிய அந்தர்யாகம் இடம்பெறுகிறது. இந்த அந்தர்யாகத்தில் மானசிகமான அக்னிகார்யமும் உண்டு. தனது நாபியையே குண்டமாக்கி தானாகவே அங்கு உற்பத்தியாகும் அக்னியில் ஹோமம் செய்வதாகப் பாவனை செய்யப்படும். இங்கு சுத்தமாயை ஹோமகுண்டம். இச்சை, கிரியை, ஞானம் என்பன மூன்று மேகலைகள். சுழிமுனை சுருக். இடாநாடி சுருவம். மூலாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்க்கிண்ணம். பிந்துவிலிருந்து வெளிவரும் அமிர்தம் நெய். இவ்வாறு மானசீக அக்னிகார்யம் செய்வது சிவாசார்ய மரபு.

சிவாகம முறைப்படி வளர்க்கப்படும் அக்னி சிவாக்னி எனச் சொல்லப்படும். இது மூன்று பருவங்களை உடையதாக வர்ணிக்கப்படுகிறது. பாலாக்னி, யெளவனாக்னி, வ்ருத்தாக்னி என அவை பெயர் பெறும்.

சாதாரண ஸ்நபனகும்ப பூஜைகள் மற்றும் சங்காபிஷேக பூஜைகளின்போது **பாலாக்னி**யும், மஹோற்சவத்தின்போது **யெளவனாக்னி**யும், பிரதிஷ்டை என்னும் கும்பாபிஷேகத்தின்போது **விருத்தாக்னி**யும் பயன்படுத்தப்படவேண்டும் என்பது சிவாகம விதி.

சாதாரணமாக ஆலயங்களில் கும்பங்கள் அமைக்கும் மேடையின் முன்பாக, கிழக்குப் புறத்தில் ஓமகுண்டம் அமைக்கப்பட்டு அதில் சிவாக்னி வளர்க்கப்படும். கும்பத்தில் ஆவாஹனம் செய்யப்பட்ட தேவதையை அக்னியிலும் ஆவாஹனம் செய்து பூஜிக்கப்படும். கும்பமும் அக்னிகுண்டமும் நாடி எனப்படும் நூலினால் தொடுக்கப்படும். ஆகுதிகள் வழங்கி ஹோமங்கள் நிறைவு பெற்றபின் அந்த நாடியினூடாக அக்னியிலுள்ள தேவதை கும்பத்தில் சேர்க்கப்படும். இதன்பின் கும்பம் மூர்த்தியில் அபிஷேகம் செய்வதன்மூலம் அந்த சாந்நித்யம் பலப்படுத்தப்படும்.

இவற்றை விட சிவாக்னியில் பத்து அக்னிகள் இருப்பதாக சிவாகமங்கள் விபரிக்கின்றன. **ஆகவனீயாக்னி, தீணாக்னி, கேவலாக்னி, கார்ஹபத்யாக்னி, சாமான்யாக்னி, பாலாக்னி, யெளவனாக்னி, வ்ருத்தாக்னி, சூ'மாக்னி, காலாக்னி** என்பனவே அவை.

இப்பத்து அக்னிகளும் இணைந்ததே சிவாக்னி. சிவாக்னியின் அங்கங்கள் எனப்படும் பஞ்சப்ரம்ம (5) ஷடங்க (6) மந்திரங்களோடு சிவாக்னியும் இப்பத்தும் சேரும் பதினொரு அக்னிகளும் தொடர்புபடுத்தப்படுகின்றன. இவ்வக்கினிகளுக்கு உரிய திசைகளும் சொல்லப்படுகின்றன. பிரதான சிவாக்னியிலிருந்து இவ்வக்னிகள் பிரித்தெடுக்கப்படும்போது அந்தந்தத் திசைகளில் அதற்கென விசேடமாக அமைக்கப்படும் குண்டங்களிலே ஸ்தாபிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு திக்கிற்குமுரிய குண்டங்கள் எவ்வாறு அமையவேண்டும் எனச் சிவாகமங்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன.

விரிவாக நடைபெறும் அக்னிகாரியங்களில் சரியான அளவுப் பிரமாணப்படி அமைக்கப்படும் யாகசாலைகளில், மத்தியில் அமையவேண்டிய பிரதான சிவாக்னிக்குரிய குண்டம் ஈசான திக்கிற்கும் கிழக்கிற்கும் நடுவில் அமைய, ஏனைய எட்டுத் திசைகளிலும் எட்டுக் குண்டங்கள் அமைக்கப்பட்டு, பிரதான சிவாக்னியிலிருந்து பிரிக்கப்படும் அக்னிகள் அந்தந்தக் குண்டங்களிலே ஸ்தாபிக்கப்பட்டு ஒவ்வொரு குண்டத்தின் அருகிலும் ஒவ்வொரு சிவாசாரியார் அமர்ந்திருந்து எரியோம்பி வழிபாடு செய்வர். ஒன்பது குண்டங்கள் இங்கு அமைவதால் **நவகுண்ட ப' யாக சாலை** என இது அழைக்கப்படும். இங்கு பிரதான குண்டத்தில் **சிவாக்னியும் சூ'மாக்னி, காலாக்னி** என்பனவும் இருக்க ஏனைய எட்டு அக்னிகளையும் எண்திசைக் குண்டங்களிலும் முறையே பிரித்து வைப்பர்.

ஒவ்வொரு குண்டத்திலும் அதற்குரிய அங்கமந்திரங்களும் மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மூர்த்தீஸ்வரி, தத்துவம், தத்வேஸ்வரன், தத்வேஸ்வரி ஆகியோரும் ஆவாஹனம் செய்து பூஜிக்கப்பட்டபின் அவர்களுக்குரிய ஆகுதிகளும் வழங்கப்படுகிறது.

பிரதான குண்டத்திலிருந்து அக்னியைப் பிரித்து எடுத்தது போல, பூஜிக்கப்பட்ட தேவதைகள் மூர்த்தியில் சேர்க்கப்பட்டபின், யாகத்தின் முடிவில் அந்தந்த அக்னிகள் மறுபடி பிரதான குண்டத்தில் அவ்வத் திசையில் சேர்க்கப்படும். அதன்பின் பிரதான சிவாசாரியர் சிவாக்னியைத் தன்னுள் சேர்த்துக்கொள்வார்.

மிக விரிந்த நிலையில் யாகங்கள் செய்யும்போது யாகசாலையின் மத்தியில் அமைந்த பிரதான வேதிகையைச் சூழ முதலாவது ஆவரணத்தில் (வரிசை) மேற்கூறிய ஒன்பது குண்டங்களும் அமைய அதற்கு வெளியே மேலும் சில ஆவரணங்கள் அமைத்து ஒவ்வொரு ஆவரணத்திலும் எட்டுத் திசைகளுக்குமுரிய எட்டுக் குண்டங்கள் அமைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது ஆவரணத்தில் மட்டும் பிரதான குண்டம் ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் நடுவில் இருக்கும். அதனால் அங்கு ஒன்பது குண்டங்களும் ஏனையவற்றில் எட்டுக் குண்டங்களும் இருக்கும். எனவே,

1. ஒரு ஆவரணம் 9 குண்டம் (நவகுண்ட பட்சம்)
2. இரு ஆவரணம் 17 குண்டம் (9+8) (சப்ததச குண்டம்)
3. மூன்று ஆவரணம் 25 குண்டம் (9+8+8)) (பஞ்சவிம்சதி குண்டம்)
4. நான்கு ஆவரணம் 33 குண்டம் (9+8+8+8) (த்ரயஸ்த்ரிம்சத் குண்டம்)

நவகுண்டத்தில் ஒரே குண்டத்தில் மூர்த்தி மூர்த்தீஸ்வரன், அங்கம் என்பன பூஜிக்கப்படுவர். ஆனால் பதினேழு, இருபத்தைந்து என விரிந்து செல்கையில் ஒரே திக்கில் பல குண்டங்கள் வருவதால் (ஒவ்வொரு ஆவரணத்திலுமாக) மூர்த்தி, மூர்த்தீஸ்வரன் ஒரு குண்டத்திலும் மூர்த்தீஸ்வரி இன்னொரு குண்டத்திலும் என இவ்வாறு பிரித்து ஆவாஹனம் செய்யப்படுகிறது. ஆனால் ஒரே திக்கில் அமைந்த குண்டங்கள் யாவும் ஓரே அமைப்புடையதாக இருக்கும். அந்த ஒரே திக்கிலுள்ள குண்டங்கள் யாவற்றிலும் ஒரே அக்னியே வளர்க்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதான குண்டத்தில் மட்டுமே பிரதான மூர்த்தி ஆவாகனம் செய்யப்படுவது **சிவாகம மரபு**. ஏனைய குண்டங்களில் அங்கங்களும், மூர்த்தி மூர்த்தீஸ்வரர்களும் ஆவாஹனம் செய்யப்படும். இம்முறையில் பிரதான குண்டத்தில் சிவாக்னி உற்பவமாகி விருத்தாக்னி வரை வளர்ந்தபின் அதனை ஒன்பது பாகமாக்கி, பிரதான சிவாக்னியும் (வ்ருத்த சிவாக்னி) சூக்ஷ்மாக்னி, காலாக்னிகளும் பிரதான குண்டத்திலிருக்க ஏனைய எட்டு அக்னிகளையும் பிரதான குண்டத்தின் எட்டுத் திசைகளிலிருந்தும் எடுத்து அவ்வக் குண்டங்களில் சேரத்து அங்கே ஜொலிக்கச் செய்வர். பிரதான அக்னியின் இளைப்பு நீங்கிப் புஷ்டியாவதற்காக பலாச சமித்துக்கள் அகாராதி ஸ்வரங்களோடு ஹோமம் செய்தபின் அங்கு பிரதான மூர்த்தியை ஆவாஹனம் செய்வர். ஆனால், **காரிகைக் கிரமத்தில்** (இது தனியான ஒரு பத்ததி மரபாகும்),




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான அக்னியில் பிரதான மூர்த்தி ஆவாஹனம் செய்தபின்னரே அக்னி எல்லாக் குண்டங்களுக்கும் பிரிக்கப்படுகிறது. இதனால் இம்முறையில் எல்லாக் குண்டங்களிலும் பிரதான மூர்த்தி ஆவிர்பவித்திருப்பார் என்பது விசேட அம்சமாகும்.

தெய்வத்தை ஆவாஹனம் செய்தபின் அவரை எப்படிப் பிரித்தெடுக்க முடியும்? எனக் கேள்வி எழுவது இயல்பு. ஆனால் பூரணப் பொருளைப் பல பகுதிகளாகப் பிரிக்கும்போது ஒவ்வொரு பகுதிகளும் முதற்பொருளும் பூரணப் பொருளாகவே இருக்கும் என்பது இறைதத்துவம் அல்லவா? - பூர்ணமத: பூர்ணமித: பூர்ணாத் பூர்ணமுதச்யதே. புர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ அவசிஷ்யதே - விளக்குச் சுடரிலிருந்து இன்னும் பல விளக்குகளை ஏற்றினால் எல்லாமே முழுமையான சுடர்களாகவே இருக்குமல்லவா!

ஆகம அக்னிகார்யத்தில் அக்னிகுண்டங்களின் வடிவங்களும் அளவுப் பிரமாணங்களும் மிக முக்கியம். இவற்றின் விபரம் சிவாகமங்களில் எடுத்துரைக்கப்பட்டு சித்தாந்த சாராவளி முதலிய வழிநூல்களிலும் விளக்கப்பட்டுள்ளன.

## குண்ட லட்சணங்கள்




சதுர
குண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சதுர குண்டம்

நீளம், அகலம் என்னும் இரண்டும் ஒரே அளவாக அமைவது சதுரகுண்டம். குண்டமமைப்பதற்கென உரிய பதம் இச்சதுரகுண்டம். இச்சதுரம் ஏனைய குண்டங்கள் எட்டுக்கும் அடிப்படையானது. இதைத் தொடக்கமாகக் கொண்டே மற்றைய குண்டங்கள் உருவாக்கப்படுவதைக் கீழே காணலாம்.

## யோநிகுண்டம்

PQRS அடிப்படையான சதுரம். PQ முதலான அதன் நான்கு பக்கங்களின் நடுப்புள்ளிகளாக A, B, C, D, என்பன உள்ளன. CA யைச் சேர்த்து E வரை ACஇன் ஐந்திலொரு பாகத்தால் நீட்டுதல் வேண்டும். Dஐயும் Eஉடன்இணைத்து, CD, CB ஆகிய இரண்டினையும் விட்டமாகக் கொண்டு இரு அரைவட்டங்கள் வெளிப்புறத்தில் வரைய EBRCSDE என்னும் யோநிகுண்டம் பிறக்கும்.

யோநி குண்டம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்த்தசந்திரகுண்டம்

PQRS அடிப்படையான சதுரம். Aயும் Cயும் முறையே PQவினதும் SRஇனதும் நடுப்புள்ளிகள். ACயின் ஒன்பதி லொருபாகமாக AE, FC, SH, RI முதலியவற்றைச் சமமாகக் கொள்ளவும். Fஐ நடுவாகவும் FEயை ஆரமாகவும் கொண்டு அரைவட்டவடிவம் வரைதல் வேண்டும். HIயை இரு பக்கங்களிலும் நீட்டி, அந்த அரை வட்டத்தை நிறைவாக்கல் வேண்டும். இவ்வரைவட்டமே அர்த்தசந்திர குண்டம்.



அர்த்தசந்திர குண்டம்




திரிகோண குண்டம்

PQRS அடிப்படையான சதுரம். Aயும் Cயும் முறையே PQவினதும் RS இனதும் நடுப்புள்ளிகள். CAஐ Eவரை AEயின் ஆறிலொருபாகத்தால் நீட்டல் வேண்டும். Sஐயும் Rஐயும் முறையே Bக்கும் Dக்கும் AEயின் அளவாக நீட்டுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஷட்கோண குண்டம்

## ஷட்கோணகுண்டம்


PQRS அடிப்படைச் சதுரம். Aயும் Bயும் முறையே PS இனதும் QR இனதும் நடுப் புள்ளிகள். ABஐ PQயினது ஆறில் ஒரு பாகத்தால் Cவரை நீட்டுதல் வேண்டும். AB யினது நடுப்புள்ளி O ஆகும். Oவை நடுவாகவும் OCயை ஆரமாகவும் கொண்டு வட்டம் வரைதல் வேண்டும். OCயை ஆரமாகவும் Cயை நடுவாகவும் கொண்டு, வட்டத்தில் D என்னும் புள்ளியில் வெட்டுமாறு குறியிடவும். இவ்வாறே Dயை நடுவாகக் கொண்டே முன்கொண்ட அளவினையுடைய ஆரத்தால் Xஐ வட்டத்தில் குறியிடவும். இவ்வாறே, Y, L, M ஆகிய புள்ளிகளை வட்டத்தில் குறியிடவும். Cஐ Dயுடனும், Dஐ Xஉடனும், Xஐ Yயுடனும், Yஐ Lஉடனும், Lஐ Mஉடனும், Mஐ Cயுடனும் தொடுத்தல் வேண்டும். C D X Y L M ஷட்கோணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அஷ்டகோண குண்டம்



விருத்த குண்டம்



பத்ம குண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்டகோணகுண்டம்

PQRS அடிப்படைச் சதுரம். PQல் Aயும் Bயும் இரு புள்ளிகள். PA, BQக்குச் சமமாகவும், PQவில் நாலில் ஒரு பங்காகவும் இருக்கும். QRஇல் Gயும் Hம் இரு புள்ளிகள். QG, HRக்குச் சமமானதாகவும் PQயில் நாலிலொரு பங்கானதாகவும் இருக்கும். RSஇல் Dயும் Cயும் இரு புள்ளிகள். RD, CSக்குச் சமமாகவும் PQவில் நாலில் ஒருபங்கானதாகவும் அமையும். SPயில் Fம் Eம் இருபுள்ளிகள். SF, EPக்குச் சமமானதாகவும் PQயில் நாலிலொருபங்காக அமையும். SQவையும் PRஐயும் இணைத்தல் வேண்டும். PRக்குச் சமாந்தரரேகைகளாக MNஐயும் TUவையும் வரையும் பொழுதுஅவை SQஐ Wஇலும் Vலும் சந்திக்கும். அவ்வாறே, IJ, KLஇரண்டும் SQக்குச் சமாந்தரரேகைகளாக அமையும் பொழுது அவை PRஐ முறையே Yயிலும் Xஇலும் சந்திக்கும். OV, OY, OW, OX என்னும் நான்கும் PAக்குச் சமமானவை. ACயை இரு பக்கங்களிலும் நீட்டும் பொழுது அது MNஐயும் KLஐயும் முறையே A1யிலும் F1இலும் சந்திக்கும். அவ்வாறே, B``யை இருபக்கங்களிலும் நீட்டும் பொழுது அது IJயையும் TUவையும் B1யிலும் E1யிலும் சந்திக்கும். GEயை இருபக்கங்களிலும் நீட்டும் பொழுது அது TUஐ H1இலும் KLஐ C1யிலும் சந்திக்கும். HFஐ இரு பக்கங்களிலும் நீட்டும் பொழுது IJஐ G1யிலும் MNஐ D1யிலும் சந்திக்கும் A1 B1 C1 D1 E1 F1 G1 H1 அஷ்டகோண குண்டமாகும்.

## விருத்தகுண்டம்

PQRS அடிப்படைச் சதுரம். PR, QS என்னும் இரண்டும் Oவில் சந்திக்கின்றன. OQவில் PQவின் பதினுறிலொரு பங்காக DQஐ வெட்டுதல் வேண்டும். Oவை நடுவாகவும் ODயை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டங்கீறிஞல் விருத்த குண்டம் பிறக்கும்.

## பத்மகுண்டம்

விருத்த குண்டம் கீறிய பின் வட்டத்திற்கு வெளியே உரியவாறு எட்டு இதழ்கள் அமையுமாறு உருவாக்கும் பொழுது பத்மகுண்டம் தோற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்ட உறுப்புக்கள்


குண்டங்களுக்கு ஒன்பது உறுப்புக்கள் உண்டு. இவற்றின் அளவு ஒரே தன்மையானது. தலை, இருதயம், நாபி, கண்டம், யோநி, மூன்று மேகலைகள், பரிஸ்தரணம் என்பன இவ்வுறுப்புக்கள். குண்டத்திற்கு அக்கினி தலை; அதன் நடுவில் கர்ணிகையுடன் இணைந்த தாமரை அதன் இதயம். இதற்கு ஒரே அளவினதான எட்டு இதழ்களும், கர்ணிகையும் உண்டு. கர்ணிகையின் மத்தியில் ஒன்பது பீஜங்கள் (வித்துக்கள்) உண்டு. குண்ட நடுவில் உள்ள பத்மத்திற்கு வெளியில் வட்டவடிவமாகச் செய்யப் படுவது நாபியாகும். குண்டத்தின் உயரத்தில் நடுப்பாதியில் உட்புறமாகக் குண்டத்தைச்சுற்றித் திரணையாக அமைவது கண்டமாகும். மேல் மேகலையில் அரசிலை வடிவமாய் கண்டம்வரை கீழ்நோக்கி இருப்பது குண்டயோநி. இது கிழக்கு, அக்கினிமூலை, தெற்கு முதலிய திக்குகளில் உள்ள குண்டங்களுக்கு வடக்கு முகமாகவும் ஏனைய வற்றிற்குக் கிழக்கு முகமாகவும் இருத்தல் வேண்டும். கண்டத்தின் வெளியில் குண்டவடிவாகச் சூழ்ந்து மேகலை அமையும். ஒவ்வொரு குண்டத்திற்கும் மூன்று மேகலைகள் உண்டு. இவை மேலிருந்து முறையே, நான்கு, மூன்று இரண்டு அங்குலங்கள் உயரமும் அவ்வவ்வளவு அகலமும் வாய்ந்தவை. குண்டத்தைச் சுற்றி இடப்படும் தர்ப்பைகள் பரிஸ்தரணங்கள் எனப் பெயர் பெறும். இதற்கு விஷ்டரம் என்னும் பெயரும் உண்டு. யோநி குண்டத்திற்கு மட்டும் குண்டயோநி கிடையாது. அவ்வாறே பத்ம குண்டத்திற்கும் இதய பத்மம் வேண்டுவதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவகுண்ட


வாயுதிக்கு
அறுகோணம்
பாலாக்னி
ஸ்புலிங்கினீசக்தி
வாயுமூர்த்தி
கவசம் - அங்கம்
சிவசாவித்ரீ மந்த்ரம்
கடலை - தானியம்
அத்தி - சமித்து
பயிர்ச்செழிப்பு - பலன்




வடக்கு
பதம்குண்டம்
கேவலாக்னி
விஸ்வஜித் சக்தி
இந்து மூர்த்தி
வாமதேவம் - அங்கம்
பாசுபதாஸ்த்ரம் - மந்த்ரம்
துவரை - தானியம்
வில்வம் - சமித்து
செல்வச் செழிப்பு




மேற்குத்திசை
வட்டம் - குண்டம்
கார்ஹபத்யாக்னி
தூம்ரவர்ணா சக்தி
ஜலமூர்த்தி
சத்யோஜாதம் - அங்கம்
வ்யோமாஸ்த்ரம்
பயறு - தானியம்
அரசு - சமித்து
உஸவகஜுயஂஸ । யகுணஂ




வேதிகை



தெற்கு
அர்த்த சந்த்ர குண்டம்
தக்ஷிணாக்னி
லோஹிதாசக்தி
யஜமானமூர்த்தி
அகோரம் - அங்கம்
அகோராஸ்த்ர மந்த்ரம்
எள் - தானியம்
கருங்காலி - சமித்து
வெற்றி









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாகசாலை





ஈசானதிசை
எண்கோணம்
சாமான்யாக்னி
காளினீசக்தி
ஆகாசமூர்த்தி
சிர: - அங்கம்
க்ஷுரிகாஸ்த்ரம்
உழுந்து - தானியம்
எருக்கு - சமித்து
போகம் - பலன்



பிரதானகுண்டம்
வட்டம்
சிவாக்னி
ஸ்வாஹா, ஸ்வதா சக்திகள்
(சூக்ஷ்மாக்னி, காலாக்னிகளும்)
ஈசானம், நேத்ரம், அஸ்த்ரம்
மூங்கிலரிசி, நெல், அவரை
பலாசு - சமித்து
சர்வசித்தி



கிழக்கு
சதுரம்
ஆஹவனீயாக்னி
காளினீசக்தி
க்ஷ்மா மூர்த்தி
தத்புருஷம் - அங்கம்
சிவாஸ்த்ரம் - மந்த்ரம்
கோதுமை - தானியம்
வன்னி - சமித்து
படைப்பு - பலன்



அக்னிதிசை
யோனிகுண்டம்
வ்ருத்தாக்னி
காளினீசக்தி
வன்னிமூர்த்தி
ஹ்ருதயம் - அங்கம்
ப்ரத்யங்காஸ்த்ர மந்த்ரம்
கடுகு - தானியம்
ஆல் - சமித்து
மக்கட்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சகுண்ட யாகசாலை

கிழக்கு →

வடக்கு
பத்மகுண்டம்
கேவலாக்னி
விஸ்வஜித் சக்தி
ஜலமூர்த்தி
வாமதேவம், சிகா
பாசுபதாஸ்த்ரம மந்த்ரம்
துவரை - தானியம்
வில்வ சமித்து
செல்வ விருத்தி

ஈசான திக்கு
பிரதான குண்டம்
வட்டம்
சிவாக்னி
ஸ்வாஹா, ஸ்வதா சக்திகள்
ஆகாய மூர்த்தி
ஈசானம், நேத்ரம், அஸ்த்ரம்
அங்கங்கள்
மூங்கிலரிசி, நெல், அவரை
பலாசு - சமித்து
சர்வசித்தி

மேற்கு
வட்டம்
கார்ஹபத்யாக்னி
தூம்ரவர்ணா சக்தி
க்ஷ்மா மூர்த்தி
சத்யோஜாதம், கவசம்
வ்யோமாஸ்த்ர மந்த்ரம்
பயறு - தானியம்
அரசு - சமித்து
நிலைபேறு - பலன்

வேதிகை


கிழக்கு
சதுரம்
ஆஹவனீயாக்னி
காளினீசக்தி
வாயுமூர்த்தி
தத்புருஷம், ஹ்ருதயம்
சிவாஸ்த்ரம் - மந்த்ரம்
கோதுமை தானியம்
வன்னி - சமித்து
படைப்பு - பலன்

தெற்கு
அர்த்தசந்த்ர குண்டம்
தக்ஷிணாக்னி
லோஹிதாசக்தி
வன்னிமூர்த்தி
அகோரம், சிரம்
அகோராஸ்த்ரம் - மந்த்ரம்
எள் - தானியம்
கருங்காலி - சமித்து
வெற்றி - பலன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 17 குண்ட யாகசாலை



## 25 குண்ட யாகசாலை



## 33 குண்ட யாகசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

சைவத் திருக்கோவிற் கிரியை நெறி
பேராசிரியர், கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள்
ஆகமாமிர்த வர்ஷிணீ
சிவாகமஞானபானு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள்
அகோர சிவாசார்யர் பத்ததி
வேதாகம நிரூபணம்
சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள்
மஹோற்சவ சந்திரிகை
சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள்
விநாயக மஹோற்சவ விளக்கம்
பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா
சைவக் கிரியைகள்
சிவஸ்ரீ சி. சுப்பிரமணிய தேசிகர்
சைவக் கிரியை விளக்கம்
ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம்
சிவலிங்க ப்ரதிஷ்டாவிதி
அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள்
அக்னிகார்ய விதி
அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள்
அக்னிகார்ய விதி
திரிகோணமலை சிவஸ்ரீ இ. கு. பூரணானந்தேசுவரக் குருக்கள்
வைதீக அக்னிகார்யம்
மயிலணி சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்
தஹன சமஸ்காரம்
நீர்வேலி பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா
சைவபூஷணம்
சதாவதானி ஸ்ரீ நா. கதிரைவேற்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251942

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பதிப்புக்கள்
– இரண்டாயிரம் பிரதிகள்
விற்பனையாகிய நூல்
சைவசமயி ஒவ்வொருவரின்
வீட்டிலும் ஆலயங்கள்
ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டிய
புத்தகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org